# எழுநா

செப்ரெம்பர்
2024

இதழ் 26



# எழுநா

## இதழ் 26


**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ் – சஞ்சிகை
ஜனனி பாலசுந்தரம் – வலைத்தளம்
விஜயதர்சினி தினேஸ் – கற்கை வட்டம்
பவித்ரா இரமணீகரசர்மா – குரல் வடிவம்
மதுஹரி சத்தியலோகநாதன் – குரல் வடிவம்

**வளவாளர்கள்**
இ. பத்மநாப ஐயர் – உசாத்துணை சேவை
கனகலிங்கம் சுகுமார் – உசாத்துணை சேவை
தில்லைநாதன் கோபிநாத் – நூல் வரிசை/ நூல் தயாரிப்பு
கதிர் சயந்தன் – நூல் வரிசை/ நூல் தயாரிப்பு
சுவர்ணலதா செந்தில்குமார் – மெய்ப்புத் திருத்தம்
தங்கராஜா பிரபாகரன் – மெய்ப்புத் திருத்தம்
பாலசுப்ரமணியம் சிவகுமார் – காணொலி/ விவரணப்படம்
சிறிதரன் சோமிதரன் – காணொலி / விவரணப்படம்
மகேந்திரன் திருவரங்கன் – மொழிபெயர்ப்பு
பரமசிவம் பவதாரணி – செயல்பாட்டு மேலாண்மை
நிவேதிகா இராசன் – செயல்பாட்டு மேலாண்மை

**துறை சார் ஆலோசகர் குழு**
ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன் – மொழியும் இலக்கியமும்
கந்தையா ரமணிதரன் – நீரியலும் நீர்ப்பாசனமும்
குமாரவடிவேல் குருபரன் – சட்டமும் சட்ட முறைமையும்
நடராஜா சிறீஸ்கந்தராஜா – சூழலும் உயிர்ப் பல்வகைமையும்
தர்சன் அம்பலவாணர் – சமயமும் இறையியலும்
பால சிவகடாட்சம் – சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும்
நாகமுத்து பிரதீபராஜா – புவியியலும் திட்டமிடலும்
பரமு புஸ்பரட்ணம் – வரலாறும் தொல்லியலும்
சனாதனன் தமோதரம்பிள்ளை – கட்புல அரங்கேற்ற கலைகள்
சேரன் உருத்திரமூர்த்தி – சமூகவியலும் மானிடவியலும்
முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் – பொருளியலும் நிதியியலும்
சபா ஜெயராசா – கல்வியியலும் கற்றலும்
மரியோ அருள்தாஸ் – அரசியலும் மெய்யியலும்
இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் – கட்டடக்கலையும் வடிவமைப்பும்
கந்தையா பகீரதன் – விவசாயமும் மீன்பிடியும்

**நிதிப்பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே
சிவா சிவானந்தன்

**ஆதரவளிப்போர்**
தமிழ் ஊடகத் திரட்டு – ஆவணப்பட வரிசை
மானுடம் நிறுவனம் – நூல் வரிசை

**கற்கை வட்ட ஒருங்கிணைப்பாளர்கள்**
நடராஜா முரளிதரன் – கனடா

**அச்சுப்பதித்து விநியோகிப்போர்**
நடராஜா முரளிதரன் – நாளை வெளியீடு கனடா


**அட்டைப்படம்**
இயற்கை வழிபாடு அல்லது சிறுதெய்வ வழிபாட்டைச் சித்தரிக்கும் ஓவியம்.

Artist : Naresh S. Bhoye
Source : www.exoticindiaart.com

**FOLLOW**

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/


மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

## உள்ளே...


யாழ்ப்பாணத்தின் சாதிக் கட்டமைப்பும் சமூக உறவுகளும் : பன்முகநோக்கு பகுதி 1,2,3 - கந்தையா சண்முகலிங்கம் 04

வழுக்கு மர சுவாமி காத்தவராயர் - தி. செல்வமனோகரன் 25

மேல்கொத்மலைத் திட்டம் : தேச நலனா? இயற்கை வளமா? - மீநிலங்கோ தெய்வேந்திரன் 34

தலித் எழுச்சியில் ஹரிஜனங்கள் - நடேசன் இரவீந்திரன் 44

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் : ஒரு வரலாற்றுக் குறிப்பு – பகுதி 1 - நடராஜா செல்வராஜா 52

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – வண்ணார்பண்ணை - இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 62

அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் – பகுதி: 10 - ஜிஃப்ரி ஹாசன் 68

தொல்லியல் நோக்கில் கதிரமலை அரசு - பரமு புஷ்பரட்ணம் 71

தேசபக்தன் : தோட்டத் தொழிலாளரின் அரசியற் குரல் - எம். எம். ஜெயசீலன் 77

பௌத்தமும் ஈழமும் – பகுதி 1,2 - ஜெகநாதன் அரங்கராஜ் 85

யாழ். மூளாய் மருத்துவமனை : பிறப்பு – இறப்பு – மறுபிறப்பு - ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா தமிழில் : த. சிவதாசன் 100

அம்மாச்சி உணவகம் : தொழில் முனைவோருக்கான முன்னுதாரணம் -ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா தமிழில் : த. சிவதாசன் 107

நாகசிவன், நாகவிய, நாகப்ப சவிய ஆகியவை பற்றிக் குறிப்பிடும் பண்டகிரிய கல்வெட்டு -என். கே. எஸ். திருச்செல்வம் 113

யுவராஜன் நாகனின் கொள்ளுப் பேரன் இளவரசன் நாகன் பற்றிக் குறிப்பிடும் படர்கல் மலைக் கல்வெட்டு -என். கே. எஸ். திருச்செல்வம் 120

பிரித்தானிய சாம்ராச்சியத்தின் நவீன நிர்வாக முறைமை - பி. ஏ. காதர் 129

வடக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புகளும் தணிப்பதற்கான தந்திரோபாயங்களும் – பகுதி 1,2 - நாகமுத்து பிரதீபராஜா 133

குயர் மக்கள் தொடர்பான அசைவியக்கங்களும் சமூக ஊடகங்கள் மூலமான வலுப்படுத்தலும் - அனுதர்சி கபிலன் 148

விராஜ் மென்டிஸ் : ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியா ஆளுமை - அருட்தந்தை எழில் 155

ஈழத்தில் கூட்டுறவுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு - வை. ஜெயமுருகன் 160

வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நன்னீர் வளமும் நீர் சார்ந்த பொருளாதார வாய்ப்புகளும் - அமரசிங்கம் கேதீஸ்வரன் 167

வடமாகாணத்தின் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் அவற்றை எதிர்கொள்வதற்கான பொருத்தமான கல்வி முறைகளும் - ஆனந்தமயில் நித்திலவர்ணன் 173

கால்நடை வளர்ப்பின் மேம்பாட்டுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல் - சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 185

வணிகம் – தொழில்நுட்பம் – நிதி : முப்பது வருட அனுபவத்திலிருந்து முப்பது பாடங்கள் - கணபதிப்பிள்ளை ரூபன் 191

மலையகம் : கடந்து வந்த பாதையும் காலூன்றி நிற்கும் நிலமும் - யோகராசா மோகதாசன் 195

'யாழ்ப்பாணத்துச் சாதியம் – ஆய்வுகள்' என்ற இத்தொடர் யாழ்ப்பாணத்தில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் சாதியக் கட்டமைப்பின் இருப்பியலையும், சாதிமுறையின் இறுக்கமான பின்பற்றுகைகளையும் பற்றிய ஆங்கில ஆய்வுக்கட்டுரைகளை மொழி பெயர்த்து வழங்குவதாக அமைகின்றது. இதன்படி, பட்டறிவுசார் அனுபவப்பதிவுகள், அரசியல் மேடைப் பேச்சுகளின் உணர்ச்சி வெளிப்பாடுகள் போன்றவற்றுக்கு அழுத்தம் கொடுக்காத புறநிலைத் தன்மையுடைய நேரிய பகுப்பாய்வு தன்மைகளாக அமையும் ஆய்வுக் கட்டுரைகளின் ஊடாக யாழ்ப்பாணத்தின் சமூக கட்டமைப்பு, சாதியும் வர்க்கமும் சமயமும், சமய சடங்குகளும் சாதியமும், குடும்பம் திருமணம் ஆகிய சமூக நிறுவனங்களும் சாதியமும் ஆகியன இந்தத் தொடரில் வரலாற்று நோக்கில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது. சாதியத்துக்கு எதிரான மக்கள் எழுச்சிகள், கிளர்ச்சிகள் போராட்டங்கள் என்பவற்றை வரலாற்று நோக்கில் விபரிப்பதாகவும் இந்தத்தொடர் அமைகிறது.

**கந்தையா சண்முகலிங்கம்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளரும் ஆவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.

# யாழ்ப்பாணத்தின் சாதிக் கட்டமைப்பும் சமூக உறவுகளும் : பன்முகநோக்கு

1



*('எழுநா' பதிப்பகத்தின் பிரசுரமாக 2024 – நவம்பர் மாதம் வெளிவரவிருக்கும் கந்தையா சண்முகலிங்கம் அவர்களின் 'யாழ்ப்பாணத்துச் சாதியம்' என்னும் மொழிபெயர்ப்பு நூலின் அறிமுகமாக அமையும் கட்டுரை இங்கே தரப்பட்டுள்ளது.)*

இந்நூலில் 9 ஆய்வுக் கட்டுரைகளின் தமிழாக்கம் இடம்பெறுகிறது. இக்கட்டுரைகள் யாழ்ப்பாணத்தின் சாதிக் கட்டமைப்பினையும் சமூக உறவுகளையும் பன்முக நோக்கில் ஆராய்வனவாக உள்ளன. இவை யாவும் போருக்கு முந்திய கால யாழ்ப்பாணத்தின் சமூகம், பண்பாடு, பொருளாதாரம் அரசியல் என்பன பற்றிய நுண்ணாய்வுகளாக அமைந்துள்ளன. போருக்கு முந்திய காலம் என நாம் குறிப்பிடுவது ஏறக்குறைய 1981 க்கு முற்பட்ட யாழ்ப்பாணம் எனலாம். 1952 ஆம் ஆண்டு மைக்கல் பாங்ஸ் (Michael Banks) என்னும் சமூகவியலாளர் யாழ்ப்பாணத்தின் சிறுப்பிட்டிக் கிராமத்தில் ஒரு வருட காலம் தங்கியிருந்து கள ஆய்வு செய்து யாழ்ப்பாணத்தின் சாதி முறைமையைப் பற்றிய அரியதொரு ஆய்வு நூலை எழுதி வெளியிட்டார். இவரைத் தொடர்ந்து 1960 களின் பிற்பகுதியில் கென்னத் டேவிட் (Kenneth David) என்னும் மானிடவியலாளர் மயலிட்டிக் கிராமத்தில்

தங்கியிருந்து கள ஆய்வினைச் செய்தார். இவரின் ஆய்வின் பெறுபேறாக மயிலிட்டி வடக்கு மீன்பிடித் தொழிலாளர் கிராமம், மயிலிட்டி தெற்கு விவசாயக் கிராமம் என்பன பற்றிய உயர் தரமான ஆய்வுகள் வெளியாயின.

யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதிகள், குடா நாட்டின் சிறு நகரங்கள் என்பன தொடர்பான ஆய்வுகளையும் நிகழ்த்திய கென்னத் டேவிட் தமது ஆய்வு முடிவுகளையும் அவதானங்களையும் தமது ஆக்கங்களில் பதிவு செய்தார். இவரைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தவர் பிறையன் பவ்வன்போர்ஜர் (Bryan Pfaffenberger). சாவகச்சேரியில் தங்கியிருந்து கள ஆய்வு நிகழ்த்திய இவரது ஆய்வு நூல் 1982 இல் வெளியானது.

இம்மூன்று ஆய்வாளர்களும் அன்றைய யாழ்ப்பாணத்தை உலகின் புகழ்பெற்ற சமூகவியல் / மானிடவியல் அறிவாளிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். உலக அளவில் இம்மூன்று ஆய்வாளர்கள் பற்றிய கவனம் திரும்பிய வேளையில், தமிழ் அறிவுலகம் இந்த ஆய்வுகளைக் கண்டு கொள்ளாமல் கடந்து சென்றது. இடையிலே போர் குறுக்கிட்டபடியால் மேற்குலகின் மானிடவியலாளர்கள் வடக்கு நோக்கி வருவதைத் தவிர்த்துக் கொண்டனர். குறிப்பாக கென்னத் டேவிட், பிறையன் பவ்வன்போர்ஜர் ஆகிய இருவரும் தமது கவனத்தை வேறு திசையில் திருப்பினர். பவ்வன்போர்ஜர் தொடக்கிய ஆய்வுத் திட்டம் ஒன்று 1983 கறுப்பு ஜீலை நிகழ்வுகளின் பின் கைவிடப்பட்டது என்பதை அறிய முடிகிறது.

வெளிநாட்டவர்களான சமூகவியலாளர்களும் மானிடவியலாளர்களும் தொடக்கிய ஆய்வுப் பணிகளை இட்டு நிரப்பிய மானிடவியலாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒருவர் றொபர்ட் சித்தார்த்தன் பேரின்பநாயகம் ஆவர். இவர் மானிப்பாயில் பிறந்து வளர்ந்தவர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் H.S.C வகுப்பு வரை கற்றபின் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சமூகவியலை சிறப்புப் பாடமாகக் கற்றார். யாழ்ப்பாணத்தின் சமூகக் கட்டமைப்பு, சாதி உறவுகள், சமயம், கருத்தியல் என்பன பற்றி ஆராய்ந்து அரியதொரு நூலை இவர் எழுதியுள்ளார். நவாலிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவரும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியிலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் கற்றவருமான சின்னப்பா அரசரத்தினம் யாழ்ப்பாணத்தின் சமூக - பொருளாதார வரலாறு, சாதி முறையின் வரலாறு என்பன குறித்த கருத்தாழம் மிக்க ஆய்வுகளை எழுதி வெளியிட்டுள்ளார். வரலாற்றுப் பேராசியரியரான பேர்ட்ரம் பஸ்தியாம்பிள்ளை 19 ஆம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றைப் பற்றி ஆழமாக ஆய்வு செய்து பல கட்டுரைகளை எழுதியவர். வரலாற்று ஆய்வாளரான க. அருமைநாயகம் யாழ்ப்பாணத்தின் சாதி முறையின் வரலாறு பற்றி பெறுமதிமிக்க ஆய்வினை எழுதினார். அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் அவர்களும் இலங்கைத் தமிழர்களின் சாதிமுறை பற்றிய பெறுமதிமிக்க ஆய்வுரையை தமது நூல் ஒன்றில் ஓர் அத்தியாயமாகச் சேர்த்துள்ளார்.

மேற்குறித்த வெளிநாட்டவர்களான மூவரும், இலங்கையர்களும் - தமிழர்களுமான ஐவரும் ஆங்கிலத்தில் எழுதிய ஆக்கங்களைத் தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது. ‘யாழ்ப்பாணத்துச் சாதியம்’ பற்றிய புரிதல் சார்ந்த கோட்பாட்டுப் பிரச்சினைகள் (Theoretical Issues) குறித்து மேற்குறிப்பிட்ட எட்டு ஆய்வாளர்களினதும் பங்களிப்பை மதிப்பீடு செய்யும் முறையில் இவ் அறிமுகம் எழுதப்பட்டுள்ளது.

## வேளாளர் சாதியின் வரலாறு

யாழ்ப்பாணத்தின் வேளாளர் சாதியின் வரலாற்றைக் கூறும் சி. அரசரத்தினம் அவர்களின் கட்டுரை ‘18 ஆம் நூற்றாண்டில் வட இலங்கையின் வேளாளர்கள் : மேலாதிக்கச் சாதியொன்றின் சமூக வரலாறு’ என்னும்

தலைப்பில் அமைந்துள்ளது. இக்கட்டுரையின் முக்கியமான கருதுகோளை (Hypothesis) எடுத்துரைக்கும் கூற்றினை இங்கு மேற்கோளாகத் தந்துள்ளோம்.

“யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றினை எடுத்து நோக்கும் போது, அதன் பொருளாதாரத்தின் மூன்று துறைகளோடு சம்பந்தப்பட்ட மூன்று சாதிகள் இருந்தன என்பது தெரிகிறது.

- விவசாயத்தோடு தொடர்புடைய சாதிகள்
- கைவினைத் தொழில்களுடன் தொடர்புடைய சாதிகள்
- கரையோரத் தொழில்களுடன் தொடர்புடைய சாதிகள்

மேற்குறித்த உற்பத்தித் துறைகள் சார்ந்த மூவகைச் சாதிகளிடையேயும் ஒரு அதிகாரச் சமநிலை (Balance of Power) இருந்தது. ஆயினும் ஆரம்பம் முதலே வேளாளர் சாதி அதன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பலப்படுத்திக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டு பிற சாதிகளைப் பின்னிலைக்குத் தள்ளியது என்பதற்கு ஆதாரம் உள்ளது. வேளாளரின் உயர்ச்சிக்கு அரசியல் மாற்றங்களும் அதன் பயனாக பொருளாதார அதிகாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் துணையாக அமைந்தன எனலாம்.”

மேல் தரப்பட்டுள்ள கூற்றில் உள்ளடங்கியுள்ள முக்கியமான கருத்துக்கள் பின்வருவன:

1. யாழ்ப்பாணச் சமூகம் மூன்று உற்பத்தித் துறைகள் சார்ந்த மூன்று சாதிக் குழுமங்களைக் கொண்டிருந்தது.
2. அம்மூன்று சாதிக் குழுமங்களும் ஆரம்பத்தில் தனித்துவமாகவும் சுதந்திரமாகவும் இயங்கி வந்தன. இச்சாதிகளிடையே ஓர் அதிகாரச் சமநிலை (Balance of Power) இருந்தது.
3. பின்னர் இச் சமநிலை குலைவுற்றது. வேளாளர் சாதி மேலாதிக்கச் சாதியாகப் (Dominant Caste) பலம் பெற்றது. அது தனது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்திப் பிற சாதிகளைப் பின்னிலைக்குத் தள்ளியது.

இக்கருத்துக்களை சுருக்கமாக ஒரு தனிவாக்கியமாகப் பின்வருமாறு வரையறை செய்து கொள்ளலாம்:

விவசாய உற்பத்தித்துறையோடு தொடர்புடைய வேளாளர் சாதி, விவசாய உற்பத்தியுடன் தொடர்புடைய ஏனைய சாதிகளைத் தனது மேலாதிக்கத்திற்கு உட்படுத்தியதோடு, கைவினைத் தொழில் உற்பத்தியோடும் கரையோரத் தொழிற்துறைகளோடும் தொடர்புடைய சாதிகளையும் பின்னிலைக்குத் தள்ளி, யாழ்ப்பாணத்தின் மேலாதிக்கச் சாதியாக உயர்ச்சி பெற்றது.

## 800 ஆண்டுகளின் சமூக வரலாறு

மூன்று உற்பத்தித் துறைகளையும், அவ் உற்பத்தித் துறைகள் சார்ந்த யாழ்ப்பாணத்தின் சாதிகளையும் அடையாளம் காட்டும் சி. அரசரத்தினம், ஏறக்குறைய எட்டு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட யாழ்ப்பாணச் சமூக வரலாற்றைப் பற்றிய விரிகாட்சியை எம் மனக் கண் முன் நிறுத்துகிறார். நான்கு கட்டங்களாக இவ் வரலாறு முன்னோக்கிச் செல்வதையும் அவர் சான்றாதாரங்களுடன் விபரித்துக் கூறுகிறார்.

1. ஆரம்ப காலம் – 13 ஆம் நூற்றாண்டுக்கு முந்திய நூற்றாண்டுகள்.
2. ஆரியச் சக்கரவர்த்திகள் காலம் – 13 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 1619 இல் யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியடைவது வரையான காலம்.
3. காலனிய ஆட்சிக்காலம் – 1619 தொடக்கம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆகிய மூன்று ஐரோப்பிய வல்லரசுகளின் காலனியாக இலங்கையின் வடபகுதி விளங்கிய காலம்.
4. சுதந்திரத்தின் பின்னரான காலம் – 1945 இல் இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான காலத்து வட இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்ட சமூக உருவாக்கம்.

மேற்குறிப்பிட்ட நான்கு கட்டங்களுள் ஆரம்ப காலம் என்னும் காலத்தில் மத்தியப்படுத்தப்பட்ட அரசு ஒன்று நல்லூரைத்

தலைநகராக் கொண்டு உருவாகியிருக்கவில்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

## அரசவம்சம் ஒன்றின் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாணச் சமூக உருவாக்கம்

ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற அரச வம்சம் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட மத்தியப்படுத்தப்பட்ட ஆட்சியை வட இலங்கையில் நிறுவியது. உறுதியான அரசுருவாக்கம், சமூக உருவாக்கத்திற்கும், பொருளாதார - வர்த்தக விருத்திக்கும் வழிவகுத்தது. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்தின் சமூக வளர்ச்சிப் போக்குகளை அரசரத்தினம் விபரித்துக் கூறுகிறார். அவர் கூறியிருப்பவற்றைக் கீழ்க் கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்:

1. ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக்காலத்தில் பாண்டி நாட்டில் இருந்து விவசாயிகளான வீரர் குலங்களைச் சேர்ந்த குடும்பங்கள், தமது உறவுக் குடும்பங்கள் - பணியாட்கள் என்போருடன் யாழ்ப்பாணத்தில் குடியேறினர். இவ்வீரர் குலங்கள், மழவர் - காங்கேயர் ஆகிய பெயர்களைப் பெற்றிருந்தன. இவ்வீரர் குலத் தலைவர்களை போர் வீரர்களான தலையாரிகள் (Warrior Chieftains) எனவும், நிலமானியத் தலையாரிகள் (Feudal Chieftains) என்றும் அழைத்தல் பொருத்தமானது.

2. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் குடியேறிய வீரர் குலத்தவர்கள் வேளாண்மைத் தொழிலை செய்வோராக இருந்தனர். இக் குடியேறிகளிடையே பல உப பிரிவுகள் இருந்தன. தென்னிந்தியாவில் இவர்களது பூர்வீக இடம் யாது, அவர்களின் குடி (Clan) யாது என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இக்குலங்களிடையே பிரிவுகள் இருந்தன. அப்பிரிவுகள் யாழ்ப்பாணத்தில் குடியேறிய பின்பும் தொடர்ந்தன.

3. தலையாரிக் குடும்பங்களுக்கு (Chieftain Families) யாழ்ப்பாண அரசனால் அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டன. அத்தோடு அக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு மாவட்டங்களின் வருமான அதிகாரப் பதவிகளும் வழங்கப்பட்டன. இவ்வாறான பதவி நியமனங்களைப் பெற்றோர் பேரளவான நிலங்களையும் மானியமாகப் பெற்றனர்.

4. மக்களிடம் வரிகளை அறவிடும் அதிகாரம் இவ் வீரர் குலத் தலைவர்களுக்கு வழங்கப்பட்டது. இவ் அதிகாரிகள் முதலியார்கள் என அழைக்கப்பட்டனர். முதலியார் என்ற பெயர் அவர்களது சமூகத் தகுதியை (Social Status) அடையாளப்படுத்தும் குறியீடாக இருந்தது.

5. இம் முதலியார்களின் கீழ் அதிகாரப் படிமுறையில் (Hierarchical Order) அமைந்த பல பதிவி நிலையினரும் இருந்தனர். மணியக்காரர், தலைவர் (Head Man), விதானை ஆகிய பெயர்களால் இப்பதவி நிலையினர் அழைக்கப்பட்டனர். இப்பதவி நிலையினர் கிராம மட்டத்தில் அதிகாரம் உடையவர்களாய் இருந்தனர். அரசனால் இவர்களிற்கும் நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டன.

6. மேற்குறித்த வளர்ச்சிகள் ஏற்பட்டுக் கொண்டிருந்த காலப்பகுதியில் விவசாயம் அல்லாத வேறு தொழில்களைச் செய்பவர்களான சமூகப் பிரிவினர்களின் குடியிருப்புகளும் யாழ்ப்பாணக் குடா நாட்டில் விருத்தி பெற்றன. இச்சமூகப் பிரிவுகளில் முக்குவர் சாதி, அரசியல் அதிகாரமும் சடங்கியல் அதிகாரமும் உடையதாய் இருந்தது. முக்குவர்கள் போன்றே கரையார் சாதியும் அரசியல் அதிகாரமும், இராணுவ அதிகாரமும் (Military Power) உடையதாகவும் இருந்தது. கரையாரிடம் சைத்திரிய அந்தஸ்தைக் கோரும் மரபுகள் இருந்துள்ளன.

## மேலாதிக்கச் சாதி என்னும் எண்ணக்கரு

வேளாளர் மேலாதிக்கத்தின் படிப்படியான பரிணாமம் பற்றிய விபரிப்பை இத்துடன் நிறுத்திவிட்டு, அரசரத்தினம் அவர்களின் கட்டுரையை ஒரு கோட்பாட்டு ஆய்வும் அலசலும் என்ற நிலைக்கு உயர்த்துவதாக

அமையும் மேலாதிக்கச் சாதி (Dominant Caste) என்னும் எண்ணக்கருவைப் பற்றிய அவரது விளக்கத்தை எடுத்துக் கூறுவோம். மேலாதிக்கச் சாதி என்னும் எண்ணக்கரு தென்னிந்தியப் பின்னணியில் நில உடமைச் சாதிகளின் சமூக மேலாதிக்கத்தை விளக்குவதற்கு எம்.என். சிறினிவாஸ் அவர்களால் முன்மொழியப்பட்டது. அதனை இரவல் பெற்றுக் கொள்ளும் அரசரத்தினம் நுட்பமான முறையில் யாழ்ப்பாணச் சமூகத்தின் உருவாக்கத்தில் வேளாளர் சாதியின் வகிபாகத்தை விளக்குகிறார்.

மேலாதிக்கச் சாதி என்றால் என்ன? ஒரு கிராமத்தில் அல்லது சில கிராமங்கள் சேர்ந்த ஒரு வட்டாரத்தில், ஒரு குறிப்பிட்ட சாதி மேலாதிக்கம் உடையதாக இருக்கலாம். ஆயினும் ஒரு குறுகிய புவியியல் எல்லைக்குள் மேலாதிக்கம் செலுத்துவது, குறித்த சாதியை மேலாதிக்கச் சாதி என்ற நிலைக்கு உயர்த்திவிட முடியாது. கிராமம், வட்டாரம், பிரிவு, மாவட்டம் என்ற விரிந்த நிலையில் யாழ் குடாநாடு முழுமையிலும் மேலாதிக்கமுடைய சாதியாக ஒரு சாதி தனது ஆதிக்கத்தை விரிவாக்கிக் கொண்டதா என்பதே முதன்மையான அளவுகோல் ஆகும். தமிழரசர்களின் ஆட்சிக் காலத்தில் கூட யாழ்ப்பாணத்தில் வேளாளர் அல்லாத பிற சமூகக் குழுக்கள் பல ஆதிக்கம் உடையனவாய் இருந்து வந்தன. சமூகக் குழுக்களுக்கிடையே அதிகாரச் சமநிலை (Balance of Power) நிலவியது. மேலாதிக்கச் சாதி என்பதன் பண்புக் கூறுகள் சிலவற்றை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்:

அ). குறிப்பிட்டதொரு சாதி ஒரு பிராந்தியம் முழுமையிலும் சனத்தொகையில் பெரும்பான்மையாக இருக்கும் போது, அச்சாதிக்குப் பிறசாதிகளை விடச் சாதகமான நிலை இருக்கும்.

ஆ). யாழ்ப்பாணம், விவசாயச் சமூகமாக (Agrarian Society) உருவாகிக் கொண்டிருந்தது. விவசாயச் சமூகமொன்றில் நில உடமையும், விவசாய வளங்களைக் கையகப்படுத்திக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் முக்கியமானதாகும்.

இ). விவசாயச் சமூகங்களில் மிகவும் அருந்தலான வளம், பணம் அல்லது பண மூலதனம் ஆகும். நிதி வளங்களையும் குறித்த சாதி தனது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும்.

ஈ). வர்த்தகம், பொருட்களின் பரிவர்த்தனை, சேவைத் தொழில்கள் ஆகியவற்றினைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தலும் அவசியமானது.

உ). உழைப்பையும், உழைப்புக்குக் கொடுக்கப்படும் ஊதியத்தையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையதாக மேலாதிக்கச் சாதி இருத்தல் வேண்டும். தனது சுரண்டலை பொருளாதாரமல்லாத அதிகாரம் மூலம் (NonEconomic Coercion) தொடரக் கூடிய ஆற்றலுடையதாக மேலாதிக்கச் சாதி இருத்தல் வேண்டும்.

ஊ). மேற்குறிப்பிட்டவை யாவற்றிலும் முக்கியமானது நிர்வாகப் பதவிகளையும் உத்தியோகப் பதவிகளையும் தனது தனியுரிமையாக்கி, பிற சமூகக் குழுக்களை அதிகாரத்தில் பங்குகொள்ள விடாது தடுத்துவிடுதல் ஆகும்.

எ). மேற்சொன்னவை உலகியல் சார் அதிகாரங்கள் ஆகும். இவை மட்டும் போதியனவல்ல. சமய நிறுவனங்களைக் கட்டுப்படுத்தலும், சடங்கியல் மேலாண்மையை (Ritual Superiority) உறுதி செய்து கொள்வதும் முக்கியமானது. மேலாதிக்கச் சாதியின் சடங்கியல் மேலாண்மை, அதன் சாதிய மேலாண்மைக்கு நியாயத்தையும் வலிதுடமையையும் வழங்குவதாக இருக்கும்.

மேலாதிக்கச் சாதி மாதிரியின் (Dominant Caste Model) முக்கியமான பண்புக் கூறுகள் மேலே விபரித்துக் கூறப்பட்டன. அடுத்து யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின்னர் வேளாளர் சாதி தனது மேலாதிக்கத்தை நிறுவுவதில் எந்தளவிற்கு வெற்றி கண்டது, வேளாளர்களை ‘மேலாதிக்கச் சாதி’ என்றழைப்பது கோட்பாட்டு நிலையில் வலிதுடமையுடையதா? ஆகிய வினாக்களை மனதில் இருத்திய வண்ணம், யாழ்ப்பாண

அரசின் வீழ்ச்சிக்குப் பின்னருள்ள வரலாற்றுப் போக்குகளைப் பற்றிய அரசரத்தினத்தின் எடுத்துரைப்பை (Narration) நோக்குவோம்

## யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சி

யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியும் அதற்குப் பிந்திய காலத்தில் காலனி ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளும், யாழ்ப்பாணத்தின் சாதிகளுக்கிடையிலான உறவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தின.

1. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பொருளாதார முறையில் சில மாற்றங்களைப் புகுத்தினர். சமூகத்திலும் புதிய கூறுகளை அவ் ஆட்சியாளர்கள் புகுத்தினர். இதன் விளைவாகச் சில சமூகக் குழுக்கள் மேல்நிலைக்கு உயர்ந்தன. வேறு சில உயர் நிலையில் இருந்து தாழ்வுற்றன.

2. 17 ஆம் நூற்றாண்டின் முக்கிய வளர்ச்சிகளில் ஒன்றான இந்து சமுத்திர வர்த்தகத்தின் விரிவாக்கமும், புதிய பொருளாதார முறைமையும் யாழ்ப்பாணத்தவர்களுக்குத் வாய்ப்புகளைத் திறந்து விட்டது. இதனால் பல சமூகக் குழுக்கள் உயர்ச்சி பெற்றன.

3. வேளாளர்கள் அல்லாத சாதிப் பிரிவினர்களுக்கு காலனிய ஆட்சியாளர்கள் நிர்வாகப் பதவி நியமனங்களை வழங்கியதால், சாதி உறவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டன.

4. போர்த்துக்கேயர் ஒப்பீட்டளவில் குறுகிய காலமே (16191658) யாழ்ப்பாணத்தில் ஆட்சி செய்தனர். இக்குறுகிய கால ஆட்சியில் கத்தோலிக்க மதம் வேகமாகப் பரவியது. அம்மதத்தை ஏற்றுக் கொண்ட சமூகப் பிரிவினர்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன. கரையார் சாதியினரில் பெருந்தொகையானோர் கிறிஸ்தவத்திற்கு மாறினர். இவ்வாறு மதம் மாறியவர்கள் போர்த்துக்கேய அரசு அதிகாரத்திற்கு மிக நெருக்கமானவர்களாக ஆயினர்.

5. யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் போது அரண்மனைச் சேவகர்களாகவும், போர் வீரர்களாகவும் அரசனிற்குச் சேவை செய்தோர் யாழ்ப்பாணத்தின் பல்வேறு இடங்களில் குடியேறி நிலவுடைமையாளர்களாக ஆயினர். இவ்வாறு புதிய நில உடைமையாளர்களாக உருவாக்கம் பெற்ற மடப்பள்ளி, அகம்படியர், தனக்காரர் ஆகிய சாதியினரின் பொருளாதார - சமூக உயர்ச்சி பற்றி அரசரத்தினம் விபரித்துக் கூறுகிறார். மடப்பள்ளி, அகம்படியர், தனக்காரர், செட்டி, மலையாளி என்னும் பல சமூகப் பிரிவுகள் வேளாளர்களுடன் ஒன்றிணைந்தன எனவும், இச் சாதிகள் சில அடையாளம் தெரியாது மறைந்து விட்டன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ்ப்பாணத்தின் சமூக வரலாற்றில் 18 ஆம் நூற்றாண்டின் முக்கியத்துவம்

ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் 18 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் சாதி உறவுகளில் அடிப்படையான மாற்றங்களை ஏற்படுத்தின.

1. 18 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் அரிசி விலை தொடர்ச்சியாக உயர்ந்தது. தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் குழப்ப நிலை காரணமாக அரிசி இறக்குமதி தடைப்பட்டதால் அரிசி விலை இருமடங்காக அதிகரித்தது. இதன் பயனாக தமது நுகர்வுத் தேவைக்கு மேலதிகமான நெல்லை உற்பத்தி செய்யக் கூடிய நில உடைமையாளர்களான விவசாயிகள், திறந்த சந்தையில் நெல்லை விற்பனை செய்வது மூலம் இலாபம் ஈட்டினர். நெற்காணிகளின் விலைகள் உயர்ந்தன. நிலவுடைமையாளர்களான வேளாளர்கள் நெற்காணிகளின் விலை உயர்வால் நன்மை பெற்றனர்.

2. காசுப்பயிரான புகையிலையின் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் பெருமாற்றங்கள் ஏற்பட்டன. புகையிலை, சிற்றுடைமையாளர்களின் பயிராக இருந்தது. இதனைப் பயிரிட்டோர் சிற்றுடைமைக் குடியான் விவசாயிகள் (Peasants) ஆவர். அதுவரை காலமும் பிழைப்பூதிய நிலையில்

*(Subsistence Level) வாழ்ந்த விவசாயிகளுக்கு, காசுப்பயிரான புகையிலையின் உற்பத்தி காரணமாக, குறிப்பிடத்தக்க அளவு பண வருமானம் கிடைத்தது.*

3. *பண வருவாயைப் பெற்றுக் கொள்வதற்கான இன்னொரு வழியாகப் பனம் பொருள் உற்பத்தியும் வர்த்தகமும் அமைந்தது. பனந் தோட்டங்களின் உடைமையாளர்களாக இருந்த வேளாளர்கள் இதனால் நன்மை பெற்றனர். சிறுதுண்டு நிலங்களை உடைமையாக வைத்திருந்த சிற்றுடைமையாளர்களும் நன்மை பெற்றனர்.*

4. *ஒல்லாந்தர் ஆட்சியில் தென்னிந்தியாவில் இருந்து அடிமைகள் இறக்குமதி செய்யப்பட்டனர். 1694 - 96 ஆண்டு காலத்தில் சோழ மண்டலக் கடற்கரையில் இருந்து 3589 அடிமைகள் தனி நபர்களால் கொள்வனவு செய்யப்பட்டனர் என்பதை ஆவணச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. அடிமை வியாபாரம் யாழ்ப்பாணச் சமூகத்தில் கேடான விளைவுகளை ஏற்படுத்தியதோடு 20 ஆம் நூற்றாண்டு வரை சமூக உறவுகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.*

5. *மரவேலை செய்வோர், கட்டிட - சிற்ப வேலை செய்வோர், இரும்பு வேலை செய்வோர், பொன் - வெள்ளி ஆபரணங்களைச் செய்வோர் ஆகிய கைவினைத் தொழிலாளர்களின் உழைப்பு, உடல் உழைப்பை விடக் கூடிய பெறுமதி உடையதாக இருந்தது. இக் கைவினைஞர்கள் சுதந்திரமானவர்களாக இருந்தனர். மர வேலை, இரும்பு வேலை, கட்டட வேலை ஆகிய தொழில்களுக்கான கேள்வி அதிகரித்தது. இத் தொழில்களில் ஈடுபடுவோரது கூலி, கிராமத்து உத்தியோகத்தர்கள் பதவிகளில் இருந்தோரது கூலிக்குச் சமமாக இருந்தது.*

6. *வர்த்தகம், பண்டங்களின் தரகு வேலை, இந்தியாவுடனான வர்த்தகம், யானை வர்த்தகம் ஆகிய தொழில் முயற்சிகளில் ஈடுபட்ட சமூகப் பிரிவினர்கள் பொருளாதார நன்மைகளைப் பெற்றனர். குறிப்பாக செட்டிகள் சமூகப் பிரிவினர் பணம் படைத்த செல்வந்தர்களாகவும் சமூகத்தில் செல்வாக்குள்ளவர்களாகவும் விளங்கினர்.*

*கட்டுரையின் இறுதிப் பகுதியில் 1796 இல் ஒல்லாந்தரிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய பிரித்தானியர் ஆட்சியில் ஏற்பட்ட மாற்றங்கள் சுருக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன.*

## க. அருமைநாயகம்

*அரசரத்தினம் அவர்களின் கட்டுரை இலங்கை சுதந்திரமடைந்த பின்னரான காலம் வரையான 800 ஆண்டுகளின் சமூக வரலாற்றை கூறுவதாக அமைந்துள்ளது. ஆயினும் அக் கட்டுரை ஆரியச் சக்கரவர்த்திகள் ஆட்சிக் காலம், ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் என்ற இரு காலப் பகுதிகள் பற்றிய ஆய்வைக் குவிமையப்படுத்துவதாக அமைந்தது. குறிப்பாக 18 ஆம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ், வேளாளர் மேலாதிக்கச் சாதியாக மேலாண்மை பெற்றமை குறித்து அவர் விளக்கியிருப்பதை குறித்துக் காட்டினோம்.*

*க. அருமைநாயகம் அவர்களின் 'யாழ்ப்பாணத்தில் சாதி : 19 ஆம் 20 ஆம் நூற்றாண்டுகள்' என்னும் கட்டுரை அரசரத்தினம் விட்ட இடத்தில் இருந்து தொடருவதாக அமைகிறது. அவரது கட்டுரையில் கூறப்பட்ட கருத்துகளை பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலம் (1796 - 1844), 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி, 20 ஆம் நூற்றாண்டின் கலகங்களும் பிற நிகழ்வுகளும் என்னும் மூன்று தலைப்புகளில் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.*

### *1. பிரித்தானியர் ஆட்சியின் தொடக்க காலம் (1796 – 1844)*

*பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில், பிரித்தானியரின் சாதி பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும், 1619 முதலாகத் தொடர்ந்த போர்த்துக்கேயர் - ஒல்லாந்தர் ஆகிய இரு காலனிய ஆட்சியாளர்களின் கொள்கைகள் நடைமுறைகளில் இருந்து அதிகம்*

வேறுபடவில்லை என்பதை க. அருமைநாயகம் கட்டுரையின் முற்பகுதியில் தெரிவிக்கின்றார்.

அ. போர்த்துகேயரும் ஒல்லாந்தரும் சாதிமுறையை ஏற்றுக் கொண்டு அதனைத் தம் சுரண்டல் தேவைகளுக்கு ஏற்ற முறையில் பயன்படுத்தினர். இதனால் சாதிமுறை இறுக்கமடைந்தது. டச்சுக்காரர் தேசவழமைச் சட்டத்தைத் தொகுத்தனர். இச் சட்டக்கோவை சாதிகளுக்கிடையிலான உறவுகள் தொடபான வழமைக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கியது.

ஆ. பிரித்தானியரும் உயர் சாதியினரின் நலன்களைப் பாதுகாக்கும் முறையிலான சட்டங்களை இயற்றினர். 1800 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க கட்டளைச் சட்டம், ‘உயர் சாதியினருக்கும் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கும் இடையிலான பிணக்குகள் யாழ்ப்பாணத்தில் இருந்துவந்த வழக்கங்கள், நடைமுறைகள் என்பனவற்றுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படும்’ என விதித்தது .

இ. இக் காலப்பகுதியில் நீதிமன்றங்கள் சாதியின் இருப்பை ஏற்று அதற்கு அங்கீகாரம் அளிக்கும் முறையில் தீர்ப்புகளை வழங்கின.

ஈ. 1844 இல் அடிமைமுறை ஒழிக்கப்பட்டது. ஆயினும் உடனடியாக அது பெருமாற்றம் எதனையும் ஏற்படுத்தவில்லை.

### 2. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி

அ. இக்காலத்தில் நீதிமன்றங்கள் சாதி அடிப்படையிலான கடப்பாடுகளை கேள்விக்கு உட்படுத்தின. ‘தவசி கந்தன் எதிர் வயிரவன் கந்தனும் பிறரும்’ எனும் வழக்கின் தீர்ப்பு ஆங்கிலேய அரசாங்கத்தினதும் நீதித்துறையினதும் கொள்கை மாற்றத்தை எடுத்துக் காட்டுவதாகும். சாதிக் கடப்பாடுகள் பற்றிய பிணக்குகளை நீதிமன்றுகள், ஒப்பந்தம் என்ற சட்ட எண்ணக்கருவின் அடிப்படையில் அணுகின.

ஆ. தொடக்க காலத்தில் கத்தோலிக்க கிறிஸ்தவ மிசனரிகள் உயர்சாதிகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து, சாதிபேதம் காட்டும் நடைமுறைகளைத் தொடர்ந்தன. காலப்போக்கில் மிசனரிகள் சாதிமுறையை நிராகரித்தன. மிசனரிகளின் பாடசாலைகளில் உயர்சாதிப் பிள்ளைகளும் தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளும் சமமாக நடத்தப்பட்டமை அக்காலத்தில் புரட்சிகரமான நடவடிக்கையாக இருந்தது. ஆங்கிலக் கல்வியைப் பெறுவதற்கு வேறு வழிகள் இல்லாத காரணத்தால், உயர் சாதியினரின் பிள்ளைகள் மிசனரிப் பாடசாலைகளின் சமத்துவ நடைமுறைகளை ஏற்கும் கட்டாயத்திற்கு உட்பட்டனர்.

இ. 19 ஆம் நூற்றாண்டின் முடிவில் தாழ்த்தப்பட்ட சாதிப்பிள்ளைகளுக்கும் இந்துப் பாடசாலைகளில் அனுமதி பெற முடிந்த போதும், 1930 கள் வரை சம ஆசனம் வழங்குவதற்கு இந்துப் பாடசாலைகள் முன்வரவில்லை.

### 3. இருபதாம் நூற்றாணண்டின் கலகங்களும் பிற நிகழ்வுகளும்

அ. சாதி ஒடுக்குமுறைக்கு எதிரான கலகங்கள் 20 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டன. ஒடுக்கப்பட்டோர் சமத்துவ உரிமைகளையும் சலுகைகளையும் கோரி நின்றனர். 1914, 1922, 1932, 1933 ஆகிய ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் வன்முறைக் கலகங்கள் ஏற்பட்டன.

ஆ. இச் சாதிக்கலவரங்கள் நடைபெற்ற காலத்தில் கத்தோலிக்கப் பாதிரியாரான சுவாமி ஞானப்பிரகாசர், பெரும் எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்டவர்களை கத்தோலிக்க சமயத்திற்கு மதமாற்றம் செய்வித்தார். 3000 பேர் வரை இவ்வாறு கத்தோலிக்கத்தை தழுவினர் என்று குறிப்பிடப்பட்டது. ஞானப்பிரகாசர் 37 கத்தோலிக்கத் தேவாலயங்களை புதிதாக இக்காலத்தில் நிறுவினார்.

இ. 1880 க்கும் 1920 க்கும் இடைப்பட்ட 40 ஆண்டு காலத்தில் பல தமிழ்ப் பாடசாலைகளும் இந்துக்களால்

*அமைக்கப்பட்டன. ஆயினும் இப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் பிள்ளைகள் அனுமதிக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட சாதிப் பிள்ளைகளுக்கு அனுமதி வழங்கிய பாடசாலைகளில் கூட அப் பிள்ளைகளுக்கு சம ஆசனம் வழங்கப்படவில்லை.*

ஈ. *அரசாங்கப் பாடசாலைகளிலும், உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளிலும் சாதி பேதம் காட்டக் கூடாது; சம ஆசனம் வழங்க வேண்டும் என்று 1929 ஆம் ஆண்டின் சுற்றறிக்கை மூலம் கல்வித் திணைக்களம் அறிவுறுத்தியது. உயர்சாதி இந்துக்கள் இதனை எதிர்த்தனர். அரசாங்கம், அழுத்தங்களுக்கும் எதிர்ப்புகளுக்கும் பணியாது உறுதியாக நின்றது. உயர்சாதி இந்துக்கள், பாடசாலைகளுக்குத் தீ வைத்தல் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டனர். 1929 - 1932 காலம் யாழ்ப்பாணத்தின் சமூக, அரசியல் கொந்தளிப்பின் உச்சக்கட்டமாக அமைந்தது.*

உ. *யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரஸ், சாதி ஒழிப்புக்கான இயக்கத்தில் இளைஞர்களை ஒன்றிணைத்துத் தலைமைத்துவம் வழங்கியது. இந்து அற நிலையங்களின் நிர்வாகம், மிருகபலி, வழிபாட்டுச் சுதந்திரம், பற்றிய விசாரணைக்குழு 1949 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அக் குழுவின் அறிக்கை 1951 இல் பிரசுரிக்கப்பட்டது. வழிபாட்டுச் சுதந்திரம் பற்றி (தாழ்த்தப்பட்டோர் ஆலயங்களுக்குள் சென்று வழிபடுவதற்கான சுதந்திரம்) இவ் விசாரணைக் குழுவின் அறிக்கையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.*

ஊ. *20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியை எட்டும் போது யாழ்ப்பாணத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டிருந்தன. இந்துக் கோவில்களின் நிர்வாகம், ஆலயப் பிரவேசம் என்பன பற்றிய சர்ச்சைகள் 1930 களிலும் 1940 களிலும் இடம்பெற்றன. 1946 ஆம் ஆண்டில், தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு, யாழ்ப்பாணத்தில் பல் அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்கி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசியல் பிரதிநிதித்துவம் வழங்க முடியுமா என்பதைப் பரிசீலித்தது. யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் பரவலாகச் சிதறி வாழ்வதால், அவர்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யக் கூடிய பல அங்கத்தவர் தொகுதி எதனையும் அமைக்க முடியாது என ஆணைக்குழு முடிவு செய்தது.*

> பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில், பிரித்தானியரின் சாதி பற்றிய கொள்கைகளும் நடைமுறைகளும், **1619** முதலாகத் தொடர்ந்த போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் ஆகிய இரு காலனிய ஆட்சியாளர்களின் கொள்கைகள் நடைமுறைகளில் இருந்து அதிகம் வேறுபடவில்லை என்பதை க. அருமைநாயகம் கட்டுரையின் முற்பகுதியில் தெரிவிக்கின்றார்.

*1796 முதல் 1950 வரையான காலத்தின் முக்கியமான மாற்றங்களை க. அருமைநாயகம் பகுப்பாய்வு முறையில் விபரித்துள்ளார். அவரது விபரிப்பு, யாழ்ப்பாணத்தின் சாதிமுறை நெகிழ்ந்து கொடுத்தல் (Flexibility) செயல்முறை மூலம் முன்னேற்றப் பாதையில் செல்வதை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது. சமூக அமைப்பில் மாற்றம் எதனையும் அனுமதிக்காத பழமைவாதப் போக்கு, பிரித்தானியர் ஆட்சியின் தொடக்கத்தில் வலுப்பெற்றிருந்தது. பின்னர் படிப்படியாக சாதியத் தளைகள் உடைக்கப்பட்டு, யாழ்ப்பாணச் சமூகம் நவீனத்துவத்தை நோக்கி முன்னேறுவதை அவரின் கட்டுரை விபரித்துக் கூறுகிறது. அவரது கட்டுரையின் பிரதான அடிக்கருத்தாக (Theme), இறுக்கமும் நெகிழ்ச்சியும் (Rigidity and Flexibility) என்னும் எதிர்முரணான செயல்முறைகளின் இயங்கியல் அமைந்துள்ளது.*

# 2

## பஸ்தியாம்பிள்ளை அவர்களின் ஆய்வுக் கட்டுரை

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பிரித்தானியக் காலனிய அரசின் கொள்கைகளும் நடைமுறைகளும் சாதி உறவுகள் தொடர்பாக எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தின என்பதை ஆராய்வதாக பேராசிரியர் பஸ்தியாம்பிள்ளை அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது. 19 ஆம் நூற்றண்டின் நடுப்பகுதி என்ற குறுகிய கால எல்லையை தமது ஆய்வுக்கான காலமாக வகுத்துக் கொண்ட பேராசிரியர் தமது கட்டுரையின் தலைப்பைப் பின்வருமாறு குறித்துள்ளார்: 'CASTE IN NORTHERN SRI LANKA AND COLONIAL ADMINISTRATIVE PRACTICE IN THE MID 19th CENTURY: COMPROMISE AND EXPEDIENCY'

'வட இலங்கையில் சாதி : பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் காலனிய நிர்வாக நடைமுறைகள் - விட்டுக் கொடுப்பும் சூழலுக்கு ஏற்ப நெறி பிறழ்தலும்' என்பது இதன் தமிழ் மொழிபெயர்ப்பாகும். இத் தலைப்பில் மூன்று விடயங்கள் உள்ளடங்கியிருப்பதைக் காணலாம்.

### 1. பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி

பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் 1796 இல் தொடங்கியது. ஆயினும் 1833 இன் பின்னரே அவ்வாட்சியின் கொள்கைகளிலும் நடைமுறைகளிலும் முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டன. பொருளாதார உற்பத்தியிலும் வர்த்தகத்திலும் பிரித்தானியர் புகுத்திய மாற்றங்கள் சமூக மாற்றங்களுக்கு அடித்தளம் இட்டன. சாதி உறவுகளை நிர்வகிப்பதிலும் பிரித்தானிய அதிகாரிகளின் நடைமுறைகள் இக்காலத்தில் மாற்றம் பெற்றன.

1833 முதலான 50 ஆண்டு காலத்தில் காலனிய நிர்வாக நடைமுறைகளின் தாக்கம் பேராசிரியரின் கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. இக்கட்டுரை ஒரு குறுகிய காலப் பகுதியைப் பற்றிய நுண்ணாய்வு (Micro - analysis) ஆகும்.

### 2. காலனிய நடைமுறைகள்

பிரித்தானியக் காலனியம் புகுத்திய மாற்றங்களில் முக்கியமானது நிர்வாகம் தொடர்பான மாற்றங்களாகும். பிரித்தானியக் காலனிய நிர்வாகம் சாதி உறவுகள் குறித்த பிரச்சினைகளைத் தீர்வு செய்வதில் கையாண்ட கொள்கைகளும் நடைமுறைகளும் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகின்றன.

### 3. விட்டுக் கொடுப்பும் சூழலுக்கு ஏற்ப நெறி பிறழ்தலும்

ஆங்கிலேய ஆட்சியாளர்களிடம் சமூகநீதி (Social Justice) பற்றிய மனச்சாட்சியுணர்வு இருந்தது. சமூகக் குழுக்களிடையிலும், தனிநபர்களிடமும் பிறப்பின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதை ஆங்கிலேய அதிகாரிகளால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆயினும் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த சாதி வழமைகளை உடனடியாக மாற்றுவது கடினம் என்பதையும், சாதி முறையில் தலையீடு செய்தல் தமது ஆட்சி நலன்களுக்குத் தீங்கானதாக அமையும் என்பதையும் காலனிய அரசாங்கம் உணர்ந்தது. இதன் பயனாக விட்டுக் கொடுத்தல் (Compromise) கொள்கை பின்பற்றப்பட்டது. ஆயினும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நிர்வாக விதிமுறைகளை வளைப்பதும், சூழலுக்கு ஏற்ப நெறி பிறழ்தலும் (Expediency) நிர்வாக நடைமுறைகளில் காணப்பட்டன.

## குறுங்கதைகள்

நிர்வாக நடைமுறைச் சிக்கல்களோடு சம்பந்தப்பட்ட குறுங்கதைகள் பேராசிரியரின் கட்டுரையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. சுவாரசியமான இக்கதைகளின் பிரதான கதாப்பாத்திரமாக அரசாங்க அதிபர் பீ.ஏ. டைக் (1805 - 1867) விளங்குகிறார். யாழ்ப்பாணத்தின் முதலியார்கள், கிராமத் தலைமைக்காரர்கள், தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எடுத்துக்கூறி முறையிடும் முறைப்பாட்டாளர்கள், பிணக்குகளிலே

சம்பந்தப்பட்ட சாதிகள் - சமூகக்குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஆகிய பல்வேறு கதைமாந்தர்களையும் இக்கதைகளின் ஊடாகச் சந்திக்க முடிகிறது. இக்கதைகளின் ஊடாக சம்பந்தப்பட்ட கதை மாந்தர்களின் 'அக உலகத்தைக்' காண்பதற்கும், நிகழ்வுகளுக்குப் பின்னால் உள்ள அகக் காரணிகளைப் புரிந்து கொள்ளவும் முடிகிறது. சாதிச் சச்சரவுகள், பிணக்குகள் என்பன பற்றிய இக்குறுங்கதைகள், விடய ஆய்வு (Case Study) என்னும் ஆய்வு உத்தியைப் பிரயோகித்து, 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி என்னும் வரலாற்றுக்கால நிகழ்வுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு உதவுகின்றன.

பேராசிரியரின் கட்டுரையின் சிறப்பு, ஆவணச் சான்றுகளைத் துல்லியமாக எடுத்துக்கூறி இக்குறுங்கதைகளைக் கட்டமைத்திருப்பதாகும். காலனிய ஆட்சிக்காலத்து ஆவணங்கள், பதிவேடுகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசாங்க அதிபர் டைக்கின் 'டயரிக்' குறிப்புகள் என்பனவற்றில் இருந்து பெறப்பட்ட சான்றாதாரங்களைக் கொண்டு விடய ஆய்வுக்குரிய கதைகள் எழுதப்பட்டுள்ளன. புள்ளி விபரங்கள், தரவுகள் என்பனவற்றின் விபரிப்பாக இல்லாது பேராசிரியரின் கட்டுரை, பகுப்பாய்வு முறையில் 19 ஆம் நூற்றாண்டின் யாழ்ப்பாணச் சாதி முறையைக் காட்சிப்படுத்துகிறது.

அரசரத்தினம், அருமைநாயகம், பஸ்தியாம்பிள்ளை ஆகிய மூன்று வரலாற்றாசிரியர்களின் கட்டுரைகளின் முக்கியமான கருத்துகள் இதுவரை எடுத்துக் கூறப்பட்டன. அடுத்து மானிடவியலாளர்கள் மூவரின் ஆக்கங்கள் பற்றி நோக்குவாம்.

## சமூகவியல் / மானிடவியல் ஆய்வுகள்

சமூகவியல் / மானிடவியல் நோக்கில் யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பையும், சமூக உறவுகளையும், சாதியக் கருத்தியலையும் ஆராயும் நான்கு கட்டுரைகள் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள் மைக்கல் பாங்ஸ் அவர்களின் கட்டுரை நீர்வேலிக் கிராமத்தில் நிகழ்த்தப்பட்ட கள ஆய்வின் பயனாக எழுதப்பட்ட ஆய்வேட்டினை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது. பாங்ஸ் அவர்களின் ஆய்வேடும், கட்டுரையும் 1950 களில் பிரபலம் பெற்றிருந்த 'கிராமிய ஆய்வுகள்' (Village Studies) என்னும் வகை ஆய்வுகளாக அமைந்தன. கிராமிய ஆய்வுகள் விவசாயச் சமூகங்கள் (Agrarian Societies) பற்றிய ஆய்வுகளாகவும் அமைந்தன. இனக்குழு வாழ்க்கை முறையைக் கொண்ட சமூகங்களில் (Tribal Societies) இருந்து மானிடவியலாளர்களின் கவனம் விவசாயச் சமூகங்கள் பக்கம் திரும்பிய ஒரு காலகட்டத்தில், இலங்கையின் யாழ்ப்பாணத்திற்கு வந்து, நீர்வேலிக் கிராமத்தில் தங்கியிருந்து ஆய்வு செய்த மைக்கல் பாங்ஸ் அவர்களின் ஆய்வு, யாழ்ப்பாண விவசாயச் சமூகத்தில் சாதியின் இயங்கியல் பற்றிய கோட்பாட்டுப் புரிதலுக்கு உதவும் ஆய்வு என்பது குறிப்பிடத்தக்கது. பாங்ஸ், யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய ஆய்வில், கள ஆய்வு (Field Work) முறையியலைப் புகுத்திய முன்னோடி என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. 1960 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட பாங்ஸ் அவர்களின் கட்டுரையின் முக்கியமான கருத்துகளைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

## சாதி முறையின் வரைவிலக்கணம்

யாழ்ப்பாணத்தின் புவியியல், தரைத்தோற்றம், சமூக வரலாறு என்பன பற்றி சில வாக்கியங்களில் அறிமுகம் செய்யும் பாங்ஸ், கட்டுரையின் தொடக்கத்திலேயே சாதிமுறை (Caste System) பற்றிய வரைவிலக்கணம் ஒன்றையும் கூறி விடுகிறார். இவ் வரைவிலக்கணம் சாதிமுறை பற்றிய பொதுவான வரைவிலக்கணம் அன்று. நீர்வேலிக் கிராமத்தின் கள ஆய்வு அனுபவத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணத்தின் சாதி முறையின் மிக முக்கியமான அம்சங்களை வாசகர் கவனத்திற்குக் கொண்டு வரும் வரை விலக்கணமாக இது அமைந்துள்ளது. பாங்ஸ், சாதி முறையின் நான்கு அம்சங்களை முக்கியத்துவப்படுத்திக் கூறுகிறார்.

அ) சாதி ஓர் அகமணக் குழுவாகும் (Endogamous Group)

ஆ) துடக்கு (Pollution) என்னும் கருத்து சாதியின் கருத்தியலாக உள்ளது.

இ) சாதிகள் சடங்கு முறைச்சேவைகளை (Ritual Services) ஆற்றுகின்றன. இச்சடங்கியல்

சேவைகள் பொருளாதாரம், சமயம், அரசியல் என்னும் அடிப்படைகளில் சாதிகளிடையே பரஸ்பர உறவுகளை உருவாக்குகின்றன.

ஈ) சாதிகள் ஒவ்வொன்றிற்கும் பெயர்கள் இருக்கும். அவை மேல் - கீழ் என்ற தரவரிசையில் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். சாதிகளின் மரபுவழி நடத்தைகள் (*Customary Behaviour*) அவற்றின் தரவரிசை வேறுபாடுகளைக் குறியீட்டு வடிவில் வெளிப்படுத்துவன (*Symbolise Rank Differences*).

யாழ்ப்பாணச் சாதி பற்றிய இந்த வரைவிலக்கணம் நீர்வேலிக் கிராமத்தின் சாதி ஒழுங்கமைப்பின் விபரிப்பிற்குப் பொருந்துவதாகவும் அதனை சமூகவியல் நோக்கில் புரிந்து கொள்ளவும் உதவுகின்றது.

## மூன்று வகைக் கிராமங்கள்

யாழ்ப்பாணத்தின் சாதிகளின் புவியியல் பரம்பலை எடுத்து நோக்கின், அங்கு மூன்று வகையான கிராமங்கள் இருப்பதைக் காணலாம். இம் மூவகைக் கிராமங்களாவன:

1. ஒரே ஒரு சாதியை மட்டும் கொண்ட ஒரு சாதிக்கிராமம்
2. பல சாதிகளைக் கொண்ட பல சாதிக்கிராமம்

இவ்வகைப் பல சாதிக் கிராமங்களில் ஒவ்வொரு சாதியும் தெளிவான எல்லைகளையுடைய வெவ்வேறு வட்டாரங்களில் தமது குடியிருப்புகளைக் கொண்டிருக்கும்.

3. கலப்புக் கிராமம்

பல சாதிகளைக் கொண்ட கிராமத்தில் வேளாளர் சாதி, பெரும்பான்மையினராக இருப்பர். வேளாளர் குடியிருப்புகள் கிராமம் முழுவதும் பரவியிருக்கும். அப்பெரும்பான்மையினர் மத்தியில் வேறு சாதிகளின் குடும்பங்கள் திட்டுத் திட்டாகப் பரவியிருக்கும். உதாரணமாக சனத்தொகையின் 75% வேளாளரைக் கொண்ட ஒரு கிராமத்தில் வேறு 4 - 5 சாதிகளின் குடியிருப்புகளும் பரவிக் காணப்படும்.

இந்த மூவகைக் கிராமங்களில் குடாநாட்டுக்குள் இரண்டாவது, மூன்றாவது வகைக் கிராமங்களே பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. முதலாவதான ஒரு சாதிக் கிராமங்கள் குடா நாட்டில் எண்ணிக்கையில் மிகக் குறைவாக உள்ளன. ஆனையிறவுக்குத் தெற்கே முதலாவது வகையான ஒரு சாதிக் கிராமங்கள் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தின் சமூகப் புவியியலின் (*Social Geography*) இந்த அம்சம் சாதியுறவுகளைத் தீர்மானிக்கும் காரணியாக இருப்பதைக் காணலாம்.

## சமூக அடுக்கமைவு

யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூக அடுக்கமைவு (*Social Stratification*) பற்றி மைக்கல் பாங்ஸ் கூறும் கருத்து முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் மூவகை அடுக்கமைவு காணப்படுவதாக பாங்ஸ் கூறினார். அவையாவன:

1. வேளாளர் முதலிய பெயருடைய சாதிகளின் அடுக்கமைவு
2. வர்க்க அடிப்படையிலான அடுக்கமைவு
3. 'சொந்தக்காரச் சாதி' என்னும் அடுக்கமைவு

## சொந்தக்காரச் சாதி

பாங்ஸ் யாழ்ப்பாணச் சமூகத்தின் பிரத்தியேகமான இயல்பை விளக்கும் 'சொந்தக்காரச் சாதி' (*Sondakara Sathi*) எனப்படும் உட்பிரிவுகளை அடையாளம் காட்டியுள்ளார். இது அவருடைய சுவாரசியமான கண்டுபிடிப்பாகும். யாழ்ப்பாணத்தின் கிராமங்கள் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு கிராமத்திற்குள் பல வட்டாரங்கள் இருக்கும். அவ்வட்டாரங்களுக்குள் வேளாளர் குடியிருப்புகள் செறிந்திருக்கும். "வட்டாரப் பிரிவுகள் காரணமாக ஒரு வட்டாரத்திற்கும் இன்னொரு வட்டாரத்திற்கும் இடையே திருமண உறவு இருப்பதில்லை. பந்தி போசனமும் இருக்காது. ஏனைய சமூக உறவுகளும் மிகக் குறைந்த மட்டத்திலேயே இருக்கும். வட்டாரங்களைச்

சேர்ந்தவர்களிடையே சிறுசிறு கொடுக்கல் வாங்கல்கள் இருக்கலாம்" என்று குறிப்பிடுகிறார். அவர் குறிப்பிடும் சமூகவியல் முக்கியத்துவமுடைய அவதானிப்புகள் சில வருமாறு :

1. ஒரு எண்ணக்கரு (Concept) என்ற வகையில் சொந்தக்காரச் சாதி ஓர் மூடிய அகமணக்குழு முறையாக (A Close Endogamous System) இருப்பதைக் காணலாம்.

2. சொந்தக்காரச் சாதி உட்பிரிவுகள், அந்தஸ்துக்காகப் போட்டியிடும் குழுக்களாக உள்ளன (Groups Competing for Status).

3. வட்டாரங்களிடையே காணப்படும் புவிவெளி இடைவெளி, சமூகப் பிரிவினையாக (Social Separation) வெளிப்படுகிறது.

## கென்னத் டேவிட்

சாதிகளின் இடையூடாட்டம் என்னும் எண்ணக்கரு மூலம் யாழ்ப்பாணத்தின் சாதி முறையின் இயல்புகளை மைக்கல் பாங்ஸ் விளக்கியிருப்பதை மேலே குறிப்பிட்டோம். பாங்ஸ் கூறிய விடயத்தை மானிடவியலாளர் கென்னத் டேவிட், சாதிகளின் அடிப்படையிலான பரிவர்த்தனை முறை (Caste Based Exchange System) என்னும் எண்ணக்கரு மூலம் விளக்கியுள்ளார். 'SPATIAL ORGANISATION AND NORMATIVE SCHEMES' என்னும் தலைப்பில் அமைந்த அவரது கட்டுரையின் தழுவலாக்கம் இந்நூலில் 5 ஆவது அத்தியாயமாக இடம்பெறுகிறது.

கென்னத் டேவிட் அவர்களின் மேற்படி கட்டுரை யாழ்ப்பாணத்தில் சாதிகளின் குடியிருப்பு முறைக்கும், பரிவர்த்தனை முறைக்கும் இடையிலான தொடர்பை எடுத்துக் காட்டுகிறது. பரிவர்த்தனை (Exchange), நிகழும் இடம் (Space or Locality), சூழமைவு (Context) என்பன முக்கியம் என அவர் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணச் சமூகத்தின் சமூகவெளி அல்லது இடம், மூன்று வகைக் குடியிருப்புகளைக் கொண்டது என அவர் குறிப்பிடுகிறார். அவையாவன:

1. வேளாளர் சாதி நில உடமையாளர்களின் விவசாயக் கிராமக் குடியிருப்புகள்

2. கடற்கரையோர மீனவர் கிராமங்களின் குடியிருப்புகள்

3. நகரத்தைச் சார்ந்து, சந்தை - கோவில் என்பனவற்றைச் சூழ அமையும் கைவினைச் சாதிகளும், பிறசாதிகளும் வாழும் நகரம்சார் குடியிருப்புகள்

மேற்குறித்த மூவகைக் குடியிருப்புக்களை உடைய புவிவெளியில் / சமூகவெளியில் நான்கு வகையான பரிவர்த்தனை உறவுகள் இடம்பெறுவதை அவர் எடுத்துக் காட்டுகிறார்.

1. வேளாளருக்கும் கட்டுப்பட்ட சாதிகளுக்கும் (Bound Castes) இடையிலான உறவுகள்

2. கட்டுப்படாத சாதிகளுக்கும் (Non - Bound Castes) வேளாளர் உட்பட எல்லாச் சாதியினருக்கும் இடையிலான உறவுகள்

3. ஓரளவு கட்டுப்பட்ட தன்மையும், கட்டுப்படாத தன்மையும் கொண்ட சாதிகள், பிரதானமாக கட்டுப்பட்ட (Primarily Bound) சூழலில் கொள்ளும் உறவுகள்

4. மேலே மூன்றாம் வகையாகக் குறிப்பிட்ட சாதிகள் பிரதானமாக கட்டுப்படாத (Primarily Non - Bound) சூழலில் கொள்ளும் உறவுகள்

மூவகைக் குடியிருப்புகளிலும் நிகழும் நான்கு வகைப் பரிவர்த்தனைகளை கென்னத் டேவிட்டின் கட்டுரை விரிவாக விளக்கிக் கூறுவதை ஆழமான வாசிப்பின் மூலம் தெரிந்து கொள்ளலாம். பொது இடம் (Neutral Territory) என அழைக்கப்படும் 'சந்தை'யில் இடம்பெறும் பரிவர்த்தனை உறவுகள் பற்றி மட்டும் சிறிய குறிப்பு ஒன்றை இவ்விடத்தில் கூறவுள்ளோம்.

## 'சந்தை' என்னும் பொது இடம்

சந்தை (Market) என்பதை சாதி ஏற்றத் தாழ்வுகளை வெளிப்படுத்த முடியாத பொது இடம் (Neutral Territory) என கென்னத் டேவிட் கூறுகிறார். வர்த்தகமும், பணப்புழக்கமும் அதிகரிக்கும் போது யாழ்ப்பாணத்தில் சந்தை நகரங்கள் உருவாக்கம் பெற்றன. சந்தைகள், கொள்ளலும்

கொடுத்தலும் நிகழும் இடங்களாகும். அங்கு பொருளைக் கொள்வனவு செய்வோர் விற்பனை செய்வோருடன் பேரம் பேசலில் ஈடுபடுவர். தனது உற்பத்திப் பண்டத்தை சந்தைக்கு எடுத்துச் செல்லும் வேளாளரான விவசாயியுடன், வேளாளர் அல்லாத மிகக் குறைந்த சமூக அந்தஸ்துடைய ஒருவர் கூட சமத்துவமான முறையில் பேரம் பேசலில் ஈடுபடும் நிலை இங்கே காணப்படும். பொது இடத்தில் நிகழும் சந்தை உறவுகள், அங்கு இடம்பெறும் பேரம் பேசுதல் என்பன சாதியைத் தகர்க்கும் செயல்முறைகளாகும். பேரம் பேசல் சாதிப் படித்தர ஒழுங்குக்கு எதிரானது (Bargaining is antithetical to hierarchy) என கென்னத் டேவிட் கூறுகிறார்.

சிறு நகரங்களை யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் அடையாளம் காணலாம் என்று கூறும் கென்னத் டேவிட் இச்சிறு நகரங்களை அண்டி கைவினைச் சாதிகள், கடை வியாபாரிகள் (எல்லாச் சாதியினரும்), முஸ்லீம்கள் என்போரின் குடியிருப்புகள் காணப்படும். முன்னர் சந்தைகளையும் கோவில்களையும் இணைக்கும் வண்டிப் பாதைகளாக இருந்தவை 1930 – 1960 காலப்பகுதியில் 'தார்' வீதிகளாக மாறின. கோவில்களின் அருகில் பிராமணர், சைவக் குருக்கள் ஆகிய பூசகர்களின் குடியிருப்புகளும் அமைந்தன. சந்தைகள், கோவில்கள் என்பனவற்றைச் சுற்றி அரை மைல் வட்டம் ஒன்றைக் கற்பனை செய்தால், அந்த வட்டத்திற்குள் வேளாளருக்கு கட்டுப்படாத (UnBound) சாதிகளின் குடியிருப்புகள் இருப்பதைக் காண முடியும். இந்த வட்டத்திற்கு வெளியே நில உடமையாளர்களின் விவசாயக் கிராமங்கள் உள்ளன. கிராமங்களை அண்டிய யாழ்ப்பாணத்து நகரங்களின் வளர்ச்சி, வர்த்தகத்தை வளரச் செய்தது. இந்நகரச் சூழலில் நடைபெறும் வாங்கல் – விற்றல்,

1. அந்தஸ்து சாராதது
2. நடு நிலையான சந்திப்பு இடங்களில் நடைபெறுவது
3. வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்த கொள்வோருக்கும் கொடுப்போருக்கும் இடையிலான சமத்துவமான சந்தை உறவுகளாக அமைகிறது.

வேளாளர் பெரும்பான்மையினராக உள்ள கிராமங்களில், சந்தை உறவுகளுக்கு மாறான சடங்கியல் சார் சேவைகள் (Ritualised Services) சாதிக் குறியீட்டியல் (Caste Symbolism) அடையாளங்களுடன் இடம்பெறும். இவை 1960 கள் வரை நீடித்து நிலைத்து இருந்தன. வாழ்க்கைத் தகுதிப் பெயர்ச்சிச் சடங்குகளான குழந்தையின் பிறப்பு, பெண் குழந்தையின் பூப்புச் சடங்கு, திருமணம், மரணம் ஆகியவற்றில் மரபு சார்ந்த முறையில் சேவைகளின் வழங்கலும், சேவைகளைப் பெறுதலும் நிகழ்ந்தன. இப்பரிவர்த்தனை பின்வரும் இயல்புகளை உடையது:

1. அந்தஸ்துச் சார்ந்தது
2. வேளாளர் வீடு என்ற உள்ளூர்ப் பின்னணியில் (Localised Setting) நடைபெறுவது
3. கட்டுப்பட்ட சாதிகள் (Bound Castes) இப்பரிவர்த்தனையில் சம்பந்தப்படுகின்றன.
4. இப்பரிவர்த்தனை உறவு சமத்துவமற்ற (UnEqual) உறவாகும்.
5. ஆளுக்கு ஆளான உறவாகவும் தனிப்பட்ட தன்மையுடையதாகவும் இவ்வுறவு உள்ளது (Highly Personalised Relations).

பிரித்தானியர் ஆட்சியின் கீழ் 1844 இல் அடிமைகள் ஒழிப்புச் சட்டம் செயல்முறைக்கு வந்தது. அச்சட்டத்தின் பின்விளைவுகள் உடனடியாக வெளிப்படவில்லை. ஆயினும் ஒரு நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலத்தில் (1844 – 1960) யாழ்ப்பாணத்தில் வர்த்தகம், சந்தை உறவுகள் சந்தைக்கான பண்ட உற்பத்தி, பணப்புழக்கம், பணக்கூலிமுறை ஆகியனவற்றின் வளர்ச்சிகள் சாதிமுறை படிப்படியாகத் தகர்ந்தும், நெகிழ்ந்தும் மாற்றமுறுவதற்குக் காரணமாக அமைந்தன. கென்னத் டேவிட் அவர்களின் ஆய்வுக் கட்டுரை சாதியின் இந்த இயங்கியலைப் புரிந்து கொள்வதற்கு உதவுவதாக அமைந்துள்ளது.

## சாதியச் சமூகத்தில் பெண் அடிமைத்தனம்

'மறைந்திருக்கும் சக்தி : யாழ்ப்பாணத்துப் பெண்களின் பண்பாடு, சமூக - பொருளாதார அந்தஸ்து என்பன குறித்த விபரிப்பு' என்னும் தலைப்பில் அமையும் நாலாவது அத்தியாயம் கென்னத் டேவிட் அவர்களின் கட்டுரையின் தழுவலாக்கமாகும். பண்பாட்டுக் குறியீடுகள் மூலம் பெண்களின் அடிமைநிலை வெளிப்படுத்தப்படுவதை இக்கட்டுரை ஆராய்கிறது. நிலமானியப் பின்புலத்தில் சாதி, பாலினம் (Gender) ஆகியன சார்ந்த அடிமைத்தனம் ஒன்றை ஒன்று ஊடுருவி நிற்கும் (Cross Cutting) தன்மை உடையது. யாழ்ப்பாணத்தின் சாதிமுறை பற்றி ஆழமான ஆய்வினை மேற்கொண்ட கென்னத் டேவிட் யாழ்ப்பாணப் பெண்களின் சமூகநிலை பற்றியும் ஆராய்ந்துள்ளார். அவரின் இக்கட்டுரை பொருத்தம் கருதி இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

கென்னத் டேவிட்டின் கட்டுரை, பின்வரும் மூன்று விடயங்களை விளக்கிக் கூறுவதாக அமைந்துள்ளது:

அ) யாழ்ப்பாணப் பெண்களின் சமூக அந்தஸ்து நிலை (Social Status)

ஆ) அவர்களது அந்தஸ்து நிலை பொதுவாக 'அடிமைத்தனம்' என்று குறிப்பிடப்படுவது உண்மையே ஆயினும் குழந்தை, சிறுமி, பருவம் அடைந்த மங்கை, திருமணமான பெண், முதிய பெண், கணவனை இழந்த விதவை என்ற பல்வேறு வாழ்க்கைக் கட்டங்களைக் கடக்கும் போது அவளிடம் உறைந்திருக்கும் ஆற்றல் (சக்தி) வெளிப்படும் தன்மை வேறுபடுகிறது. சமூகம் விதிக்கும் கட்டுப்பாடுகளின் அளவும் தன்மையும் வேறுபடுகிறது.

இ) வெவ்வேறு பருவங்களூடே பயணிக்கும் யாழ்ப்பாணத்துப் பெண் 'கட்டுதல்' (Bind ing), 'மழித்தல்' (Shaving) என்ற இரட்டைக் குறியீடுகள் சார்ந்த பண்பாட்டு வழமைகள், நம்பிக்கைகள், சடங்குகள் (Rituals) ஆகியவற்றிற்கமையத் தன் நடத்தையை வடிவமைத்து கொள்கிறாள்.

குழந்தைப்பேறு, பூப்புச் சடங்கு, திருமணம், மரணச் சடங்கு ஆகியவற்றில் ஆற்றப்படும் சடங்குகளில் வெளிப்படும் பண்பாட்டுக் குறியீடுகள் (Cultural Symbols), கென்னத் டேவிட் ஆய்வில் நுட்பமான முறையில் விளக்கப்பட்டுள்ளது.

பெண்களின் வாழ்க்கையில் 15 - 45 வயதுக்காலம் மிக முக்கியமானது. இக்காலம் கருவளம் (Fertility) மிக்க காலமாகும். குழந்தைகளைப் பெறும் தகுதியுடைய இக்காலத்தில் பெண் கணவனுக்குக் 'கட்டுப்பட்டு' வாழ வேண்டும் என்பது சமூகம் விதிக்கும் ஒழுக்க நெறியாகப் போற்றப்படுகிறது. 'கட்டுதல்' (Binding), பெண் உடலின் மயிரை மழித்தல் (Shaving) என்னும் இரட்டைக் குறியீடுகள் சார்ந்த வழமைகளையும் சடங்குகளையும் கென்னத் டேவிட் இக்கட்டுரையில விபரித்துள்ளார். பருவமடைந்தது முதல் ஏறக்குறைய 45 வயது வரையான (மாத விடாய் நின்று விடுதல் {Meno pause} என்னும் நிகழ்வின் தொடக்கம் வரை) காலத்தில் பெண்கள் மீது சமூகம் விதிக்கும் கட்டுப்பாடுகளும் கண்காணிப்பும் நுட்ப விபரங்களுடன் இக் கட்டுரையில் விபரிக்கப்படுகின்றன. இளம் விதவைகள் குடும்பம் என்ற சிறைக்குள், ஆண் தலைமையின் கீழ் படும்பாடுகளையும் இக்கட்டுரை மூலம் புரிந்து கொள்ள முடியும். போரின் காரணமாக விதவைகளாக்கப்பட்டோரான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் வடக்குக் - கிழக்கு மாகாணங்களில் 90,000 வரை உள்ளதாகக் கூறப்படுகின்றது.
இக்கட்டுரையைப் படிக்கும் வாசகர்களுக்கு இவ் விதவைகளின் இரங்கத்தக்க நிலை மனக் கண்ணில் காட்சியாவதோடு கண்களில் ஈரத்தை வரவழைப்பதாகவும் உள்ளது. ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இக்கட்டுரை தமிழ்ப் பெண்ணியவாதச் செயற்பாட்டளர்கள் கண்களில் இன்றுவரை படாமல் போனது எமக்கு வியப்பைத் தருவதாகவே உள்ளது.

3

## மானிடவியலாளர் பேரின்பநாயகத்தின் கட்டுரை

'CASTE, RELIGION AND RITUAL IN CEYLON' என்ற தலைப்பில் றொபர்ட் சித்தார்த்தன் பேரின்பநாயகம் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் 'யாழ்ப்பாணத்தில் சாதி, சமயம், சடங்கு' என்னும் தலைப்பில் இந்நூலில் இடம்பெறுகிறது. இக் கட்டுரையினை பேரின்பநாயகம் 1965 ஆம் ஆண்டில் எழுதினார். ஏறக்குறைய 60 ஆண்டுகள் கடந்தபின் இக்கட்டுரை தமிழாக்கம் மூலமாக தமிழ் அறிவுலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. யாழ்ப்பாணச் சமூகம் பற்றி 'THE KARMIC THEATER - SELF, SOCIETY AND ASTROLOGY IN JAFFNA' என்னும் இவரது ஆய்வு நூல் 1982 இல் 'த யூனிவேர்ட் சிட்டி ஒவ் மசா சூ செட் பிரஸ்' வெளியீடாக வந்துள்ளது. இந்நூலும் தமிழ்ச் சமூகத்தின் கவனத்தைப் பெறவில்லை. பெரும்பான்மையான அறிவாளிகளுக்கு மேற்படி தலைப்பில் ஒரு நூல் எழுதப்பட்டுள்ளது பற்றித் தெரியாது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது. யாழ்ப்பாணத்தின் சாதியமைப்பு, சமயம், சடங்கு என்னும் மூன்று விடயங்களுக்கும் இடையிலான தொடர்புகளைப் பேரின்பநாயகம் இக்கட்டுரையில் ஆராய்கிறார். அவரது கட்டுரையில் மூவகைச் சடங்குகள் விபரிக்கப்பட்டுள்ளன.

அ) பெருநெறி (Great Tradition) சார்ந்த விநாயகர், முருகன், சிவன், காளி முதலிய தெய்வங்களுக்கான கோவில்களில் நடைபெறும் சடங்குகள்.

ஆ) அண்ணமார், காத்தவராயர், பெரியதம்பிரான் ஆகிய நாட்டார் தெய்வங்களுக்கான கோவில்களில் நடைபெறும் சடங்குகள்.

இ) வீட்டுச் சடங்குகள்

இவ்வகை வீட்டுச் சடங்குகளில் இருவகை உள்ளன.

I. திருமணம், பூப்புச் சடங்கு முதலியன

ii. மரணச்சடங்கு

கோவில், குடும்பம் என்ற இரு நிறுவனங்கள் சார்ந்து நடைபெறும் இச்சடங்குகளில் சாதியின் வகிபாகம் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது. யாழ்ப்பாணத்தின் வகைமாதிரியான கிராமப் பின்னணியில் இச்சடங்குகளைப் பேரின்பநாயகம் விபரிக்கின்றார்.

## கற்பனை மாதிரி

கோவில், குடும்பம் என்ற இரு நிறுவனங்கள் சார்ந்து நடைபெறும் சமயச் சார்புடைய இச்சடங்குகளில் யாழ்ப்பாணத்தின் 8 - 10 வரையான சாதிகள் மட்டுமே பங்கேற்கின்றன. அத்தோடு சடங்குகளோடு தொடர்புடைய அனைத்துச் சாதிகளும் ஒருசேர ஒரே கிராமத்தில் வசிப்பதில்லை. இவற்றுள் சில சாதிகள் ஒரு கிராமத்தின் எல்லைக்குள் வதிவனவாகவும், ஏனைய சாதிகள் அயல் கிராமங்களில் வதிவனவாகவும் இருக்கும். இந்நிலையில் சடங்கியல் சேவைகளாடு (Ritual Services) தொடர்புடைய எல்லாச் சாதிகளும் ஒருங்கே வதியும் கற்பனை மாதிரிக் (Ideal Type) கிராமம் ஒன்றில் சடங்குகளும், அவை சார்ந்த சமூக உறவுகளும் நடைபெறுவதாகவே கட்டுரையின் வருணிப்பு அமைந்துள்ளது.

## பெருநெறிக் கோவில்களின் சடங்குகள்

இக்கோவில்களின் உடைமையாளர்களாக வேளாளர்கள் உள்ளனர். இக்கோவில்களில் ஆகம முறைப்படி சமயச் சடங்குகள் நடைபெறும். இவ்வகைக் கோவில்களின் பூசகர்களாகப் பிராமணர்கள் சேவை செய்கின்றனர்.

பெருநெறிக் கோவில்களின் பூசைகளும் சடங்குகளும் சமஸ்கிருத நெறிப்படி, புனித நூல்களில் கூறப்பட்ட விதிமுறைகளின்படி நடத்தப்படும். பெருநெறிக் கோவில்களில் காலை, மதியம், மாலை என மூன்று

வேளைகளிலும் பூசைகள் நடைபெறுகின்ற போதிலும் வழிபடுவோர் பூசைகளில் கலந்து கொள்வதில்லை. விதிவிலக்காக ஓரிருவர் பூசை நேரம் வந்து வழிபட்டுச் செல்வதுண்டு. வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசைகள் நடைபெறுவதுண்டு. அத்தினத்தில் காலையிலும், மாலையிலும் பலர் கலந்து கொள்வதுண்டு. வேளாளர் குடும்பங்கள் சிலவற்றின் உடைமையாக உள்ள இவ்வகைக் கோவில்களின் நிர்வாகம் வேளாளர்களின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. ஒரு கிராமத்தில் இருக்கும் பெருநெறிக் கோவில்களை விட நாட்டார் தெய்வக் கோவில்களின் எண்ணிக்கை கூடிய அளவினதாக இருக்கும்.

பெருநெறிக் கோவில்களில் ஆண்டுத் திருவிழா முக்கியமான நிகழ்வு ஆகும். பெருநெறிக் கோவிலின் ஆண்டுத் திருவிழாவில் கிராமத்தின் பல்வேறு சமூகக் குழுக்களும் பங்கேற்கும் முறையினை இக்கட்டுரை நுணுக்க விபரங்களுடன் பதிவு செய்துள்ளது. இவ்விபரிப்பு மானிடவியலாளர் ஒருவரின் கூர்மையான அவதானிப்பின் படியான பதிவாகும். 1960 களில் யாழ்ப்பாணத்தின் சைவக் கோவில்களின் நடைமுறைகள் பற்றிய இந்த வருணிப்பை 2024 ஆம் ஆண்டின் கிராமத்துச் சைவக் கோவில்களின் நடைமுறைகளோடு ஒப்பிட்டு ஆராய்தல் பயனுடையதொரு ஆய்வாக இருக்கும். அத்தகைய ஆய்வு, பேரின்பநாயகம் குறிப்பிடும் 8 - 10 வரையான சாதிகளில் எத்தனை சாதிகள் இன்றும் சைவக்கோவில் சடங்குகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன, சாதி - சமயம் - சடங்குத் தொடர்புகள் இன்று எவ்வாறு மாற்றமுற்றுள்ளன என்பவற்றை அறிவதற்கும் உதவும்.

நாட்டார் தெய்வக் கோவில்களின் சடங்குகள்

நாட்டார் தெய்வக் கோவில்கள் பல்வேறு சாதியினரின் உடைமையாக இருந்தன. இவற்றின் நிர்வாகமும் அவ்வச் சாதிகளால் நடத்தப்பட்டன. ‘வேள்வி’ எனப்படும் மிருகபலி இக்கோவில்களில் 1960 களில் முக்கியம் வாய்ந்த ஆண்டு விழா நிகழ்வாக இருந்தது. நாட்டார் தெய்வக் கோவில்களில் ஆகம விதிகளின் படியான சடங்குகள் இடம்பெறுவதில்லை. வேளாளர்களை மையப்படுத்திய வெவ்வேறு சாதிகளின் சடங்கியல்சார் சேவைகளும் ஆகம நெறிப்படியான கோவில்களிற்கு மட்டுமே உரியவை.

கடந்த 60 ஆண்டு காலத்தில் சமஸ்கிருத மயமாக்கம் (Sanskritisation) நாட்டார் தெய்வக் கோவில்களின் நடைமுறைகளை மாற்றியுள்ளது.

பேரின்பநாயகம் அவர்களின் கட்டுரையில் தரப்பட்டுள்ள பதிவுகள் 1960 களின் நிலைமைகளைத் தெரிந்து கொள்தற்கும், இன்றைய மாற்றங்களோடு ஒப்பிடுவதற்கும் உதவுவனவாக உள்ளன.

**‘CASTE, RELIGION AND RITUAL IN CEYLON’ என்ற தலைப்பில் றொபர்ட் சித்தார்த்தன் பேரின்பநாயகம் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் ‘யாழ்ப்பாணத்தில் சாதி, சமயம், சடங்கு’ என்னும் தலைப்பில் இந்நூலில் இடம்பெறுகிறது. இக் கட்டுரையினை பேரின்பநாயகம் 1965 ஆம் ஆண்டில் எழுதினார். ஏறக்குறைய 60 ஆண்டுகள் கடந்தபின் இக்கட்டுரை தமிழாக்கம் மூலமாக தமிழ் அறிவுலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.**

## வீட்டுச் சடங்குகள்

வேளாளர்களின் வீட்டுத் திருமணச் சடங்குகளில் 1960 களில் 5 சமூகப் பிரிவினர் சம்பந்தப்பட்டிருந்தனர். இச்சமூகப்

பிரிவினர்களின் சேவைகள் மரபுவழிப்பட்ட கடமைகள் (Traditional Duties) என்ற இயல்பை உடையனவாய் இருந்தன. கடந்த 60 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் சடங்கியல் சேவைகளிற்கான (Ritual Services) தேவையை இல்லாமல் செய்துவிட்டன. பிராமணருடைய சேவை மட்டும் பணத்தைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளும் சேவை என்ற நிலைக்கு மாறியுள்ளது. வீட்டுச் சடங்குகளில் சாதி - சமயம் - சடங்குத் தொடர்புகள் மீளாய்வுக்கு உரியன.

மரணச் சடங்குகளில் 1960 களில் சாதிகளின் சடங்கியல் சேவைகளின் (Ritual Services) வகிபாகமும், 2024 இல் அவற்றின் வகிபாகமும் ஒப்பிட்டு ஆராயப்பட வேண்டும். பேரின்பநாயகம் அவர்களின் கட்டுரை சாதி - சமயம் - சடங்கு பற்றிய மானிடவியல் சித்திரிப்பு; அக்கட்டுரை ஒரு வரலாற்று ஆவணத்தின் சிறப்புகளை உடையது.

## அரசியல் நோக்கு

அரசியல் நோக்கு எனும் மூன்றாவது பிரிவில் இரு கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. 8 ஆவது அத்தியாயமான பிறையன் பவ்வன் பேர்ஜரின் கட்டுரை 'இலங்கையின் வடபகுதியில் 1968 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆலயப் பிரவேச நெருக்கடி' பற்றியது. பவ்வன் பேர்ஜர் ஒரு மானிடவியலாளர். சாவகச்சேரியில் கள ஆய்வினை நடத்திய பவ்வன் பேர்ஜர் 'CASTE IN TAMIL CULTURE: THE RELIGIOUS FOUNDATIONS OF SUDRA DOMINATION IN TAMIL SRILANKA (1982) என்னும் ஆய்வு நூலை எழுதினார். 1970 களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தின் அரசியல் களநிலையை நன்கு அவதானித்த அவரின் மேற்குறித்த அரசியல் கட்டுரை மிக முக்கியமானதொரு ஆய்வு. கவனிப்பைப் பெறாத இவ்வாய்வின் தமிழவலாக்கத்தைப் பொருத்தம் கருதி இந்நூலில் சேர்த்துள்ளோம்.

## தற்காப்புத் தேசியவாதம்

1968 இல் தோன்றிய மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச நெருக்கடி, நீறுபூத்த நெருப்பாக இருந்த சாதிப் பிரச்சினையை, பற்றி எரியும் பிரச்சினையாக மாற்றியது. இரும்புக் கம்பிகள், மண் அடைக்கப்பட்ட போத்தல்கள் என்பன கொண்டு சாதி வெறியர்கள் ஆலயப் பிரவேசத்தைக் கோரி நின்ற சத்தியாக்கிரகிகள் மீது தாக்குதல் தொடுத்தனர் எனக் குறிப்பிடும் பவ்வன் பேர்ஜர், அதே ஆண்டில் பாரிஸ் நகரில் மாணவர்கள் வீதிகளில் இறங்கி மறியல் செய்து நிகழ்த்திய பெருங் கிளர்ச்சியுடன் மாவிட்டபுரம் கிளர்ச்சியை ஒப்பிடுகிறார். மாவிட்டபுரம் நெருக்கடி ஒரு பத்தாண்டு எல்லைக்குள் (1968 - 1978) தணிந்தது. யாழ்ப்பாணம், தமிழ் இளைஞர்களின் கிளர்ச்சி என்ற இன்னொரு கிளர்ச்சியால் மிகப்பெரிய கொந்தளிப்பு நிலைக்குள் மூழ்கியது என பவ்வன் பேர்ஜர் குறிப்பிடுகிறார். 1978 வரை பல இடங்களில் ஆலயப் பிரவேசத்தை ஒட்டிய சச்சரவுகள் இடையிடையே ஏற்பட்டதேனும் மாவிட்டபுரம் சச்சரவைத் தொடர்ந்து தமிழ்ச் சமூகம் அரசியல் ஐக்கியத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

மாவிட்டபுரம் நெருக்கடி உள்ளக முரண்பாடுகள் முற்றிய நிலையில் ஏற்பட்டது. வெளியில் இருந்து சிங்கள மேலாதிக்கத்தால் ஏற்பட்ட ஆபத்துகள், உயர்சாதி வேளாளர்களும் தாழ்த்தப்பட்டோரும் ஐக்கியப்பட்டு, அரசுக்கு எதிரான அரசியல் கிளர்ச்சியில் ஓரணியில் திரள வழிவகுத்தது என்று பவ்வன் பேர்ஜர் கூறுகிறார். இவ்வாறாக வட இலங்கையில் தமிழர்களிடையே மேற்கிளர்ந்த எழுச்சியை பவ்வன் பேர்ஜர் 'தற்காப்புத் தேசியவாதம்' (Defensive Nationalism) எனக் கூறுகின்றார். தமிழ் அரசியல்வாதிகளும் தங்கள் சமூகம் சிதைவடைவதைத் தடுத்து ஐக்கியப்படுத்திப் பாதுகாப்பதற்காகத் தற்காப்புத் தேசியவாதத்தைத் தேர்ந்து கொண்டனர் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

வரலாற்றாசிரியரான அரசரத்தினம் அவர்களும், மானிடவியலாளர்களான மைக்கல் பாங்ஸ், கென்னத் டேவிட், பேரின்பநாயகம் ஆகியோரும் கூறியிருக்கும் கருத்துகளைத் தொகுத்து, டச்சுக்காலம் முதல் 1968 இன் மாவிட்டபுர ஆலயப் பிரவேச நெருக்கடி

வரையான ஏறக்குறைய 300 ஆண்டு காலத்தின் சாதிய வரலாற்றைப் பகுப்பாய்வு முறையில் விளக்கிக் கூறும் கட்டுரையாக பவ்வன் பேர்ஜரின் கட்டுரை அமைந்துள்ளதெனலாம். இவ்வாறு வரலாற்று நோக்கிலான பகுப்பாய்வை வழங்கும் பவ்வன் பேர்ஜர் 1970 கள் முதல் யாழ்ப்பாணம் 'இளைஞர் கிளர்ச்சி' என்னும் அரசியல் மடைமாற்றத்திற்கு உட்படுவதை எடுத்துக் காட்டுகிறார். 1968 - 1978 காலத்தின் இந்த அரசியல் மடை மாற்றம் வடபகுதியின் அரசியல் மாற்றத்தைப் புரிந்து கொள்வதற்கு உதவுவதாக உள்ளது.

## ஏ.ஜே. வில்சன் அவர்களின் ஆய்வுரை

அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியரான ஏ.ஜே. வில்சன் அவர்கள் 'SRI LANKAN TAMIL NATIONALISM : ITS ORIGINS AND DEVELOPMENT IN THE NINETEENTH AND TWENTIETH CENTURIES' என்னும் நூலை 2000 ஆம் ஆண்டில் வெளியிட்டார். இந்நூலின் இரண்டாவது அத்தியாயம் இலங்கைத் தமிழர்களின் சாதியமைப்புப் பற்றியது. தமிழர்களின் அரசியல் ஒருங்கிணைவில் சாதியின் வகிபாகத்தைப் பேராசிரியர் இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். பேராசிரியரின் கட்டுரையின் தழுவலாக்கமாக 'இலங்கைத் தமிழர்களின் சமூகக் கட்டமைப்பும் இனவரைவியலும் : யாழ்ப்பாணத்தின் வேளாளர் சமூகக் குழுவின் வரலாறும் பிற சமூகக் குழுக்களுடன் அதன் உறவு நிலையும்' என்னும் தலைப்பிலான கட்டுரை அமைந்துள்ளது.

## தமிழர் சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகள்

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட அரசியல், நிர்வாக மாற்றங்களின் பயனாக தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள், ஒன்றிணைந்த பிரதேசமாகவும், தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடமாகவும், தனித்துவ அடையாளத்தைப் பெற்றது. இவ்வாறான ஒன்றிணைதல் ஏற்பட்ட காலத்தில், இலங்கைத் தமிழர்களிடையே மூன்று பிரதேசங்கள் சார்ந்ததான ஏற்றத் தாழ்வுகள் வெளிப்பட்டன எனப் பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் குறிப்பிடுகிறார். இம் மூன்று பிரதேசங்களாவன:

1. யாழ்ப்பாணத் தமிழர்களின் யாழ்ப்பாணக் குடாநாடு
2. மட்டக்களப்புத் தமிழர்களின் கிழக்கு மாகாணம்
3. மேற்கு மாகாணத்தின் கொழும்புத் தமிழர்களின் கொழும்பு நகரம்

1920 கள் தொடக்கம் தமிழர் அரசியலில் கொழும்புத் தமிழ்த் தலைமை செல்வாக்குச் செலுத்தியது. 1948 இன் பின்னர் அரசியல் தலைமைத்துவம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பிராந்தியங்களை நோக்கி நகர்ந்தது. இம் மாற்றத்தை வில்சன் அவர்கள் தமது கட்டுரையின் முற்பகுதியில் விபரித்துக் கூறுகிறார்.

## யாழ்ப்பாணத்தின் சாதிமுறை

1619 இல் யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியுடன் யாழ்ப்பாணச் சாதி முறையில் ஒரு முக்கிய மாற்றம் ஏற்பட்டது என்ற கருத்தை ஏ.ஜே. வில்சன் இக்கட்டுரையில் தெளிவாக எடுத்துக் கூறுகிறார். வரலாற்றாசிரியர் அரசரத்தினம் அவர்களை மேற்கோள் காட்டும் வில்சன் அவர்கள் நில உடைமையாளர்களான வேளாளர்கள், மடப்பள்ளிகள், அகமுடையார், தனக்காரர் என்னும் நான்கு - ஐந்து வெவ்வேறு சமூகக் குழுக்கள் ஒன்றிணைந்து வேளாளர் என்ற பெருங்கூட்டான சாதி உருவானது; இந்த உருவாக்கம் யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியின் பின் உள்ள 400 ஆண்டு காலத்தில் படிப்படியாக நிறைவேறியது என்ற கருத்தை தனது கட்டுரையில் அழுத்திக் கூறுகிறார். இப் பெருங்கூட்டில் செட்டிகள், பரதேசிகள், மலையாளிகள் என்னும் சமூகக் குழுக்களும் ஒன்றிணைந்தன என்றும் அவர் குறிப்பிடுகிறார். 'வேளாளர்கள்' என்ற பொதுப் பெயரில் யாழ்ப்பாணத்தின் மேலாண்மையுடைய சமூகக் குழுக்கள் ஒன்றிணைவதற்கு தூய்மை - துடக்கு என்னும் சாதியக் கருத்தியல் தடையாக

இருக்கவில்லை. இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் பிராமணர் சாதி முக்கியத்துவம் உடையதல்ல. வேளாளர்களின் சேவகர்களான யாழ்ப்பாணத்துப் பிராமணர்கள், பொருளாதார நிலையிலும் உலகியல்சார் விடயங்களிலும் வேளாளர்களிலும் தாழ்ந்த படிநிலையிலேயே இருந்தனர். பிராமணியக் கருத்தியல் தென்னிந்தியா போன்று யாழ்ப்பாணத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. வேளாளர் ஒன்றிணைந்த சாதியாக உருவாக்கம் பெற்ற வரலாறு பேராசிரியர் சி. அரசரத்தினம் அவர்களால் நன்கு ஆராய்ந்து விளக்கிக் கூறப்பட்டது. இதனையே பேராசிரியர் ஏ.ஜே. வில்சன் வழிமொழிகிறார்.

## மீன்பிடியும் கடல் வர்த்தகமும்

ஏ.ஜே. வில்சன் அவர்களின் கட்டுரையில் தமிழ்ச் சமூகத்தில் 'கரையார்' சமூகக்குழு தனித்துவம் மிக்கதாக வளர்ச்சி பெற்றதை எடுத்துக் காட்டியுள்ளார். கரையார் ஒரு போதும் வேளாளர் மேலாதிக்கத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கவில்லை. மீன்பிடியும் கடல் வர்த்தகமும் அச் சமூகத்தினைரைத் தனித்துவமும் சுயாதீனமும் உடைய சமூகமாக வளர உதவியது. மீன்பிடித் தொழிலோடு கப்பல் ஓட்டுதல், கடற் சண்டை ஆகியவற்றிலும் வல்லவர்களாய் இவர்கள் விளங்கினர். இவர்களுள் கடலோடிகள் என்ற பிரிவினர் முயற்சியாண்மை மிக்கவர்களாயும் பணம் படைத்தவர்களாயும் இருந்தனர்.

இந்தியா - பர்மா ஆகிய நாடுகளுடனான வர்த்தகத்தில் இவர்கள் ஈடுபட்டனர். புகையிலை, சங்கு ஆகியவற்றை ஏற்றி அனுப்புவதிலும், இந்தியா - பர்மா ஆகிய நாடுகளில் இருந்து அரிசியைக் கப்பல்களில் ஏற்றி வருவதிலும் இவர்கள் ஈடுபட்டனர். வர்த்தகத்தில் செல்வம் ஈட்டிய யாழ்ப்பாணத்துக் கரையார் சமூகம், கிழக்கு மாகாணத்தில் காணிகள் புதிதாக

**வரலாறு, மானிடவியல், அரசியல் விஞ்ஞானம் என்னும் மூன்று சமூக அறிவியல்துறை ஆய்வாளர்கள் எண்மரின் ஒன்பது கட்டுரைகளைத் தாங்கி வரும் 'யாழ்ப்பாணத்துச் சாதியம்' என்னும் இந்நூல் ஓர் அறிவியல் பொக்கிசமாகும். ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால யாழ்ப்பாணச் சமூகம் பற்றி இந்நூல் வழங்கும் பின்நோக்குப் பார்வை, நிகழ்காலப் போக்குகளை மதிப்பீடு செய்வதற்கு பேருதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கை.**

பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட காலத்தில் நெல் வயல்களிலும், தென்னந் தோட்டங்களிலும் முதலீடு செய்தார்கள்.

மட்டக்களப்பின் கரையார் நில உடைமையாளர்களுடன் திருமண உறவுகளை வலுப்படுத்தி, வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையே சமூக உறவுகளை இச்சமூகத்தினர் வலுப்படுத்தினர். யாழ்ப்பாணத்தின் வேளாளர்களுக்கும் கரையார் சமூகத்திற்கும் இடையே பகை உறவுகள் இருக்கவில்லை. கரையார் சமூகத்தின் தலைமைக்கான ஆபத்து, வெளியில் இருந்து, பிரித்தானியர்களின் கொள்கை காரணமாக எழுந்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர், பிரித்தானிய அரசு கடலோடிகளின் யாழ்ப்பாணம் - இந்தியா - பர்மா வர்த்தகத்தைத் தடை செய்தது. 1950 இன் பின்னர் இலங்கை அரசும் கடலோடிகளின் வர்த்தக முயற்சிகளைக் கட்டுப்படுத்தியது.

## அரசியல் ஒருங்கிணைப்பு

அரசியல் ஒருங்கிணைவுக்கு தடையாக அமைவது சாதி அடிப்படையிலான சமூகப் பிளவுகளாகும் என்பதையும் ஏ.ஜே. வில்சனின் கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. யாழ்ப்பாணத்தின் சனத்தொகையில் பெரும்பான்மையாகவும், கிராமப் பகுதிகளில் மேலாதிக்கமுடையதாகவும் இருந்த வேளாளர் சாதியினர் 'அகமண முறை' காரணமாய் பிளவுபட்டிருந்தனர். ஆயினும் 20 ஆம் நூற்றாண்டில் பின்வரும் காரணிகளின் தூண்டுதலால் கிராமங்களைக் கடந்த ஐக்கியமும் ஒருங்கிணைவும் வளர்ச்சியடைந்தது:

1. நவீனமயமாதல்
2. அச்சுத் தொழிலின் வளர்ச்சி
3. தமிழ் மொழி வெகுஜன ஊடகமாதல்
4. வெகுஜன ஊடகங்களின் விருத்தி
5. நவீன போக்குவரத்து
6. வெளியில் இருந்து வரும் ஆபத்து அல்லது பொது எதிரி

மேலே இறுதியாகக் குறிப்பிட்ட வெளியில் இருந்து வரும் ஆபத்து அல்லது பொது எதிரி என்பதையே பவ்வன் பேர்ஜர் 'தற்காப்புத் தேசியவாதம்' எனக் குறிப்பிட்டார்.

## முடிவுரை

பேரின்பநாயகத்தின் கட்டுரை 1965 இல் எழுதப்பட்டது. சாதி - சமயம் - சடங்கு ஆகிய மூன்று விடயங்களுக்கிடையிலான உறவுகளை விபரிக்கும் இக்கட்டுரை, கொந்தளிப்புகள் எதுவும் இல்லாத, அமைதியான யாழ்ப்பாணச் சமூகத்தின் வாழ்வியலைச் சித்தரிக்கிறது. பவ்வன் பேர்ஜர் அமைதியான யாழ்ப்பாணத்திற்கு மாறுபட்ட பெரும் கொந்தளிப்பு நிலை, 1968 இல் மாவிட்டபுரம் ஆலயப் பிரவேச நெருக்கடியால் ஏற்பட்டதை எடுத்துக் காட்டுகிறார்.

ஆயினும் ஆச்சரியம் தரும் வகையில் 1968 முதல் 1978 வரையான பத்தாண்டு காலத்தில் சாதி மோதல்கள் யாழ்ப்பாணத்தில் தணிந்தன. யாழ்ப்பாணச் சமூகம் 'இளைஞர் கிளர்ச்சி' என்னும் பிறிதோர் கொந்தளிப்புக்குள் ஆழ்ந்தது என பவ்வன் பேர்ஜர் குறிப்பிடுகிறார். ஏ.ஜே. வில்சன் அவர்கள் யாழ்ப்பாணம் என்ற எல்லையைத் தாண்டிய, இலங்கைத் தமிழர்கள் என்ற முழுமையை உள்ளடக்கிய தேசியவாத எழுச்சியையும், தமிழர்கள் ஐக்கியப்பட்டு சிங்கள ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் ஒற்றுமைப்பட்டுப் பயணிப்பதையும் எடுத்துக் கூறுகிறார்.

**1960 களில் யாழ்ப்பாணத்தின் சைவக் கோவில்களின் நடைமுறைகள் பற்றிய இந்த வருணிப்பை 2024 ஆம் ஆண்டின் கிராமத்துச் சைவக் கோவில்களின் நடைமுறைகளோடு ஒப்பிட்டு ஆராய்தல் பயனுடையதொரு ஆய்வாக இருக்கும். அத்தகைய ஆய்வு, பேரின்பநாயகம் குறிப்பிடும் 8 - 10 வரையான சாதிகளில் எத்தனை சாதிகள் இன்றும் சைவக்கோவில் சடங்குகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன, சாதி - சமயம் - சடங்குத் தொடர்புகள் இன்று எவ்வாறு மாற்றமுற்றுள்ளன என்பவற்றை அறிவதற்கும் உதவும்.**

வரலாறு, மானிடவியல், அரசியல் விஞ்ஞானம் என்னும் மூன்று சமூக அறிவியல்துறை ஆய்வாளர்கள் எண்மரின் ஒன்பது கட்டுரைகளைத் தாங்கி வரும் 'யாழ்ப்பாணத்துச் சாதியம்' என்னும் இந்நூல் ஓர் அறிவியல் பொக்கிசமாகும். ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முற்பட்ட கால யாழ்ப்பாணச் சமூகம் பற்றி இந்நூல் வழங்கும் பின்நோக்குப் பார்வை, நிகழ்காலப் போக்குகளை மதிப்பீடு செய்வதற்கு பேருதவியாக அமையும் என்பது எமது நம்பிக்கை.

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் ‘மேனிலையாக்கம்’ எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே ‘ஈழத்து நாட்டார் தெய்வங்கள்’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.

தி. செல்வமனோகரன்



யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். ‘சொற்களால் அமையுலகு’ என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.

# வழுக்கு மர சுவாமி காத்தவராயர்



அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தானம்

இயற்கையோடு ஒட்டி வாழத் தலைப்பட்ட காலத்தில் இருந்து மனித வாழ்வில் சடங்குகளும் சமயங்களும் உருவாகத் தொடங்கின. இயற்கையை வழிபடத் தொடங்கிய மனிதர், அதனைத் திருப்திப்படுத்த பல சடங்கு சம்பிரதாயங்களைச் செய்ய முற்பட்டனர். மக்களின் வாழ்க்கையோடு இயைந்த வழக்காறாக, நிலப் பண்பாடாக அவை வளர்ந்தன; சமய வழிபாட்டு முறைகள், சடங்குகள், நம்பிக்கைகள், கலைகள் என பன்முகப்படுத்தப்பட்டன. அவை பற்றி உரையாடல்கள் கர்ண பரம்பரைக் கதைகள், வாய்மொழிப் பாடல்கள், வெறியாடல்கள், கூத்துகள் எனப் பல தளங்களில் பரிணமித்தன. இவை கிராமியத் தெய்வங்களைத் தந்தன. அவற்றின்வழி மேன்மேலும் விரிவாக்கமுற்றன. இயற்கையோடு இயைந்த வாழ்வில் தெய்வ – சமய நம்பிக்கை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக இருந்து வருகிறது. சமய நம்பிக்கையின் பாற்பட்ட வகையில் சமயச் சடங்குகள், நேர்த்திக்கடன்கள் என்பன மென்பக்தி – வன்பக்தி சார்ந்தவையாக வெளிப்படுத்தப்படுகின்றன. மக்களது நம்பிக்கைகளின் புலப்பாடுகளாகவும்; மக்களிடம் மேலும் நம்பிக்கையை ஊட்ட வல்லனவாகவும் கிராமியக் கலைகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் சமூகத்தில் நின்று நிலவுகின்ற கிராமியத் தெய்வங்களுள் ஒருவராக காத்தவராய சுவாமி (காத்தான், வழுக்கு மரத்தான்) சுட்டப்படுகிறார். காத்தான் பற்றிய கதையாடல்கள் – கதைப் பாடல்கள் – உடுக்கடிப் பாடல்கள் தெருக்கூத்தாக, மேடைக்கூத்தாக, சிந்து நடைக் கூத்தாக அது பல நிலைகளில் தமிழர்களிடையே நிலவி வருகிறது. கூத்து என்ற வகையில் கிறிஸ்தவர்களாலும் காத்தவராயன் கூத்து ஆடப்பட்டு வருகிறது .

### காத்தவராய சுவாமி – பெயர் பற்றிய உரையாடல்கள்

சிலப்பதிகாரத்தில் ‘சாத்தன்’ என்ற காவல் தெய்வம் கூறப்படுகிறது. சாத்தன் என்பதை ஐயப்பன் என்னும் ஹரிகரபுத்திரனாக சில ஆய்வாளர் குறிப்பிடுகின்றனர்; சாத்தன் – காத்தன் – காத்தான் எனவும் கொள்ளலாம். அதேபோல் இராமாயணத்தில் வருகின்ற உத்தரகாண்டத்தில் இராவணனைக் கொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவனாகச் சுட்டப்பட்ட காத்த வீரியன், ‘காத்தவராயன்’ எனப் பிற்காலத்தில் சுட்டப்பட்டிருக்கலாம்.
சாத்தான், ஐயப்பன், காத்தான் மூன்றுமே காவற் தெய்வங்களாகக் குறிப்பிட்ட காலம் வரை தனித்தனியே வழிபடப்பட்ட தெய்வங்கள். அதிலும் ஐயப்பன் ஹரி – ஹர இணைவினால் பிறந்ததை ஒத்த கதையையே காத்தவராயனின் கதையும் கொண்டமைந்துள்ளது. சிவன் ஆணாகவும் திருமால் பெண்ணாகவும் உருவெடுத்த காலத்தில் தோன்றிய குழந்தையே காத்தவராயன் எனப்படுகிறார். ‘ஒரு கொடியில் பூத்த இரு மலர்கள்’ என்பது போல் ஒரே கதை வெவ்வேறு பிரதேசங்களில் வெவ்வேறு விதமாகக் கூறப்பட்டிருக்கலாம். காத்தவராயன் ‘காத்தவன், காத்தான், காத்தையன், காத்தமுத்து, காத்தலிங்கர், காத்தலிங்க சுவாமி எனப் பல பெயர்கள் கொண்டு குறிப்பிடப்படுகின்றார். எல்லாப் பெயர்களிலும் ‘காவல்புரிபவர்’ என்ற தொனிப்பொருள் உள்ளடங்கியிருக்கிறது. காத்தான் என்பதை ‘காளியால் காக்கப்பட்டவன்’ என்று பொருள் சுட்டப்படுகிறது. ‘காத்தையன்’ என்னும் பெயர் திருமுருகாற்றுப்படையில் முருகனைக் குறித்து நிற்பது குறிப்பிடத்தக்கது. காத்தான் பற்றி எழுந்த பிற்காலக் கதைகள் சில முருகனின் திரு அவதாரமாகவே காத்தனைக் குறிப்பிடுவது ஒப்பு நோக்கத்தக்கது.

### காத்தவராய சுவாமி பற்றிய கதைகள்

1. **காத்தவராய நாடகம் -** தக்கன் யாகத்திற்கு ஈசன் மறிக்கவும் நில்லாது சென்ற பார்வதி தேவி அவமானப்பட்டுத் திரும்பியதும், வீரபத்திரர் தோன்றி தக்கன் யாகத்தை அழித்தார். ஈசன் ஈஸ்வரியை ‘பூதலத்தில் பிறந்து பாவம் தீர்ப்பாய்’ எனக் கூற, அப்பாவம் போக்க புத்திரன் வேண்டும் என்றும், இத்தலத்தில் உள்ள நந்தவனங்களைக் காக்கப் புத்திரன் வேண்டும் என்றும், வேண்டியதன் பயனாகப் பிறந்தவரே காத்தவராய சுவாமி.

2. **காத்துமுத்து நாடகம் -** ஈஸ்வரனின் பரிபூரணத்தில் சந்தேகம் கொண்டு அல்லது பரிசோதிக்கும் பொருட்டு ஈஸ்வரி எறும்பு ஒன்றைப் பிடித்து 'சிமிழி' ஒன்றினுள் அடைத்து வைத்துள்ளார். அடுத்த நாள் அந்தச் சிமிழியைத் திறந்து பார்த்தபோது அவ்வெறும்பின் வாயில் 'நொய்' (அரிசிக் குருணல்) இருக்கக் கண்டு திகைத்துத் தான் செய்த தவறுக்காக ஈசனிடம் மன்னிப்புக் கூறியுள்ளார். எறும்பைத் துன்புறுத்திய பாவம் நீங்க பூமியில் பிறந்து நதிக்கரைகளில் பூங்காவனங்கள் அமைத்து விமோசனம் பெறுமாறு ஈசன் கட்டளையிட்டார். அப்போது ஈஸ்வரி பூங்காவனத்தைக் காக்க மகவொன்று வேண்டும் என்று கேட்டதற்கிணங்க முருகன் காத்தவராய சுவாமியாக அவதரித்தார்.

3. **சிவவாக்கியர் போதம் -** தக்கன் தன் யாகத்தில் இடம்பெற்ற தவறை உணர்ந்து வீரபத்திரர் தன்னை அழிக்கும் சந்தர்ப்பத்தில் தான் சிவத்தலங்களில் காவல் தெய்வமாக இருக்க வேண்டும் என வேண்டியதற்கிணங்க, அதன் வழி தக்கனே காத்தவராய சுவாமியாக அவதரித்ததாகக் கூறப்படுகிறது.

4. **காத்தவராயன் கதைப்பாடல் -** சேப்பிள்ளையான் எனும் காவல் அதிகாரியின் வளர்ப்பு மகனே 'பரிமளம்' (பரிமணம்) என்ற காத்தவராயன் ஆவார். இவர் பறையர் குலத்தவர். பிராமணப் பெண்ணான ஆரியமாலாவை மணந்து நாட்டைவிட்டு ஓடியவர். இவரைக் கண்டுபிடித்து கழுவேற்றம் செய்ய அரசன் முடிவு செய்ததாகவும், பின்னர் இவர் வாதங்களில் உள்ள நியாயங்களை ஏற்று மன்னித்ததாகவும், ஆயினும் காத்தவராயன் தானாகவே முன்வந்து கழுவேறியதாகவும் இந்நூல் கூறுகிறது. இக் கழுவேற்றத்துக்குக் காரணமாக, கைலாசத்தில் சிவனுடன் இருந்த காலத்தில் ஆறு தேவப் பெண்களைக் கண்டு ஆசை கொண்டதாகவும், அதனால் பூவுலகில் பிறந்து அவர்களை மணந்து கழுவேறிச் சாகவேண்டும் என இறைவன் சபித்ததாகவும் கூறப்படுகிறது. இது இரு பெண்கள் மீது ஆசை கொண்ட 'ஆலகால சுந்தரரின்' கதையை ஒத்ததாக உள்ளது.

5. **ஈழத்துக் காத்தான் கூத்துப் பிரதிகள் -** ஈழத்தில் பதிப்பிக்கப்பட்ட காத்தவராயன் பாடல்கள், கூத்துப் பிரதிகள் யாவும் காத்தானை ஆதி சிவனின் மைந்தனாகவும் மாரியம்மனின் வளர்ப்பு மகனாகவும் சுட்டுகின்றன. உமையின் இளைய சகோதரியான மாரியம்மன் திருமணமாகாத கன்னித் தெய்வமாவாள். சிவனும் திருமாலும் மான்களாக மாறிப் பெற்றெடுத்த மான் கன்றை மாரியம்மன் கைகளால் தூக்க, அது ஆண் குழந்தையாக மாறுகிறது. அக் குழந்தையை மாரியம்மன் வளர்த்து வரும் காலத்தில், கங்கை பெருக்கெடுத்து இருவரையும் அழிக்க வருகிறது. அப்போது குழந்தை கங்கையை காலால் மறித்துத் தாயைக் காத்தது. வளர்ந்து தாயின் நந்தவனத்தையும் காத்து வந்தது. இவ்விரு காரணங்களாலும் அது காத்தான் எனும் பெயர் பெற்றது.

மேற்குறிப்பிட்ட ஐந்து கதைகளும் காலந்தோறும் காத்தான் பற்றிய பல்வேறு கதைகளாக பிரதேச, கால வேறுபாடுகளுக்கேற்ப வாய்மொழி மரபின் வழி பேணப்பட்டு வந்து நூலுருப் பெற்றுள்ளன. காத்தவராயன் நாடகம் எனும் பிரதியில் மட்டும் கழுவேற்றம் பற்றிய குறிப்பு இல்லை. சிவவாக்கிய போதம் மட்டுமே தக்கனின் அவதாரம் எனக் காத்தனைக் குறிப்பிடுகின்றது. காத்தானை முருகனின் அவதாரம் எனக் கூறும் சில கதைகளும் உண்டு. இவை தவிர மேற்சொன்ன கதைகள் பலவற்றையும் உள்வாங்கி பிறிதாக இன்னொரு கதையும் கூறப்படுகிறது.

பார்வதி சிற்றெறும்பை சிமிழியிலடைத்த கதையைக் கூறி இறை சாபத்தால் நந்தவனம் அமைத்துப் பராமரித்தாள். அதற்குக் காவலாக காத்தான் எனும் ஒரு வாலிபனை நியமித்தாள். சப்த கன்னியர்கள் சித்திரப் பொய்கையில்



**பருத்தித்துறை, புலோலி, வராத்துப்பளை - காத்தவராயன் கோயில் (நன்றி : பா.இரகுபரன்)**

நீராடிய பின், இந் நந்தவனத்து மல்லிகை மலர்களைப் பறித்து கொண்டு கைலை சென்றனர். இதனை அவதானித்த காவலாளி அவர்கள் நீராடும் போது அவர்களின் ஆடையை எடுத்து மறைத்ததாலும், ஆடையில்லாததால் இளைய கன்னி நீரினுள் நிற்க, ஏனையவர் கைலை சென்று சிவனிடம் முறையிட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் கோபம் கொண்ட சிவன் காத்தானை 'ஏழு பிறவிகள் எடுத்து கழுவேறி இறக்கச் சாபம்' கொடுத்தார். இடைமறித்த பார்வதி 'தீயில் உடல் வேகலாகாது' என சாப நீக்கம் அளித்தார். இவ்வாறு இடைமறித்ததால் பார்வதிக்கும் சாபம் வழங்கப்பட்டது. காத்தான் நான்காவது பிறப்பில் தாயைச் சந்தித்ததும் ஆரியமாலாவை கரம் பிடித்து கழுவேறியதுமாக இக்கதை அமைகிறது. இக்கதை தமிழகப் பிராந்தியங்கள் பலவற்றைச் (கொல்லிமலை, கம்பா நதி) சுட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. கழுமரம் காத்தவராயனின் அடையாளமானதற்குப் பின்னணியில் துயர் மிகுந்த காதல் கதை ஒன்று மறைந்திருக்கிறது. காத்தவராயன் 14 ஆம் நூற்றாண்டில் திருச்சிக்கு அருகே வாழ்ந்த காவற்காரன். அப்போதே காதல் புரட்சி செய்து தண்டிக்கப்பட்டவன். மரணத்துக்குப் பிறகு சாமியாகி பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு நம்பிக்கையாகத் திகழ்கிறவன் எனக் கூறப்படுகிறது. தமிழகச் சூழலில் காமாட்சி அம்மன் கோயில்களில் முதன்மையான காவல் தெய்வமாக காத்தவராயன் வழிபடப்படுகின்றார். ஈழத்தில் முத்துமாரியம்மன் வழிபாட்டோடு தான் காத்தவராயன் வழிபாடு இணைக்கப்பட்டுள்ளது. காத்தவராய சுவாமிக் கதைகள் இன்று வரை கால, தேச, வர்த்தமானத்துக்கு ஏற்ப பலவாறு பரிணமித்துக் கொண்டிருக்கின்றன.

காத்தவராயன் பற்றிய இக்கதைகள் யாவும் பலவாக அமைந்தாலும் மாரியம்மன் வழிபாடும், காத்தவராய சுவாமி வழிபாடும், கழுமர வழிபாடும் ஒன்றாக நின்று நிலைத்துவிட்டன; மக்கள் மனதில் பெரு நம்பிக்கையை வளர்த்து விட்டன. விஜய நகரக் காலத்துக்கு முந்தைய கதையாகவும் வழிபாடாகவும் இது கருதப்படுகிறது. பலதார மணம், பரத்தமை



வல்வெட்டித்துறை மாணாங்கானை சின்னக் காத்தவராயன் கோயில்

உள்ளிட்ட நாயக்கர் கால வாழ்வியல் இப் பிரதிகளில் காணப்படுகின்றது.

## ஈழத்துக் காத்தவராய சுவாமி கோயில்கள்

மாரியம்மன் கோயில்களில் பெரும்பாலும் கழுமரமும் காத்தவராய சுவாமி சிலையும் வைத்து வழிபடும் மரபு எங்கும் காணப்படுகிறது. தமிழ்நாடு, கேரளா, இலங்கை போன்ற தேசங்களில் செல்வாக்கு மிக்க இக்காவல் தெய்வத்துக்கு, தனியான கோயில்கள் தமிழ்நாட்டிலும் கேரளாவிலும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

ஈழத்தில் அல்வாய், பருத்தித்துறை, திக்கம், வராத்துப்பளை, ஊரணி, நெடியகாடு (வல்வெட்டி துறை), நெடுங்கேணி, திருகோணமலை உள்ளிட்ட பல இடங்களில் தனியான காத்தவராய சுவாமி கோயில்களும், வல்வட்டித்துறை, அல்வாய், வேலிவத்தை, மாயக்கை, பருத்தித்துறை, தும்பளை, அளவெட்டி, கோண்டாவில், திருநெல்வேலி, திருகோணமலை (நிலாவெளி), முல்லைதீவு (புதுக்குடியிருப்பு), மட்டக்களப்பு போன்ற இடங்களில் உள்ள முத்துமாரியம்மன் கோயில்களோடு இணைந்த காத்தவராய சுவாமி கோயில்களில் கழுமரமும் காணப்படுகின்றன.

## வழிபாட்டு முறைகள்

இத் தெய்வத்திற்கான வழிபாட்டு முறை இரு முறைகளில் நிகழ்த்தப்படுகிறது:

1) மாரியம்மன், காளியம்மன் கோயில் சடங்குகள் நிகழ்த்தப்படும் போது இணைத் தெய்வமான காத்தவராயருக்கும் சடங்கு வழிபாடுகள் நிகழ்த்தப்படும்.

2) காத்தவராய சுவாமி தனிக் கோயில்களில் தனியான சடங்கு வழிபாடுகள் நிகழ்த்தப்படும்.

பெரும்பாலான மாரியம்மன் கோயில்களில் காத்தவராயருக்கு தனி சந்நிதியோ அல்லது கழுமரம் மட்டுமோ காணப்படுகிறது. மாரியம்மன் அம்மை, பொக்குளிப்பான், சின்னமுத்துப் போன்ற நோய்களைத் தருபவளாகவும், தன்னை வணங்குபவருக்கு



மட்டக்களப்பு மகழூர்முனை முத்துமாரியம்மன் கோயில் கழுமரம்

நோய் தீர்க்கும் தெய்வமாகவும் கருதப்படுபவள். அதனால் பயபக்தி நிறைந்த வழிபாட்டிற்குரிய தெய்வத்துக்கு குளிர்ச்சிச் (குளிர்த்தி) சடங்கு நிகழ்த்தப்படும்; பொங்கல் பொங்கி வேள்வி நடத்துவர். வேள்வியில் கோழி, ஆடு போன்றவற்றை பலி கொடுக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. பொங்கலோடு பழவகைகள், பலகாரங்கள், வெற்றிலை, பாக்கு என்பவை வைத்து மடை பரப்புவர். இவ்வாறே காத்தவராய தனிக் கோயில்களிலும் மடை பரப்பப்படும். முன்னைய காலத்தில் காத்தவராயருக்கு இடப்படும் மடைகளில் இறைச்சி, மீன், கள், முட்டை என்பவற்றோடு பல்வேறு வகைத் தானியங்களில் அவிக்கப்பட்ட பிட்டுகளும் மரவள்ளி, தவிடு போன்றவற்றாலான பிட்டுகளும் படைக்கப்படும். கருவாடும் சுட்டுப் படைக்கப்படும். பூசாரியாக அவ்வக் குலத் தோன்றல் பூசையைச் செய்வார். வேள்வியின் போது பறைமேளம் இசைக்கப்படும். மத்தளம், உடுக்கு இசைக்கும் வழக்கமும் இருந்துள்ளது. இத் தோற்கருவிகள் இசைக்கப்படும் போது பூசாரிகளோ அல்லது வேறு எவரோ தெய்வமேறி உருக்கொண்டாடுவர். கலை வந்து விட்டதாக, தமது தெய்வம் அருள் புரிய வந்து விட்டதாகக் கருதி மக்கள் வழிபடுவர். உருவேறியவர் குறி சொல்வார்; இறுதியில் வெறியாட்டுவோர் பறையிசை ஒலிக்க செம்பு நீர், கோயில் பிரம்பு என்பவற்றுடன் அருகிலிருக்கும் நாற்சந்தியையோ அல்லது முற்சந்தியையோ அடைந்து பூசை செய்து எலுமிச்சங்காய்களை வெட்டி எறிவார். அவை நிமிர்ந்து விழும் பட்சத்தில் ‘வழிவெட்டிவிடுதல்’ சடங்கு சிறப்பாக நடைபெற்றதாகக் கருதப்படும். இதற்குப் பதிலாக கோழி, ஆடு போன்றவற்றை பலி கொடுக்கும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. சடங்குகள் முடியும் தறுவாயில் தெய்வமாடியோர் சன்னதம் இழந்து நிலத்தில் விழுவர். இது தெய்வம் மலையேறிவிட்டதாகக் கருதப்படும். பின்பு பக்தர்களுக்கு பூசாரி திருநீறு, சந்தனம், தீர்த்தம் முதலியவற்றை வழங்குவார். மட்டக்களப்பில் நிகழ்த்தப்படும் மாரியம்மன்

சடங்கு தனித்துவமானது. மாரியம்மன் சாபத்தால் தான் இழந்த அனைத்து ஆற்றல்களையும் மீளப் பெறுவதற்காக தவ நிலைக்கு ஏறச் செல்லும்போது, காத்தான் தடுப்பதும், இதனால் மாரியம்மன் காத்தானை கழுமரத்தில் ஏற்றிக் கட்டிவைத்து விட்டுச் செல்வதும், தவநிலை முடிந்து ஆற்றல்களை பெற்றுவரும் மாரி, காத்தானை கழுமரத்தில் இருந்து இறக்கி திருவருள் புரிவதும் முக்கியம்சங்களாகும். இவ்விடங்களில் கழுமரத்தில் வாழைப்பழச் சீப்புகளை கட்டிவிடுவதும், கழுமரத்திலேறிய காத்தான் அவற்றைப் பிடுங்கி மக்களுக்கு ஏறிதலும் நடைபெறுகின்றன. சடங்கில் காத்தானின் ஆடல் சிறப்பாக அமையும். இசையோடு கூடிய பாடலும் சிலம்பு, உடுக்கு, பறை உள்ளிட்ட பல்வேறு இசைக்கருவிகளின் இசையும் ஆட்டத்தை உச்சத்திற்கு இட்டுச்செல்லுகிறது. காத்தவராயன் கும்மி, காத்தான் – ஆரியமாலா காதல், காத்தானின் குறும்பு என பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஆட்டமாக இது காணப்படுகிறது. மலையகத்திலும் மாரியம்மன் வழிபாட்டுடன் இணைந்ததாக காத்தான் வழிபாடு காணப்பட்டு வருகிறது.

## நேர்த்திக்கடன்

மக்கள் தமது நம்பிக்கை, வழிபாட்டு முறை என்பனவற்றுக்கேற்ப பல்வேறு நேர்த்திக் கடன்களை தெய்வங்களுக்கு வைப்பர். தம் காரியம் நிறைவேற வைக்கப்படும் நேர்த்திக் கடன்களை காரியம் நிறைவேறிய பின் செலுத்துவர். பொங்கல், மடைபரவல், விரதம், காவடி, கரகமெடுத்தல், அலகு குத்துதல், முள்ளு மிதியடி நடத்தல் எனப் பலவகையான நேர்த்திக் கடன்கள் உண்டு. வடமராட்சியில் மாரியம்மன் – காத்தவராய சுவாமி வழிபாடுகளில் முதன்மையுறும் நேர்த்திக்கடன் ‘கூத்தாடுதல்’ ஆகும். காத்தவராயன் கூத்து நேர்த்திக்கடனாக வைத்து ஆடப்படும். காத்தவராயன் கூத்தில் பிரதான காத்தான் பாத்திரத்தை நேர்த்திக்கடன் வைத்தவர் ஏற்றாடுவார். அம்மனுக்கும் காத்தானுக்கும் செய்யும் ஒரு வகை வழிபாட்டு நெறியாகவே காத்தான் கூத்து ஆரம்பத்தில் ஆடப்பட்டது. சின்னான், காத்தான், மாரியம்மன், காளியம்மன் பாத்திரங்கள் கூத்தாடி கொண்டிருக்கும் போதே சன்னதம் செய்தல் உண்டு.

தமிழகச் சூழலில் உடுக்கடிப்பாடல், தெருக்கூத்து, தனியாள் பாடல், கூடு முறைப் பாடல் என்னும் தளங்களில் காத்தவராயன் கதை பயிலப்பட்டு வருகிறது. இம்முறையியல்கள் ஈழத்தில் காணப்பட்டாலும், தென்மோடி ஆட்டமுறையில் தனித்துவமான துள்ளல் நடையினையுடைய சிந்துநடைக் கூத்தாக ஆடப்பட்டு வருகிறது. இக்கூத்து வாய்மொழி மரபான அண்ணாவிமார்களால் பேணப்பட்டு வந்துள்ளது. இது பரம்பரை பரம்பரையாக ஆடும் கூத்துக் கலையாகவும் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய இடங்களில் இக்கூத்து சிறப்பாக, பரம்பரை பரம்பரையாக ஆடப்பட்டு வருகிறது. நேர்த்திக் கடனுக்கான கூத்து என்ற வகைக்கு அப்பாற்பட்ட தனித்துவமான கூத்துக்கலையாக வளர்ந்துள்ளது.

## சமகாலப் பயில்வு

யாழ்ப்பாணத்தில் காத்தான் வழிபாடு பஞ்ச கம்மாளர்களிடமே அதிக செல்வாக்கு உடையது என்றும், காத்தான் கூத்து ஆடுபவர்களும் அண்ணாவிமாரும் அச்சமூகத்தவர்களிடமே காணப்பட்டனர் என்றும் கூறப்பட்டாலும், அல்வாய் போன்ற பகுதிகளில் பள்ளர் சமூகத்தவர்களிடம் வழிபாடும், கூத்தும் நீண்ட காலம் நிலவிவருவதை அறிய முடிகின்றது. செட்டி, பறையர், வண்ணார் போன்ற சாதியப் பாத்திரங்கள் கூத்தில் நேரடியாக உண்டு. கப்பலில் காத்தான் செல்லுதல் கரையூர்களில் நீண்ட நேரம் கூத்தாக ஆடப்படும். காளி, பத்திரகாளியை குல தெய்வமாகக் கொண்டவர்கள், காளியால் மீட்கப்பட்ட காத்தான் கூத்தை தம் கலையாகக் கொள்வர். வடமராட்சியில் இவற்றில் சம்பந்தப்படாத பள்ளர் சமூகத்தவரிடம் இருபதுக்கும் மேற்பட்ட கோயில்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. பொதுவாக விவசாய சமூகத்தினதும் கரையூர்



காத்தான் மடை - தும்பளை தெற்கு, சக்தி கோயில் (மனோன்மணி அம்மன் கோயில்)



சுளகு மடை

சமூகத்தினதும் தெய்வமாக காத்தவராயர் காணப்படுகின்றார்.

கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் போன்றோரின் கூத்து மீட்டுருவாக்கச் செயற்பாடுகள் காரணமாக இது பாடசாலைகளில் கலை நிகழ்வாகவும் தேசிய தமிழ்த்தினப் போட்டியில் ஒரு நிகழ்வாகவும் மாறியது. யுத்த சூழலும் சாதி கடந்த மக்கள் கலையாக கூத்தை மாற்றியது. ஆகம மயமாக்கப்பட்டதாக கருதப்படும் யாழ்ப்பாணச் சூழலில் 21 ஆம் நூற்றாண்டில் முன்பில்லாதவாறு பெரும்பாலான மாரியம்மன் கோவில்களின் முன்றல்களில், அல்லது வீதியில் காத்தான் சந்நிதி அமைக்கப்படுகிறது. குதிரையில் காத்தான் நிற்பதாக அது அமைக்கப்பட்டு கழுமரமும் அருகில் வைக்கப்படுகிறது. திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயத்தில் அண்மையில் அமைக்கப்பட்ட இவ்வாறான சந்நிதியில் பிராமணர் ஒருவர் திருநீற்றைக் கொடுத்து, குறி சொல்லி, நூல் கட்டுவது நடைபெற்று வருகின்றது. காத்தவராயர் சாதியம் கடந்த மக்கள் தெய்வமாக மிளிர்கிறார். கோண்டாவில் சிவமாரியம்மன் கோயிலில் கழுமரம் செப்பாலானதாக அமைக்கப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. ஆகமமயப்பட்ட மாரியம்மன் கோயில்களில் பிராமணர் காத்தானுக்கு அல்லது கழுமரத்திற்கு பூசை செய்தலும் நிகழ்ந்து வருகிறது. அந்தவகையில் இன்று காத்தான் வழிபாடு தனிக்கிராமிய வழிபாடாகவும், ஆகமக் கோவில் வழிபாடாகவும் இரு பண்புகளும் கொண்ட கலப்புரு (ஆகமவழிபாடும் கிராமியப் பூசாரி, மடை பரவல் முதலானவையும்) வழிபாடாகவும் நிலவி வருவதை அவதானிக்க முடிகிறது.

காத்தானின் தனிக்கோயில்களில் பெரும்பாலும் சாதாரண மக்களாலேயே பூசை செய்யப்படுகிறது. பலியிடல் பெரும்பாலும் இல்லாது விடினும் மாமிச, மட்சப் படையல் பெரும்பாலான கோயில்களில் உண்டு. ஏனைய கோயில்களில் பொங்கல் பொங்கி வடைமாலையிட்டு மடை பரவுவர். சில இடங்களில் காத்தான் கூத்தில் வரும் சின்னான் முதலான தெய்வங்களுக்கும் சந்நிதிகள் அமைக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்துக் காத்தான் கோயில்களில் காத்தான் கூத்துப்பாடல்களே இசைக்கப்படுகின்றன.

## முடிவுரை

காத்தவராயன் சுவாமி வழிபாடு மாரியம்மன் வழிபாட்டோடு இயைந்து வளர்ந்து வந்துள்ளது. ஈழத்தில் வடபுலத்திலே காத்தானுக்கு எனத் தனித்துவமான கோயில்கள் பல காணப்படுகின்றன. காத்தான் பற்றி பல்வேறு விதமான கதைகள் காணப்படுகின்றன. துயரம் மிகுந்த காதல் கதையும், இடைவிடாத முயற்சியும், இறை அருள் வெற்றி தரும் என்ற கதையும் இவற்றில் குறிப்பிடத்தக்கவை. காத்தான் காவல் தெய்வம், நோய் நொடியின்றி வாழ வைக்கும் தெய்வம் எனப் பொருள்படுகிறார். காத்தான் ஆரம்பத்தில் குறித்த சாதியினருக்குரிய தெய்வமாக நோக்கப்பட்டாலும், காத்தான் கதையின் வளர்ச்சி, அதில் வரும் பல்வேறு சாதியினருக்கு இடையிலும் இணைப்பை (செட்டி, மலைச்சாதி, பறையர், பஞ்சகம்மாளர்) உருவாக்கி மக்களின் தெய்வமாகியது.

காத்தவராயன் கூத்து மக்களின் கலையாகியதன் ஊடாக காத்தவராய சுவாமி பலராலும் நம்பிக்கையுடன் வழிபடும் தெய்வமாகத் திகழ்கின்றார். ஆகமக் கோயிலை ஒத்த பெருங்கோயில்கள் உருவாகி வருகின்றன. கழுமரமும் காத்தானும் இல்லாத மாரியம்மன் கோயில்கள் இல்லை எனலாம். காத்தவராய சுவாமிக்கு புதுக் கோயில்களும் உருவாகி வருகின்றன. ஆனால் எல்லாக் கோயில்களும் மக்களின் 'பூசாரியே' பூசகராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

காத்தானுக்குரிய பூஜையில் பலியிடல் செல்வாக்கிழந்து வருகிறது. கூத்தாடல் நேர்த்திக்கடன் இன்றும் நின்று நிலவுகிறது. 1958 இல் காத்தவராயன் என்று ஒரு திரைப்படம் வந்தது. அது போல 2024 இல் ராயன் என்ற பெயரில் காத்தவராயன் படம் நவீன மயப்படுத்தப்பட்டு வந்திருப்பது, காத்தவராயன் வழிபாடு இன்றும் உயிர்ப்புடன் தமிழகத்திலும், ஈழத்திலும், தமிழர் வாழும் நிலங்களிலும் செல்வாக்கோடு இயங்கி வருவதை உறுதி செய்கிறது. காத்தவராய சுவாமி, வேண்டும் வரம் அருளும் கிராமியத் தெய்வமாக செல்வாகுற்று வருகிறது.

(தொடரும்)

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே ‘பசுமை எனும் பேரபாயம்‘ எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.

மீநிலங்கோ
தெய்வேந்திரன்



ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தகு சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.

# மேல்கொத்மலைத் திட்டம் :

# தேச நலனா? இயற்கை வளமா?

*தேச நலனின் பெயரால் மலையகத் தமிழர்கள் தங்கள் வாழிடங்களில் இருந்து இடம் பெயர்க்கப்பட்டார்கள். இயற்கை அழிக்கப்பட்டது.*

## தொடக்கக் குறிப்புகள்

இலங்கையின் கடந்த கால்நூற்றாண்டு கால அபிவிருத்தி அரசியலின் வரலாற்றில் மக்களின் பாரிய எதிர்ப்பைச் சம்பாதித்த அபிவிருத்தித் திட்டங்களில் மேல்கொத்மலைத் திட்டம் முதன்மையானது. மக்களின் எதிர்ப்பையும் மீறி அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் இலங்கையின் சூழலியல் போராட்டங்களின் வரலாற்றில் முக்கிய இடம் இத் திட்டத்திற் கெதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களுக்கு உண்டு.

நீர் மின்சாரமும் அதற்காக உருவாக்கப்படும் நீர்த்தேக்கங்களும் பற்றிய நல்ல கதைகளும் மோசமான கதைகளும் உலகெங்கும் உண்டு. இலங்கையும் அதற்கு விதிவிலக்கல்ல. இலங்கையில் நீர்மின்சாரம் அறிமுகப்படுத்தப்பட்டமையானது மின்சாரத் தன்னிறைவையும் அனைவருக்குமான மின்சார அணுகலையும் சாத்தியப்படுத்தியது. ஆனால் இம் மின்சார உற்பத்திக்காக உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் பாரிய சூழலியல், பொருளாதார, சமூகப் பிரச்சனைகளைக் கொண்டிருந்தன. ஆனால் இவற்றுக்கெதிரான பாரிய எதிர்ப்புகள் இலங்கையில் தோற்றம் பெற்றிருக்கவில்லை. 1950



மேல்கொத்மலை தடுப்பணை

Image Source - rajagedara.blogspot.com

கள் முதல் 1980 கள் வரையான காலப்பகுதியில் பல பாரிய நீர்த்தேக்கங்கள் உருவாகின. ஆனால் அவை எதுவும் பாரிய மக்கள் எதிர்ப்புக்கு ஆளாகவில்லை. மேல்கொத்மலை திட்டம் இதற்கு விதிவிலக்கானது.

1991 ஆம் ஆண்டளவில், நாட்டின் 20% அரிசி மற்றும் 55% மிளகாய், மகாவலித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பகுதிகளில் உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் இது நீண்டகாலம் நிலைக்கவில்லை. பத்தாண்டுகளின் பின்னர் விவசாயிகள் பலர் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்தனர். மகாவலித் திட்டமானது அபிவிருத்திக்கு உட்படுத்திய நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பகுதிகளுக்கு நீர் வழங்குவதாக உறுதியளித்தது. மேலும், இந்தியாவிற்கு மின்சாரம் ஏற்றுமதி செய்ய திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தினால் 1,11,400 குடும்பங்கள் அல்லது சுமார் 700,000 மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர். இதில் பெரும்பான்மையானோர் வளமான பூர்வீக நிலங்களை இழந்து கொலனிகளில் குடியேறினர். மகாவலி, வாக்குறுதியை நிறைவேற்றத் தவறியுள்ளதுடன் விவசாயிகளுக்குப் போதிய நீரைப் பெற்றுக்கொடுக்கவும் தவறியது.

நீர்ப்பிடிப்புகளை பராமரிக்காததால், நீர்த்தேக்கங்களில் தண்ணீர் இல்லாமல், மின்வெட்டைச் சந்திக்க வேண்டி ஏற்பட்டது. வறண்ட வானிலை காரணமாக 1996 இல் நீர்மின்சாரத்தின் மொத்த உற்பத்தி 28% ஆகக் குறைக்கப்பட்டது. 1996 பயிர்ச்செய்கை ஆண்டில் மகாவலி பிரதேசத்தின் கீழ் பயிரிடப்பட்ட மொத்தப் பரப்பளவு 13% ஆகக் குறைந்தது. நீர்த்தேக்கத்தின் கொள்ளளவை விட அதிகமான நிலங்களை சுத்தப்படுத்தியதும் இதற்கு ஒரு காரணம். கிரிந்தி ஓயா இந்த நீர்த்தேக்கத்திற்கு போதுமான நீரை வழங்குவதில்லை. இதனால் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உமா ஓயாவை திசை திருப்புதல் மற்றும் மாணிக்க கங்கையைத் திசை

**மேல்கொத்மலை நீர்மின் திட்டமானது 1968 இல் மகாவலிப் படுகையில் நீர் மின்சார அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தின் (Master Plan) பகுதியாக உருவாக்கப்பட்டது. ஆனால் அடுத்த இரண்டு தசாப்த காலத்திற்கு மேல்கொத்மலையில் நீர்மின் உற்பத்தி தொடர்பில் கவனம் கொள்ளப்படவில்லை.**

திருப்புதல் போன்ற பணிகளை அதிகாரிகள் திட்டமிட்டனர். இந்த இரண்டு திட்டங்களும் அதிக சுற்றுச்சூழல் மற்றும் சமூகக் கேடுகளை உருவாக்கக்கூடியன என்பதை எல்லோரும் அறிந்தேயிருந்தனர். இந்தப் பின்புலத்திலேயே மேல்கொத்மலைத் திட்டத்தைப் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

## காலமாகி வந்த கதை

மேல்கொத்மலை நீர்மின் திட்டமானது 1968 இல் மகாவலிப் படுகையில் நீர் மின்சார அபிவிருத்திக்கான பிரதான திட்டத்தின் (Master Plan) பகுதியாக உருவாக்கப்பட்டது. ஆனால் அடுத்த இரண்டு தசாப்த காலத்திற்கு மேல்கொத்மலையில் நீர்மின் உற்பத்தி தொடர்பில் கவனம் கொள்ளப்படவில்லை. 1985 ஆம் ஆண்டு இவ்வாறான ஒரு திட்டமொன்றை நடைமுறைப்படுத்த இயலுமா என்பதைப் பரிசோதிக்க, கொத்மலை ஓயாவின் மேல் பகுதியில் உள்ள நீர்மின் விருப்பங்களை ஆய்வு செய்வதற்காக, ஒரு சாத்தியக்கூறு ஆய்வுக்கு ஜப்பான் அரசாங்கம் நிதியுதவி அளித்தது. இந்த ஆய்வில், பிரதான திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்கள் விரிவான ஆய்வுக்குட்பட்டன.

குறித்த சாத்தியக்கூறு ஆய்வு, ஐந்து இடங்களும் எட்டு மாற்று மேம்பாட்டுத் திட்டங்களும் ஆய்வு செய்யப்பட்டு, இரண்டு இடங்களில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொழில்நுட்ப ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் சாத்தியமானது என்று முடிவைத் தெரிவித்தது. ஒன்று, கலிடோனியாவில் நீர்த்தேக்கத்தை உருவாக்குவது; இரண்டாவது, தலவாக்கலையில் ஆற்றில் இருந்து வெளியேறும் நீரைச் சேமிப்பது. கலிடோனியாவில் உள்ள திட்டமானது 2,700 குடும்பங்களை இடம்பெயரவும், பெரிய அளவிலான தேயிலை நிலங்களை நீரில் மூழ்கடிக்கவும் செய்யும் என்றும் அவ்வறிக்கை கூறியது. 1987 ஆம் ஆண்டு இவ்வறிக்கை அரசாங்கத்திடம் வழங்கப்பட்ட போதும் 1992 ஆம் ஆண்டுவரை அது பொதுவெளிக்கு வரவில்லை. 1992 இல் இவ்வறிக்கை பொதுவெளிக்குக் கிடைத்ததும் இத்திட்டத்தின் ஆபத்துகள் குறித்த விழிப்புணர்வு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து 1992 பெப்ரவரியில் இலங்கை மின்சார சபை சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஒன்றைச் செய்ய தொடங்கியது. இதற்கு ஜப்பான் அரசாங்கம் பொறியியல் சேவை ஆய்வு என்ற சட்டகத்துக்குள் கூடுதல் நிதியுதவியை வழங்கியது. இதில் சாத்தியக்கூறு ஆய்வு, உகந்த வளர்ச்சித் திட்டத்தின் தேர்வு, சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு, விரிவான வடிவமைப்பு, ஒப்பந்த ஆவணங்களைத் தயாரித்தல் ஆகியவை அடங்கும். 1994 செப்டம்பர், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை வெளியிடப்பட்டது.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு மேல்கொத்தமலைத் திட்டத்துடன் தொடர்புடைய முக்கிய சிக்கல்களை அடையாளம் கண்டது. நீரோடைக் குறைப்பு காரணமாக நீர் வீழ்ச்சி குறைவடைதல், அழகியலில் ஏற்படும் பாதிப்புகள், பாதிக்கப்பட்ட மக்களை மீள்குடியேற்றுவதால் ஏற்படும் சமூகப் பாதிப்புகள், நிலத்தடி நீரில் ஏற்படக்கூடிய விளைவுகள், சுரங்கப்பாதை - நீரோடைகளில் நீர் நீக்கம் செய்வதால் ஏற்படும் பாதிப்புகள், கீழ் ஓடை நீரின் பயன்கள் மற்றும்

உயிரிகளின் பன்முகத்தன்மை மீதான தாக்கங்கள் ஆகியன அடிப்படையான பிரச்சினைகளாகக் குறிப்பிடப்பட்டன. ஆனால் அதற்கான தீர்வுகளையோ மாற்றுத் திட்டங்களையோ குறிப்பிடவில்லை. இவ்வளவு பாதிப்புகள் இருந்த போதும் மேல்கொத்மலைத் திட்டத்தை முன்னெடுக்கலாம் என்று முன்மொழிந்திருந்தது.




Image Source - foe.kdu.ac.lk

இலங்கை மின்சார சபை குறித்த அறிக்கையை அதே ஆண்டு ஒக்டோபர் மாதம் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பி, திட்டத்தை முன்னெடுக்க அனுமதி கோரியது. 1995 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழு, குறித்த அறிக்கையை நிராகரித்தது. மார்ச் மாதம், இலங்கை மின்சார சபை, குறித்த தொழில்நுட்பக் குழுவின் முடிவுக்கு எதிராக சுற்றாடல் அமைச்சின் செயலாளரிடம் முறைப்பாடு செய்தது. இதையடுத்து செயலாளர், குறித்த முறைப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக ஒரு குழுவை நியமித்தார். 1995 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அக் குழுவும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை ஏற்றுக் கொள்ள மறுத்து, மின்சார சபையின் முறைப்பாட்டைத் தள்ளுபடி செய்தது.

சிலகாலத்தின் பின்னர் அதே அறிக்கையை சில திருத்தங்களோடு 1996 யூலை மாதம் இலங்கை மின்சார சபை மீண்டும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அனுப்பியது. அதே ஆண்டு டிசெம்பரில் அவ்வறிக்கையை மத்திய சுற்றாடல் அதிகார சபை மீண்டும் நிராகரித்தது. 1997 இல், இலங்கை பாரிய மின்சார நெருக்கடியை எதிர்நோக்கியது. 1997 ஏப்பிரலில் நாடு கடுமையான மின் நெருக்கடியை அனுபவித்து வருவதைக் காரணங்காட்டி, சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளரிடம் இருந்து இந்த திட்டத்திற்கு அரசாங்கம் ஒப்புதல் பெற்றது. நாட்டின் மின் தேவை, சுற்றுச்சூழலை விட முக்கியமானது என்று கருதி அனுமதி வழங்கியதாக செயலாளர் தெரிவித்தார்.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ், 1998 யூலை மாதம், இத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் அனுமதி வழங்கப்பட்டது. இதற்கெதிராக ஒக்டோபரில் சுற்றுச்சூழல் அமைப்பு வழக்குத் தாக்கல் செய்தது. 2000 ஆம் ஆண்டு குறித்த அமைப்புடன் நீதிமன்றத்துக்கு வெளியே உடன்பாடு எட்டப்பட்டதை அடுத்து சுற்றுச்சூழல் அங்கீகாரம் இத் திட்டத்திற்கு வழங்கப்பட்டது. இதையடுத்து இலங்கை அரசாங்கம் மார்ச் 28, 2002 இல் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டதன் மூலம் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜப்பான் அரசாங்கத்திடமிருந்து நிதியுதவியைப் பெற்றது. இதையடுத்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்தது. இவ்வாறுதான் மேல்கொத்மலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதி பெறப்பட்டது. இங்கு இரண்டு விடயங்களை நோக்குவது முக்கியம். முதலாவது, 1985 முதல் 2022 வரையான காலப்பகுதியில் இந்தத் திட்டம் தொடர்பான நடைபெற்ற விடயங்கள், இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகள் யாருடைய




**மேல்கொத்மலைத் திட்டம் குறித்து வெளியான கேலிச்சித்திரம்**

*நலனுக்காகச் செய்யப்பட்டன, ஏன் செய்யப்பட்டன போன்றவற்றை விசாரிக்க உதவும். இரண்டாவது, 2002 இல் இத்திட்டம் தொடங்கப்பட்ட பின்பு பாரிய மக்கள் எதிர்ப்பை ஏன் அது சந்தித்தது என்பது.*

*இவ்வகைப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் திட்ட அங்கீகரிப்பு நிறுவனமாக நீர்ப்பாசனம், மின்சாரம் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சானது நியமிக்கப்பட்டிருந்தது. 1995 ஆம் ஆண்டு குறித்த அமைச்சானது, மேல்கொத்மலைத் திட்டம் சூழலுக்கும் மக்களுக்கும் கேடானது என்ற அதன் சொந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையைக் கணிப்பில் எடுக்காமல், திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கத் தயாராக இருந்தது. மேல்கொத்மலைத் திட்டத்திற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பச்சை விளக்குக் கொடுக்க மறுத்துவிட்டது. ஆனால் திட்டத்திற்கு வேறு மூன்று மாற்றுகளை பரிந்துரைத்தது. எவ்வாறாயினும், மேற்பார்வைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த திட்டத்திற்கு அனுமதி வழங்க அமைச்சின் செயலாளர் தீர்மானித்ததுடன், அதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் இணக்கத்தையும் கோரினார். திட்டமானது போதிய மாற்று ஏற்பாடுகளை மதிப்பீடு செய்யவில்லை என்ற அடிப்படையில் திட்டத்திற்கான அனுமதியை மத்திய சுற்றாடல் அதிகாரசபை மறுத்தது. குறித்த அனுமதி நிராகரிக்கப்பட்டமைக்கு பின்வருவன பிரதான காரணங்களாகும்:*

1. *திட்டத்திற்கு பொருத்தமான மாற்றுகளை அடையாளம் காணவில்லை.*
2. *இது போன்ற திட்டம் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றிய தெளிவான, ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. முக்கியமாக அழியவுள்ள நீர்வீழ்ச்சிகள் மற்றும் நீர்வரத்துக் குறையவுள்ள நீர்வீழ்ச்சிகள் ஆகியன ஏற்படுத்தும் சூழலியல் பாதிப்புகள் குறித்த தரவுகள் இன்மை.*
3. *நீர்த்தேக்கத்தைக் கட்டுவதற்கு முன்மொழியப்பட்ட பகுதியில் சாத்தியமான நிலச்சரிவுகள் குறித்த தாக்க மதிப்பீடுகள் இல்லாமை.*

4. ரம்பொட ஓயா, புனா ஓயா, டெவோன் ஓயா மற்றும் பூண்டல் ஓயா ஆகியவற்றில் இருந்து தண்ணீரைக் கொண்டு வருவதற்காக உருவாக்கப்படவுள்ள பல கிலோமீட்டர்கள் நீளமான சுரங்கப் பாதைகள் அமைப்பதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த ஆய்வுகள் செய்யப்படவில்லை.

5. தலவாக்கலைப் பகுதி, பகுதியளவாக நீரில் மூழ்கவுள்ள நிலையில், அப்பகுதி மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்படும் சேதம் குறித்த விரிவான கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்படவில்லை.

6. அப்பகுதியில் கடும் மண் அரிப்பு ஏற்படும் (தேக்கத்தின் 15% ஆண்டுதோறும் நிரப்பப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.) நிலையில் அதைச் சரிசெய்யும் செயன்முறைகள் எதுவும் திட்டத்தில் இல்லை.

7. சுமார் 30 கிலோமீட்டர் நீளமுள்ள ஆறுகள் மற்றும் அதன் கீழ்நிலைப் பகுதிகள் வறண்டு போகவுள்ளன. இது விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் நீரைப் பயன்படுத்துவோர் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் கணிப்பில் கொள்ளப்படவில்லை.

8. இத்திட்டத்தின் வடிவமைப்பானது திடீர் வெள்ளம் இப்பகுதியை மோசமாகப் பாதிக்கப்படக்கூடிய வகையிலான நிச்சயமற்ற தன்மைகளை கொண்டிருக்கின்றமை.

9. சுமார் 600 குடும்பங்களின் மீள்குடியேற்றத்திற்கான சரியான திட்டம் இன்மை.

## மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்

மேல்கொத்மலைத் திட்டம் பற்றிய தகவல்கள் வெளியாகத் தொடங்கியது முதல் இத்திட்டத்தினால் பாதிப்படையப் போகும் மக்கள் போராடத் தொடங்கினார்கள். 17 அமைப்புகளும் பல தனிநபர்களும் இணைந்து 'மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்' என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இவ்வமைப்பு உருவாகிய கதையைச் சுருக்கமாகப் பார்த்துவிடலாம்.

மக்களின் எதிர்ப்பின் விளைவாக இத்திட்டம் அவ்வப்போது நிறுத்தப்பட்டது. ஜே.ஆர். ஜெயவர்த்தன முதல் சந்திரிகா குமாரதுங்க ஆகியோரின் ஆட்சிக்காலம் வரை இவ்விவகாரம் எடுக்கப்பட்ட போதெல்லாம், வெகுஜன எதிர்ப்பு இருந்தது. அதனால் திட்டம் நிறுத்தப்பட்டது. இதில் கவனிப்புக்குரியது யாதெனில் மலையக மக்களின் பிரதான அரசியல் பிரதிநிதிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியன இத்திட்டத்திற்கு ஆதரவளித்திருந்தன. மக்களை வேரோடு பிடுங்குவது, நிலத்தை வெள்ளத்தில் மூழ்கடிப்பது, சுற்றுச்சூழலைப் பற்றிய கவலை ஆகியவை மக்களின் எதிர்ப்பிற்கு பொதுவான காரணங்களாக இருந்தது. அரசியல் ஆதரவு இன்மையால் ஒழுங்குபடுத்தபடாத மக்கள் எதிர்ப்பாக இத்திட்டத்திற் கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் அமைந்தன.

மலையக அரசியல் தலைமைகளின் சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் பரந்த வெகுஜன எதிர்ப்பு இயக்கம் ஒன்றைக் கட்டுவதற்குத் தடையாக அமைந்தன. ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கத்தினால் 2001 ஆம் ஆண்டு இந்த விடயம் முன்னெடுக்கப்பட்டபோது, மலையன மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பி. சந்திரசேகரன் அதற்கு முழு ஆதரவை வழங்கினார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இ.தொ.கா தலைவர் ஆறுமுகன் தொண்டமான் தலவாக்கலையில் கண்டனக் கூட்டமொன்றை நடத்தினார். 2004 இல் இ. தொ.க சந்திரிக்காவின் அரசாங்கத்தில் இணைந்த பின்னர், அவரும் இந்தத் திட்டத்தை ஆதரித்தார். இந்த இரண்டு தலைவர்களும் அவர்தம் கட்சிகளும் இத்திட்டத்தின் பாதகமான தாக்கத்தை நன்கு அறிந்திருந்தாலும், அவர்களுக்கு மட்டுமே தெரிந்த காரணங்களுக்காக அதை ஆதரித்துள்ளனர்.



2012 இல், ஜப்பான் நிதியுதவியுடன், மேல்கொத்மலைத் திட்டம் திறந்து வைக்கப்படல்

Image Source - www.infolanka.com

இந்தப் பின்புலத்திலேயே மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் 2001 இல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் மூலம் திட்டத்திற்கு எதிராக இதுவரை தன்னெழுச்சியாக வந்த அனைத்து எதிர்ப்புகளையும் போராட்டங்களையும் ஒருமுகப்படுத்தி மையப்படுத்த இந்த அமைப்பானது அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள் மற்றும் தனிநபர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.


இந்த அமைப்பு இத்திட்டத்திற்கு எதிராகப் பல வெகுஜனப் போராட்டங்களை நடத்தியது. 2002 இல் இவ்வமைப்பு ஒழுங்குசெய்த கையெழுத்துப் பிரச்சாரம் ஒரு முக்கியமான நிகழ்வாகும். இப்பிரச்சாரத்தில் இத்திட்டத்திற்கு எதிராக ஒரு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் கையொப்பங்களை இட்டனர். இக்காலப் பகுதியில் பி. சந்திரசேகரன் இத்திட்டத்தை முழுமையாக ஆதரித்தார். நிலம் பிடுங்கப்படும் மக்களுக்கு மட்டுமே இழப்பீடு கோரினார். ஆறுமுகன் தொண்டமானும் இதற்கு ஆதரவளித்ததுடன், அசல் திட்டத்திற்கு பதிலாக, தனது கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட மாற்று முன்மொழிவுக்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டதாக பொதுமக்களிடம் கூறினார். ஆனால் இந்தப் பொய் அம்பலமாக நீண்டகாலம் எடுக்கவில்லை. இத்திட்டத்திற்கு கடன் வழங்கும் ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகாமை வங்கி இத்திட்டத்தைத் தொடங்க 2005 டிசம்பர் 10 ஆம் தேதி வரை மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சகத்திற்கு காலக்கெடுவை வழங்கியதாக தகவல் வெளியானது. இது இந்தத் திட்டம் எந்த மாற்றமும் இல்லாமல் செயற்படுத்தப்படும் என்பதை உணர்த்தியது.

இக்காலப்பகுதியில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தங்களது போராட்டங்களைத் துரிதப்படுத்தி, 2005 ஏப்ரல் 10 ஆம் திகதி ஒரு மாநாட்டை ஹட்டனில் மிகவும் வெற்றிகரமாக நடத்தினர். இம்மாநாடு இத்திட்டத்திற்கு எதிராக இடைவிடாத போராட்டத்தை நடத்த பல தீர்மானங்களை நிறைவேற்றியது. 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி, இம்மக்கள் இயக்கத்தினால் பொகவந்தலாவ நகரில் பாரிய போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது. 2005 மே 8 அன்று, இம்மக்கள் இயக்கத்திற்கு ஆதரவாக


*தலவாக்கலையில் மலையக இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்த கண்டனக் கூட்டமும் ஊர்வலமும் நடந்தன. 2005 மே 15 அன்று, மலையகத்தில் ஒரு வெற்றிகரமான எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்பட்டது. அன்று, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். கடைகள் மற்றும் அலுவலகங்கள் மூடப்பட்டன. மிகப்பெரிய மக்கள் போராட்டமாக இது வெற்றியடைந்தது. இது மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் பரந்த மக்களின் ஆதரவைப் பெற்றிருப்பதை உறுதி செய்தது.*

*மக்கள் இயக்கம் இதைத் தொடர்ந்து தங்கள் போராட்டத்தை இரண்டாம் கட்டத்திற்கு நகர்த்தியது. இது ஒரு மாதகால எதிர்ப்பு நடவடிக்கையாகத் திட்டமிடப்பட்டு 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தொடங்கப்பட்டது. மலையகத்தின் ஏனைய பகுதிகளிலும், கொழும்பிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் கூட்டங்களும் நடாத்தப்பட்டன. இம்மக்கள் இயக்கம் பரந்துபட்ட மக்கள் ஆதரவைப் பெற்றது. மக்கள் இயக்கத்தின் ஒருமாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் நிறைவு நிகழ்ச்சி தலவாக்கலை நகரில் ஒக்டோபர் 2 ஆம் திகதி ஆர்ப்பாட்டமாக நடைபெற்றது. தலவாக்கலை கதிரேசன் கோவில் அருகிலிருந்து ஆரம்பமான பேரணி தலவாக்கலை பஸ்தரிப்பு நிலையத்தைச் சென்றடைந்ததுடன், அங்கு மறியல் போராட்டம் இடம் பெற்றது. அப்போது அவ்விடத்திற்கு வந்த குண்டர்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அதனைப் பார்த்துக்கொண்டு தலவாக்கலைப் பொலிஸார் மௌனம் காத்து நின்றனர். தாக்குதலை மேற்கொண்டோரில் தலவாக்கலை நகர சபைத் தலைவரும் இருந்தார். இது, மக்கள் போராட்டத்தின் மீது தலவாக்கலையிலுள்ள அரசாங்கச் சார்பு குண்டர்களே தாக்குதல் நடத்தினர் என்பதை உறுதி செய்தது. இதைத் தொடர்ந்து மக்கள் இயக்கத்தை முன்னெடுத்த தலைமைக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவராக இலக்கு வைக்கப்பட்டனர். இருந்த போதும் மக்கள் தொடர்ந்தும் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராகப் போராடிய வண்ணம் இருந்தனர்.*

*2006 ஆம் ஆண்டளவில் இலங்கையின் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் முழுமையான முடிவுக்கு வந்து, போர் தொடங்கியிருந்த சூழலானது மக்கள் இயக்கத்தைத் தடுக்கவும்*




ஆரம்பத்தில் முன்மொழியப்பட்ட மேல்கொத்மலைத் திட்டத்தின் வரைபடம்




இறுதிசெய்யப்பட்ட மேல்கொத்மலைத் திட்டத்தின் வரைபடம்

கட்டுப்படுத்தவும் அரசுக்கு வாய்ப்பானது. 2007 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் குறித்த மக்கள் இயக்கத்தை வழிநடாத்திய பிரதான செயற்பாட்டாளர்கள் 25 பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள். இதில் தமிழர்களும் சிங்களவர்களும் அடங்குவார்கள். இவர்கள் விடுதலைப்புலிகள் என்று குற்றஞ்சாட்டப்பட்டனர். இவர்களில் பலர் நீண்ட சிறைவாசத்தை அனுபவிக்க நேர்ந்தது.

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைச்சரவை, திருத்திய திட்டத்திற்கு அனுமதியளித்தது. இது போராட்டத்தின் வெற்றியாகும். மேல்கொத்மலைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒப்பந்தங்கள் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கை மின்சார சபைக்கும் ஜப்பானிய நிறுவனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. 2012 ஆம் ஆண்டு இத்திட்டம் நிறைவடைந்து நீர்மீன்சார உற்பத்தி தொடங்கியது.

## நிறைவுக் குறிப்புகள்

மேல்கொத்மலைத் திட்டத்தின் கதையும் அதன் அனுபங்களும் சில முக்கியமான செய்திகளைச் சொல்கின்றன. பெரிய நீர்த்தேக்கங்கள் பற்றிய உலகளாவிய விவாதம் ஒரே நேரத்தில் மிகவும் சிக்கலானதும் அடிப்படையில் எளிமையானதுமாகும். இது சிக்கலானது, ஏனெனில் சிக்கல்கள் நீர்த்தேக்கத்தின் வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் இயக்கம் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்படவில்லை; சமூக, சுற்றுச்சூழல் மற்றும் அரசியல் தேர்வுகளின் வரம்பைத் தழுவியதால், வளர்ச்சி மற்றும் மேம்பட்ட நல்வாழ்வுக்கான மனித விருப்பங்களையும் சார்ந்துள்ளது. கடந்த இரண்டு தசாப்தங்களில், உலகளாவிய மின்சார உற்பத்தி இரட்டிப்பாகியுள்ளது. மேலும், வளர்ந்து வரும் பொருளாதாரம் காரணமாக, உலகம் முழுவதும் மின்சாரத் தேவை வேகமாக அதிகரித்து வருகிறது. மின்சாரத் தேவை கணிசமாக அதிகரித்துள்ளதோடு மட்டுமல்லாமல், இது வேகமாக வளர்ந்து வரும் ஆற்றலின் இறுதிப் பயன்பாடாகும். எனவே, நீர்மின்சாரத்தின்

> நீர்மின்சார மேம்பாட்டின் பரந்த நிலைத்தன்மை மற்றும் சமூக நீதியை உணர, குறைந்த தீங்கு விளைவிக்கும் மற்றும் அதிக உற்பத்தியைச் செய்யக்கூடிய நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது மட்டுமல்லாமல், இடம்பெயர்ந்த மக்கள் வெற்றிகரமாக மீள்குடியேற்றப்படுவதை உறுதி செய்வதும் முக்கியம்.

தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகள் எதிர்கால உலக ஆற்றல் கலவையில், குறிப்பாக வளரும் நாடுகளில், முக்கிய பங்களிப்பாளராக அமைகிறது.

புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் முக்கிய ஆதாரமாக நீர்மின்சாரம் உள்ளது. இது புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதில் முக்கியமானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் நீர்மின்சாரம் முக்கியமான புதுப்பிக்கத்த சக்தி மூலமாகும். இருப்பினும், இடப்பெயர்வு, சுகாதாரம் மற்றும் வாழ்வாதார அபாயங்களுக்கும் மேலதிகமாக, நீர்த்தேக்கங்கள் பாதகமான சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியன. எடுத்துக்காட்டாக, ஒரு ஆற்றில் அணை கட்டுவது, நீரின் வெப்பநிலை, ஆக்ஸிஜன், உப்புத்தன்மை மற்றும் ஊட்டச்சத்து அளவுகளை மாற்றுகிறது. நீர்வாழ் உயிரினங்கள், பறவைகள் மற்றும் பாலூட்டிகளின் பல்லுயிர்ப் பெருக்கத்திலும் இருப்பிலும் இவை முக்கியமான தாக்கங்களை உண்டு பண்ணுகின்றன. மேலும், நீர்மின்சாரமானது பொதுவாக புதைபடிவ எரிபொருட்களுக்கு உமிழ்வு இல்லாத மாற்றாக வடிவமைக்கப்பட்டிருந்தாலும், நீர்த்தேக்கங்கள் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தின் முக்கிய ஆதாரமாக உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நீர்த்தேக்கங்கள், தாவரங்கள் மற்றும் பிற கரிமப் பொருட்களை நீரில் மூழ்கடித்து, அவை சிதைவடையும் போது காபனீரொக்சைட் மற்றும் மீத்தேன் ஆகியவற்றை காற்றில் வெளியிடுகின்றன. கூடுதலாக, வரவிருக்கும்

தசாப்தங்களில் நீர்மின் அணைகளின் செயற்பாடு மற்றும் பாதுகாப்பை காலநிலை மாற்றம் எவ்வாறு பாதிக்கும் என்பதைக் கருத்தில் கொள்வது மிகவும் முக்கியமானது. வறட்சியானது அணையின் ஆற்றலை உற்பத்தி செய்து குடிநீர் மற்றும் பாசனத்திற்கு நீர் வழங்குவதற்கான திறனை குறைமதிப்பிற்கு உட்படுத்தும். அதிக மழைப்பொழிவு, இதற்கு நேர்மாறாக, அணைகள் நிரம்பி வழியவும் அல்லது உடைந்து திடீர் வெள்ளம் ஏற்படவும் வழிவகுக்கும். இவை பொருளாதார ரீதியில் கீழ்நிலையில் உள்ள சமூகங்களின் வாழ்க்கையை அச்சுறுத்தும்.

நீர்மின்சார மேம்பாட்டின் பரந்த நிலைத்தன்மை மற்றும் சமூக நீதியை உணர, குறைந்த தீங்கு விளைவிக்கும் மற்றும் அதிக உற்பத்தியைச் செய்யக்கூடிய நீர்த்தேக்கத் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பது மட்டுமல்லாமல், இடம்பெயர்ந்த மக்கள் வெற்றிகரமாக மீள்குடியேற்றப்படுவதை உறுதி செய்வதும் முக்கியம். இவ்வகையான நீர்த்தேக்கத் திட்டங்களால் ஏற்படும் இடப்பெயர்வு, சரியாக நிர்வகிக்கப்படாவிட்டால், பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களின் நலனுக்கு கணிசமான அச்சுறுத்தல்களை உருவாக்கம் என்பதே மேல்கொத்மலைத் திட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய அனுபவமாகும். வருமானம் மற்றும் வாழ்வாதாரச் சவால்களுக்கு மேலதிகமாக, அவர்கள் அடிக்கடி உடல் மற்றும் மன ஆரோக்கியத்தின் அடிப்படையில் பாதிக்கப்படுகின்றனர். இதை மேல்கொத்மலைத் திட்டத்தினால் இடம்பெயர்ந்த குடும்பங்களின் அனுபங்களின் வழி மிகச் சிறப்பாக உணர முடியும்.

பெரிய அளவிலான திட்டங்கள், பின்னணியில் அதிகார உறவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அதிகாரத்திற்கு எதிரானதாகவே நில அபகரிப்புக்கெதிரான போராட்டங்களும் சூழலைக் காப்பதற்கான போராட்டங்களும் அமைகின்றன. எனவே பொதுமக்களின் ஆதரவு பெற்ற போராட்டங்கள் அதிகாரத்துக்கு எதிரானவையே. மேலும், இவ்வகையான போராட்டங்கள் என்பது சமூகத்தில் யாரெல்லாம் அங்கம் வகிக்க முடியும், யாரால் முடியாது என்பது பற்றியதும், அபிவிருத்தி பற்றிய வேறுபட்ட மதிப்புகளைக் கொண்டுள்ள குடிமக்களைப் பற்றியதும் கூட. மேல்கொத்மலைத் திட்டத்தினால் இடம்பெயர்க்கப்படவுள்ள மக்கள் பற்றிய அக்கறையற்று இருந்த வடபுலத்து மக்கள் மூன்று ஆண்டுகளில் போரினால் முழுமையாக இடம்பெயர நேர்ந்தது. எனவே பரந்துபட்ட ஒடுக்கப்படும் மக்களின் ஒன்றிணைவும் போராட்டமும் தவிர்க்க முடியாதவை.

நீர்மின் திட்டங்களைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் மோதல்களின் எண்ணிக்கை மற்றும் தீவிரம் புதுப்பிக்கத்தக்க சக்தித் தொழில்நுட்பத்தின் அரசியல் தன்மையைக் குறிக்கிறது. புதுப்பிக்கத்தக்க சக்தியின் தேவை மற்றும் அவசரம் பற்றிய பேச்சுகள் இன்று நீர்மின்சாரத்தின் வேகமான விரிவாக்கத்திற்கு வழிவகுக்கிறது. இந்தக் கதையாடலின் கீழ், சுற்றுச்சூழல் விதிமுறைகள் மற்றும் பாதுகாப்புத் தரநிலைகள் தளர்த்தப்படுகின்ற அதே நேரத்தில் சமூகத் துயரங்கள், சூழலியல் சீர்குலைவு ஆகியன அனுமதிக்கப்படுகின்றன. எவ்வளவு சக்தி (மின்சாரம்), யாரால், எதற்காக, எப்படி உருவாக்கப்பட வேண்டும் என்ற ஜனநாயக விவாதம் இங்கு நடைபெறவே இல்லை.

மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு எதிரான வன்முறையும் அடக்குமுறையும் தனிப்பட்ட எதிர்ப்பாளர்களை மட்டும் குறிவைக்கவில்லை. அதிகாரம் வெளிப்படையான ஆர்ப்பாட்டங்களை (நேரடி வன்முறை) ஒடுக்குவது மட்டுமல்லாமல், வெவ்வேறு வழிகளில் அறிவாற்றல் மிகுந்த கேள்விகள் கேட்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்கிறது. இது தங்களை அம்பலப்படுத்தும் பல்வேறு அரசியல் வங்குரோத்துத்தனத்தைத் தடுப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேல்கொத்மலைத் திட்டத்திற்கு தொடர்ச்சியான மக்கள் எதிர்ப்புகள் இருந்த போதும் இத்திட்டத்திற்கு தொடர்ச்சியான ஆதரவையும் கடனுதவிகளையும் ஜப்பான் ஏன் செய்து வந்தது என்ற வினா விரிவான விவாதத்தை வேண்டுகிறது.

(தொடரும்)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.

நடேசன்
இரவீந்திரன்



இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

# தலித் எழுச்சியில் ஹரிஜனங்கள்

இந்த இயலுடன் இருபதாம் நூற்றாண்டு வரையான தமிழ்ப் பண்பாட்டுச் செல்நெறி நிறைவுக்கு வரும்.

இங்கிருந்தான பயணிப்புக்கான தேடல் குறித்து அடுத்த பகுதிக்குரிய நான்கு இயல்கள் பேசவுள்ளன. இங்கே பேசுபொருளாக உள்ள தலித் - ஹரிஜன் என்பன தமிழகத்துக்கு அப்பாலான விடயங்களாக இருந்த போதிலும் தமிழ்ப் பண்பாட்டில் ஆழத் தடம் பதித்தவை. எந்தவொரு மக்கள் பிரிவினரும் ஏனைய பகுதியினரது தாக்குறவு இல்லாமல் சுயமாக விருத்தி பெற்றதும் இல்லை, அவற்றின் வாயிலாக ஏற்படும் ஊடுருவல்களை நிராகரித்துத் தூய்மை காத்ததுமில்லை.

இன்றைய இலங்கை இதற்கான சிறந்த எடுத்துக்காட்டு. பிரித்தானிய ஏகாதிபத்தியத்தால் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட தேசமாக மட்டுமன்றி விடுதலைக் கொந்தளிப்பில் போர்க்குணத்துடன் இருந்த இந்தியாவைக் கண்காணித்துக் கட்டுக்குள் வைத்திருப்பதற்கான பின்தளம் என்றவகையில் வலுவான உட் கட்டமைப்புடைய நாடாகவும் வடிவமைக்கப்பட்டிருந்த நாடு இலங்கை. ஏகாதிபத்திய எதிர்ப்பில் தீவிர முனைப்புடன் இந்தியா பல முனைப் போராட்டங்களைக் கொந்தளிப்புடன் முன்னெடுத்த போதிலும் அந்தப் போராட்ட அணிகள் ஒவ்வொன்றினுள்ளும் ஊடறுத்த ஏகாதிபத்தியக் கருத்தியலின் வலுமை காரணமாக பூரண விடுதலை வெற்றி கொள்ளப்படுவது சாத்தியப்படாமலாயிற்று. சுதந்திரத்துக்கு தலைமையேற்ற அரை நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவக் குணாம்சத்துடன் இயங்குவதாக அமைந்த தாராளவாத அரைப் பிராமணியத்

தேசியம் இன்றைய இந்துத்துவ மேலாதிக்கத்துக்கு வழிவிட்டுள்ளது. அதன் பேறாக, தொடர்ந்து முன்னேற இயலாமல் தளர்வடையும் உலக ஏகாதிபத்தியத் திணைக்குத் தலைமை தாங்கும் சக்தியாக இந்தியாவை இயக்குவதற்கு ஏற்ற செயலொழுங்குகள் முன்னிலை பெற்றுள்ளன.

விடுதலைத் தேசிய முனைப்பில் இருந்த இந்தியாவுக்கு எதிராகப் பின் தளமாக இலங்கையைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் இப்போது இல்லை. ஏகாதிபத்தியத் திணையின் நம்பிக்கைக்குரிய தளமாக விருத்தி பெறும் இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக இல்லாத இலங்கையை ஏகாதிபத்தியம் நாடி நிற்கிறது. பனிப்போர் நிலவிய எண்பதாம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சமவலுவுடைய போட்டியாளராக இயங்கி வந்தது சோவியத் யூனியன். அதனுடன் ஏகாதிபத்தியத்திணை அரசியல் மோதலில் ஈடுபட்டு இருந்த போது தமிழீழக் கோரிக்கை வலுவுடன் இங்கே செயற்பட்டவாறிருந்தது. பிரிவினையை நியாயப்படுத்தும் கருத்தியலைச் சுயநிர்ணயக் கோரிக்கையுடன் மார்க்சிஸ - லெனினிஸம் முன்னிறுத்திய காரணத்தால் இளைஞர் இயக்கங்களில் இணைந்திருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இடதுசாரி மனப்பாங்கை வளர்த்தெடுத்தனர். சோவியத் யூனியன் - இந்திய ஆதரவு என்பன அப்போது அவர்களிடம் நிலவின.

அன்றைய இலங்கையின் ஐ.தே.க அரசு, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் ஞான பிதாவான ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையில் இயங்கியது. சிங்களப் பேரினவாதத்தை வளர்த்தபடி ஐக்கிய அமெரிக்க ஏகாதிபத்தியச் சார்பை முன்னெடுப்பவராக அவர் இருந்தார். ஈழத் தமிழ்த் தேசிய விடுதலை மனப்பாங்கை மேவியதாக மேட்டுக்குடியினரின் மேலாதிக்கத் தமிழ்த் தேசிய அணியாகிய விடுதலைப் புலிகள் அமைப்பு வன்முறை பிரயோகத்தில் தனித் தலைமையை எண்பதாம் ஆண்டுகளின் பிற்கூறில் கைப்பற்றி இருந்தது. அந்தவகையில் போராடும் இரு பகுதிகளுமே அமெரிக்க அணிக்குரியனவாக ஆகின. அதன்பேறாக, இஸ்ரவேலில் பயிற்சி பெற்ற ஒரே தமிழ் அமைப்பெனும் 'பெருமை' விடுதலைப் புலிகளுக்கு. ஒரு பக்கத்தில் புலி, மறுபக்கத்தில் அதனை முறியடிக்கும் இராணுவம் எனும் அணிகள் தம்மால் எவ்வகையில் பயிற்சி வழங்கி வளர்க்கப்பட்டன என்பதை இஸ்ரவேல் இராணுவத் தலைவர் பின்னர் தனது சுயசரிதை நூல் வாயிலாக வெளிப்படுத்தியும் இருந்தார்.

விடுதலை நாட்டத்துக்கு மாறாக மேலாதிக்க அபிலாசையே மேலோங்கி இருந்த காரணத்தால், அதுவரை இடதுசாரித் தமிழ்த் தேசியச் சக்திகளும் இணைந்து முன்னெடுத்த போராட்டங்களின் பயனாக 1987 இல் கிட்டிய கிழக்கும், வடக்கும் ஒன்றிணைக்கப்பட்ட மாகாண சபையையும் நிராகரித்து 'அடைந்தால் தமிழீழம்' என்ற கானல் நீருக்கு இரையாகிப் போயினர் விடுதலைப் புலிகள். அவர்களாவது ஆயுத பலத்தில் காலூன்றி நின்ற படி தமிழீழத்தை வெற்றி கொள்வோம் என்ற நம்பிக்கையுடன் கிழக்கும் வடக்கும் இணைந்த மாகாண அரசு எனும் வாய்ப்பைக் காலில் போட்டு மிதித்து அழித்தனர். அடித்தளமற்ற புலி வழிபாட்டை முன்னிறுத்தியவாறு மாகாண சபைகளே வேண்டியதில்லை, சமஷ்டியே எமது கோரிக்கை என்பதாக அரசியல் நடாத்தும் இன்றைய வாய்ச் சொல் வீரர்கள் எந்த நம்பிக்கையைக் கொண்டு இயங்குகிறார்கள்?

அரசியல் தீர்க்க தரிசனமற்ற விடுதலைப் புலிகளின் அதிதீவிர கற்பனாவாதச் சக்தியைப் பயன்படுத்தித் தமிழர் தாயக இருப்பு மெல்ல மெல்ல அரித்து இல்லாமலாக்கப்படுவதற்கு முன்னதாக 'வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகம்' என்பது அர்த்தபூர்வமான ஒரு நிதர்சனம். ஒன்றிணைந்த தமிழ் இளைஞர் இயக்கங்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் திம்புப் பேச்சுவார்த்தையில் தமிழர் தாயகக் கோரிக்கையை முன்வைத்த போதிருந்த நிலை புலிகளின் தவறான ஆயுதப் போராட்ட முனைப்பால் முற்றாக அழிக்கப்பட்டு விட்டது; வடக்கு - கிழக்கு மாகாண சபையைக் கூட மீளக் கட்டமைக்க இயலாது எனும் போது

இவர்கள் முன்னிறுத்துகிற சமஷ்டி எப்படிச் சாத்தியமாகும்?

பேராசையின் உந்துதலில் 'தமிழர் தாயகம்' தொலைந்து போக வழிவகுத்ததைப் போலவே, கானல் நீரான சமஷ்டியை முன்னிறுத்தி மாகாண சபை என்ற நிதர்சனத்தையும் அழித்து விடுவதற்கு ஏகாதிபத்தியத் திணை முடிவு செய்து விட்டது. இன்று அதற்கு அமைவான செயலொழுங்குகளையும் இயக்க முறைமைகளையுமே மேலாதிக்கத் தமிழ்த் தேசியர்கள் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள்.

மட்டுமன்றி, இலங்கையின் நான்கு இனத் தேசியங்களினது தலைமைகளுமே மேலாதிக்கத் தரப்பினரால் கைவசப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் மற்றைய இனத் தேசியத்தால் அச்சுறுத்தல் எனக் காட்டியவாறு, ஒன்றிலிருந்து மற்றைய இனத் தேசியம் பிளவுபடுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் தலைமையைக் கையகப்படுத்தியுள்ள நான்கு இனத் தேசியங்களின் மேலாதிக்கச் சக்திகள் ஒரே குறிக்கோளுடன் இயங்குகின்றனர். இலங்கையை ஏகாதிபத்தியப் பிணைப்புக்குள் ஆட்படுத்துவதன் வாயிலாக சோசலிச மாற்றியமைத்தலை நிர்மூலமாக்குகின்றனர். தமிழர் தாயகம் மட்டுமல்ல, இலங்கைத் தேசம் என்பதும் காணாமலாகி ஏகாதிபத்திய அணியின் இராணுவ வல்லாதிக்கச் சக்தியாக இலங்கையின் எதிர்காலம் அமையும் வகையிலான மாற்றத்தைக் கண்டுணர இயலாத வகையில் இனவாத முனைப்பு இங்கே மேலோங்கியுள்ளது!

## காலனிய - முதலாளித்துவ ஜனநாயகம்

ஏகாதிபத்தியச் சுயநிர்ணயம் வடிவப்படுத்தியிருந்த தேசங்களின் இருப்பும் அவற்றிடையே ஏற்படுத்தி வரும் மாற்றங்களும் எவ்வளவு பெரும் வினோதங்கள்? இலங்கையர்கள் மட்டுமே இவ்வாறு ஏகாதிபத்தியச் சூத்திரக்கயிறால் ஆட்டுவிக்கப்படும் பொம்மைகளாக இருக்கவில்லை. உலகளவில் எந்தவொரு நாட்டையும் விட அதிகமாகவே விடுதலை வேட்கைக்கு மிகப்பெரும் அர்ப்பணிப்புகளை நல்கிய இந்தியர்களும் கூட வேடிக்கைப் பொம்மைகளாக ஆடுகிறவர்களானதாலேயே ஏகாதிபத்தியத் திணையின் தலைமைக் கேந்திரமாக இன்று இந்தியா மாறிக்கொண்டிருக்கின்றது.

ஆட்ட நாயகர்களின் பாடு பற்றிப் பார்ப்பதற்கு முன்னதாக ஆட்டுவிக்கும் சக்தியான ஏகாதிபத்தியம் உருப்பெற்ற கதையைத் தெரிந்து கொள்வது அவசியம். ஐரோப்பிய நிலப்பிரபுத்துவம் வணிகத்தை - அறிவியல் தேடல்களை - மானுட ஆற்றல்களை முடக்கியவாறு பிரபுக்களின் நலன்களைப் பேணுவதனை மட்டுமே செயலுருப்படுத்தி வந்தது. அவ்வகையில் நிலப்பிரபுக்கள் பெற்றிருந்த தனியுரிமைகளைத் தகர்த்து ஜனநாயக சுதந்திரம், அறிவியல் நாட்டம், புத்துலகங்களைலப் வெற்றுகொள்ளும் வணிக உரிமை என்பனவற்றை வென்றெடுக்கும் புதிய சமூக சக்தியாக முதலாளித்துவம் பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவில் தோன்றி வளர்ந்து வந்தது. நான்கு நூற்றாண்டுகளாக நிலப்பிரபுத்துவ ஆட்சி முறைக்குள் உழன்ற முதலாளித்துவம் பூரண விருத்தியை எட்டிவிட்ட பின்னரே நிலப்பிரபுத்துவத்தை அடியோடு களைந்தெறியும் தனக்கான அரசை வெற்றிகொள்ள இயலுமாக இருந்தது. அதனை **1789** இல் பிரான்சியப் புரட்சி வாயிலாக அந்தப் புதிய சமூக சக்தி சாதித்திருந்தது. மானுடம் கட்டுண்டு பேதலித்திருந்த இருண்ட யுகம் அங்கே தகர்க்கப்பட்டு, பிறப்பால் எவரும் தனியுரிமை பெற்றவர்களல்ல என்று ஓங்கி முழக்கமிட்டது பிரான்சியப் புரட்சி. அதன் வாயிலாக, அனைவருக்குமான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பனவற்றைப் பிரான்ஸ் உலகின் முன்னால் பிரகடனப்படுத்திக் கொண்டது .

முன்னதாக மூன்று நுற்றாண்டுகளாக 'புதிய கண்டங்கள்' வரையிலும் காலனித்துவ ஆட்சிகளை ஏற்படுத்திய முதலாளித்துவம் தமது சொந்த மண்ணின் முடி மன்னருக்குக் கட்டுப்பட்ட வடிவத்திலேயே அந்தக் காலனிய ஆட்சியை இயக்கி வந்தது. பிரான்சியப் புரட்சியின் சுதந்திர வேட்கை ஏற்படுத்திய வீச்சுக்

காரணமாக குடியேற்ற நாடுகளின் ஆக்கிரமிப்புகளைக் கைவிடுவதாகவும் காலனி நாடுகளுக்கான சுதந்திரத்தையும் பிரான்ஸ் அறிவித்திருந்தது. இந்த 'உசார்மடமை' மிகக்குறுகிய காலத்துக்கு மட்டுமே நீடித்தது. புதிதாகக் கட்டமைக்கப்பட அரசின் கீழ் முதலாளித்துவ அதிகாரம் வலுப்பட்ட போது 'ஒடுக்கப்பட்ட தேசங்கள்' மீண்டும் காலனித்துவ அடிமை விலங்கில் பிணைக்கப்படுவதற்குத் தடை ஏதும் இருக்கவில்லை. பூரண ஜனநாயகத்தை முன் மொழிந்த புரட்சிக் குறிக்கோள் இவ்வாறு குறுகத்தறிக்கப்பட்டது. அங்கே தனக்கான தேசத்தை வடிவப்படுத்திய கையுடன் தனது தேசிய நலனைப் பெருக்க வேண்டுமாயின் காலனி நாடுகளை மேலாதிக்கம் புரிந்து ஒடுக்கப்படும் தேசங்களாக நடாத்தியாக வேண்டிய தேவை முதலாளித்துவத்தை உந்தித்தள்ளியிருந்தது.

மூலதன அபகரிப்பு ஏற்படுத்திய தேசம் பிற தேசங்களை மேலாதிக்கம் புரிந்து மென்மேலும் அபகரிப்பை விரிவாக்க வேண்டிய உந்துதலை வழங்கிய படியே இருந்தமையால் முதலாளித்துவத்துக்கான தேசியம் ஆரம்பம் முதலாகவே ஏற்றத் தாழ்வுடன் இயங்கும் நிர்ப்பந்தத்தைப் பிறப்புரிமையாக வரித்துக் கொண்டிருந்தது.

முன்னதாக, திணை மேலாதிக்கம் விவசாயப் பெருக்கத்தின் பேறாக இருந்து, தொடர்ந்தும் விவசாய விருத்தியைப் பெருக்குவதன் பொருட்டு ஒடுக்கப்பட்ட திணைகளைச் சாதிகளாக ஆக்கி ஆயிரம் ஆண்டுகளின் பின்னர் நிலப்பிரபுத்துவ உச்சத்தைத் தொட்டு இருந்தமையை எமது வரலாறு எடுத்துக் காட்டியிருந்தது. அந்த வரலாறு பற்றிப் பேசி வரும் இந்தத் தொடரின் முதல் பகுதியில் திணை வாழ்வியல் தகர்ந்து உருவாகிய சாதிய ஏறாத்தாழ்வை நிலைநிறுத்துவதன் பொருட்டு அரசுருவாக்கம் புதிய பரிணமிப்பை எட்டி இருந்தது எனப் பேசி வந்துள்ளோம். அவ்வகையில் கட்டமைக்கப்பட்ட சாதிய



அம்பேத்கர்

Image Source - indianexpress.com

வாழ்வியல் இரண்டாம் பகுதியாக அமைந்திருந்தது. இப்போது இறுதி நிலை அடைந்துள்ள மூன்றாம் பகுதியில் ஐரோப்பியச் சிந்தனைத் தாக்கம் ஊடறுத்த வேளை சாதியத் தகர்ப்புக் கருத்தியல்கள் தோற்றம் பெற்று வலுப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூறினையும் இருபதாம் நூற்றாண்டின் முன் அரைப் பகுதியையும் பார்த்து வருகின்றோம்.

சுதந்திரப் போராட்டம் தேசிய விடுதலையைச் சாத்தியப்படுத்திய பின்னர் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை தனக்கான முதன்மைப் பணியாகக் கொண்டியங்கிய அம்பேத்கர் தலைமையில் உருவாக்கப்பட்டஇந்திய அரசியல் யாப்பு 'தீண்டாமை தேசியக் குற்றம்' என வலியுறுத்திச் சாதி பேதம் பாராட்டுவதற்கு எதிரான சட்டங்களை உருவாக்கி இருந்தது. தேசிய விடுதலைக்கான உணர்வுந்தலுடன் மூன்று தசாப்தங்கள் (எழுபதாம் ஆண்டுகள் வரை) சாதியம் தகர்வடையும் போக்கு வளர்வதாயிருந்தது. அந்த வளர்ச்சி முறிவடைந்து, எண்பதாம் ஆண்டுகளில் இருந்து சாதியவாதம் உக்கிரம் பெற்று வந்த நிலையில் இன்று சாதி பேதம் பல தளங்களிலும் தலைவிரித்தாடக் காண்கிறோம். இன்றைய நிலை பற்றி அடுத்த பகுதியில் பேசிக் கொள்ளலாம். இங்கு, சாதியத் தகர்வுக்கான சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட இயக்க முறைமையின் பலம் - பலவீனம் என்பவை குறித்துப் பேசுவது அவசியம்.

அப்போது பல தளங்களில் சாதியத் தகர்ப்புச் செயற்பாடுகள் முனைப்புடன் இயங்கின. அவற்றில் மிகப் பலமான தலைமைச் சக்தியாக அம்பேத்கரின் தலித் அரசியல் முன்னெடுப்பு இருந்தது. சாதிய ஒடுக்குமுறை இன்னமும் தொடர்வதன் பேரில் சாதியத்துக்கு எதிரான இன்றைய போராட்டங்கள் தலித் இயக்கமாகப் பரிமாணம் பெற்றதில் அம்பேத்கரது ஆளுமைப் பலம் வெளிப்படக் காண்போம்!

அதேவேளை, இன்றைய தலித் அரசியல் முன்னெடுப்புகள் எந்த வகையிலும் இந்திய மக்களின் விடுதலைக்கு வழிவகுக்காததுடன் தலித் மக்களுக்கான விமோசனத்தையும் பெற்றுத் தந்து விடவில்லை. மட்டுமன்றி, இந்தியா இன்னும் தீவிரத்துடன் ஏகாதிபத்திய அணித் தலைமைக்கு முன்னேறிச் செல்வதனை உந்தித்தள்ளும் ஊக்க சக்தியையே தலித் அரசியல் (இந்துத்துவத்துக்கு எதிர் நிலையில் இயங்கும் தரப்பு உட்பட) வழங்கி வருகிறது. இத்தகைய தவறான வழித்தடம் இன்றைய தலைமைகளுக்கு மட்டும் உரியதன்று. இவர்கள் பின்பற்றும் அம்பேத்கரியக் கோட்பாடு, அம்பேத்கரின் முன்னுதாரணம் என்பவற்றிலும் இந்தப் பலவீனத்தின் அம்சத்தைக் காண இயலும். மராட்டியரான அம்பேத்கர் சென்ற நூற்றாண்டின் இருபதாம் ஆண்டுகளில் அரசியல் பிரவேசத்துக்கு வரும்போது இந்தியா முழுமையிலும் முதல் நிலைக் கல்வித் தராதரம் பெற்றவராக இருந்தார். சாதிய இழிவுபடுத்தல்கள் பலவற்றினூடாக அவற்றை முறியடித்து முன்னேறிய பின்னரும் சாதியப் புறக்கணிப்புகளைச் சந்தித்தார். அதன் காரணமாக ‘சாதி ஒழிப்பு’ அவருக்கு முன்னுரிமைப் பணியாக்கப்பட்டதில் வியப்பிருக்க இயலாது.

அவரது அரசியல் பிரவேசம் ஏற்பட்ட இருபதாம் ஆண்டுகள் காந்தியின் தலைமையில் இந்திய சுதந்திர போராட்டம் வெகுஜன மயப்பட்டு வீறுகொள்ளத் தொடங்கியிருந்தது. இந்தியா விடுதலை பெற வேண்டுமாயின் ‘சாதி ஒழிப்பு’ முன் நிபந்தனையாக இருக்க வேண்டும் என்ற அவரது நிலைப்பாட்டையும் மீறி சாதிகள் அற்றுப் போவதற்கு முன்னதாக நாடு விடுதலை பெற வேண்டும் என்ற காந்தியின் தலைமையிலான சுதந்திரப் போராட்டத்தில் மிகப் பெரும்பாலான தலித் மக்கள் அணிதிரண்டனர். தங்களை ‘ஹரி (விஷ்னு) ஜனங்கள்’ என அழைத்த காந்தியின் தலைமையை ஏற்றுவிட்ட தலித் மக்களாலும் நிராகரிக்கப்பட்டு, தான் தனிமைப்பட்டதான உணர்வுடன் பௌத்த மதத்துக்கு அம்பேத்கர் மாறியபோது இலட்சக்கனக்கான அவரது மஹர் சாதி மக்களும் **1956** ஆம் ஆண்டு அவருடன் பௌத்தத்தைத்  தழுவினர். ஒட்டுமொத்தமான ஒடுக்கப்பட்ட மக்களின்  விடுதலைக்கு மார்க்சியத்தை அவரால் அப்போது முன்மொழிய இயலவில்லை!

உலகளவிலான ஜனநாயக மீட்சியின் நாயகனாகத் தன்னை வெளிப்படுத்தியவாறு காலனி நீக்கத்துடன் ஓரம் கட்டப்படும் நிலைககு ஆட்பட்ட ஐரோப்பிய வெற்றிடத்தை நிரப்பும் ஏகாதிபத்திய அணிக்குரிய தலைமைச் சக்தியாக ஐக்கிய அமெரிக்கா வந்தவாறு இருந்த காலகட்டம் அது. தாம் முன்னிறுத்தும் விடுதலையின் மாற்று வடிவம் எனப் பௌத்தத்தை அமெரிக்கச் சிந்தனையாளர்கள் முன்னிறுத்திக் கொண்ட சூழலில் தான் அம்பேத்கர் நவ - பௌத்தராகப் பரிணமித்தார். அமெரிக்கா முன்னிறுத்தும் ஜனநாயக விடுதலை அளவுக்கு சோவியத் யூனியன் முன்னிறுத்திய பாட்டாளி வர்க்கச் சர்வாதிகார முன்னெடுப்பிலான சோசலிசத்தை அவரால் ஏற்க இயலவில்லை. அவர் எப்போதுமே பிரான்சியப் புரட்சி முன்னிறுத்திய ‘சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்’ என்பதையே பரப்புரை செய்து வந்தார். ருஷ்ய அக்டோபர் புரட்சியை மட்டுமன்றி மார்க்சியம் சமூக மாற்றத்துக்காக வலியுறுத்தும் மருத்துவச்சிக்கான பணி அளவிலான வன்முறைப் பிரயோகத்தையும் நிராகரித்தார். பிரான்சியப் புரட்சியின் குரலாக இருந்த சமத்துவத்துக்குரிய சோசலிசம் பற்றி அவர் அவ்வப்போது பேசியபோது ‘முதலாளித்துவ ஜனநாயகச் சோசலிசம்’ என்ற வடிவத்தையே கருத்தில் கொண்டிருந்தார். அடிப்படையில் சாதியத்தை வலியுத்திய இந்திய

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான காலனிய முதலாளித்துவ ஜனநாயகம் என்ற எல்லைக்கு உட்பட்டது அம்பேத்கரின் சமத்துவ நாட்டம்!


## நிலப்பிரபுத்துவ முதலாளித்துவம்

இந்திய வாழ்வியல் அவமான வடுக்களையே சுமத்தியபடி உள்ளது எனக் கண்டு நவீன மேலைத்தேச ஜனநாயகச் சிந்தனைகளைத் தொடக்கி வைத்த பிரான்சியப் புரட்சியால் கவரப்பட்ட அம்பேத்கர் அதுவரை எந்த நாட்டையும் காலனித்துவப் படுத்தாத அமெரிக்கா முன்னிறுத்திய சிந்தனைத் தேடல்களில் ஒன்றான பௌத்தத்தை ஏற்றுக் கொண்டார். அன்றைய ஜனநாயக கல்வியியலின் தலைசிறந்த ஆளுமையான ஜோன்டூயிடம் ஐக்கிய அமெரிக்காவில் பயின்றவர் அம்பேத்கர். அதற்காகப் பின்னால் உலகின் முதல் நிலை மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு உரியதாகிவிட்ட இன்றைய ஐக்கிய அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வார் எனக் கருதவேண்டியதில்லை. அன்று பல அம்சங்களில் விடுதலை, ஜனநாயகம் என்பவற்றைப் பேசியபடி அமெரிக்கா முன்னிறுத்திய பௌத்தம் அவரால் வரித்துக் கொள்ளப்பட்டமையானது இந்திய வாழ்வியலின் ஆன்மிகத் தள விடுதலைச் சிந்தனையை பௌத்தம் இரண்டாயிரத்தைநூறு வருடங்களுக்கு முன்னர் இங்கே விதைத்திருந்தது என்பதனாலேயே. இடையிட்டு நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கு வழிபடுத்திய பௌத்த மதத்தை நிராரிக்க வேண்டி இருந்தமையாலேயே தனக்கான பௌத்தத்தை நவ - பௌத்தம் என வடிவப்படுத்தியிருந்தார் அம்பேத்கர்.

**காந்தி தனக்கான ஆன்மிக அரசியலை எமக்கான பழமைச் சிந்தனைகளின் ஊடாகப் பெற்றவரல்ல. பிரதானமான அவரது அகிம்சை நெறி சமணத் துறவிகள் வாயிலாக அவருடன் ஏற்கனவே ஊடாட்டம் பெற்றிருந்த போதிலும் நவீன அரசியல் போராட்டக் கருவியாக அதனை வரிக்கும் தூண்டுதலை டால்ஸ்டாய் வாயிலாகவே அவர் பெற்றிருந்தார். நவீனத்துவத்தை இவ்வகையில் காந்தி ஏற்றுக் கொண்ட போதிலும் ஒட்ட அபகரிக்கும் மூலதன வெறியை நீக்கிய முதலாளித்துவ ஜனநாயகத்தை வேண்டி நின்றார்.**

இந்திய வாழ்வியலில் இடையிட்டு வந்த சாதியத்தை கைவிட்டு இந்து மதம் வேதத்தின் வாயிலாக முன்னிறுத்திய வர்ணாசிரம தர்மத்தைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்திய காந்தியுடன் தொடர்ந்தும் அரசியல் - கருத்துப் போராட்டத்தை நடாத்தி வந்தவர் அம்பேத்கர். இந்து மதம் வலியுறுத்தும் சாதிய வாழ்வியலுக்கான தீண்டாமை எனும் நடைமுறையைக் கட்டிக் காப்பதற்கானதே வர்ணக் கோட்பாடு என்று அவர் அழுத்தி உரைத்தார். அத்தகைய இந்து மதத்தை ஒழிப்பதே சாதியம் நீங்க வழி என்றார். வர்ணக் கோட்பாடு உருப்பெற்று நீண்ட காலத்தின் பின்னரே தீண்டாமைக் கொடுமை மேலெழுந்தது. இடையிட்டு வந்த அதனையும் சாதியத்தையும் கைவிட்ட வர்ணக் கோட்பாட்டுக்குரிய இந்து மதம், சமூக நீதியை வழங்கி நீடித்து நிலவும் எனக் காந்தி வலியுறுத்தினார்.

இந்து மதம் இருக்கும் வரை தீண்டாமை தொடர்ந்து நிலவும் என்ற அம்பேத்கரின் தர்க்கத்துக்கு மாறாக பொது இடங்களில் தீண்டாமை பேணப்படுவதும் சாதிபேதம் பாராட்டுவதும் முற்றாக ஒழிக்கப்பட்ட பின்னரும் இந்து மதம் வலுவுடன் இயங்கிவரக் காண்கின்றோம். இந்த அம்சத்தில் இந்து மதத்தை விட்டு நீங்க வேண்டியதில்லை என்ற காந்தியின் கருத்து வலுவுடையதாக இருந்தது (அவர் உயிருடன் இருந்த வரை அம்பேத்கர் மதம் மாறாமல் இருந்தமைக்கு ‘எந்த மதத்தைக்



காந்தி
Image Source - www.britannica.com

இந்திய வாழ்வியலில் இடையிட்டு வந்த சாதியத்தை கைவிட்டு இந்து மதம் வேதத்தின் வாயிலாக முன்னிறுத்திய வர்ணாசிரம தர்மத்தைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்திய காந்தியுடன் தொடர்ந்தும் அரசியல் – கருத்துப் போராட்டத்தை நடாத்தி வந்தவர் அம்பேத்கர். இந்து மதம் வலியுறுத்தும் சாதிய வாழ்வியலுக்கான தீண்டாமை எனும் நடைமுறையைக் கட்டிக் காப்பதற்கானதே வர்ணக் கோட்பாடு என்று அவர் அழுத்தி உரைத்தார். அத்தகைய இந்து மதத்தை ஒழிப்பதே சாதியம் நீங்க வழி என்றார். வர்ணக் கோட்பாடு உருப்பெற்று நீண்ட காலத்தின் பின்னரே தீண்டாமைக் கொடுமை மேலெழுந்தது. இடையிட்டு வந்த அதனையும் சாதியத்தையும் கைவிட்ட வர்ணக் கோட்பாட்டுக்குரிய இந்து மதம், சமூக நீதியை வழங்கி நீடித்து நிலவும் எனக் காந்தி வலியுறுத்தினார்.

தேர்ந்தெடுப்பது' என்ற தேடுதலில் ஈடுபட்டு இருந்ததே காரணமாகும்). காந்தி வலியுறுத்திய வர்ணக் கோட்பாடு அவர் விரும்பிய சமூக நீதிக்கு எதிரானது என்பதை இன்றைய வாழ்வியல் எடுத்துக்காட்டி வருகிறது. சாதி பேதத்தை வலுவிழக்கச் செய்யும் ஒரு நடைமுறையாகிய இட ஒதுக்கீட்டினை மிக வக்கிரத்துடன் எதிர்ப்பவர்களாக வர்ணப் பிரிவினர் (பிராமணர்கள் மட்டுமன்றி சூத்திரர்களான இடைச் சாதியினரும்) இயங்கி வரக் காண்கின்றோம்.

நிலப்பிரத்துவக் காலப் பண்ணை ஒடுக்குமுறையில் கல்வி - பண்பாட்டு விருத்திக்கு இடமளிக்காதிருந்த தொடர்ச்சியை ஏதோவொரு வடிவத்தில் நீடிக்கவே நால் வர்ணத்தவரும் முற்பட்டு வருகின்றனர். இந்த வர்ண தர்மத்தைக் காக்க வாளேந்தியவர் இராமர். அதன் பொருட்டு இந்துத்துவ வாதிகள் இராமருக்குக் கோயிலெடுத்து மக்களிடையே இராமராச்சியத்தை வலியுறுத்த முற்படுகின்றனர். இதே போன்ற இராமராச்சியத்தையே காந்தியும் வலியுறுத்தினார் எனக் கூறி அம்பேத்கர் - காந்தி இடையிலான கருத்தியல் மோதலை, ஒற்றைப் பரிமாணப்படுத்த முனையும் தவறு இன்று வளர்ந்து பூதாகரமாகி உள்ளது.

காந்தி முன்னிறுத்திய இராமராச்சியம் இந்துத்துத்துவ வாதிகளினதில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. 'ஈவாரும் இல்லை, இரப்பாரும் இல்லை' எனக் கூறும் வகையில் அனைத்து வர்ணப் பிரிவினரும் தத்தம் தொழில்களை ஆற்றிச் சமூக நீதியுடன் வாழ்ந்ததாகக் காட்டப்பட்ட இராமர் ஆட்சித் திறத்தையே காந்தி முன்னுதாரணமாகக் கொண்டிருந்தார்.

தம்மை புனிதராயும் பிறரை எதிரிகளாயும் கட்டமைத்த இந்துத்துவத்துக்கு எதிராக விட்டுக் கொடுக்காத போராட்டத்தைக் காந்தி முன்னெடுத்து வந்தமையாலேயே கோட்சே என்ற இந்துத்துவ வாதியால் கொல்லப்பட்டார் என்பது வலுமையான ஒரு வாழ்வியல் எடுத்துரைப்பு.

காந்தி தனக்கான ஆன்மிக அரசியலை எமக்கான பழமைச் சிந்தனைகளின் ஊடாகப் பெற்றவரல்ல. பிரதானமான அவரது அகிம்சை நெறி சமணத் துறவிகள் வாயிலாக அவருடன் ஏற்கனவே ஊடாட்டம் பெற்றிருந்த போதிலும் நவீன அரசியல் போராட்டக் கருவியாக அதனை வரிக்கும் தூண்டுதலை டால்ஸ்டாய் வாயிலாகவே அவர் பெற்றிருந்தார். நவீனத்துவத்தை இவ்வகையில் காந்தி ஏற்றுக் கொண்ட போதிலும் ஒட்ட அபகரிக்கும் மூலதன வெறியை நீக்கிய முதலாளித்துவ ஜனநாயகத்தை வேண்டி நின்றார். அவ்வாறே, நிலப்பிரபுத்துவம் வளர்த்தெடுத்த சாதி பேதங்களை அவர் நிராகரித்த போதிலும் அதற்கான அடித்தளத்தை வழங்கிய வர்ணக் கோட்பாட்டை அவரால் கைவிட இயலவில்லை. அந்த வகையில், நிலப்பிரபுத்துவ முதலாளித்துவம் எனும் நிலைப்பாட்டுக்கு உரியவர் காந்தி என வரையறுப்பது பொருத்தமானதாக இருக்கும்!

## முதலாளித்துவச் சோசலிசம்

எமக்கான விடுதலைக்காகப் போராடிய மகத்தான ஆளுமைகள் ஒவ்வொருவரும் அர்ப்பணிப்புமிக்க பல தியாகங்களுடன் தம்மை அர்ப்பணித்துப் போராடியவர்களே. இருப்பினும், ஏகாதிபத்தியம் விரித்த எல்லைக்கோடுகளில் இயங்க நிர்ப்பந்திக்கப்பட்ட காரணத்தால் நிலப்பிரபுத்துவத்தை முற்றாகத் தகர்க்க முற்படுபவர் காலனித்துவச் சாய்வுக்கு ஆட்படுவதும், காலனித்துவத்துக்கு எதிராக விட்டுக் கொடுப்பற்ற போராட்டத்தை முன்னெடுப்பவர் நிலப்பிரபுத்துவச் சாய்வுக்கு ஆட்படுவதும் என்ற நியதிகள் நிலவிய காரணத்தால் எமக்கான விடுதலையும் அரைக் கிணறு தாண்டிய கதையாக ஆயிற்று!

சாதியச் சமூகம் ஒன்றில் நவீன முதலாளித்துவம் முன்மொழிந்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதும் கூட காலனிய முதலாளியமாகவோ நிலப்பிரபுத்துவ முதலாளித்துவமாகவோ வடிவம்பெற வேண்டியிருந்தது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று தொடர்ந்தும் சுதந்திர இந்தியாவை சமூக நீதியுடன் வல்லமை பொருந்திய சோசலிச சித்தாந்தத்தில் கட்டியெழுப்ப விரும்பிய ஜவகர்லால்நேரு மேற்படி இருதரப்பு ஆளுமைகளது பங்களிப்புகளையும் கையேற்று வளர்க்க முற்பட்டார். அவரும் கூட முதலாளித்துவ சோசலிசத்தையே நடைமுறைப்படுத்தினாரே அன்றிப் பாட்டாளி வர்க்க நோக்கிலான சமத்துவ சமூகம் நோக்கிய பயணிப்புக்கு எத்தனிக்கவில்லை!

இத்தகைய கலப்பு அரசியல் வடிவக் கையேற்பு எமக்கான திணை அரசியல் இயங்கு முறைக்கான பிரத்தியேகப் பண்பாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் பாட்டாளி வர்க்கம் கட்டியெழுப்புவதன் வாயிலாக மேலெழவுள்ள விஞ்ஞான சோசலிச முறை பற்றிப் பேசிய போது நிலப்பிரபுத்துவ சோசலிசம், சிறுமுதலாளி வர்க்க சோசலிசம் போன்ற கற்பனாவாதங்கள் நிலவியமை பற்றி மார்க்சும் எங்கெல்சும் தமது 'கொம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை' எனும் நூலில் பேசியிருந்தனர். ஆயினும் அவற்றினின்றும் வேறுபட்டது திணை அரசியலில் நிதர்சனமாக இயக்கம் கொண்டிருக்கும் மேற்படியான கலப்புவடிவங்கள்.

அடுத்து வரும் நாலாவது பகுதியாகிய 'சாதிகள் - இனத் தேசியங்கள் - தேசங்கள் இடையே சமத்துவமும் ஒப்பில்லாத பொதுவுடைமைப் புத்துலகும்' என்ற பேசுபொருள் இவற்றுக்கான அடிப்படைகள் குறித்து விவாதிக்கும்!

(தொடரும்)

“யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம்” என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொதுநூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.

**நடராஜா செல்வராஜா**



# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம்:

## ஒரு வரலாற்றுக் குறிப்பு

**பகுதி 1**

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.



யாழ்ப்பாணக் கல்லூரி
Image Source - jaffnacollege.

## இலங்கையின் உயர்கல்வியில் வட்டுக்கோட்டைக் குருமடம்

இலங்கையில் உயர்கல்விக்குரிய வரலாறு மிக நீண்டது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் இயங்கிய கிறிஸ்தவ திருச்சபைகளும், உள்நாட்டு சமய மறுமலர்ச்சி இயக்கங்களும், அரசினால் முன்னெடுக்கப்பட்ட கல்விசார்ந்த நடவடிக்கைகள் பலவும் பொதுக்கல்வியின் தேவையை உணரச் செய்திருந்தன. கிறிஸ்தவ மிஷனரிகள் ஏற்கெனவே தமது சமயப் போதனையுடன் விரிவான கல்வி மேம்பாட்டுக்கான அத்திவாரத்தையும் இட்டுவந்தன.

வட்டுக்கோட்டைக் குருமடம் (Batitcotta Seminary : 1823 - 1850) இலங்கையில் இருந்த கிறிஸ்தவக் கல்வி நிறுவனமாகும். வட்டுக்கோட்டைக் குருமடம் அமெரிக்க இலங்கை மிஷன் அமைப்பால் (American Board of Commissioners for Foreign Missions - ABCFM) யாழ்ப்பாணக் குடாநாட்டில் வட்டுக்கோட்டை என்னும் இடத்தில் ஜூலை 2, 1823 இல் தொடங்கப்பட்டது. 1846 இல் உலகைத் தாக்கிய கொலோரா பெருந்தொற்றுக் காரணமாக இது 1855 ஆம் ஆண்டில் மூடப்பட்டது. பின்னர் 1867 இல் மீண்டும் திறக்கப்பட்டு, 'யாழ்ப்பாணக் கல்லூரி' என பெயர் வழங்கப்பட்டது.

மதப்பிரசாரகரும் மருத்துவருமான ஜான் ஸ்கட்டர் (John Scudder Sr.) அவர்களின் அமைப்புக்குத் துணையமைப்பாக இது முதலில் ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடங்கியவர்களில் டேனியல் பூர் முதன்மையாவர். அவரே இதன் முதல் தலைவராகவும் இருந்தார். அந்நிறுவனமும் அதனோடு இணைந்த மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிரீன் (Samuel Fisk Green : 1822 - 1884) மேற்கொண்ட மருத்துவக் கல்லூரி முயற்சிகளும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் உயர்கல்வி வரலாற்றின் அடித்தளமாயின.

அமெரிக்காவில் இருந்த கிறிஸ்தவர்கள், ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு பத்து டொலர் வீதம் அனுப்ப ஒப்புக்கொண்டு, 200 பேர் வரையில் பணம் அனுப்பினர். அந்த நிதிப் பின்புலத்திலேயே வட்டுக்கோட்டைக் குருமடம் உருவாக்கப்பட்டது. வெவ்வேறு மிஷன் பள்ளிகளில் படித்த 120 மாணவர்களில் சிறந்த 40 பேர் இதில் சேர்க்கப்பட்டார்கள். மாவட்ட நீதிபதி மோயார்ட் (Moyart) என்பவரின் இல்லம் 1500 டொலர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்டு இந்த செமினரி (குருமடம்) தொடங்கப்பட்டது. தொடக்கத்தில் இது அமெரிக்க மிஷன் செமினரி என்று அழைக்கப்பட்டது. பின்னர் ஹென்றி ஹொய்சிங்டன் தலைவராக இருந்தபோது 1846 இல் தான் 'பட்டிக்கோட்டா செமினரி' (வட்டுக்கோட்டைக் குருமடம்) எனப் பெயரிடப்பட்டது. 1823 மார்ச் மாதம் 22 ஆம் தேதி டேனியல் பூர் வட்டுக்கோட்டைக்கு இடம் பெயர்ந்து அங்கே ஆண்களுக்கான பள்ளியை ஆரம்பித்தார். அதை உயர் கல்விக்கான பட்டம் அளிக்கும் ஒரு கல்லூரியாக வளர்த்தெடுக்க டேனியல் பூர் விரும்பினார்.

ஆனால், 1827 இல் அமெரிக்க மிஷனரிகளுக்கு ஆதரவாக இருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர் ரொபர்ட் பிரவுன்டிரிக் பதவி விலகியதும், அவருக்குப் பதிலாக ஆட்சிக்கு வந்த எட்வர்ட் பான்ஸ், அமெரிக்கர்கள் மீது கொண்டிருந்த தனிப்பட்ட விரோத மனப்பான்மையினால், வட்டுக்கோட்டை செமினரி மேலும் விரிவடையலாகாது என்றும், புதிய அமெரிக்க மிஷனரிகள் நாட்டுக்குள் வரக்கூடாது என்றும் தடையுத்தரவு பிறப்பித்தார். வட்டுக்கோட்டை செமினரியை ஓர் உயர்கல்வி நிறுவனமாக ஆக்க டேனியல் பூர் விரும்பி விண்ணப்பித்தபோது, இலண்டன் மிஷன் சார்பில், அப்படி உயர்கல்வி நிறுவனம் அமைக்க எண்ணம் இருப்பதாகவும், அமெரிக்க மிஷனின் சேவை தமக்குத் தேவையில்லை என்றும் அவருக்குப் பதிலளிக்கப்பட்டது. 1827 இல் தென்பகுதியில் கோட்டை என்னுமிடத்தில் சி.எம்.எஸ் சபையினர் ஓர் உயர்கல்வி நிறுவனத்தை தொடங்கினர். அதில் எட்வர்ட் பான்ஸ் கலந்துகொண்டார். ஆங்கில அரசு, 'கல்லூரி' தொடங்க அனுமதி மறுத்ததால் கல்லூரி

என்னும் பெயருக்கு பதிலாக 'செமினரி' என்னும் பெயருடன் இக்கல்வி நிலையம் தொடங்கப்பட்டது.

வட்டுக்கோட்டை குருமடம் ஆசியாவில் உருவாக்கப்பட்ட முதல் கிறிஸ்தவ உயர்கல்வி அமைப்பாகும். இதற்குப் பின்னரே கோட்டையில் சேர்ச் மிஷன் செமினரி 1827 இல் தொடங்கப்பட்டது. 11 ஆண்டுகளுக்குப் பின் வெஸ்லியன் செமினரியும் (பின்னர் மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம் பெற்றது), 18 ஆண்டுகளுக்குப் பின் சுண்டுக்குளி செமினரியும் (இப்போது செயின்ட் ஜோன்ஸ் கல்லூரி) தொடங்கப்பெற்றன. இவை யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட காலத்தில் அளவிலும் செயலிலும் கல்கத்தாவின் கேரி கல்லூரிக்கு (Carey College in Serampore) அடுத்தபடியாக இருந்தது என ஆய்வாளர் கலாநிதி சீலன் கதிர்காமர் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆறுமுக நாவலரின் புலமைச் செயற்பாடுகளும், சேர். பொன் இராமநாதனது கல்வி முயற்சிகளும், சி.வை. தாமோதரம்பிள்ளை, கரோல் விஸ்வநாதபிள்ளை போன்றோரின் கல்வி சார்ந்த முயற்சிகளும் உயர்கல்வியில் தமிழ் மொழியின் இருப்பை நிலைகொள்ளச் செய்யும் ஏற்றங்களை இயக்கின. "தமிழ்ச் சூழலில் இடம்பெற்று வந்த பண்டிதர் புலமை மரபானது தமிழ் மற்றும் சமஸ்கிருதம் சார்ந்த உயர்கல்வி நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து இயக்கிவந்தது" என்று பேராசிரியர் சபா. ஜெயராசா தனது நூலில் குறிப்பிடுகிறார். (ஜெயராஜா, சபா., 'பல்கலைக்கழகக் கல்வியும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளர்ச்சியும்", அல்வாய் : ஜீவநதி வெளியீடு, 2024).

## தென்னிலங்கையில் சமகால உயர்கல்வி முயற்சிகள்

மேலைத்தேச உயர் கல்வித்துறையைப் பின்பற்றி உயர் கல்விக்கான 'கொழும்பு அக்கடமி' என்ற நிறுவனம் 1835 இல் உருவாக்கப்பட்டது. அதுவே பின்னர் 1881 இல் 'கொழும்பு ரோயல் கல்லூரி' ஆக பரிமாணம் பெற்றது. 1870 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை மருத்துவக் கல்லூரியும் இலங்கை சட்டக் கல்லூரியும் இயங்கத் தொடங்கின. இலங்கை கல்வித் திணைக்களத்தினால் 1893 இல் உருவாக்கப்பட்ட அரச தொழில்நுட்பப் பாடசாலை 1906 ஆம் ஆண்டு இலங்கை தொழில்நுட்பக் கல்லூரி என்று பெயர்மாற்றம் பெற்றது.

இலங்கையில் 1939 இல் நிறுவப்பெற்ற கன்னங்கரா சிறப்புக்குழு, அவ்வேளையில் இலங்கைக்கான கல்வி விரிவாக்கல் பணிகளில் ஈடுபட்டது. இலங்கைப் பல்கலைக்கழகம் தொடர்பான 1942 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க

> கல்வித் தரத்தின் மூலம் தமிழர்கள் தமது அடையாளத்தை பாதுகாப்பதற்கும் சமூக மேலுயர்ச்சியை காண்பதற்கும் என 'தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம்' ஆனி 1956 இல் செயலாற்றத் தொடங்கியது.

சட்டவாக்கத்தின் அடிப்படையில் சுயாதீனமான இலங்கைப் பல்கலைக்கழகமானது கொழும்பில், இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியையும், மருத்துவக் கல்லூரியையும் ஒன்றிணைத்து 942 மாணவர்களுடன் உருவாக்கப்பட்டது. 1952 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் பேராதனைக்கு மாற்றப்பட்ட வேளை, பேராதனை - கொழும்பு ஆகிய இரு வளாகங்களைக் கொண்டதாக இலங்கைப் பல்கலைக்கழகம் இயங்கத் தலைப்பட்டது.

1956 இல் தனிச்சிங்களச் சட்டம் அமுலாக்கப்பட்ட வேளை தமது அரசியல் வெற்றிக்கு தோள்கொடுத்து வந்த பௌத்த பிக்குகளை திருப்திப்படுத்தும் நோக்கில் அப்போதைய பிரதம மந்திரியாகவிருந்த S.W.R.D

பண்டாரநாயக்க, வித்தியோதய மற்றும் வித்தியாலங்கார பிரிவினாக்களுக்கு பல்கலைக்கழக அந்தஸ்தைக் கொடுக்கும் வகையிலான சட்டமொன்றினை 1958 இல் நிறைவேற்றினார்.

## தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம்

தனிச்சிங்களச் சட்டத்துடன் 1956 இல் எழுந்த பௌத்த சிங்கள மேலாதிக்க எழுச்சி, தமிழர்களுக்கு எதிரான இன வன்முறையாக மடைமாற்றம் செய்யப்பட்டது. இந்நிலையில் கல்வித் தரத்தின் மூலம் தமிழர்கள் தமது அடையாளத்தை பாதுகாப்பதற்கும் சமூக மேலுயர்ச்சியை காண்பதற்கும் என 'தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம்' ஆனி 1956 இல் செயலாற்றத் தொடங்கியது. தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் செயலாற்றத் தொடங்கிய சமகாலத்தில் 'தேசிய மொழிகளின் மூலம் உயர்தர கல்வி புகட்டுவது' பற்றி ஆராய அரசாங்கம் ஒரு குழுவை நியமித்திருந்தது. அக்குழுவின் முடிவுகளில் ஒன்று தமிழர்களின் உயர்கல்விக்கான தலையெழுத்தை மாற்றிப்போட்டதென்பது இன்று வரலாறாகி விட்டது. இலங்கையில் உயர்தரக் கல்வி வசதிகளை எவ்வாறு கட்டுப்படுத்த வேண்டும் என்றும், அவற்றை யார் யாருக்கெல்லாம் வழங்கவேண்டும் என்றும் அக்குழுவினர் அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தனர். மாணவரின் திறமையை நோக்காது, சனத்தொகையை அடிப்படையாக வைத்தே இலங்கையில் உயர்கல்வி வழங்கப்படுதல் வேண்டுமென்று அக்குழு பரிந்துரைத்திருந்தது. இப்பரிந்துரை மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது.

"மேலும் சமூகங்களின் சிறப்புகளுக்கு ஏற்ப உயர்தரக் கல்வி அளிப்பது உகந்ததாகையால், சிங்களப் பல்கலைக்கழகங்களும் தமிழ்ப் பல்கலைக்கழகங்களும் அமைதல் தேவையாகின்றது. அப்பொழுதுதான் பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒவ்வொரு தமிழ் மாணவனுக்கும் ஆறு சிங்கள மாணவர் பயில்தல் முடியும்".

குழுவினர் இம் முடிவை எட்டுவதற்குப் பின்புலமாக அமைந்திருந்தது சமகாலத்தில் பல்கலைக்கழகக் கல்வி பெற்றுவந்த தமிழ் - சிங்கள மாணவர்களின் விகிதாசாரமாகும். 1954 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்தில் பயில அனுமதிபெற்ற 2434 மாணவர்களில் சிங்கள மாணவர்கள் 1461 பேரும், தமிழ் மாணவர் 872 பேரும், பிற சமூகத்தவர் 101 பேரும் இருந்துள்ளனர்.

இலங்கையின் முன்னோடிக் கல்வியாளரான வித்யாஜோதி ஆ.வி. மயில்வாகனம் (1906-1987) அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அறிவியற் பீடத்தின் தலைவராகப் பணியாற்றியவர். 'இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்' என்ற தலைப்பில் 1957 இல் இவர் சிறு பிரசுரம் ஒன்றினை வெளியிட்டிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டிருந்த முக்கிய வரலாற்றுத் தகவல்களில் சிலவற்றை இங்கு மீள்பதிவாக்க வேண்டியுள்ளது (குறிப்பு: அமரர் ஆ.வி. மயில்வாகனம் தனது நூலை வெளியிட்ட காலகட்டம் 1957 என்பதை வாசகர் கவனத்திற்கொள்ள வேண்டும்).

1. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறுவதற்கு தமிழ் மாணவர் பெரும்பாடு படுகின்றனர். இடம் கிடைப்பது வெகு கடினம். இதனால் உயர் கல்விக்காக இந்தியப் பல்கலைக்கழகங்களை தமிழர்கள் நாடுகின்றனர். இன்று 1500 இற்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் இந்தியாவில் பல்வேறு பல்கலைக்கழகங்களில் படித்துக்கொண்டிருக்கின்றனர். அங்கும் அவர்களுக்கு இடம் கிடைப்பது கடினமாகவுள்ளது. இதனால் பல இலங்கைத் தமிழ் மாணவர்கள் தகுதி இருந்தும் உயர் கல்வியைக் கற்கத் திண்டாடுகின்றனர். இதனால் நமக்கென தமிழ்ப் பல்கலைக்கழகமொன்று தேவையாகின்றது.
2. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற தமிழ் மாணவர்களின் வாழ்க்கை, தமக்குப் புறம்பான பண்பாட்டுச்

சூழலில் ஏதோ வெறுக்கப்பட்டவர்கள் போல, அமைந்துள்ளது. இந்நிலை மாணவர்களுக்கு மட்டுமல்ல, ஆசிரிய வகுப்பையும் பாதித்துள்ளது. நமது சமுதாயத்தின் எதிர்காலத் தலைவர்களாக வரக்கூடிய இளஞ் சந்ததியினர் தமது கல்வியை ஐதீகத்திற்கும் பண்பாட்டிற்கும் ஏற்ற சூழலில் பெறுதல் மிக மிக அவசியம்.

3. அரசாங்கப் பதவிகளில் தமிழரின் திறமை பலியாகின்றது. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் வாழ்க்கைப் போக்கைத் திருத்தியமைக்க உதவுவதுடன், அவர்களது உள்ளத்துக்குப் புத்துயிரூட்டும் ஆற்றல் வாய்ந்த நிலையமாக எமது தமிழ்ப் பல்கலைக்கழகம் அமையவேண்டும். வெகு காலமாக நம்மவர்கள் அரச உத்தியோகங்களை நம்பி வாழ்ந்துவிட்டனர். ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர் எம்மவர்கள் பல்வேறு துறைகளில் சிறப்புற்றிருந்தனர். ஆயர்வேத வைத்தியம், வங்கியமைப்பு, உழவுத்தொழில், வணிகம், கலைப்பணிகள், கப்பலோட்டத் தொழில், கடற் தொழில் முதலிய பல துறைகளில் வெற்றிகரமாக இயங்கினர். இன்று எமது ஆற்றலையும் புத்திக் கூர்மையையும் திறமையையும் முற்றிலும் அரசாங்க சேவையில் செலவுசெய்கிறோம். இப் படுகுழியிலிருந்து எமது சமூகத்தை மீட்கத் தமிழ்ப் பல்கலைக்கழகம் உதவிசெய்ய வேண்டும்.

4. மனித குலத்தை உய்விக்கும் பல அரிய உளப்பண்புகளை எம் முன்னோர் வளர்த்து வந்தனர். பல நூற்றாண்டுகளாக எமது ஒழுக்கத்தை வகுத்துவந்த திருக்குறள், நாலடியார் முதலிய நூல்கள் அவ்வுண்மைகளைக் கொண்டுள்ளன. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள் இவற்றையெல்லாம் கவனியாமல் வாழ்கின்றனர். இன்று எமது இளைஞர்களுக்குத் தேவையான பண்புகள் யாவை? நன்றும் தீதும் கண்டறியும் ஆற்றல், செயலாற்றவல்ல திடசித்தம், மலைபோல வரும் துன்பங்களைக் கண்டஞ்சாமை, ஒழுக்க உயர்வு முதலிய உயர்ந்த பண்புகளை நமது சமூகத்தில் வளர்த்தல் வேண்டும். எதிர்காலத்தில் இந்தப் பண்புகள் எமது இளைஞர்களுக்கு உறுதுணையாக நிற்கவல்லன. வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப அமைந்த ஒரு பல்கலைக்கழகத்திலேயே இத்தகைய பண்புகளைப் பேணி வளர்த்தல் இயலும்.

தனது நூலில், வித்யாஜோதி ஆ.வி. மயில்வாகனம் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் அமைவிடம் வடக்கு அல்லது கிழக்கில் இருக்க வேண்டும் என்கின்றார். அத்துடன் அது பேராதனைப் பல்கலைக்கழகம் போல தனித்தியங்கும் பல்கலைக்கழகமாகவா அல்லது, இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் போல பல உறுப்புக் கல்லூரிகளைக் கொண்ட பல்கலைக்கழகமாகவா அல்லது, இணைக்கப்பெற்ற பல கல்லூரிகளை உள்ளடக்கிய பல்கலைக்கழகமாகவா அமைய வேண்டும் போன்ற கேள்விகளை எழுப்புகிறார்.

அதற்கான தீர்வாக, "சில கல்லூரிகளை உள்ளடக்கிய பல்கலைக்கழகமே எமக்கேற்றது. இவ்வுறுப்புக் கல்லூரிகள், யாழ்ப்பாணம், வவுனியா, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமையப் பெறுதல் வேண்டும். பொறியியற் கல்லூரி திருக்கோணமலையிலும், விவசாயம் - மிருக வைத்தியம் பயிற்றும் கல்லூரி வவுனியாவிலும், கலைப்பகுதி - பொது விஞ்ஞானத்துறை பயிற்றும் கல்லூரி மட்டக்களப்புப் பகுதியிலுள்ள வந்தாறுமூலையிலும், தமிழ்ப் பிரதேசத்தின் மிகப்பெரிய வைத்தியசாலையை யாழ்ப்பாணம் பெற்றுள்ளதால் வைத்தியக் கல்லூரியை யாழ்ப்பாணத்திலும் அமைத்தல் நலமெனத் தோன்றுகிறது" என்ற தனது கருத்தை முன்வைக்கின்றார்.

மேலும் பல்கலைக்கழகத்தை அமைப்பதற்காக தேவைப்படும் பெருநிதியை தமிழ்ச் சமூகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளும் முயற்சிகள், அரசாங்கம் இம்முயற்சிக்கு ஏதும்



கொழும்பு ரோயல் கல்லூரி

Image Source - www.ft.lk

வகையில் தடைவிதித்தால் அடுத்த கட்ட நடவடிக்கை, தமிழ்ப் பல்கலைக்கழகப் பட்டங்களை இலங்கை அரசு அங்கீகரிக்காவிட்டால் என்ன செய்வது, பல்கலைக்கழகத்தின் முக்கிய இலட்சியம், தமிழர் வரலாற்று நூல் ஒன்றின் தேவைக்கு முன்னுரிமை வழங்கல், பல்கலைக்கழகத்தின் போதனாமொழி என்ன? போன்ற இன்னோரன்ன விடயங்களையும் தனது நூலில் இவர் விபரித்துச் செல்கின்றார். (மயில்வாகனம், ஆ.வி., 'இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்', கொழும்பு 10: வீரகேசரி பிரஸ், 1957).

தமிழ் பல்கலைக்கழக இயக்கம் தொடங்கப்பட்டு அது திருக்கோணமலையிலேயே அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனாலும் அன்றைய அரசியல் சூழ்நிலைகள் காரணமாக தமிழ் பல்கலைக்கழகம் அமையாமலேயே இழுபட்டு முடிந்து போன கதையானது. தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் அரசியற் பின்புல வரலாறு பற்றி பி. இரயாகரன் (தமிழரங்கம் 3.3.2001) தனது இணையத்தளத்தில் விரிவான பதிவொன்றை எழுதியுள்ளார். அவர் குறிப்பிட்ட சில கருத்துகளை சுருக்கமாகக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

"தமிழ்ப் பல்கலைக்கழகம் இயங்குவதற்கு அரசு ஆதரவு வேண்டும், எனவே தமிழரின் ஆட்சியதிகாரமான 'சுயாட்சிக்காக' தமிழர் வாக்குப் போட வேண்டும் என்றனர். சுயாட்சிக் கோரிக்கையை இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ் பல்கலைக்கழகம் மூலமும், மக்கள் மத்தியில் கொண்டு சென்றது. தமிழ் பல்கலைக்கழகம் என்பதை இனவாதக் கோரிக்கையாகவும், தங்கள் இனவாதத் தேர்தல் அரசியலில் தமிழ் மொழி வாக்குகளைப் பெறும் குறுகிய இனவாத அரசியலுக்காகவுமே முன்வைத்தனர். 1950 இல் இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழ்ப் பல்கலைக்கழகத்தை உணர்ச்சிகரமான இன அரசியலுக்காக முன்னிறுத்தியது. இப்படி இலங்கைத் தமிழரசுக் கட்சி தேர்தலில் வெற்றி பெறுவதற்கு தமிழை முன்னிறுத்திய போது, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தனக்கான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள, 1959 இல் 'இந்துப் பல்கலைக்கழகத்தை' முன்னிறுத்தத்

தொடங்கியது. இவ்விரு கட்சிகளினதும் அரசியல் முரண்பாடானது, 1972 வரை கூர்மையடைந்தே வந்தது.”

1950 களில் கருவாகி வளர்ந்த தமிழ் இனவாதம் முன்வைத்த தமிழ்ப் பல்கலைக்கழகம், 1956 இல் சிங்கள ஆட்சிமொழிச் சட்டத்துடன் அரசியல் ரீதியாக வீரியம் பெற்றது. தொடர்ச்சியாக தமிழினவாதப் பிரச்சாரத்தை முன்னெடுக்க, தமிழ்ப் பல்கலைக்கழக கோசத்தை முடுக்கிவிட்டது. 17.03.1957 இல் சுதந்திரன் பத்திரிகை, ‘இஸ்லாமிய இலக்கிய நூல்கள் பெருமை பெற தமிழ்ப் பல்கலைக்கழகம் அவசியம்’ என்ற தலைப்பில் ‘தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்படுமாயின் சிறப்புமிக்க இஸ்லாமிய நூல்கள் பன்மடங்கு மதிப்பைப் பெறும்’ எனப் பொருள்படும் கட்டுரையைப் பிரசுரித்து, முஸ்லிம் மக்களை இனரீதியாக – மதரீதியாக தமிழினவாதம் மூலம், தன்னுடன் அடையாளப்படுத்தி வாக்குகளைப் பெற முனைந்தது.

1960 களில் இனரீதியான தமிழ்ப் பல்கலைக்கழகத்தை திருக்கோணமலையில் கட்டத் தொடங்கினர். தமிழினத்தின் பெயரில் நிதியைத் திரட்டினர். இப்படிக் கட்டத் தொடங்கிய தமிழ் பல்கலைக்கழகம், வரலாறு கடந்து காணாமல் போயிருக்கின்றது. 10.06.1962 திகதியிடப்பட்ட சுதந்திரனில் ‘தமிழ்ப் பல்கலைக்கழகம்’ என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தியொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது.

“திருமலைப் பிரதேசத்தில், உப்புவெளியில் 70 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, கட்டிட அலுவல்கள் தொடக்க ஆயத்தங்கள் நடைபெற்று வருகின்றது. திருமலைப் பட்டின எல்லைக்குள் 5.5 ஏக்கர் நிலமும் வாங்கப்பட்டுள்ளது. விவசாயக் கல்லூரியின் ஒரு பகுதிக்கான கட்டிடம் முடிவடைந்த நிலையில் உள்ளது.”

இதே நிலையில் 1959 ஏப்ரலில் திருமலையில் துறைமுக வீதியில் தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க காணியொன்று வாங்கப்பட்டதாகவும் குறிப்புகள் காணப்படுகின்றன. 1959 மே





Image Source - noolaham.net

மாதத்தில் தங்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைக்க, தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தினர், பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம் அவர்களின் தலைமையில் திருக்கோணமலையில் அடிக்கல் நாட்டினர். கட்டிட நிதிக்கு நிதிச் சேகரிப்பும் தொடங்கப்பட்டது. அதே வேளை 1959 ஜூலையில் கல்வி மந்திரியைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் ஒரு வைத்தியக் கல்லூரி நிறுவும்படியும் அவர்கள் வேண்டியிருந்தனர்.

இரயாகரன் தனது கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில், “இன – மத அடிப்படையில் 1950 களில் பல்கலைக்கழகத்தை கோரிய அரசியல்வாதிகள் 1960 களில் தாம் கட்டத் தொடங்கிய தமிழ் பல்கலைக்கழகத்துடன், தங்கள் இனவாத கோஷத்தை முன்வைக்க முடியாது கைவிட்டனர் என்கிறார். 1965 இல் அரசுடன் இணைந்து ஆட்சியமைத்த காலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் போது, மீளவும்

தமிழ்ப் பல்கலைக்கழகக் கோரிக்கையை முன்வைத்தனர். இதன் மூலம் அரசுடன் முரண்பட்டு வெளியேறும் அரசியல் நாடகத்தை தொடங்கிய போது, 1960 இல் கட்டி, பின்னர் காணாமற் போன 'தமிழ் பல்கலைக்கழகம்' குறித்து இவர்கள் மூச்சே விடவில்லை. தமிழ்ப் பல்கலைக்கழகம் குறித்து தங்கள் கடந்தகாலம் எதையும் கேள்விக்கு உள்ளாக்கவில்லை. இலங்கை தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகம் 1947 முதல் வெளியிட்டு வந்த சுதந்திரனே, தமிழ் இனவாதத்தையும் - தமிழரசுக்கட்சி அரசியலையும் பிரச்சாரம் செய்து வந்தது. இப் பத்திரிகையிலிருந்து, இவர்கள் உருவாக்கிய இனவாத தமிழ்ப் பல்கலைக்கழகக் குறிப்புகளையும் - ஆதாரங்களையும் பெருமளவில் பெற முடிகின்றது".

மற்றுமொரு சுதந்திரன் (09.10.1960) இதழில் 'தமிழ்ப் பல்கலைக்கழகம் நமது காலத்தில் நிச்சயம் வந்தே தீரும்' என்ற தலையங்கத்தின் கீழ், காணாமற் போன தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று இருந்ததற்கான பல தரவுகள் பட்டியலிடப்பட்டுள்ளது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தைத் தொடர்ந்து முன்னெடுக்கவென புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பேராசிரியர் சின்னத்தம்பி, தனக்கு முன்பாக பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம் முன்னெடுத்த முயற்சிகள் குறித்த தகவல்களைப் பட்டியலிட்டுள்ளார்.

இதன் சாரம், "1956 யூன் 6 இல் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு, இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வேண்டும் என்ற கோரிக்கைகளை இல்லாதாக்கினர். திருக்கோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தைத் தோற்றுவித்து, அது பற்றிய பிரச்சாரம் தமிழ் பேசும் மக்கள் வாழ் பிரதேசங்கள் எங்கும் பரப்பப்பட்டு, அதனை அமைக்க பிரதேச குழுக்கள் உருவாக்கப்பட்டன." என்பதாகும். இதே நாளில் தான் (6.6.1956) இலங்கையின் ஆட்சிமொழியாக சிங்களம் அறிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 11.10.1956 இல் தாங்கள் அமைக்கும் தமிழ் பல்கலைக்கழகத்திற்கு அரசாங்க உதவியைப் பெறும் முகமாக, பிரதமரைச் சந்திக்க முடிவு செய்து, 14.01.1957 அன்று, அன்றைய பிரதமர் S.W.R.D பண்டாரநாயக்கவைச் சந்தித்தது. தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றை, இன அடிப்படையில் அமைப்பதற்கு மறுப்பு தெரிவித்த பண்டாரநாயக்க, இனவாதம் அல்லாத பல்கலைக்கழகத்தில் கலாச்சார, மத, மொழி பட்டப்படிப்பிற்கான முயற்சிகளுக்கு ஆதரவு தரமுடியும் என்றார். தமது முயற்சிக்கு ஆதரவு பெறும் வண்ணம் மீண்டும் 18.10.1957 இல் பிரதமரைச் சந்தித்தனர். இதையடுத்து பிரதமர் பண்டாரநாயக்கா ஆணைக்குழு ஒன்றை அமைப்பதாக அறிவித்தார். அதன்படி கவர்னர் ஜெனரல் சேர். ஒலிவர் குணதிலக்கா அவர்கள் பெப்ரவரி 1958 இல் கலாநிதி ஜோசப் நீட்ஹாம் அவர்களது தலைமையில் ஆணைக்குழு (Needham Commission) ஒன்றை நியமித்தார். மார்ச் 1958 இல் இவ்வாணைக்குழு தனது விசாரணையைத் தொடங்கியது. 'Colombo Telegraph' பத்திரிகையில் (28.7.2013) எஸ். ரட்ணஜீவன் எச்.ஹூல் அவர்களும் 'Needham Commission' அறிக்கை பற்றி விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இப்படி தமிழ் அரசியல்வாதிகள் திருகோணமலையில் (கிழக்கில்) தமிழ் மக்களிடம் தமக்கு ஆதரவைத் திரட்டிக்கொள்ளும் நோக்கில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அமைக்கும் முன்னோடி நடவடிக்கைகளைத் தொடங்கினர். மறுபக்கத்தில் யாழ்ப்பாணத்தவரைத் திருப்தி செய்ய, யாழ்ப்பாணத்தில் மருத்துவப் பல்கலைக்கழகத்தைக் கோரினர். தமிழ் காங்கிரஸ் இதற்குப் போட்டியாக, 1959 நவம்பரில், இனரீதியான தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குப் பதில் இந்துப் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாணத்தில் அமைக்கக் கோரினர். தத்தமது வாக்கு வங்கியை பலப்படுத்திக் கொள்வதிலேயே அரசியல்வாதிகள் குறியாக இருந்தனர்.

30.11.1959 அன்று மக்களை இனரீதியாகத் திரட்ட திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று கோரி பிரமுகர்களிடம் கையெழுத்து பெறும் நடவடிக்கையை நாவலர் கழகம் தொடங்கியது. 1959 டிசம்பரில் அரசு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
Image Source - www.jfn.ac.lk

அமைத்த பல்கலைக்கழக நீட்ஹாம் ஆணைக்குழு அறிக்கை வெளியாகியது. சமகாலத்தில், தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைக்க அடிக்கல் நாட்டப்பெற்று 40 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டும் இருந்தது. இன்னும் 40 ஏக்கர் வாங்கப்பட உள்ளதாக நவம்பர் 1960 இல் அறிவித்தவர்கள், பல்கலைக்கழகத்தை கட்டியெழுப்புவதற்கான பணத்தைத் திரட்டும் சீட்டுகளை அச்சிட்டு, 10 இலட்சம் ரூபா இலக்கை நிர்ணயித்து, அதற்கான நிதியைத் திரட்டத் தொடங்கினர்.

‘தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம்’ தனக்கென்றொரு நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருந்தது. இலங்கை அரசாங்க சபையின் (State Council) முன்னாள் சபாநாயகர் சேர். வைத்திலிங்கம் துரைசாமி அவ்வியக்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், சட்டக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு சீ.சீ.ஏ. பிறிட்டோ முத்துநாயகம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் உடற்கூறியல் பேராசிரியர் பி.கே. சண்முகம், முன்னாள் சொலிசிட்டர் ஜெனரல் திரு ஆர்.ஆர். குரொசெட் தம்பையா, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறைப் பேராசிரியர் சீ.ஜே. எலியசர், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, குருநாகலை மாவட்ட நீதிபதி திரு எம்.எம்.ஐ. காரியப்பர், தெனனிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயர் சபாபதி குலேந்திரன், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பௌதிகவியல் பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம், இலங்கைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவத்துறைப் பேராசிரியர் ஏ. சின்னத்தம்பி, யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி பி. சிறீஸ்கந்தராஜா, முன்னாள் மாகாண சத்திரசிகிச்சை நிபுணர் மருத்துவக் கலாநிதி எஸ். சுப்பிரமணியம், வண.பிதா. தனிநாயகம், பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திரு எம். திருச்செல்வம், சட்டத்தரணி ஜெ. தியாகராஜா, திரு எஸ்.பி. வைத்திலிங்கம் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும் தெரிவு

செய்யப்பட்டிருந்தனர்.
பொதுச் செயலாளராக சட்டத்தரணி ரி. இராஜதுரையும், உதவிச் செயலாளராக திருவாளர்கள் ஆர். இராஜரட்ணம், எம். இராமசாமி ஆகியோரும், பொருளாளராக இலங்கை வங்கி முகாமையாளர் ரி.எஸ். முத்துலிங்கசாமியும், உதவிப் பொருளாளராக திருவாளர்கள் ஈ.எஸ். தேவசகாயம், பொறியாளர் சீ. கந்தசாமி ஆகியோரும், கணக்காய்வாளராக திரு கே. சச்சிதானந்தாவும் பணியாற்றியுள்ளனர்.

இவர்களுடன் கலாநிதி சு. வித்தியானந்தன், சேர். கந்தையா வைத்தியநாதன், மீன்பிடித்துறை இயக்குநர் கலாநிதி சி. அமிர்தலிங்கம், புரக்டர் சி. ஐயாத்துரை, திரு எஸ். ஆறுமுகம், கலாநிதி வி. அப்பாபிள்ளை, சட்டத்தரணி திரு சி.எஸ். பார் குமாரகுலசிங்கம், மாவட்ட நீதிபதி வீ. மாணிக்கவாசகர், திரு என். மாணிக்க இடைக்காடர் உள்ளிட்ட 38 பேர் பொதுச்சபை உறுப்பினராகவும் இருந்துள்ளனர்.

1950 களில் கருவாகி வளர்ந்த தமிழ் இனவாதம் முன்வைத்த தமிழ்ப் பல்கலைக்கழகம், 1956 இல் சிங்கள ஆட்சிமொழிச் சட்டத்துடன் அரசியல் ரீதியாக வீரியம் பெற்றது. தொடர்ச்சியாக தமிழினவாதப் பிரச்சாரத்தை முன்னெடுக்க, தமிழ்ப் பல்கலைக்கழக கோசத்தை முடுக்கிவிட்டது. 17.03.1957 இல் சுதந்திரன் பத்திரிகை, ‘இஸ்லாமிய இலக்கிய நூல்கள் பெருமை பெற தமிழ்ப் பல்கலைக்கழகம் அவசியம்’ என்ற தலைப்பில் ‘தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப்படுமாயின் சிறப்புமிக்க இஸ்லாமிய நூல்கள் பன்மடங்கு மதிப்பைப் பெறும்’ எனப் பொருள்படும் கட்டுரையைப் பிரசுரித்து, முஸ்லிம் மக்களை இனரீதியாக – மதரீதியாக தமிழினவாதம் மூலம், தன்னுடன் அடையாளப்படுத்தி வாக்குகளைப் பெற முனைந்தது.

## கன்னாங்கரா சிறப்புக் குழு

இந்நிலையில் இலங்கையில் 1939 இல் நிறுவப்பெற்ற கன்னங்கரா சிறப்புக்குழு, கல்வி விரிவாக்கல் பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டது. இது தொடர்பாக பேராசிரியர் சபா ஜெயராசா ‘பல்கலைக்கழகக் கல்வியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளர்ச்சியும்’ என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“கன்னங்கராவின் கல்விச் சீர்திருத்தங்களைத் தொடர்ந்து தாய்மொழிக் கல்வி படிப்படியாக முன்னேற்றம் பெறத் தொடங்கி, பல்கலைக்கழகத்தை அடைந்தது. தாய்மொழிக் கல்வியால் சமூகத்தின் விளிம்பு நிலையினரும் உயர்கல்வியை நோக்கி நகரலாயினர். 1960 ஆம் ஆண்டைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவரின் எண்ணிக்கையில் திடீர்ப் பெருக்கம் நிகழலாயிற்று.

யாழ்ப்பாணத்தில் உயர்தர விஞ்ஞான வகுப்புகள் உரிய முறையிலே கட்டமைப்புச் செய்யப்பட்டிருந்தமையாலும், சிறந்த ஆசிரிய அணியினர் இயங்கிக் கொண்டிருந்தமையாலும் பொறியியல், மருத்துவம் போன்ற துறைகளில் பல்கலைக்கழக அனுமதியை அதிகமான தமிழ் மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதற்கெதிராகவே ‘தரப்படுத்தல்’ என்ற பொறிமுறையை இலங்கை அரசாங்கம் அறிமுகப்படுத்தியது.

இதேவேளை தாய்மொழிக் கல்வியின் விரிவாக்கமும் எழுச்சியும், பல்கலைக்கழக நுழைவை வேண்டுவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்தவேளை, 1978 ஆம் ஆண்டு ‘பல்கலைக்கழகச் சட்டம்’ அந்த அதிகரிப்பை உள்வாங்கும் ஏற்பாடாக உருவாக்கப்பட்டது.

இலங்கைப் பல்கலைக்கழக அமைப்பில் கொழும்பு, பேராதனை, மொரட்டுவை, யாழ்ப்பாண வளாகங்கள் நிறுவப்பட்டிருந்தன. 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தன்னாதிக்கமுள்ள ஒரு பல்கலைக்கழகமான அங்கீகாரத்தைப் பெற்றது.”

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தைப் பற்றியும் அதன் நூலகத்தின் கட்டமைப்புப் பற்றியும் அடுத்த இதழில் ஆராய்வோம்.

(தொடரும்)

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன்



இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.

# லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் வலிகாமம் – வண்ணார்பண்ணை

சென்ற கட்டுரையில் லெயுசிக்காமின் வலிகாமப் பிரிவின் நிலப்படம் காட்டும் யாழ்ப்பாண நகரப் பகுதி பற்றிய தகவல்களைப் பார்த்தோம். இந்தக் கட்டுரையில் நகரப் பகுதிக்கு அண்மையில் உள்ள வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றுப் பிரிவைப் பற்றி மேற்படி நிலப்படம் தரும் தகவல்களைப் பற்றியும் அவற்றின் வரலாற்றுத் தொடர்புகளைப் பற்றியும் ஆராயலாம். வலிகாமத்திலுள்ள கோவிற்பற்றுகளுள் துணைப் பிரிவுகளாகப் பிரிக்கப்படாத ஒரே கோவிற்பற்று வண்ணார்பண்ணையே.

## எல்லைகள்

வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றின் தெற்கில் கடலேரியும் யாழ்ப்பாண நகரப் பகுதியும் எல்லைகளாக அமைந்துள்ளன. மேற்கு எல்லையில் மானிப்பாய்க் கோவிற்பற்றின் ஆனைக்கோட்டை உள்ளது. வடக்கில் நல்லூர்க் கோவிற்பற்றின் துணைப் பிரிவுகளான கொக்குவில், தின்னவேலி என்பனவும் கிழக்கு எல்லையில் நல்லூரும் சுண்டிக்குழிக் கோவிற்பற்றின் கரையூரும் உள்ளன. (படம்1) மேற்படி எல்லைகள் பெருமளவுக்குத் தற்கால எல்லைகளுடன் பொருந்திவருவதைக் காணமுடிகிறது. ஒல்லாந்தர் காலத்தில் வண்ணார்பண்ணையின் மேற்கு எல்லைப் பகுதியில் தற்காலத்தில் சில விரிவாக்கங்கள் ஏற்பட்டிருப்பது தெரிகிறது. இது அந்த எல்லைப் பகுதியில் இருந்த சில குடியிருப்புகள் எல்லை




**போல்தேயசின் நூலில் உள்ளபடி ஒல்லாந்தர் காலத்து வண்ணார்பண்ணைத் தேவாலயம்**

தாண்டி விரிவடைந்ததால் ஏற்பட்டது. கிழக்கு எல்லையின் வடக்குப் பகுதி தற்காலக் கோவில் வீதி வரை பரந்திருப்பதைக் காணமுடிகிறது.


## குடியிருப்புகள்

இந்த நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் மேற்குறித்த எல்லைகளுக்குள் பல குடியிருப்புகள் இருந்ததற்குச் சான்றுகள் உள்ளன. மேற்கு எல்லையை அண்டிக் கடலேரிக் கரையோரமாக நாவாந்துறை இருந்தது. இது கடல்வழிப் பயண வசதிகளை வழங்குபவர்களும் மீன்பிடிப்பவர்களும் வாழ்ந்த ஒரு குடியிருப்பு. இதற்குத் தென்கிழக்குத் திசையில் சற்றுத் தொலைவில் முஸ்லிம்களின் குடியிருப்பு ஒன்று இருந்தது. 1614 ஆம் ஆண்டளவில் இன்று கோட்டை இருக்கும் பகுதியில் குடியிருந்த முஸ்லிம் வணிகர்கள் போர்த்துக்கேயப் பாதிரியாரின் தேவைக்காக இடம்பெயர்க்கப்பட்டனர். அவர்கள் புதிதாகக் குடியேறிய இடமே இது.[1] வடக்கு எல்லையை அண்டி இக்கோவிற்பற்றுக்கு வண்ணார்பண்ணை என்ற பெயர் வரக் காரணமான வண்ணார்பண்ணைக் கிராமம் இருந்தது. இவற்றைத் தவிரத் தெற்கெல்லையை அண்டி, வடக்கு நோக்கிச் செல்லும் வீதியோரமாக ஒரு குடியிருப்பு இருந்துள்ளது. இது பெரும்பாலும் தென்னிந்திய வணிகப் பிரிவினரின் குடியிருப்பாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. இவற்றுடன் மேலும் சில குடியிருப்புகள் இருந்திருக்கக்கூடும். ஆனால், இவற்றைப்பற்றி எவ்வித தகவல்களும் நிலப்படத்தில் இல்லை. தெரிந்த குடியிருப்புகளையும் நிலப்படத்தில் பெயர் குறித்துக் காட்டவில்லை. உண்மையில் எல்லா ஊர்களையும் குடியிருப்புகளையும் குறித்துக் காட்டுவது நிலப்படத்தின் நோக்கமாக இருக்கவில்லை என்றே தோன்றுகிறது.

## வீதிகள்

வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றை ஊடறுத்து ஏனைய பகுதிகளுக்குச் செல்லுகின்ற நான்கு வீதிகளை நிலப்படம் காட்டுகிறது. இவ்வீதிகள் அனைத்தும் யாழ்ப்பாண நகரத்துக்கும் வண்ணார்பண்ணைக்கும் இடையிலான

எல்லையில் அல்லது வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றில் தொடங்குகின்றன. (படம்2) கோட்டைக்கு வடக்கில், வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றின் தெற்கெல்லைக்கு அருகில் உள்ள ஒரு புள்ளியில் தொடங்கும் ஒரு வீதி வடக்கு நோக்கிச் செல்கிறது. இது இன்றைய காங்கேசந்துறை வீதித் தடத்தில் அமைந்துள்ளது. இதன் தொடக்கப் புள்ளியிலிருந்து வடக்கே சற்றுத் தொலைவில் இவ்வீதியிலிருந்து இன்னொரு வீதி தொடங்குகிறது. தென்மேற்குத் திசையில் செல்லும் இவ்வீதி தற்காலத்து மானிப்பாய் வீதியாகும். இவ்வீதி வழியே அது தொடங்குமிடத்திலிருந்து சற்றுத் தொலைவில் இன்னொரு வீதி தொடங்குகிறது. இவ்விடம் இன்றைய ஓட்டுமடம் சந்தி. இங்கிருந்து தொடங்கும் வீதி மேற்கு நோக்கிக் கடலேரிக் கரைவரை சென்று அங்கிருந்து வடமேற்குத் திசையில் செல்கிறது. இது தற்காலத்துக் காரைநகர் வீதியின் பகுதியாகும்.



லெயுசிக்காமின் வலிகாமத்திக் காட்டும் நிலப்படத்திலிருந்து பிரித்தெடுத்த வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றுப் பகுதி

Image Source - Nationaal Archief, Nederland

வலிகாமப் பிரிவில் உள்ள இன்னொரு முக்கிய வீதி நகரத்திலிருந்து பருத்தித்துறையை நோக்கிச் செல்லும் வீதி. இதன் பெரும்பகுதி இன்றைய பருத்தித்துறை வீதித் தடத்திலேயே இருந்தபோதும், யாழ்ப்பாண நகரத்துக்கு அண்மையில் இது சற்று வேறுபட்டுக் காணப்படுகிறது. முதலாம் குறுக்குத் தெருவின் வடக்கு நோக்கிய நீட்சியே இன்றைய பருத்தித்துறை வீதியின் தொடக்கமாக அமைகிறது. இந்நீட்சி பிற்காலத்தது. 19 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியரால் அமைக்கப்பட்டது. லெயுசிக்காம் நிலப்படத்தில் உள்ள இவ்வீதியின் தொடக்கப்பகுதி இன்றைய மணிக்கூட்டுக் கோபுர வீதியின் ஒரு பகுதியாகும். இது இந்த நிலப்படத்தில் தெளிவாக இல்லாவிட்டாலும் கூடுதல் விவரங்களைத் தரும் வேறு சில நிலப்படங்களில் இது தெளிவாகத் தெரிகிறது. இனிவரும் கட்டுரையொன்றில் இந்நிலப்படங்களை விளக்கும்போது இதுபற்றி விவரமாகப் பார்க்கலாம். இந்த மணிக்கூட்டுக் கோபுர வீதிப் பகுதியைக் கடந்த பின்னர் நிலப்படம் காட்டும் இவ்வீதிக்கும் தற்கால வீதிக்கும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இல்லை.

இந்த நிலப்படம் நகரத்திலிருந்து குடாநாட்டின் பிற பகுதிகளுக்குச் செல்லும் ஆரைவழி வீதிகளையே காட்டுகிறது. மேலே விளக்கப்பட்ட வீதிகள் இத்தகையவை. ஆனால், அக்காலத்தில் மேற்படி வீதிகளைக் குறுக்காக வெட்டிச் செல்லும் வீதிகள் சிலவும் இருந்துள்ளன. குறிப்பாக இன்று நாவலர் வீதி எனப் பெயர் பெற்றுள்ள வீதியும் அரசடி வீதியும் ஒல்லாந்தர் காலத்தில் இருந்ததற்குச் சான்றுகள்

உள்ளன. இவற்றின் பகுதிகள் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றுக்குள் அடங்குவன. உண்மையில் மேலே விளக்கிய பருத்தித்துறைக்குச் செல்லும் வீதியில் மணிக்கூட்டுக் கோபுர வீதி தாண்டிய பின்னர் கிழக்கு நோக்கி நல்லூர்வரை செல்லும் வீதி அரசடி வீதியின் ஒரு பகுதியே. இது முன்னர் செம்மணி வீதி எனவும் அழைக்கப்பட்டது. இவ்விடயங்களைப் பற்றி இனிவரும் கட்டுரைகளில் விரிவாகப் பார்க்கலாம். இவ்வாறான வீதிகள் எதுவும் நிலப்படத்தில் இல்லை. இந்த நிலப்படத்தின் நோக்கத்துக்கு அப்படியான வீதிகளைக் காட்டவேண்டிய தேவை இல்லாதிருந்திருக்கலாம்.

தமிழ் மன்னர் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட காலத்தில் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் இடம்பெற்ற மூன்று போர்கள் குறித்துப் போர்த்துக்கேய வரலாற்றாளர்கள் அல்லது பாதிரிமார்கள் எழுதிய நூல்களில் விவரங்கள் உள்ளன. இவ்விவரங்களின்படி போர்த்துக்கேயப் படைகள் இன்று கோட்டை இருக்கும் பகுதியிலிருந்து வண்ணார்பண்ணையை ஊடறுத்தே நல்லூருக்குச் சென்றுள்ளனர். வண்ணார்பண்ணையூடாக நல்லூருக்குச் செல்லும்போது எதிர்ப்பட்ட சில வீதிகள் பற்றியும் அந்நூல்கள் தகவல்கள் தருகின்றன.[2] எனவே வண்ணார்பண்ணையை நல்லூருடன் இணைக்க முறையான வீதிகள் அக்காலத்தில் இருந்திருக்கும் என ஊகிக்கலாம். ஆனாலும் இவ்வீதிகளை நிலப்படம் காட்டவில்லை. மேலே குறிப்பிட்டபடி தற்காலத்து நாவலர் வீதி, அரசடி வீதி ஆகிய தடங்களில் அமைந்திருந்த வீதிகள் இவ்வாறான இணைப்பை வழங்கியிருக்கக்கூடும்.

## கட்டடங்களும் அமைப்புகளும்

நிலப்படத்தில் வண்ணார்பண்ணைப் பிரிவுக்குள் கட்டடம் அல்லது அமைப்பைக் காட்டும் மூன்று குறியீடுகள் உள்ளன. இவற்றுள் இரண்டைத் தெளிவாகப் பெயர் குறித்துக் காட்டியுள்ளனர். ஒன்று, முன்னர் குறிப்பிட்ட ஒட்டுமடம் சந்திக்கு அண்மையில் உள்ளது. இது தேவாலயமும் அதைச் சார்ந்த தேவாலய இல்லமும் ஆகும். அக்காலத்தில் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றுக்குரிய தேவாலயம் இதுவே. இந்த இடத்தில் முன்னர் இருந்த போர்த்துக்கேயரின் கத்தோலிக்கத் தேவாலயத்தைக் கைப்பற்றிய ஒல்லாந்தர் அதைப் புரட்டஸ்தாந்து தேவாலயமாக மாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர் ஆட்சியின் தொடக்கத்தில் 1658 முதல் 1665 வரையான ஏழு ஆண்டுகள் மத போதனைக்குப் பொறுப்பானவராகப் பணியாற்றிய பிலிப்பஸ் போல்தேயஸ் தான் எழுதிய நூலில், வண்ணார்பண்ணைத் தேவாலயம் சிறியது என்றும் அதனோடு இணைந்ததாகக் குருமனை இருக்கவில்லை என்றும் எழுதியுள்ளார்.[3] அத்துடன் அந்நூலில் உள்ள வண்ணார்பண்ணைத் தேவாலயத்தின் படம், அது நிரந்தரமல்லாத கட்டடப்பொருட்களால் ஆனதாகக் காட்டுகிறது.[4] (படம்3) மேற்படி படம் உண்மையில் இருந்த தேவாலயத்தைப் பார்த்து வரையப்பட்டது அல்ல என்று கூறப்பட்டாலும், அது நிரந்தரமல்லாத பொருட்களால் ஆனது என்ற தகவல் சரியாக இருக்கக்கூடும். நிலப்படத்தில் தேவாலயத்துக்கு அருகில் குருமனையும் காட்டப்பட்டுள்ளதால் 1665 இற்குப் பின்னர் நிலப்படம் வரையப்பட்ட 1719 வரையான காலப்பகுதியில் குருமனை புதிதாக அமைக்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு.

பின்னர், பிரித்தானியரின் கைகளுக்குச் சென்ற இது, வெஸ்லிய சபையினரின் தேவாலயமாகி இன்றும் அவ்விடத்தில் உள்ளது. போர்த்துக்கேய அல்லது ஒல்லாந்தக் கூறுகள் எதுவும் இன்றைய கட்டடத்தில் இல்லாவிட்டாலும் இந்த இடம் 400 ஆண்டுகாலக் கிறித்தவ சமயப் பயன்பாட்டின் அடையாளமாக இன்றும் விளங்குகிறது.

இரண்டாவது கட்டடம் ஒரு ஆனைப் பந்தி. இது நகரிலிருந்து பருத்தித்துறைக்குச் செல்லும்

வீதியில் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றின் கிழக்கு எல்லையை அண்டி அமைந்துள்ளது. இன்றும் அப்பகுதி ஆனைப்பந்தியடி என்றும் இன்றைய நாவலர் வீதியும் பருத்தித்துறை வீதியும் ஒன்றையொன்று வெட்டும் சந்தி ஆனைப்பந்திச் சந்தி எனவும் அழைக்கப்படுகின்றது. நிலப்படத்தில் உள்ள ஆனைப்பந்தியும் ஏறத்தாழ அதே இடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலப்படம் வரையப்பட்ட 1719 இனை அண்டிய காலப்பகுதியில் இவ்விடத்தில் ஒரு ஆனைப்பந்தி இருந்ததை இந்நிலப்படம் உறுதி செய்கிறது. இவ்விடம் தமிழ் மன்னர்களின் தலைநகராக இருந்த நல்லூருக்கு மிக அண்மையில் அமைந்திருப்பதால், இவ்விடத்தில் மன்னர்களின் ஆனைப்பந்திகள் இருந்திருக்கலாம் என்ற கருத்தைச் சிலர் முன்வைத்துள்ளனர். இதை உறுதிசெய்வதற்குப் போதுமான சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை.

பெயர் குறிக்கப்படாத மூன்றாவது குறியீடு நாவாந்துறைப் பகுதியில் கடலேரிக் கரையை அண்டி உள்ளது. சென்ற கட்டுரையில் அலுப்பாந்தித் துறையை அண்டியுள்ள ஒரு குறியீடு பற்றி விளக்கியிருந்தோம். நாவாந்துறைப் பகுதியில் உள்ள குறியீடும் ஓரளவுக்கு அதை ஒத்ததாகவே உள்ளது. இங்கும் அது இறங்கு துறை அல்லது துறைமுகத்தோடு தொடர்புள்ள ஒரு கட்டுமானத்தைக் குறிப்பதாக இருக்கலாம். முன்னைய எடுத்துக்காட்டைப் போலவே இந்தக் குறியீடு தொடர்பிலும் எழுத்துமூல விளக்கங்கள் எதுவும் நிலப்படத்தில் இல்லை.



**லெயுசிகாமின் நிலப்படத்தில் அடையாளம் கண்ட அம்சங்களைக் குறித்துக்காட்டும் படம்**

## நீர்நிலைகள்

நிலப்படத்தில் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்றில் ஆறு நீர்நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. தற்போதைய எண்ணிக்கையையும் ஒல்லாந்தர் காலத்துக்குப் பின்னர் மூடப்பட்டதாகத் தெரியவரும் நீர்நிலைகளையும் கருத்திற்கொள்ளும்போது நிலப்படம் வரையப்பட்ட காலத்தில் மேலும் கூடுதலான நீர்நிலைகள் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஆறு நீர்நிலைகளை மட்டும் குறித்திருப்பதன் காரணம் தெரியவில்லை. குறித்துள்ள நீர்நிலைகளில் இரண்டை மட்டுமே சிறப்புப் பெயர்களால் குறித்துள்ளனர். ஒன்று வெட்டுத் துரவு, மற்றது சாயக்காரக் குளம். இவை இன்று புழக்கத்திலுள்ள பெயர்களுடன் ஒத்துவரவில்லை என்பது தெளிவு. ஏனைய நான்கு நீர்நிலைகளுக்கும் பொதுப் பெயரையே குறித்துள்ளனர். குறிப்பாக ஒரு நீர்நிலைக்கு ‘குளம்’ என்ற தமிழ்ப் பெயரும்

இன்னொன்றுக்குத் 'துரவு' என்னும் தமிழ்ப் பெயரும் குறிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய இரண்டையும் '*Tanck*' என்ற ஒல்லாந்த மொழிப் பெயரால் குறித்துள்ளனர். 'குளம்', '*Tanck*' என்னும் இரண்டுக்குமிடையே ஏதாவது வேறுபாடுகள் உண்டா தெரியவில்லை.

கோட்டைப் பகுதியிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதிக்கு மேற்குப் பக்கத்தில் மூன்று நீர்நிலைகள் குறிக்கப்பட்டுள்ளன. தற்காலத்திலும் இப்பகுதியில் கல்லுக் குளம், வண்ணான் குளம், நெடுங் குளம் என்ற மூன்று குளங்கள் உள்ளன. நிலப்படம் பெருமளவு துல்லியமானது அல்ல என்ற அடிப்படையில் நிலப்படத்திலுள்ள '*Toera woe*' (துரவு), '*Tanck*', '*Coelam*' (குளம்) ஆகிய மூன்றையும் முறையே கல்லுக்குளம், வண்ணான் குளம், நெடுங் குளம் என்பவற்றுடன் அடையாளம் காணமுடியும் என்றே தோன்றுகிறது. (படம்2)

மேற்படி வீதிக்குக் கிழக்குப் பக்கத்திலும் '*Wettoe Toerawoe*' (வெட்டுத் துரவு), *Zaeyacaracoelam*' (சாயக்காரக்குளம்), '*Tanck*' என்று பெயர் குறித்துள்ள மூன்று நீர்நிலைகள் உள்ளன. இப்பகுதியில் தற்காலத்தில் வண்ணான் குளம், ஆரிய குளம், கன்னாதிட்டிக் குளம் ஆகிய மூன்று முக்கியமான நீர்நிலைகள் உள்ளன. இவை தவிர, குசவன் குளம் என்ற குளம் ஒன்று இருந்து பிற்காலத்தில் மூடப்பட்டது. இது முன்னர் குறிப்பிட்ட மூன்று குளங்களுக்கு வடக்கே சற்றும் தொலைவில் இருந்தது. இது நிலப்படத்தில் காட்டிய குளங்களுள் ஒன்றாக இருக்க வாய்ப்புக் குறைவு. நிலப்படத்திலுள்ள குளங்களின் அமைவிடத் தொடர்புகளை தற்காலக் குளங்களுடன் ஒப்புநோக்கும்போது நிலப்படத்திலுள்ள வெட்டுத் துரவை இன்றைய வண்ணான் குளத்துடனும், சாயக்காரக் குளத்தை இன்றைய ஆரிய குளத்துடனும், '*Tanck*' என்ற பெயரில் உள்ள நீர்நிலையைத் தற்காலத்துக் கன்னாதிட்டிக் குளத்துடனும் அடையாளம் காணமுடியும். (படம்2)

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நெசவுத் தொழிலை முன்னேற்றவும் யாழ்ப்பாணத்தில் கிடைத்த சாயவேரைப் பயன்படுத்தித் துணிகளுக்குச் சாயமிடும் தொழிலை ஊக்குவிக்கவும் பல்வேறு சாதிகளைச் சேர்ந்த நெசவாளர்களையும், சாயக்காரரையும் வண்ணார்பண்ணை, நல்லூர் போன்ற பகுதிகளில் குடியேற்றியதற்குச் சான்றுகள் உண்டு. இன்றும் இப்பகுதிகளில் மேற்படி தொழில் செய்பவர்களின் பரம்பரையினர் வாழ்ந்துவருகின்றனர். அத்துடன் மேற்படி சாதிகளின் பெயர்களைத் தழுவிய இடப் பெயர்களும் புழக்கத்தில் இருந்துள்ளன. சில இன்னும் புழக்கத்திலுள்ளன. இன்று ஆரிய குளம் என அழைக்கப்படும் குளத்துக்கு அருகில் சாயத் தொழில் செய்பவர்கள் வசித்ததாலோ, சாயத் தொழிலுக்கு அக்குளம் ஏதோவொரு வகையில் பயன்பட்டதாலோ அக்குளத்துக்கு ஒல்லாந்தர் காலத்தில் சாயக்காரக் குளம் என்ற பெயர் வழங்கியிருக்கக்கூடும்.

## குறிப்புகள்


1. *Fernao De Queyroz, The Temporal and Spiritual Conquest of Ceylon vol I, trans. S. G. Perera (New Delhi: Asian Educational Services,* ***1992), 666.***

2. *Donald Ferguson (trans. and ed.), "History of Ceylon from the Earliest Times to* ***1600*** *A. D. as Related by Joao de Barrows and Diogo do Couto," Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society XX, no.* ***60 (1908): 186191.***

3. *Phillipus Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon", trans. Pieter Brohier, The Ceylon Historical Journal, vol. VIII nos.* ***14*** *(July* ***1958****April* ***1959), 323.***

4. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon",* ***317.***

5. *Baldaeus, "A True and Exact Description of the Great Island of Ceylon",* ***326.***


(தொடரும் )

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.

ஜிஃப்ரி ஹாசன்



மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.

# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள்: இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

*தமிழ்/சோனக பண்பாட்டு வேறுபாடுகள் குறித்து பல்வேறு கருத்துகள் அபிப்பிராயங்கள் நிலவுகின்றன. ஆனால் ஒவ்வொரு குழு உறுப்பினர்களிடமிருந்தும் கிடைத்த கருத்துகளில் சில அடிப்படைக் கருத்துகள் வெளிப்பட்டன. சோனகர்கள் மிகவும் ஆற்றலும், கடின உழைப்பும் கொண்டவர்கள் என்று தமிழர்கள் பொதுவாக ஒப்புக்கொள்கிறார்கள். அவர்களின் மேம்படுத்தப்பட்ட வீடுகள் மற்றும் வளர்ந்து வரும் செல்வம் போன்றவை இந்த உண்மையைத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. உண்மையில், சோனகர்களின் பெருகிவரும் செழிப்பு பல தமிழ் உயர்சாதியினருக்கு கடுமையான கவலையை ஏற்படுத்துகிறது. ஏனெனில் இது சமூகத்தில் பாரம்பரியமாக இருந்து வரும் அவர்களின் செல்வாக்கை சவாலுக்குட்படுத்துகிறது.*

*சோனகர்கள் பணக்காரர்களாக மாறுவது மட்டுமன்றி அவர்கள் அதிகம் குழந்தைகள் பெற்றுக்கொள்வதும் குற்றச்சாட்டுக்குள்ளாகிறது. கடந்த ஐம்பது வருடங்களாக நாட்டிலுள்ள எந்தவொரு இனத்தவர்களைக் காட்டிலும் மிக அதிகமான பிறப்பு விகிதத்தை சோனகர்கள் கொண்டிருப்பது உண்மையே (குருகுலசூரிய மற்றும் பலர் 1988: 191). இது இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் தொடர்பிலும் உண்மையாக உள்ளது. மக்கள்தொகை மற்றும் தேர்தல் போக்குகளை மனதில் கொண்டு, பல தமிழர்கள் மற்றும் சோனகர்கள் - இப்போது சில சிங்களவர்களும் கூட (Schrijvers 1998: 12) - அத்தகைய தொடர்ச்சியான கருவுறுதலை ஒரு அரசியல் செயலாகப் பார்க்கின்றனர். நான் மேலும் இரகசியமான ஒரு இனவாத சித்தரிப்பையும் எதிர்கொண்டேன். இது தனிப்பட்ட நம்பிக்கைகள்*

மற்றும் சந்தேகங்களிலிருந்து உருவாக்கப்பட்டது. நான் அதிக நேரத்தை செலவழித்த இளைஞர்கள் மத்தியில் இந்த இரகசிய உரையாடல் நடந்தது. இது அவர்களின் ஆர்வத்தையும் உடல் தொடர்பான விஷயங்களில் உள்ள கவலையையும் பிரதிபலித்தது. இந்தக் கருத்துகள் தமிழ் – முஸ்லிம் இனவாத அரசியலில் ஏதேனும் உண்மையான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதா என்பதை என்னால் கூற இயலாது. ஆனால் சில மட்டத்தில் அவை இரண்டு குழுக்களையும் பிரிக்கும் கலாசாரப் பிம்பங்களின் குறியீட்டு வலையின் ஒரு பகுதியாக அவை உருக்கொள்கின்றன. நான் கண்டது என்னவென்றால், முஸ்லிம் உணவுப் பழக்கம், பாலுறவு மற்றும் சுகாதாரம் போன்ற மிக நெருக்கமான களங்கள்; அவை பொதுப் பார்வையில் இருந்து தடுக்கப்பட்டதால், அவை பொதவாக தமிழர்களின் கிசுகிசுக்கு காரணமாகின.

ஆனால், அக்கரைப்பற்றில் நான் பேசிய தமிழர்களுக்கு பெண் விருத்தசேதனம் என்ற சோனகரின் நடைமுறை முற்றிலும் தெரியவில்லை. இந்தக் கட்டாயச் (வாஜிப்) செயற்பாடு (அஹ்மத் லெப்பை 1873/1963:479) பிறந்த நாற்பது நாட்களுக்குள் விருத்தசேதனம் செய்பவரின் மனைவியால் (*osta mami*) நடத்தப்பட்டதை, எனது ஆண் நண்பர்கள் விவரித்தார்கள். அவர்கள் இது தொடர்பான பூரண தகவல்களை தங்கள் மனைவி மற்றும் மூத்த சகோதரிகளிடம் கேட்டுத் தெரிந்துகொண்டனர். குழந்தையின் தோலை (கிளிட்டோரிஸ்) ஒரு துளி இரத்தம் அடையாளமாக வருமாறு வெட்டுகின்றனர். ஆனால் முழு அளவிலான பிறப்புறுப்பை அகற்றுவது அல்லது ‘கிளிட்டோரிடெக்டோமி’ போன்றது அல்ல இந்தச் செயற்பாடு.

சோனகர்களை தமிழர்களிடமிருந்து வேறுபடுத்துவதற்கு வேறு சில சீர்ப்படுத்தல் மற்றும் அலங்கார நடைமுறைகளும் உள்ளன. சோனக ஆண்களும் பெண்களும் நாற்பது நாட்களுக்கு ஒருமுறை தங்கள் அக்குள் மற்றும் அந்தரங்க முடியை ஷேவ் செய்வது நல்லது (சுன்னத்). சடங்குரீதியாக சுத்தமாக (முழுக்கு நீக்க) உடலின் அனைத்துப் பாகங்களும் குளிக்கும்போது நனைவதை உறுதி செய்ய வேண்டும். கையால் பிடிக்கும் அளவுக்கு நீளமான முடி இருக்கக்கூடாது என்று, 1970 களில் சோனக முடி திருத்தும் ஒருவரிடம் (ஒஸ்தா) மாதந்தோறும் தங்களது அக்குள்களை மொட்டையடித்துக் கொள்ளும் பல வயதான, பாரம்பரியச் சோனக ஆண்களை நான் அறிவேன். அதே சமயம் தமிழர்களிடையே அந்தப் பழக்கம் இல்லை. தனிப்பட்ட நேர்த்திக் கடனை நிறைவேற்ற தலையை மொட்டை அடித்தல் எனும் வழக்கமே அவர்களிடம் உள்ளது. இரு சமூகப் பெண்களும் குத்திய காதணிகளை அணிந்தாலும், தமிழ் பெண்கள் போன்று மூக்குத்தி அணிவது சோனகப் பெண்களுக்கு கடினமானது (இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளதனால்). அதேபோல, பாரம்பரிய இந்துத் தமிழர்களைப் போலன்றி, மூரிஷ் ஆண்கள் தங்கள் காதுகளைத் துளைக்கவோ அல்லது காதணிகளை அணியவோ கூடாது (அஹ்மத் லெப்பை 1873/1963: 480). எனது நெருங்கிய சோனக மற்றும் தமிழ் ஆண் நண்பர்களில் சிலர் மட்டுமே முன்வைத்த நெருக்கமான அவதானிப்புகளில் இருந்து பார்த்தால் அசுத்தம் பற்றிய இரு சமூகங்களினதும் பார்வை சற்று ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. இரு சமூகத்தினரும் இரத்தம், விந்து, மாதவிடாய் மற்றும் பிரசவப் பொருட்களுடன் தொடர்பு கொள்வதில் வெறுப்பைப் பகிர்ந்து கொண்டாலும், தமிழர்கள் உமிழ்நீர் (எச்சில்) மீது குறிப்பிடத்தக்க வெறுப்பைக் கொண்டுள்ளனர். ஆனால் இது சோனகர்களிடையே வலுவாகப் பின்பற்றப்படவில்லை. உண்மையில், உள்ளூர் பாவாக்களால் நடத்தப்படும் சில பரவச சூஃபி சடங்குகளில், புனித சக்தியை வெளிப்படுத்துவதில் தலைமை தாங்கும் கலிபாவின் சுவாசம் மற்றும் உமிழ்நீரில் இருந்து தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் கருவிகள் வரை காண்பிக்கப்படுகின்றன (Bayly 1989: 127-28; McGilvray 1988b).

மறுபுறம், சோனகர்களிடம் மலம், குறிப்பாக சிறுநீர் மற்றும் பாலியல் திரவங்களுடன் தொடர்பு கொள்வதில் வலுவான தடைகள் இருப்பதாகத் தெரிகிறது. சோனக ஆண்கள் சிறுநீர் கழிக்கக் குந்தும்போது சிறப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கக் கற்றுக்கொடுக்கப்படுகிறார்கள் அதனால் அவர்களின் சாரன் அல்லது பிற ஆடைகளை சிறுநீர் தொடாது. அவ்வாறு பட்டுவிட்டால் அவர்கள்

மசூதிக்குச் செல்வதோ, தொழுவதோ தடையாகும். என்னுடைய சில ஆண் நண்பர்கள், சிறுநீரின் கடைசித் துளிகளை உறிஞ்சுவதற்கு ஒரு சிறு செங்கல் துண்டைப் பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். இஸ்லாமிய விதிகள் அனைத்து உடலுறவுச் செயற்பாடுகளுக்குப் பிறகு மட்டுமல்ல, இடையிலும், முழுத் தலைக் குளியலைக் கோருகின்றன. இது, சோனகச் சுற்றுப்புறங்களில் இரவில் கிணற்றில் நீர் அள்ளிக் குளிக்கும் சத்தம் கேட்கும்போது ஒரு சங்கடத்தை ஏற்படுத்தும்.

சோனகர்கள் பற்றி தமிழர்களிடம் இருந்து கூட்டாக நான் அடிக்கடி கேட்ட புகார்கள் என்னவென்றால், அவர்கள் அரசியல் ரீதியாக நம்பகத்தன்மையற்றவர்கள். அவர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த கல்வியறிவு கொண்டவர்கள் (இது நூற்றாண்டின் முற்பகுதியில் உண்மை. ஆனால் இப்போது இல்லை). அவர்கள் ஆரோக்கியமற்ற, நிரம்பிய வீடுகளிலும் சுற்றுப்புறங்களிலும் வாழ்கின்றனர் (உதாரணமாக, காத்தான்குடி, இலங்கையில் மிகவும் அடர்த்தியான மக்கள் வசிக்கும் நகரம்). அவர்கள் மாட்டிறைச்சி சாப்பிடுகிறார்கள் (இந்துக்களின் வருத்தம்; ஆனால் கோபம் அல்ல). மற்றும் ஒரு சிறிய விஷயமும் உண்டு. அதாவது - அவர்கள் மூச்சுத்திணறும் வகையிலான வாசனை மற்றும் வாசனைத் திரவியங்கள் (அத்தர்) மீது விருப்பம் கொண்டிருக்கின்றனர். பிந்தையது வெளிப்படையானதும், கவனிக்கத்தக்கதுமான விமர்சனம். ஏனெனில் தமிழர்கள் தங்கள் இந்துச் சடங்குகள் அனைத்திலும் வலுவான நறுமணமுள்ள கற்பூரத்தை எரித்து இனிய மணம் கொண்ட சந்தனத்தைப் பூசுகிறார்கள். முஸ்லிம் நடைமுறைகள் பற்றிய மாப்பிள்ளை ஆலிமின் கட்டுரை, வெள்ளிக்கிழமை தொழுகைக்கு முன் வாசனைத் திரவியத்தைப் பயன்படுத்துவதைப் பாராட்டுகிறது (அஹ்மத் லெப்பை **1873/1963: 274**). தவிர, பல சோனக நிகழ்வுகளில் விருந்தினர்கள் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு சடங்கு நிகழ்வின் உணர்வை மேம்படுத்துவதற்காக நீண்ட கால, செறிவூட்டப்பட்ட அத்தர் வழக்கமாகப் பயன்படுத்தப்படுவதைக் கண்டேன். தமிழர்களின் பாலியல் மற்றும் பராமரிப்பு நடைமுறைகள் பற்றி சோனகரிடம் மிக மிகக் குறைவான புகார்களே இருந்தன. மாறாக, தொழிற்துறைகள் மற்றும் சிவில் சேவைகளில் தமிழர்களின் ஏகபோக உரிமையைப் பற்றி சோனகர்கள் என்னிடம் புகார் செய்தார்கள். இந்தக் குற்றச்சாட்டு யாழ்ப்பாணத் தமிழர்களையே நேரடியாகக் குறிக்கிறது. ஏனெனில் இப் பணித்துறைகளில் அவர்கள் மட்டக்களப்பு தமிழர்களை விட அதிகளவில் உள்ளனர்.

சமீபத்திய தசாப்தங்கள் வரை, தமிழர்கள் பாரம்பரியத் தமிழ்க் கலாசாரம் மற்றும் நவீன தொழில்கள் இரண்டிலும் சிறந்த கல்வியைப் பெற்றிருந்தனர் என்பதை சோனகர்கள் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் அவர்கள் தமிழர்களின் தேவையற்ற ஆணவம் மற்றும் மேலாதிக்க அணுகுமுறைகளை வெறுக்கிறார்கள். இந்துச் சாதி அமைப்பின் கடினத்தன்மையும், அதனை அடிப்படையாகக் கொண்ட சமத்துவமற்ற படிநிலை மனப்பான்மையுமே இதற்குக் காரணம் என்று சோனகர்கள் கூறுகின்றனர். எல்லா முஸ்லிம்களும், அல்லாஹ்வின் முன் சமமானவர்கள் என்று அவர்கள் எனக்கு உறுதியளித்தார்கள். எனது களப்பணியில் இறுதியியாக சில மிகச் சிறிய பரம்பரையாக தரவரிசைப்படுத்தப்பட்ட சோனகத் துணைக் குழுக்களுக்கும் கூட (Ostd barbercircumcisers,), முஸ்லிம்களின் சடங்குகளின் போது சமத்துவம் வழங்கப்பட்டதை நான் பார்த்தேன். எனவே சோனகரிடையே பரந்த சடங்குச் சமத்துவம் உண்டு என்கிற கூற்று உண்மையில் செல்லுபடியானதாகும். அக்கரைப்பற்று போன்ற ஒரு ஊரில், தமிழர்களை விட முஸ்லிம்களிடையே செல்வ வேறுபாடுகள் அதிகமாகத் தெரிகிறது. குடித்து நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கும் போக்கினால் சோனகரின் பார்வையில் தமிழர்கள் களங்கப்படுகிறார்கள். இருப்பினும் சில சோனகரும் சில சமயங்களில் இரகசியமாக மது உட்கொள்வதாக அறியப்படுகிறது. இறுதியாக, இந்து மத நடைமுறைகள் குறித்த சோனகரின் கருத்துகள் ஒரே மாதிரியாக எதிர்மறையாகவே இருந்தன. தமிழ் - சைவ சமயமானது பலதெய்வ வழிபாடு; உருவ வழிபாடு மற்றும் பேய்த்தனம் கொண்டது என்றும், மற்றும் வேதத்தைக் கொண்ட தீர்க்கதரிசன மதம் அல்ல என்றும் விமர்சிக்கப்பட்டது. இந்த விடயத்தில், உள்ளூர் இஸ்லாமியர்களும், கிறிஸ்தவர்களும் கண்டிப்பாகக் சமபார்வையையே கொண்டிருக்கின்றனர்.

(தொடரும்)

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

பரமு புஷ்பரட்ணம்





கந்தரோடை
Image Source - www.themiracleisland.com

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.

# தொல்லியல் நோக்கில் கதிரமலை அரசு

இலங்கைத் தமிழரிடையே அரச மரபு தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆராய முற்படும் ஒருவர் அதன் தொடக்கப் புள்ளியாக தலைநகர் கதிரமலையைக் குறிப்பிடுவார். இதற்கு, 17 - 18 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலான தமிழ் இலக்கியங்களில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டளவில் உக்கிரசிங்க மன்னன் சோழ இளவரசியான மாருதப்புரவல்லியை பட்டத்தரசியாகக் கொண்டு கதிரமலையில் இருந்து ஆட்சி செய்த வரலாறு கூறப்பட்டிருப்பது முக்கிய காரணமாகும். இக் கதிரமலையைக் கந்தரோடையென அடையாளப்படுத்திய முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் முதலான முன்னோடி வரலாற்று அறிஞர்கள், இது சிங்கை அரசுக்கு முன்னர் வடஇலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ் அரசின் தலைநகர் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் தமிழ் இலக்கியங்களில் வரும் உக்கிரசிங்கன் - மாருதப்புரவல்லி கதையை நம்பகத்தன்மையற்ற புனைக் கதையெனக் கூறும்

பிற்கால வரலாற்றறிஞர்கள் கி. பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கை மீது படையெடுத்த பாண்டியப் படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோற்றுவித்த அரசே முதலாவது தமிழ் அரசு என வாதிட்டனர். ஆனால் இக்கருத்தை முன்னிலைப்படுத்தி வாதிட்டு வந்த அறிஞர்களே இன்று சமகாலத் தொல்லியற் கண்டுபிடிப்புகளை ஆதாரமாகக் கொண்டு சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் இலங்கைத் தமிழரிடம் அரச மரபு உருவாகியிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பதால், தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் கதிரமலை அரசுக்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்களை எடுத்துக் கூறுவது இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையில் நிலையான கிராமக் குடியிருப்பு, இரும்பின் உபயோகம், நகரமயமாக்கம் என்பன தோன்றுவதற்கும், அவற்றின் பின்னணியில் அரச உருவாக்கம் நிகழ்வதற்கும், தென்னிந்தியாவில் இருந்து, அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து, இற்றைக்கு 3000 ஆண்டளவில் புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்களே காரணம் என்பது இன்று தொல்லியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான உண்மையாகும். வட இலங்கையில் இப்பண்பாட்டு மக்களது குடியேற்றம் நிகழ்ந்த இடங்களாக மாதோட்டம், பூநகரி, வெற்றிலைக்கேணி, அரியாலை, சாட்டி, காரைநகர், ஆனைக்கோட்டை, கந்தரோடை முதலான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில்



கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட அம்மிக்கல்

Image Source - yarl.com

மிகப்பரந்த அளவில் பெருங்கற்காலக் குடியிருப்பை கொண்டிருந்த இடமாக கந்தரோடை காணப்படுகிறது. இங்கு ஏறத்தாழ இரண்டரைக் கிலோ மீற்றர் நீள அகலத்தில் இப்பண்பாட்டு மக்களது குடியிருப்புக்கள் இருந்தமைக்கான சான்றுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. 1980 களில் குடா நாட்டின் புராதன குடியிருப்பு மையங்கள் பற்றி ஆய்வு நடாத்திய பேராசிரியர் பொ. இரகுபதி அக் குடியிருப்புகளின் தலைமைக் குடியிருப்பாகக் கந்தரோடை இருந்ததெனக் குறிப்பிடுகின்றார்.

பரந்த அளவில் பெருங்கற்காலக் குடியிருப்புக்குரிய சான்றுகள் காணப்படுவதும், அப் பண்பாடு தொட்டு தற்காலம் வரை அங்கு மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதற்கான தொல்லியற் சான்றுகள் செறிவாகக் காணப்படுவதும் அவ்வாறு கூறியிருப்பதற்குக் காரணமாகும். அத்துடன் இப் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன், மங்கிய நிலையில் பிற நாடுகளுக்குரிய கல்மணிகள், பல அளவுகளில் பல வடிவங்களில் அமைந்த மட்பாண்டங்கள், மதுச் சாடிகளின் உடைந்த பாகங்கள், கண்ணாடிப் பொருட்கள்,

நாணயங்கள் எனப் பலவகைச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச் சான்றுகள், இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இப் பிரதேச மக்கள் இந்திய, கிரேக்க, உரோம, அரேபிய மற்றும் சீன நாடுகளுடன் வணிக - கலாசார உறவுகளைக் கொண்டிருந்ததைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

1917 இல் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட போல் பீரிஸ் என்ற அறிஞர் அங்கு கிடைத்த பலதரப்பட்ட தொல்லியற் சின்னங்களை ஆதாரமாக எடுத்துக்காட்டி, புராதன காலத்தில் அநுராதபுரத்திற்கு அடுத்த தலைநகராக கந்தரோடை திகழ்ந்ததெனக் குறிப்பிட்டார். அவர் எடுத்துக் காட்டிய இந்திய, கிரேக்க, உரோம நாடுகளுக்குரிய ஆதாரங்கள், இலங்கையின் ஆரம்பகால அரசுகள் தோன்றிய அநுராதபுரம், மகாகமை போன்று கந்தரோடையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு முதிர்ச்சி நிலையில் நகரமயமாக்கமும், அரச உருவாக்கமும் ஏற்பட்டமைக்குச் சான்றாகும். இலங்கையின் அரச உருவாக்கம் நிகழ்ந்த வரலாற்றை ஆய்வு செய்த குணவர்த்தனா, பெரும்பாலும் பெருங்கற்காலக் குடியிருப்புகள் காணப்பட்ட மையங்களில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு வரலாற்றுத் தொடக்க காலத்தில் ஏறத்தாழ 268 சிற்றரசுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். தமிழகத்தைப் போல் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாடு வழியாக அரசு தோன்றியதாகக் கூறும் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்ன, அதை இனக்குழு நிலையில் இருந்து அரசு உருவாகுவதற்கு இடைக்கட்டமாகத் தோன்றிய அரசுகள் எனக் குறிப்பிடுகிறார். இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் இருந்து, அநுராதபுரத்தை அடுத்து மிகப் பரந்த அளவில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களைக் கொண்டிருந்த இடமாக கந்தரோடை அடையாளம் காணப்பட்டுதால், இங்கும் குறுநில அரசுகள் தோன்றில்ருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றிற்குச் சார்பாக இங்கு சில சான்றுகளை எடுத்துக்காட்டலாம்.

1988 அளவில் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட சேயோன் என்ற அறிஞர் அங்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். அவை இலங்கைக்குரிய தனித்துவமான நாணயங்களாகும். அந்நாணயங்கள் சிலவற்றில் தமிழுக்குரிய எழுத்துகளை தெளிவாகக் காணமுடிகிறது. அவற்றில் ஒரு நாணயத்தின் முற்பக்கத்தில் கஜலட்சுமியின் ஆரம்ப தோற்றமான ஸ்ரீத்ஸாவும், பின்பக்கத்தில் கபதிகன் என்ற தமிழ்ப் பெயரும் காணப்படுகின்றன. தென்னாசியாவில் பண்டு தொட்டு நாணயங்கள் வெளியிடும் அதிகாரம் அரசுக்கு அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தலைவனுக்கே இருந்து வந்துள்ளது. கந்தரோடையில் தனித்துவமான நாணய மரபு காணப்பட்டுள்ளமை, இங்கு அரசு இருந்ததற்குச் சான்றாகும். 1999 - 2000 ஆண்டு காலப் பகுதியில் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் கிருஷ்ணராஜா, அங்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். இவ்வாதாரங்கள் இக் காலப் பகுதியிலேயே, எழுத்துவாசனை உடைய மக்கள் இப்பிராந்தியத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சான்றாகும். தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவில் எழுத்தின் பயன்பாட்டை அறிந்திருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. ஆனால் அவை எல்லாப் பெருங்கற்காலக் குடியிருப்பு மையங்களிலும் பரவலாக இருந்ததெனக் கூறமுடியாது. மாறாக அரச தோற்றம், கட்டமைப்புடைய சமூக

உருவாக்கம் நிகழ்ந்த இடங்களிலேயே பரவலாக இருந்துள்ளன. இந்த அம்சம் கந்தரோடையில் காணப்பட்டமை அங்கு அரசு உருவாக்கம் நிகழ்ந்தமைக்கு இன்னொரு சான்றாகும்.

கந்தரோடைக்கு தென்மேற்கே ஆனைக்கோட்டை என்ற இடத்தில் 1980 களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வு, கந்தரோடையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு வழியாக அரசு தோன்றியிருக்கலாம் என்பதற்கு இன்னொரு சான்றாகக் காணப்படுகிறது. குடாநாட்டில் பெருங்கற்காலக் குடியிருப்போடு, அப் பண்பாட்டுக்குரிய ஈமச் சின்னம் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு இடமாக ஆனைக்கோட்டை காணப்படுகிறது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஈமச் சின்னத்தின் தலைமாட்டுப் பகுதியில் வைக்கப்பட்ட பாத்திரம் ஒன்றில் ஈரெழுத்துப் பொறித்த முத்திரை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முத்திரையின் கீழ்ப்பகுதியில் பிராமி எழுத்தில் ‘கோவேத’ என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் முதலெழுத்தாக வரும் ‘கோ’ என்ற சொல்லுக்கு அரசன், வேந்தன் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இம் முத்திரைச் சாசனம் இங்கு தமிழ்ச் சிற்றரசு இருந்ததற்கான முக்கிய சான்றாக அமைகிறதெனப் பேராசிரியர் இந்திரபாலா குறிப்பிடுகிறார். ஆகவே நம்பகத் தன்மையுடைய தொல்லியல் ஆதாரங்களை வைத்து நோக்கும்போது தென்னிலங்கையைப் போல் சமகாலத்தில் வடஇலங்கையிலும் அரசுகள் தோன்றியிருந்ததெனக் கூறலாம். அதில் கந்தரோடை முக்கிய தலைமை அரசாக இருந்திருக்கலாம் என்பதையே அங்கு பரவலாகத் காணப்படும் தொல்லியற் சான்றுகள் உறுதிசெய்கின்றன. இதற்குச் சார்பாக, அநுராதபுரத்தை முன்னிலைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்களிலும் சில சான்றுகள் காணப்படுகின்றன.

பண்டுதொட்டு இலங்கை வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்ட பிராந்தியங்களில் ஒன்றாக வடஇலங்கை காணப்படுகிறது. மஹா வம்ஸத்தில் நாகதீப (ம்) என அழைக்கப்பட்ட இப்பிராந்தியம், இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் குறிப்பில் ‘நாகடிப’ எனவும், வல்லிபுரத்தில் கிடைத்த கி.பி. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொற்சாசனத்தில் ‘நகதிவ’ எனவும் குறிப்பிடப்படுகிறது. தமிழில் இது நாக நாடு என அழைக்கப்பட்டதற்கு தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையிலும், வேலுார்ப்பாளையப் பல்லவச் செப்பேட்டிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 1 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமிச் சாசனம் ஒன்று வட இலங்கையில் இருந்த நாக நகர் பற்றிக் கூறுகிறது. இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் ‘நஹநஹர’ (Naganara) என எழுதப்படும் இப்பெயர், இச்சாசனத்தில் தமிழில் ‘ந(ா)கநகர்’ (Nakanakar) என எழுதப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் இரகுபதி இந்த ‘நாகநகர்’ அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கலாம் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார்.

அநுராதபுர அரசை முதன்மைப்படுத்திக் கூறும் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மஹாவம்ஸம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்தபோது இந் நாகதீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்து வைத்ததாகக் கூறுகிறது. மஹாவம்ஸம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதிகமாக இருப்பினும், இந்நூல் எழுதப்பட்ட கி.பி 6 ஆம் நூற்றாண்டில், அநுராதபுரத்திற்கு வடக்கில் இருந்த நாகதீபத்தில் அரச மரபு தோன்றி வளர்ந்ததை இது உறுதிப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளலாம். மிகிந்தலையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமிச் சாசனம் ஒன்று ‘தீபராஜா’ என்ற பெயர் கொண்ட மன்னன் ஒருவனைப் பற்றிக் கூறுகிறது. இவன் நாகதீபத்தில் ஆட்சி செய்த மன்னனாக இருக்கவேண்டும் என பேராசிரியர் பரணவிதானா குறிப்பிடுகிறார்.

சமகால வரலாறு கூறும் ‘ஸம்மோஹ விநோதனீ’ என்ற பாளி நூல் நாகதீபத்து ஆட்சியாளன் ‘தீபராஜ’ என்ற விருதைப் பெற்றிருந்தான் எனக் கூறுகிறது. பேராசிரியர் இந்திரபாலா ‘தீபராஜ’ என்ற பெயரே பின்னர் தமிழில் ‘தீபத்தரையன்’ என மாறியதாகக் குறிப்பிடுகிறார். இந்த ஆதாரங்கள் அனைத்தும் நாகதீபம் எனப்பட்ட வடஇலங்கையில், கந்தரோடையை மையப்படுத்திய பலமான சிற்றரசு இருந்திருக்கின்றது என்பதினைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.

இந்த இடத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம், ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் அநுராதபுரத்திற்கு தெற்கே மிகத் தொலைவிலமைந்த தென்னிலங்கையுடனும், அங்கு ஆட்சியிலிருந்த சிற்றரசுகளுடனும், அநுராதபுர அரசிற்கு இருந்த அரசியல் உறவுகளை விரிவாகக் கூறும் பாளி இலக்கியங்கள், அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக் கிட்டிய தொலைவில் இருந்த நாகதீபத்துடனான அரசியல் உறவு பற்றி, குறைந்த அளவு தானும் கூறவில்லை. இந்த வேறுபாட்டை நோக்கும் போது இக்காலத்தில் வட இலங்கை அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் உட்பட்டிருக்கவில்லை என எண்ணத் தூண்டுகிறது. ஆனால் ஆறாம் நூற்றாண்டின் பின்னர் இந் நிலையில் மாற்றம் ஏற்படுவதைக் காணலாம். இதற்கு தமிழகத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கு ஒரு காரணம் எனக் கருதலாம். பேராசிரியர் கே.எம். டீ. சில்வா, பக்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்தம் என்ற சமய வேறுபாடு தோன்றி தமிழரும், சிங்களவரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதில் முனைப்பு பெறுவதற்கும், அதன் விளைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறுவதற்கும் காரணமாக அமைந்தது என கூறுகிறார். இந்த மாற்றங்கள் முதலில் ஏற்பட்டதன் தொடக்க வாயிலாக நாகதீபம் காணப்பட்டதால் இங்கிருந்த ஆட்சி முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் எனக்கருத இடமுண்டு. ஏனெனில் இக் காலத்திலிருந்தே வடஇலங்கைக்கும் அநுராதபுர அரசிற்கும் இடையிலான அரசியல் உறவுகள் பற்றிய தகவல்கள் பாளி இலக்கியங்களில் காணப்படுகின்றன. அந்த உறவுகூட அநுராதபுர அரசின் மேலாதிக்கம் இங்கிருந்ததைக் கூறாது, அநுராதபுர அரசிற்கெதிராக வடஇலங்கையில் இருந்து ஏற்பட்ட படையெடுப்புகள், கிளர்ச்சிகள் பற்றியதாகவே உள்ளன. இது தொடர்பாக பேராசிரியர் இந்திரபாலா கூறும் கருத்துகளை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

“உத்தரதேஸத்தைப் (வட இலங்கை அல்லது நாகதீபம்) பற்றிய குறிப்புகளை ஆய்வு செய்தால் அப் பிரதேசம் ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாக அதனைக் காணலாம். அநுராதபுர ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டுகளைப் போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின், தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வடபகுதியில் வந்து இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படி வந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின், அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவவில்லை என்பது தெளிவு.”

இந்நிலை அநுராதபுர அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நாகதீபத்தில் மேலும் தீவிரமடைந்ததைக் காணலாம். சோழர் கி.பி. 993 இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றி பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு 77 ஆண்டுகள் நேரடி ஆட்சி நடத்தியதன் மூலம், இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவர்களின் நேரடி



ஆனைக்கோட்டை முத்திரை
Image Source - www.google.com

ஆட்சியே இலங்கைத் தமிழர் வரலாறு தனிப்போக்குடன் வளர்வதற்கு முக்கிய காரணம் எனப் பேராசிரியர் பத்மநாதன் கூறுகிறார். முதலாம் இராஜராஜ சோழன் *993* இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றி பொலநறுவையைத் தலைநகராக மாற்றிய நிகழ்ச்சியே இலங்கையில் சோழர் ஆட்சியின் தொடக்கமாகக் கூறப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் சோழர் எழுச்சி பெற்ற காலத்தில் இருந்து அவர்கள் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்புகளையும் அவற்றின் விளைவுகளையும் நோக்கினால், சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொள்வதற்கு முன்னரே வடஇலங்கையில் அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதெனக் கூறலாம். இது பற்றிப் பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு கூறுகிறார்:

“சோழப் படையெடுப்புக்களின் (முதலாம், இரண்டாம் பராந்தகச் சோழன்) விளைவாக வடபகுதி, வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள இடமுண்டு. ஏற்கனவே பல்லவர் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த போது, இப் பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருக்க கூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், சோழர் படைகள் வட பகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தகச் சோழன் காலத்தில் இப்பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது. முதலாம் பராந்தகச் சோழன் காலத்திலேயே சோழர் பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தார்களா என்று தெரியவில்லை. அவர்களின் அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும்.

இச் சோழரின் வருகையைத் தொடர்ந்தே உக்கிரசிங்கன் - மாருதப்புரவல்லியின் ஆட்சி தலைநகர் கதிரமலையில் இருந்து சிங்கை நகருக்கு இடமாறியதாக யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன. இவ்விலக்கியங்கள் பிற்காலத்தில் எழுந்திருந்தாலும் அவை தோன்றிய காலத்தில் சோழர் வரலாறு தமிழகத்திலோ அல்லது இலங்கையிலோ வெளிச்சத்திற்கு வரவில்லை. அவற்றைக் கண்டறியும் நோக்கில் தொல்லியல், வரலாற்று ஆய்வுகளும் வளரவில்லை. அப்படியிருந்தும் *800* ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி மறைந்த சோழரின் வரலாற்றுடன் கதிரமலை அரசைத் தொடர்புபடுத்தி தமிழ் இலக்கியங்கள் கூறியிருப்பது, கதிரமலை அரசின் வரலாற்று நினைவுகளை இலங்கைத் தமிழர்கள் மறக்கவில்லை என்பதையே காட்டுகிறது. ஆகவே வரலாற்று அறிஞர்கள் கதிரமலையைக் கந்தரோடையென அடையாளப்படுத்துவது பொருத்தமாயின் அங்கு ஒரு அரச மரபு தோன்றி வளர்ந்திருக்கும் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில், அங்கு கிடைக்கும் நம்பகத்தன்மை கொண்ட தொல்லியற் சின்னங்களுக்கு என்றும் முக்கிய இடமுண்டு.

(தொடரும்)

# தேசபக்தன்: தோட்டத் தொழிலாளரின் அரசியற் குரல்

எம். எம். ஜெயசீலன்



எம்.எம். ஜெயசீலன் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் முதுநிலை விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைமாணி, முதுதத்துவமாணிப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்தியப் பொதுநலவாய நாடுகளின் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூர்) கலாநிதிப் பட்ட ஆய்வைச் சமர்ப்பித்துள்ளார். கல்வெட்டியல், பண்பாட்டு வரலாறு, இலக்கிய விமர்சனம், நவீன இலக்கியம் முதலான துறைகளில் ஆர்வமுள்ள இவர், அத்துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தேசிய மற்றும் சர்வதேச ஆய்வரங்குகளில் சமர்ப்பித்து வருவதுடன் ஆய்விதழ்களிலும் சஞ்சிகைகளிலும் தொடர்ந்தும் எழுதிவருகிறார்.

மலையகத் தமிழர் வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தை முக்கியமான நிலைமாறுகட்ட காலமெனலாம். அக்காலத்திலேயே இலங்கைவாழ் இந்தியருக்கு முதன்முதல் அரசியல் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின்போது ஒரு நியமன உறுப்பினர் இந்தியர் சார்பாகத் தெரிவுசெய்யப்பட்டார். அதன்பின்னர் 1924 ஆம் ஆண்டு சீர்திருத்தத்தின் போது இந்தியர் சார்பாக இரண்டு உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர். அத்தேர்தலின் போது நடைமுறைக்கு வந்த மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை இலங்கைவாழ் இந்தியருக்கும் வழங்கப்பட்டது. இவை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையில் எவ்வித அரசியல் உரிமைகளும் அற்றிருந்த இந்தியவம்சாவளி மக்களுக்கு நாட்டின் தேசிய அரசியலில் நேரடியாகப் பங்குபற்றுவதற்கான வாயிலைத் திறந்துவிட்டன. அம்மக்களின் அரசியல் எழுச்சி, சமூக அபிவிருத்தி, தொழிற்சங்க உருவாக்கம் முதலானவற்றுக்கான அடித்தளமும் அதிலிருந்து கிளைத்த மலையகத் தேசியம் என்பதற்கான வித்தும் அக்காலத்திலேயே இடப்பட்டன.

தோட்டத் தொழிலாளரை மீளாக் கடனில் மூழ்கடித்துவந்த துண்டுமுறை 1921 ஆம் ஆண்டு சட்டபூர்வமாக இல்லாதொழிக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளருக்குக் குறைந்தபட்ச சம்பளத்தை நிர்ணயிக்கும் முதலாவது சட்டம்



நடேசய்யர்
Image Source - tamil.wiki

1927 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அச்சட்டத்திலேயே அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் வழங்கப்படவேண்டும் என்ற விதி ஏற்படுத்தப்பட்டது. இச்சட்ட ஆக்கங்கள் இந்தியா ஏற்படுத்திய அழுத்தங்களின் தாக்கங்களால் விளைந்தவையாகும். திலகர் (1919), சரோஜினி நாயுடு (1922), மௌலானா சௌகத் அலி (1924), மகாத்மா காந்தி (1927) முதலான இந்தியத் தலைவர்களின் இலங்கை வருகை இந்தியத் தேசிய எழுச்சியையும் காலனிய விடுதலை உணர்வையும் மக்களிடையே ஆழமாக விதைத்தன. இவ்வாறான மாற்றங்கள் இடம்பெற்றுவந்த காலத்தில் தோட்டத் தொழிலாளர் நலனை முன்னிலைப்படுத்தி நேரடி அரசியலில் ஈடுபட்ட நடேசய்யர், தேசபக்தன் பத்திரிகையைத் தோட்டத் தொழிலாளரின் அரசியற் குரலாக ஒலிக்கச் செய்துள்ளார்.



தேசபக்தன் ஆசிரியர் தலையங்க முகப்புச் சின்னம்
Image Source - www.namathumalayagam.com

தேசபக்தன் 03.09.1924 அன்று முதன்முதல் மலர்ந்துள்ளது. வாரத்துக்கு மூன்று இதழ்கள் எனத் திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் வெளிவந்த தேசபக்தன் 1929 இல் நாளேடாகித் தன் பயணத்தைத் தொடர்ந்துள்ளது. ஏறக்குறைய ஏழாண்டு காலமாக நீடித்த அப்பயணம், 1931ஆம் ஆண்டுடன் முடிவுக்கு வந்துள்ளது. அது வெளிவந்துள்ள காலம் முழுதும் எவ்வித சமரசமுமின்றி தோட்டத் தொழிலாளருக்கான அரசியலை வீச்சாக முன்னெடுத்துள்ளதை அவதானிக்க முடிகிறது. அதற்கான தேவையும் சூழலும் அக்காலத்தில் கனிந்திருந்துள்ளன.

இந்தியருக்கெனத் தனியான அரசியல் பிரதிநிதித்துவம், தோட்டத் தொழிலாளர் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கான இந்திய அரசின் அழுத்தம், அந்த அழுத்தத்தினால் இலங்கை அரசு முன்னெடுத்த செயற்பாடுகள், இலங்கையில் வாழ்ந்த மேட்டுக்குடி இந்தியரின் தோட்டத் தொழிலாளருக்கு விரோதமான அரசியல் நகர்வுகள் முதலான பல காரணங்களால் 1920 களின் அரசியல் அரங்கில் தோட்டத் தொழிலாளர் பற்றிய உரையாடல்கள் முன்னிலை பெற்றன. ஆனால், அவர்களுக்கெனக் குரல் எழுப்பும் வலுவான அமைப்போ சாதனமோ இருக்கவில்லை. இந்நிலையில் ஆற்றல்மிக்க இதழியலாளனாக விளங்கிய நடேசய்யர் தோட்டத் தொழிலாளரின் குரலை முதன்மைப்படுத்தித் தேசபக்தன் என்ற பத்திரிகையை ஆரம்பித்துள்ளதுடன் தானே அம்மக்களுக்கான ஓர் அமைப்பாக இயங்கியுள்ளார். நேரடி அரசியலில் ஈடுபட முனைந்த நடேசய்யருக்கு வாய்ப்பான களத்தை இவை ஏற்படுத்தின. அதன்மூலம் சட்டநிரூபண சபைக்குத் தெரிவான நடேசய்யர் தன் காலம் முழுதும் சட்டசபையில் தோட்டத் தொழிலாளரின் குரலாய் ஒலித்துள்ளார். அதன் பிரதிபலிப்பு தேசபக்தனில் எதிரொலித்துள்ளது.

காலனிய ஆட்சியாளர்கள், இலங்கையின் சுதேசிய ஆட்சியாளர்கள், இந்திய மேட்டுக்குடி அரசியல் பிரதிநிதிகள், தோட்டத்துரைகள், கங்காணிமார்கள் எனப் பலரும் தோட்டத் தொழிலாளருக்கு எதிரான நடவடிக்கைகளில் முனைப்புடன் ஈடுபட்டு வந்துள்ளதால் அவர்கள் யாவருக்கும் எதிரான குரலை ஏக காலத்தில் வெளிப்படுத்த வேண்டிய தேவை தேசபக்தனுக்கு

இருந்துள்ளது. அதனால் தேசபக்தனுக்கான எதிர்ப்புகளும் வலுவாக இருந்துள்ளன. அவற்றையெல்லாம் எதிர்கொண்டுள்ள தேசபக்தன் குரலற்ற தோட்டத் தொழிலாளரின் குரலாக ஓங்கி ஒலித்துள்ளது. அது ஏற்படுத்திய அதிர்வுகள் அதிகார சக்திகளின் இருப்பினை ஆட்டங்காண வைத்துள்ளன.

தேசபக்தனை ஆரம்பிப்பதற்குத் தொழிலாளர்களுடைய பொருளுதவி முதன்மையானதாக விளங்கியுள்ளமையை முதலாவது இதழிலேயே பதிவுசெய்துள்ள நடேசய்யர், தேசபக்தனுக்கெனத் தனியான அச்சகம் உருவாக்கப்பட்டபோது அதற்குத் 'தொழிலாளர் அச்சுக்கூடம்' எனப் பெயரிட்டுள்ளார். இவை தேசபக்தனுக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பை வெளிப்படுத்தி நிற்கின்றன. தேசபக்தனின் முதலாமாண்டு நிறைவில் தொழிலாளர்பால் அது கொண்டிருந்த அக்கறையை, "இலங்கைவாழ் இந்தியரின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் பெருக்குவதிலும் பக்தன் ஆர்வமுள்ளவன். தோட்டக்காடுகளில் கால்வயிற்றுக்குங்கூடக் கஞ்சியின்றிக் கலங்கியுழலும் ஏழைத்தொழிலாள சகோதரரிடம் பக்தனுக்குள்ள அன்பு அளக்கற்பாலதன்று. அவர்களுடைய நிலைமையும் அவரது சுகவாழ்விற்கியற்ற வேண்டிய மாறுதல்களையும் பரிவோடு ஆராய்ந்து பக்தன் வெளியிட்ட கட்டுரைகள் பலவாகும்" என அழுத்தமாக எடுத்துரைத்துள்ளது.

தேசபக்தன் பத்திரிகை வெளிவந்து மூன்று மாதங்களுக்குள் அப்பத்திரிகை மீதான முறைப்பாடொன்றை 24.12.1924 அன்று தோட்டத்துரைமார் சங்கத்தினர் காலனிய அரசின் செயலாளருக்கு வழங்கியுள்ளனர். இது தோட்டத் தொழிலாளர் விடயத்தில் தேசபக்தன் காட்டிய அக்கறையினால் விழைந்துள்ளது. அவ்வாறே தேசபக்தன் ஆரம்பிக்கப்பட்டு மூன்று நாட்களுக்குள்ளேயே அதற்கு எதிரான செயற்பாடுகளை மேட்டுக்குடி இந்திய அரசியல் பிரதிநிதிகளும் அவர்களைச் சார்ந்த குழுவினரும் மேற்கொண்டுள்ளனர். அதனைத் தேசபக்தன், "நமது பத்திரிகை தோன்றி இது மூன்றாம் நாள். இதற்குள் இந்திய வாக்காளர்களுக்கு சில உண்மைகளை வெளியிட்டு அவர்களது கண்களைத் திறந்துவிட்டது. இப்பத்திரிகை வெளிவருவது சில அபேக்ஷகர்களுக்கு உபத்திரவமாக விருக்கிறது. இதை யுத்தேசித்து சில சூழ்ச்சிகள் கிளம்பிவிட்டன. நமது பத்திரிகையை எப்படியும் கெடுத்திவிட வேண்டும் என இரகசிய வேலைகள் செய்துகொண்டு வரத் தலைப்பட்டுவிட்டார்கள்" (தேசபக்தன் - 08.09.1924) எனப் பதிவு செய்துள்ளது. காலனிய அதிகாரிகள், தோட்டத்துரைகள் என்போருக்கு அப்பால் சக இந்தியரும் - மேட்டுக்குடி இந்தியர் - தோட்டத் தொழிலாளரின் எழுச்சிக்கு முட்டுக்கட்டையாக விளங்கியுள்ளமையையும், தேசபக்தன் அத்தகையோருக்கு எதிராகவும் தொழிற்பட வேண்டியிருந்துள்ளமையையும் இப்பதிவு சுட்டிநிற்கிறது.

சட்டநிரூபண சபைத் தேர்தல் காலத்தில் வெளிவரத் தொடங்கிய தேசபக்தன், தொடக்க காலத்தில் தேர்தலுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. நடேசய்யரும் அத்தேர்தலில் போட்டியிட்டதால் தனக்கான பிரசாரக் கருவியாகத் தேசபக்தனை நன்கு பயன்படுத்தியுள்ளார். வாக்காளரின் கடமை, தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களின் கடமை என்பவற்றை விரிவாக விளக்கியுள்ளதுடன் தன்னுடைய கொள்கை, கடந்த காலத்தில் தான் சமூகத்துக்கு ஆற்றிய பங்களிப்பு, இலங்கையில் இந்தியரின் நன்மைக்கு ஆற்றவேண்டிய காரியங்கள் முதலானவற்றையும் எடுத்துரைத்துள்ளார்.

சட்டநிரூபண சபைத் தேர்தலில் இந்தியப் பிரதிநிதிகளாகப் போட்டியிடுபவர்கள் தேர்தலுக்கு முன்னரும் தேர்தல் காலங்களிலும் மேற்கொண்ட சூழ்ச்சிகளையும் பரந்துபட்ட மக்கள் நலனுக்கு மாறாக அவர்கள் சுயநலத்துடன் செயற்படுவதையும் தேசபக்தன் தொடர்ந்தும் அம்பலப்படுத்தி வந்துள்ளது. அப்பதிவுகள் இலங்கைவாழ் இந்தியரின் வரலாற்று அசைவுகளைப் புரிந்துகொள்ள மிகுந்த பயனுடையவையாக விளங்குகின்றன.

இந்தியப் பிரதிநிதிகளாகப் போட்டியிடுபவர்கள்

ஒட்டுமொத்த இந்தியரையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இல்லை என்பது தேசபக்தனின் பிரதான குற்றச்சாட்டாக விளங்கியுள்ளது. அப்பிரதிநிதிகள் நகரங்களில் வாழும் மேட்டுக்குடி இந்தியரின் பிரதிநிதிகளாக இயங்குவதும், அவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர் நலனைக் கிஞ்சித்தும் கருத்தில் கொள்ளாதிருப்பதும் ஆதாரங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1924 ஆம் ஆண்டுக்கான சட்டநிரூபண சபைக்கு இந்தியப் பிரதிநிதிகளின் தேர்வு தேர்தல் மூலம் இடம்பெறும் எனத் தீர்மானிக்கும் முன்னரே இந்தியருள் சிலர், பல்வேறு சூழ்ச்சிகரமான செயற்பாடுகள் மூலம் அப்பிரதிநிதித்துவத்தைக் கைப்பற்றிக்கொள்ள முயன்றமையையும் தேர்தலில் இல்லாமல் நியமன அடிப்படையில் தெரிவு செய்வதை வலியுறுத்தி, நீண்ட இடைவெளிக்குப்பின் கிடைத்த மிக முக்கிய அரசியல் உரிமையான வாக்குரிமையை மறுதலித்தமையையும் தேசபக்தன் அம்பலப்படுத்தியுள்ளது. சுயநல அரசியலுக்காக ஜனநாயகத்தின் உன்னத வாயிலை, மேட்டுக்குடி இந்தியர் முடக்க முனைந்துள்ளமையை அவர்களின் பிற்போக்கு நிலைப்பாட்டின் குறியீடாகக் கொள்ளலாம்.

நியமன அடிப்படையிலான தெரிவு மறுதலிக்கப்பட்டுத் தேர்தல் என்ற முடிவுக்கு வந்ததன் பின்னர், மேற்படி சூழ்ச்சிக்காரர்கள் வேறு பல தந்திரோபாயங்களை மேற்கொண்டுள்ளனர். அவற்றுள் பிரதானமானவையாக இரண்டினைக் குறிப்பிடலாம். முதலாவது, இந்தியர் யார் என்ற வரையறை. இரண்டாவது, வாக்காளர்களைப் பதிவு செய்யும்போது திட்டமிட்டுப் பலருக்கு வாக்குரிமையை இல்லாமற் செய்தது.

இந்தியருக்கெனப் பிரதிநிதித்துவமும் அப்பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு வாக்குரிமையும் வழங்கியதும் 'இலங்கையில்


தேசபக்தன்
"DESABAKTHAN."
(The Only Tamil Daily Ceylon.)
தொழிலாளர் தொல்லை

ஏ.ஈ.குணசிங்கவை கேலிசெய்து முதற்பக்கத்தில் வெளியிட்ட கேலிசித்திரம்
Image Source - www.namathumalayagam.com

இந்தியர் என்போர் யார்' என்ற வரையறை கொண்டுவரப்பட்டுள்ளது. அதன்போது, இந்தியாவில் பிறந்து, இலங்கையில் வாழும் இந்தியர்களையே இந்தியர் என்று வரையறுத்துள்ளார்கள். இந்நிலையால் இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்தியர், இந்தியர் என்ற வகைப்பாட்டினுள் உள்ளடக்கப்படவில்லை. 1948 ஆம் ஆண்டு பிரஜாவுரிமை சட்டத்தின் மூலம் எவ்வாறு பெருந்தொகையான இந்தியர் நாடற்றவர்களாக்கப்பட்டார்களோ அதற்கு ஒப்பான வகையில் இலங்கையில் பிறந்து வளர்ந்த இந்தியர், இலங்கையராகவோ இந்தியராகவோ உள்வாங்கப்படாது நிர்க்கதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இலங்கையில் ஐரோப்பியர் யார் என்பதற்குப் பின்பற்றப்படும் நெறிமுறைக்கு மாறாக ஒரு தொகுதி இந்தியரை, இந்தியர் அல்ல என வெளியொதுக்கும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள இவ்வரையறையைக்

கண்டித்துள்ள நடேசய்யர், "இலங்கைத் தமிழரின் அனுதாபம் இவர்களுக்கில்லை. சிங்களவர்களுக்கும் அனுதாபம் இல்லை. பிற இந்தியர்களுடன் ஊடாடிக் கலந்துகொண்டு அரசியல் சுதந்திரம் பெறவும் வழியில்லாமல் கவர்ன்மெண்டார் செய்துவிட்டார்கள்" (தேசபக்தன் - 08.09.1924) என அம்மக்களின் அரசியல் இருப்பற்ற நிலையைத் தேசபக்தனில் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார். அத்துடன் மேற்படி உரிமை மறுப்பானது, இலங்கையில் வாழ்ந்த சுயநலங்கொண்ட இந்தியர் சிலராலேயே திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டது என்ற கருத்தையும் அவர் பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

"இந்தியன் என்ற பெயருக்கு விபரீத வியாக்கியானத்திற்குக் காரண பூதர் யார் எனக் கூற வேண்டும். இலங்கை கவர்ன்மெண்டார் அதற்குக் காரணம் என்று சொல்ல மாட்டோம். இந்தியர்களில் சிலர் வேறுசில இந்தியர்களை, சட்டசபைக்கு வருவதினின்றும் விலக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சில காலத்திற்கு முன்னர் ஓர் தீர்மானத்தைக் கொழும்பிலிருந்தும், வதுளையினின்றும் செய்து அனுப்பினார்கள். அந்தத் தீர்மானந்தான் இவ் விபரீத நிலைமைக்குக் காரணம் என்போம்" (தேசபக்தன் - 05.09.1924) என்ற குறிப்பு அதனை மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

இந்திய வாக்காளர்களின் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவைவிட கணிசமாகக் குறைந்துள்ளமைத் தேசபக்தனில் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் அதற்கான காரணங்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. சட்டசபையில் தம் அதிகாரம் இருக்கவேண்டுமென விரும்பிய சிலர், அவர்களின் கட்டளைக்கு இணங்கக் கூடியவர்களையே வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்குத் திட்டமிட்டதாகவும் அதனையொட்டி தத்தம் சாதியினரையும் மதத்தினரையும் வாக்காளர்களாகப் பதிவு செய்ததாகவும் தேசபக்தன் குற்றம்சாட்டியுள்ளது. "சுமார் 30, 000 வாக்காளர்கள் இருக்க வேண்டிய இனத்தவர்களுள் 12, 000 வாக்காளர்கள் தான் இருக்கிறார்கள்" (தேசபக்தன் - 03.09.1924) என்ற அதிர்ச்சியான செய்தியை அது பிரசுரித்துள்ளது. இந்நிலையால் வாக்குரிமை பெற்றோர் இலங்கைவாழ் ஒட்டுமொத்த இந்தியரையும் (61/2 இலட்சம்) கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என்ற வேண்டுகோளைத் தேசபக்தன் அழுத்தமாக முன்வைத்துள்ளது. அத்துடன் வாக்காளர் பதிவில் இடம்பெற்ற சூழ்ச்சியினால் இரு இந்திய உறுப்பினர்களுக்கு அப்பால் மாகாண வாரியான தெரிவில் இந்தியப் பிரதிநிதிகள் தெரிவாகும் வாய்ப்பு இல்லாமலாக்கப்பட்டமையையும் அது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

மலையகத் தமிழரின் மேல்நோக்கிய எழுச்சி மிக மந்தகதியில் இடம்பெற்றமைக்கான சில காரணிகளை மேற்படி கருத்துகளிலிருந்து ஊகித்துக்கொள்ளலாம். இந்தச் சுயலாப அரசியலிலிருந்து மலையக அரசியல் கலாசாரம் இன்னும் வெகுவாக மாற்றமடையவில்லை. அத்துடன் தோட்டத் தொழிலாளருக்கான அரசியல் பிரதிநிதித்துவமும் இன்னும் முழுமைபெறவில்லை. இவற்றை நிகழ்கால வரலாற்று யதார்த்தம் ஏந்தி நிற்கின்றன.

இலங்கையில் இந்தியருக்கான அரசியல் பிரதிநிதித்துவ உருவாக்கத்தில் இந்தியத் தோட்டத் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமை அடிப்படையானதாக விளங்கியுள்ளது. அவர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்துவதற்கு இந்திய அரசு மேற்கொண்ட அழுத்தங்கள் அப்பிரதிநிதித்துவ தோற்றத்துக்குப் பங்களித்துள்ளன. இருந்தபோதிலும் தொடக்க காலத்தில் இந்தியப் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் எவரும் தோட்டத் தொழிலாளரைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை. அவர்கள் நகரங்களில் வாழ்ந்த மேட்டுக்குடி இந்தியரின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டுள்ளதுடன் அரசியல் உரிமை - அரசியல் பங்குபற்றுதல் தோட்டத் தொழிலாளராக விளங்கிய இந்தியரைச் சென்றடையா வண்ணம் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இவற்றினை வன்மையாகக் கண்டித்துள்ள தேசபக்தன், இந்தியப் பிரதிநிதித்துவம் என்பது தோட்டத் தொழிலாளர் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த இந்தியரையும்

கருத்தில்கொண்டதாக அமைய வேண்டிய தேவையை வலியுறுத்தி வந்துள்ளது. இதன் நீட்சியாக இந்தியப் பிரதிநிதிகள் தோட்டத் தொழிலாளர் நலனுக்கு எதிரான வகையில் முன்னெடுக்கும் செயற்பாடுகளை அம்பலப்படுத்தியுள்ள தேசபக்தன், அத்தகைய பிரதிநிதிகளின் போலிமையை - சுயநலத்தை மக்களுக்கு வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

இந்தியப் பிரதிநிதிகளாகச் சட்டநிரூபண சபையில் அங்கம் வகித்த ஐ.எக்ஸ். பெரேரா, சுல்தான் ஆகியோரின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளைச் சிறப்பித்துள்ள அதேவேளை, அவர்களின் தோட்டத் தொழிலாளர் விரோதமான செயற்பாடுகளுக்குத் தேசபக்தன் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்து வந்துள்ளது. சான்றாக, தேசாதிபதி மனிங் அவர்களுக்கு நிகழ்த்தப்பட்ட பிரிவு உபசார நிகழ்வில் இந்தியப் பிரதிநிதி ஐ.எக்ஸ். பெரேரா கலந்துகொண்டு இந்தியப் பிரதிநிதிகள் சார்பில் வாசித்தளித்த பிரிவு உபசார அறிக்கை பற்றிய தேசபக்தன் விமர்சனங்களையும் அவை குறித்த ஐ.எக்ஸ். பெரேராவின் மறுப்புகளுக்கான எதிர்வினைகளையும் சுட்டிக்காட்டலாம்.

மனிங் அவர்களுக்கான பிரிவு உபசாரத்தின்போது ஐ.எக்ஸ். பெரேரா, இந்தியர் சார்பாக வாசித்தளித்த பத்திரத்தில் "கவர்னர் துரையவர்களே! தங்களுடைய ஆக்ஷியில், தங்களது பெருமுயற்சியால் இந்தியத் தொழிலாளரின் நிலைமை எவ்வளவோ செம்மைப்பட்டிருக்கிறது. முன்பு அவர்கட்கிருந்த கஷ்டங்களெல்லாம் அகற்றப்பட்டுப் போயின. அளவில்லாத கஷ்டங்களைத் தொழிலாளிகளனுபவித்த காலம் போய், இப்போது இலங்கைக்கு வரும் கூலிகள் சந்தோஷமாயும் திருப்தியுடனும் ஊக்கத்துடனும் வசிக்குங் காலமாயிருக்கிறது. இது தங்களுடைய மேன்மையான தயாள குணத்தின் பலன்" (தேசபக்தன் - 06.04.1925) என இடம்பெற்றுள்ளமையைத் தொழிலாளர் தளத்தில் நின்று விமர்சனத்துக்குள்ளாக்கியுள்ள தேசபக்தன், அதனைக்கொண்டு ஐ.எக்ஸ். பெரேராவின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்தியுள்ளது. அது தொடர்பில் "எவ்வகையில் தொழிலாளரின் நிலைமை செம்மைப்பட்டுவிட்டது? கால் வயிற்றுக்கும் கஞ்சியின்றி, பனியிலும் மழையிலும் நனைந்து, வெயிலிலுலர்ந்து, காஞ்சக் கருவாடு போல், 10 மணி நேரம் வரை கால்களுங் கைகளுஞ் சோர்ந்து விழும்படி, உழைத்து, 40 சதம் சராசரி ஊதியம் பெற்றுக் காப்பாற்ற ஒருவருமின்றிக் கலங்கியுழலும் நமது இந்தியச் சகோதரத் தொழிலாளரின் மேல் இந்தியத் தலைவர்கள் காட்டும் கருணையிதுவோ? தேசத் தொண்டாற்றும் முறையிதுதானோ? தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளவிகிதம் சிறிதும் காணாதெனக் கிளர்ச்சி செய்ததின் பலனாக அதிகாரவர்க்கத்தாரும்கூடச் சிறிது முயற்சி செய்து, ஊதியத்தைச் சொற்ப அளவு உயர்த்த நினைத்திருக்கும் காலத்தில், இப்போலித் தேசத் தலைவர், 'தொழிலாளர் திருப்தியுடனும், சந்தோஷத்துடனும் வாழ்கின்றனர்' என மனங்கூசாது எழுதுவித்திருப்பதைக்காண நம் மனம் பதைபதைக்கின்றது" எனத் தேசபக்தன் முன்நிறுத்தியுள்ள வாதங்கள், இந்திய மேட்டுக்குடி அரசியலை அப்பட்டமாகப் போட்டுடைத்துள்ளன.

ஐ.எக்ஸ். பெரேராவை முன்நிறுத்தி இந்திய மேட்டுக்குடி அரசியல் நிலைப்பாடுகள்மீது அறம்சார்ந்த கேள்விகளை எழுப்பியுள்ள தேசபக்தன், அவருக்கான ஆலோசனையை "ஐயா, ஏழைத் தொழிலாளருக்குப் பரிந்து பேசுகிறோமெனப் பறையடித்துச் சுயநல துரந்தர்களாய்ப் பட்டமும் பணமும் சேகரித்த பெரியோரின் கெதி உமக்கு இன்னும் தெரியாமலா போய்விட்டது? ஈட்டிய பணமும் கட்டிய (ஸர்) பட்டமும் அன்னாருடன் கூடச்சென்றனவோ? அவர்கட்குக் கிடைத்த இலாபமென்ன? ஏழைகட்கு வஞ்சகஞ் செய்த வசையே யன்றோ" எனச் சாதாரண மக்கள் மீதான வாஞ்சையை ஏற்படுத்தும் வகையிலான அறவுரையாக முன்வைத்துள்ளது. அந்த உணர்ச்சிக் கொதிப்பில் அடங்கியுள்ள தொழிலாளர் மீதான பரிவு, தேசபக்தன் முழுதும் வியாபித்திருப்பதைக் காணலாம்.

தேசபக்தனின் தொழிலாளருக்கான அரசியற் குரல் இலங்கையுடன் மட்டுப்பட்டதாக அமையவில்லை. அதன் அதிர்வுகள் தமிழ்நாட்டிலும் எதிரொலித்துள்ளன. தேசபக்தன் கட்டுரைகள் சில தமிழ்நாட்டின் சுதேசமித்திரனில்

மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறே தோட்டத் தொழிலாளர் தொடர்பான சுதேசமித்திரன் கட்டுரைகளைத் தேசபக்தன் மறுபிரசுரம் செய்துள்ளது. மனிங் அவர்களின் பிரிவு உபசார நிகழ்வு தொடர்பில் தேசபக்தனில் வெளிந்த 'வேஷக்காரரை நம்பாதே' என்ற குறிப்பு சுதேசமித்திரனில் வெளிவந்ததும் அதற்கான மறுப்பினை ஐ.எக்ஸ். பெரேரா சுதேசமித்திரனுக்கு வழங்கியுள்ளதுடன் இந்து பத்திரிகையிலும் தன் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். சுதேசமித்திரனில் வெளிவந்த ஐ.எக்ஸ். பெரேராவின் பதிவைத் தேசபக்தனில் பிரசுரித்துள்ள நடேசய்யர் அதற்கான எதிர்வினையை, 'சூரிய ஒளியை மறைப்பாருண்டோ' என்ற தலைப்பில் நிகழ்த்தியுள்ளதுடன் இந்து பத்திரிகையில் இடம்பெற்றுள்ள ஐ.எக்ஸ். பெரேராவின் கருத்துகளையும் கேள்விக்குட்படுத்தியுள்ளார். இவை இலங்கைத் தோட்டத் தொழிலாளர் தொடர்பில் தேசபக்தன் எழுப்பிய குரல் தமிழ்நாட்டிலும் இந்திய அளவிலும் வியாபகம் பெற்றுள்ளமைக்குச் சான்றாகும். தொழிலாளரின் நல்வாழ்வுக்கான இந்தியாவின் அழுத்தங்களை மிகுவிப்பதற்கு அவை உந்துதலை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை.

தேசபக்தன் தோட்டத் தொழிலாளரின் சம்பள உயர்வு குறித்து மிகுந்த அக்கறை காட்டியுள்ளதை அவதானிக்க முடிகிறது. தோட்டத் தொழிலாளரின் பொருளாதார நிலைமை சான்றுகளுடன் விரிவாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளதுடன் தொழிலாளரின் வேதனம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்கான நியாயமான காரணங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு உருவாக்கப்பட்ட குழுக்களுடைய அறிக்கைகள் விமர்சனபூர்வமாக ஆராயப்பட்டு அவற்றின் போதாமைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. ஜோன்ஸ் பேட்மென், டர்னர் குழு அறிக்கை, ரெங்கநாதன் அறிக்கை முதலானவற்றைத் தொழிலாளரின் யதார்த்த வாழ்வுடன் இணைத்து மதிப்பிடப்பட்ட பதிவுகள் தேசபக்தனில் இடம்பெற்றுள்ளன.

சம்பள நிர்ணயக் குழுக்களில் தோட்டத் தொழிலாளர் சார்பாக எவரும் இடம்பெறவில்லை, அக்குழுவினர் தோட்டத் தொழிலாளரின் சம்பளத்தை நிர்ணயிப்பதற்கு அடிப்படையாக அமைகின்ற விடயங்களில் அக்கறை செலுத்தவில்லை, தொழிலாளரின் உண்மை நிலைக்கு மாறான செய்திகள் அறிக்கைகளில் இடம்பெற்றுள்ளன முதலானவற்றைச் சுட்டிக்காட்டி அவ்வறிக்கைகள் பிற்போக்கானவை என்பதைத் தேசபக்தன் வலுவாக முன்நிறுத்தியுள்ளது. அதேவேளை, அந்த அறிக்கைகளை நியாயப்படுத்தக்கூடிய வகையில் செயற்பட்ட இந்திய முகவரின் தோட்டவுடைமையாளர் சார்பையும் அது அம்பலப்படுத்தியுள்ளது.

தேசபக்தன் வெளிவந்த காலம் முழுதும் தோட்டத் தொழிலாளருக்கு எதிரான எல்லா நகர்வுகளையும் விமர்சனத்துக்குள்ளாக்கி வந்துள்ளது. தோட்டத் தொழிலாளருக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அச்சமின்றிக் கண்டித்துள்ளதுடன் அத்தகையோர் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொழிலாளர்களை எவ்விதம் பாதிக்கின்றன என்பதையும் அது விரிவாக எடுத்துரைத்துள்ளது; பத்திரிகை செய்திகள், சிறப்புக் குழுக்களின் அறிக்கைகள், தனிப்பட்ட நபர்களின் கருத்துகள் முதலானவற்றில் தோட்டத் தொழிலாளர் தொடர்பில் இடம்பெறும் செய்திகளை விரிவாக மதிப்பிட்டு, அவற்றின் பிற்போக்கு அம்சங்களை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது. எடுத்துக்காட்டாக, மார்க்கஸ் பெர்ணாண்டோ தன்னுடைய உரையொன்றில் தோட்டத் தொழிலாளரின் வரவு - செலவுகளைக் குறிப்பிட்டு, தோட்டத் தொழிலாளி ஒருவர் வருடமொன்றுக்கு 24 ரூபாய் சேமித்துவிடலாம் எனக் கணித்துள்ளமையை 'இவர் அறிவரோ' என்ற தேசபக்தன் ஆசிரியத் தலையங்கம் விரிவாக விவாதித்துள்ளது. அக்குறிப்பு மார்க்கஸ் பெர்ணாண்டோவின் உரை ஆய்வியல் அடிப்படைகளுக்கு மாறாக எடுகோள்களை

முன்நிறுத்தி நிகழ்த்தப்பட்டுள்ளது என அவ்வுரையின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தோட்டத் தொழிலாளர் தொடர்பான சட்ட ஆக்கங்கள், சட்ட மன்ற வாதங்கள் முதலானவற்றைத் தொழிலாளர்மயப்படுத்தலையும் அவற்றின் போதாமைகளைக் கேள்விக்குட்படுத்தலையும் தேசபக்தன் அக்கறையுடன் முன்னெடுத்து வந்துள்ளது. சான்றாக, துண்டுமுறை நீக்கப்பட்ட சட்டம் பற்றிய பதிவுகளைக் குறிப்பிடலாம். துண்டு முறையினால் தொழிலாளர் அடைந்த துயர், துண்டுமுறை நீக்கச் சட்டம் கொண்டுவரப்பட்ட பின்னணி, துண்டுமுறை நீக்கப்பட்ட பின்னர் தொழிலாளர்களின் கடன் நிலைமை, துண்டுமுறை நீக்கத்தால் கங்காணிகள் அடைந்த இழப்பு முதலான பல விடயங்களில் தேசபக்தன் அக்கறை செலுத்தியுள்ளது.

தொழிலாளர் நலனுடன் தொடர்புடைய சட்டங்களை மக்கள் மயப்படுத்துவதிலும் தேசபக்தன் பொறுப்புணர்வுடன் செயலாற்றியுள்ளது. ஆங்கில மொழியில் உருவாக்கப்படுகின்ற சட்டங்களும் அவை பற்றிய வியாக்கியானங்களும் சாதாரண தொழிலாளர்களுக்கு அந்நியப்பட்டவைகளாக விளங்கியுள்ளன. அந்த இடைவெளியை நீக்க முனைந்த தேசபக்தன் தொழிலாளருடன் தொடர்புடைய சட்டங்களை எளிய மொழியில் மக்களிடம் கொண்டுசேர்க்க முனைந்துள்ளது. அத்தோடு சர்வதேச ரீதியாக நிகழ்ந்தேறி வருகின்ற தொழிலாளர் எழுச்சியைத் தேசபக்தன் இலங்கைத் தோட்டங்களுக்குள் அறிமுகப்படுத்தி வைத்துள்ளதுடன் தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் அமைப்பாக வேண்டிய தேவையையும் எடுத்துரைத்துள்ளது. அது தொடர்பில் தேசபக்தன் கொண்டிருந்த தொடர் இயக்கமே பின்னர் 1931 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளருக்கான முதலாவது தொழிற்சங்கமொன்று உதயமாவதற்கான அடிப்படைகளை இட்டன எனலாம்.

தோட்டத் தொழிலாளருக்கான அரசியற் குரலாக ஒலித்தது மட்டுமன்றி அம்மக்களை அரசியல் மயப்படுத்தும் செயற்பாட்டையும் அவர்களிடையே சமூக சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பும் முயற்சியையும் தேசபக்தன் மேற்கொண்டுள்ளது. அவை யாவற்றின் தாக்கங்களாலே நடேசய்யர் என்ற பத்திரிகையாளர் இந்தியர் சார்பான பிரதிநிதியாகச் சட்டநிரூபண சபைக்குத் தெரிவாக முடிந்துள்ளது. அவரின் சட்டமன்ற பிரவேசத்துடனேயே தோட்டத் தொழிலாளரின் உண்மையான அரசியல் பிரதிநிதித்துவம் ஆரம்பித்துள்ளது. அவ்வகையில் தோட்டத் தொழிலாளர்சார் அரசியல் பிரதிநிதித்துவத்தை வெற்றிகரமாகச் சாத்தியமாக்கியதில் தேசபக்தனின் பங்கும் பணியும் முதன்மையானவையாக விளங்கியுள்ளன.

தேசபக்தன் பத்திரிகைக்கு முன் இலங்கைவாழ் இந்தியரை மையப்படுத்தி ஜனமித்திரன், ஆதிதிராவிடன், தேசநேசன் முதலான பல தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவந்துள்ள போதிலும் அப்பத்திரிகைகள் எவையும் தோட்டத் தொழிலாளரை முதன்மைப்படுத்தியவையாக, அவர்களின் உரிமைகளுக்கான குரலை அழுத்தமாக முன்வைப்பவையாக அமையவில்லை. நடேசய்யர் முதலில் பணியாற்றிய தேசநேசன் பத்திரிகையே தோட்டத் தொழிலாளருக்கு முன்னுரிமை அளிக்கவில்லை. கங்காணிமாருக்கு எதிராகத் தொழிலாளரால் எழுதப்பட்ட இரண்டு கடிதங்களைத் தேசநேசனில் பிரசுரித்தமையையே அதன் உறுப்பினர்கள் ஆதரிக்கவில்லை என நடேசய்யர் பதிவு செய்துள்ளார். இந்தப் பின்னணியில் பார்க்கின்றபோது தோட்டத் தொழிலாளருக்கு முன்னுரிமை கொடுத்த முதல் பத்திரிகையாகத் தேசபக்தனே விளங்குகிறது. அப்பத்திரிகையே அம்மக்களுக்கான முதல் அரசியற் குரலாகவும் ஒலித்துள்ளது.

தேசபக்தன் வெளிவந்து நூறு ஆண்டுகளாகின்ற இக்காலம் வரை அரசியற் தளத்தில் தொழிலாளரின் குரலாய்த் தேசபக்தன் சாதித்த அளவுக்கு வேறு எந்தப் பத்திரிகைகளும் வீரியமான அறுவடையைப் பெறவில்லை; அதன் உச்சத்தை அடையவில்லை. அதேபோல நடேசய்யருக்கு இணையான வகையில் தொழிலாளர் குரலாக ஒலித்த ஆற்றல்மிக்க பத்திரிகையாளர் என வேறு எவரையும் அடையாளப்படுத்தவும் முடியவில்லை.

‘இலங்கையில் தமிழ் பௌத்தம்’ என்னும் இப் புதிய தொடரில் ஏறக்குறைய 12 வரையான ஆய்வுக் கட்டுரைகளை பிரசுரிக்கவுள்ளோம். இக்கட்டுரைகளில் சிலவற்றைத் தவிர பெரும்பாலானவை ஆங்கிலத்தில் எழுதப்பட்டு ஆய்விதழ்களில் பிரசுரிக்கப்பட்டவை. ஆங்கிலக் கட்டுரைகள் மொழிபெயர்ப்பு, தழுவலாக்கம், சுருக்க அறிமுகமும் விமர்சனமும் என்ற மூவகையில் அமைவனவாக இருக்கும். சி. பத்மநாதன், ஆ. வேலுப்பிள்ளை, பீட்டர் ஷல்க், சிவா. தியாகராஜா, பரமு. புஷ்பரட்ணம், அகிலன் பாக்கியநாதன் ஆகியவர்களின் கட்டுரைகள் இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலையை விளக்குவனவாக அமையவுள்ளன. இலங்கையில் தமிழ் பௌத்தம் பற்றிய தமிழர் நோக்கு நிலை, இலங்கையின் கடந்த கால வரலாறு முழுவதும் மேலாதிக்கம் பெற்றுள்ள சிங்கள பௌத்த இனக் குழுமத்தின் முழுமையான உரிமையும் உடமையும் என்ற நோக்கிலான கருத்தியலுக்கு மாறுபட்டது என்று சுருக்கமாகக் கூறலாம். சுனில் ஆரியரட்ண, ஜி.வி.பி. சோமரத்தின, எலிசபெத் ஹரிஸ் ஆகிய மூன்று ஆய்வாளர்களின் கட்டுரைகளும் இத்தொடரில் இடம்பெறவுள்ளன. இம் மூவரது கட்டுரைகளும் சிங்கள பௌத்த நோக்கு நிலை தமிழர் நோக்கு நிலை என்ற இரண்டையும் விமர்சன நோக்கில் புரிந்துகொள்ள உதவுவன.

● ஜெகநாதன் அரங்கராஜ்



முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். ‘செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு’ என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.

# பௌத்தமும் ஈழமும்

## பகுதி - 1

தமிழகத்தில் வழங்கும் சமயங்களினைப் புறத்தே இருந்து வந்த சமயங்கள், அகத்தே நிலவிய சமயங்கள் எனும் இரு பிரிவுகளில் அடக்கலாம். சமணம், பௌத்தம் முதலானவை சங்ககால தமிழ்ச் சமூகவியலில் புறத்தேயிருந்து வந்த பெருஞ் சமயங்களாகும். ஆசிவகம் தமிழகத்திலிருந்தே நாவலத்தீவு முழுதிற்கும் பரவிற்று என்று ஒரு சாரரும், வடகோடியிலிருந்தே தமிழகம் போந்ததென்று ஒருசாரரும் குறிப்பிடுவர். புறச்சமயங்கள் தமிழ்த் தாயகங்களுக்கு எவ்வகையில், எவ்விடத்தின் வழிநுழைந்தன என்பனவற்றினைக் குறித்து ஆய்ந்து அறிந்து கொள்ளுவதற்கு, அச் சமயங்களின் தோற்றுவாய் நிலைய, அவை தமிழ்ச் சமுதாயத்தில் பெற்ற பரவலாக்கம், அதன் செவ்வியல் ஆளுமைக்கால வரலாறு, போன்றனவற்றை அறிவது இன்றியமையானதாகும். இதன்வழி கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே தமிழகத்தின் கொங்குப் பகுதியின் வடபால் உள்ளதும், பண்டைய எருமைநாடு என்று அழைக்கப்பட்டதுமான மைசூர் பீடபூமியின் ‘சரவணபெலகோலா’ எனும் இடத்தில் மையம் கொண்டிருந்த சமணம், மேயாற்றுக் கணவாயைக் கடந்து கொங்குநாட்டில் முதலில் நுழைந்தது. விசயமங்கலம், பூந்துறை, திங்களூர் முதலான இடங்களில் தலமமைத்துக் கோலோச்சியது. இதன் விளைவால் கொங்குநாட்டு வேளிர் தலைவன் சமணத்தைச் சார்ந்து பெருங்கதை எனும் சமண இலக்கியம் செய்தமையும், கொங்கிலிருந்த சமணம் பாண்டியநாடு முழுதும் பெரிதும் பரவியமையும், பின் தமிழகம் முழுதும்

பரந்தமையும் அறிந்தமையே. சமண முனிவர்கள் கடல் கடக்கக்கூடாது எனும் விதி சமணத்தைக் கடல் கடந்து ஈழத்தில் பரவுவதைத் தடை செய்தது. ஆயினும் சமண வாணிகர்கள் இலங்கையில் பெரிதும் இருந்து, ஈழத்தில் மேலாண்மை பெற்றமையை ஈழத்தின் கிழக்குக் கரையோரம் திருகோணமலைக்கும் மட்டக்களப்பிற்கும் இடைப்பட்ட பழைய வாணிகப் பாதையில் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு அறியலாம்.

தமிழகத்தின் மேற்குப் பகுதிகளில் சமணச் சின்னங்கள் மிகுந்து கிடைப்பதைப் போன்றே தமிழகத்தின் கிழக்குப் பகுதியில் பௌத்த சின்னங்கள் மிகுந்து கிடைப்பதினைக் காணலாம். பௌத்தம் தமிழகத்தின் கிழக்குப் பகுதியினை ஒட்டியே பரவத் தலைப்பட்டமையைப் பல்வேறு சான்றுகளின் வழி உணரலாம். காஞ்சிபுரம், மாங்காடு, இரண்டாங்காடு, ஆவூர், கூவம், ஞாயர், நாவலூர், பல்லாவரம், திருப்பாதிரிப்புலியூர், சங்கமங்கை எனத் தொடர்ச்சியான தொண்டை மண்டல ஊர்களிலும், காவிரிப்பூம்பட்டினம், பூதமங்கலம் (கோயில்வெண்ணி), புத்தமங்கலம், சங்கமங்கலம், போதிமங்கலம், திருவிளத்துறைக் கோயில், கும்பகோணம், திருவலஞ்சுழி, பட்டீச்சுரம், எலயனூர், பொன்பற்றி, புத்தகுடி உறையூர், பெருஞ்சேறு, கோட்டப்பாடி, மயூரபட்டணம், நாகைப்பட்டினம் முதலாய ஊர்களைத் தலைமையாகக் கொண்டு சோழ மண்டலத்திலும் பௌத்தம் பரவலாக்கம் பெற்றது.

பாண்டிய மண்டலத்தில் மதுரை, அரிட்டாபட்டி, பொதிகை, தஞ்சை (தஞ்சாகூர்), திருமாலிருஞ்சோலை, தென்கரை முதலான ஊர்களையும் பௌத்தம் தலமாகக் கொண்டு செழித்திருந்தது. ஆனால் மேலைக்கரையில் வஞ்சிமாநகர் தவிர மற்றைய இடங்களில் பௌத்தம் பெரிதும் பரவியதாக அறியக் கூடுதலில்லை. ஆனால், சமணம் செழித்திருந்தது. ஈழமண்டலத்தில், நையினாதீவு (மணிபல்லவம்), காரைத்தீவு, திருகோணமலை நெடுந்தீவு, சாவகச்சேரி, கந்தரோடை முதலான தலங்களில் தமிழ் பௌத்தம் செழித்திருந்தது. இவ் வகைத் தலங்களையே காஞ்சியிலிருந்து நெல்லைவரை கிழக்குக் கடற்கரை வாயிலாகப் பௌத்தத் துறவிகள் பயணம் செய்து வணங்கினர். இதனை யுவான் சுவாங் போன்ற வெளிநாட்டுத் துறவிகளின் பயணப் பாதைகளினை ஆய்வதன் வழியறியலாம்.

கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகன் காலம் தொட்டே தமிழகத்தில் பௌத்தம் மக்கள் செல்வாக்கும், மன்னர்களின் செல்வாக்கும் பெற்ற பெருஞ் சமயமாக தமிழ் பௌத்தம் விளங்கிற்று. அதே காலக்கட்டத்தில் தமிழகத்திலிருந்து ஈழத்தில் உள்ள தமிழர்களிடம் பரவி, பிறகு சிங்களரிடமும் பரவியிருக்க வேண்டும் எனக் கருத இடமுண்டு. ஆனால், சிங்கள நூலான மகாவம்சம், “மூன்றாம் பௌத்த மாநாடு, மௌரியப் பேரரசின் தலைநகரான பாடலிபுத்திரத்தில், அசோகரின் ஆதரவில், மெக்கலபுத்த திஸ்ஸ எனும் தேரரின் தலைமையில் கூடி, பௌத்த மதத்தினைப் பரப்புதற் பொருட்டுப் பல்வேறு நாடுகளுக்கும் பிக்குகளை அனுப்புவதாக முடிவாக்கியது. மாநாட்டு முடிவின்பின் காஸ்மீரம், காந்தாரம் எனும் நாடுகளுக்கு மஜ்ஜந்திகர் எனும் பிக்குவும், மகிஷ மண்டலத்துக்கு மாகதேவர் எனும் பிக்கும், அபரந்தக நாட்டிற்குத் தம்மரக்கிதர் எனும் பிக்குவும், வனவாசி நாட்டிற்கு ரச்சிதர் எனும் தேரரும், மகாராட்டிர தேசத்திற்கு மகாதம்மரக்கிதர் எனும் தேரரும், யோனதேசத்திற்கு மாகரக்கிதர் எனும் தேரரும் அனுப்பப்பட்டனர். இமாலயத்தைச் சேர்ந்த நாடுகளுக்கு மஜ்ஜிம எனும் தேரரும், சுவர்ணபூமி எனும் நாட்டிற்குச் சோனர், உத்திரர் என்னும் தேரர்களும் அனுப்பப்பட்டனர். பெரிய தேரராகிய மகிந்தரும் அவரின் சீடர்களாகிய இட்டியர், உத்தியர், சம்பலர், பத்தசாலர் என்பவர்களும் இலங்கைத் தீவிற்குப் பௌத்த மதத்தைப் பரவச் செய்ய அனுப்பப்பட்டனர்.

மகிந்தர் முதலியவர்கள் தாம் அடைந்திருந்த இருத்தினாலே ஆகாய வழியாகப் பறந்து இலங்கையை அடைந்தனர்." என்று கூறுகிறது (12 ஆம் அதிகாரம்). பௌத்த மத விரிவாக்கத்திற்காகப் பிக்குகள் அனுப்பப்பட்டதாக மகாவம்சம் கூறும் நாடுகளின் பட்டியலில் தமிழ்நாடுகள் எதுவுமில்லை. மேலே குறிப்பிட்ட நாடுகளோடு (யோனதேசம்) யவனநாடு முதலிய தூர நாடுகளுக்கும், தமிழ் நாடுகளுக்கும் பிக்குகளை அனுப்பியமையைப் பின்வரும் அசோகச் சாசனங்களின் வழியறியலாம்.

குஜராத்தின் சௌராஷ்டிரப் பகுதியில் உள்ள கிர்னார் நகருக்கருகிலுள்ள பாறையில் எழுதப்பட்டுள்ள அசோகக் கல்வெட்டில் பின்வரும் பகுதி காணப்படுகிறது:

"காருண்யமுள்ள தேவனாம்பிரியராகிய அரசர் பெருமானுடைய (அசோகரின்) ஆட்சிக்குட்பட்ட எல்லா விடங்களிலும் இவ்வெல்லைக்கு அப்பாற்பட்ட சோழ, பாண்டிய, சத்தியபுத்திர, கேரளபுத்திர தேசங்களிலும், தாமிரபரணியிலும் (இலங்கை), யவன அரசனாகிய அண்டியொகஸ் ஆட்சிசெய்யும் தேசத்திலும், அதற்கப்பாற்பட்ட தேசங்களிலும் காருண்யமும் மேன்மையும் பொருந்திய அரசரால் இரண்டு வித மருத்துவச் சிகிச்சைகள் ஏற்படுத்தப்பட்டன. அவை, மக்களுக்கு மருத்துவம், கால்நடைகளுக்கு மருத்துவம் என்னும் இருவகை மருத்துவ நிலைகளாம்."

இதற்கடுத்து மூன்றாம் பாறைக் கல்வெட்டில், தமிழகத்திலும் இலங்கையிலும் பௌத்தத்தைப் பரப்பிய செய்தி குறிப்பிடப்படுகின்றது. ஆனால், பின்வரும் மூன்றாம் பாறைக் கல்வெட்டில் சேர (கேரள புத்திர) தேசம் விடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இச்சாசனம் கி.மு. 258 இல் எழுதப்பட்டது.

"தரும விஜயம் என்னும் வெற்றியே மாட்சிமைமிக்க அரசரால் (அசோக மன்னரால்) முதற் தரமான வெற்றியென்று கருதப்படுகின்றது. இந்த வெற்றி இந்த இராச்சியத்திலும், இதற்கப்பாற்பட்ட அறுநூறு யோசனைத் தூரத்திலுள்ள அண்டியொகஸ் என்னும் யவன அரசனுடைய தேசத்திலும், அதற்கு அப்பால் டாலமி, அண்டிகொனஸ் மகஸ், அலெக்ஸாந்தர் என்னும் பெயருள்ள நான்கு அரசர்களின் தேசங்களிலும், இப்பால் தெற்கேயுள்ள சோழ, பாண்டிய, தாமிரபரணி (இலங்கை) தேசங்கள் வரையிலும் அரசருக்கு அடிக்கடி கிடைத்தது."

மேற்கண்ட இரண்டு கல்வெட்டுக்களிலும் சோழ, பாண்டிய நாடுகள் எனும் தமிழ் நாடுகளை அடுத்தே இலங்கை குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி தமிழ் நாடுகளுக்கு அடுத்தே இலங்கைக்குச் சமயக் குழுக்களை அசோக மன்னர் அனுப்பினார் என்பதனை அறியமுடிகின்றது.

"பர்மா தேசத்துப் பௌத்தப் பிக்கு பரம்பரையைக் கூறுகின்ற வரலாறு (Talang Records) காஞ்சிபுரத்துக்கு அருகிலே பதரதிட்டை என்னும் இடத்தில் அசோக சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட விகாரையில் தம்மபாலர் என்னும் பௌத்தப் பிக்கு வசித்திருந்தார் என்று கூறுகிறது. இந்தத் தர்மபாலர் என்பவர் பேர்போன ஆசாரிய தர்மபாலர் ஆவார். இவர், பௌத்த வேதமாகிய திரிபிடகத்தின் சில பகுதிகளுக்குப் பாளி மொழியில் உரை எழுதியிருக்கிறார். இவர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இருந்தவர். தாம் எழுதிய நூலில் அசோகச் சக்கரவர்த்தியால் கட்டப்பட்ட விகாரையில் தாம் தங்கியிருந்து இந் நூலை எழுதியதாகக் கூறியிருக்கிறார்1". இப்படியான சான்றுகள் உள்ளபோது, மகிந்தர் ஆகாய வழியாகச் சிங்கள நாட்டை வந்தடைந்தார் என்பதனை எவ்வகையில் ஏற்பதென்பதோ? ஆனால் மகிந்தர் தமிழகம் போந்து, பின்னர் இலங்கை அடைந்தமையை ஆய்வின் வழி உணரவியலும். அதற்கான மேலும் பல சான்றுகள் உண்டு.

> "பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
> அணிதிகழ் நீழ லறவோன் றிருமொழி
> அந்தர சாரிக ளறைந்தனர் சான்றும்
> இந்திர விகார மேழுடன் போகிப்"
>
> – சிலப்பதிகாரம் – 10: 11–14

எனும் சிலப்பதிகார அடிகளில் காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்ததாகக் கூறப்படும் ஏழு இந்திர விகாரைகள் மகிந்தனால் கட்டப்பட்டதாக அறிஞர்கள் கூறுவர். மேலும், அசோகரும், மகிந்தர் எனும் மகேந்திரரும் தமிழகத்தில் கட்டிய விகாரைகள் பல இருந்தமைக்கான சான்றுகள் பல உண்டு.

“தலைநகருக்கு (காஞ்சி) அருகில் தென்திசையில் மிகவும் புகழ்பெற்ற ஒரு பெரிய மடம் இருந்தது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த மிகச் சிறந்த அறிஞர்கள் அடிக்கடி அந்த மடத்தில் கூடினார்கள். அந்த மடத்தில் நூறடிக்கு மேல் உயர்ந்து நின்ற அசோகத்தூபி ஒன்று இருந்தது. அந்த இடத்தில் புத்தர் ஒருமுறை தீர்த்தங்கரர்களோடு வாதிட்டு அவர்களை வென்று, மக்கள் பலரைத் தம்முடைய மதத்தில் சேர்த்துக் கொண்டார்.” என்று அசோகர் காஞ்சிபுரத்தில் புத்தமடத் தூபி அமைத்தமை குறித்து யுவாங் சுவாங் குறிப்பிடுகிறார்2. “தலைநகருக்குக் (மதுரை) கிழக்கில் அசோகருடைய தம்பி மகிந்தன் கட்டிய பழம் புத்தமடம் ஒன்று இருந்தது. ஆனால், அது இடிந்து போயிருந்தது. கடைக்காலும் ஒரு தூபியுமே எஞ்சியிருந்தன. மடத்திற்குக் கிழக்கே கட்டப்பட்டிருந்த அந்தத் தூபியின் கவிகை மாடம் மட்டும் கண்ணுக்குத் தெரிந்தது. ஏனைய பகுதிகளை மண் மூடிவிட்டது. அந்த இடத்தில் புத்தர் தம்முடைய மதத்தில் திக்கற்ற மக்களைச் சேர்த்துக் கொண்டார்.” என யுவாங்சுவாங் மேலும் குறிப்பிடுகிறார். மேற்கண்ட கூற்றுகளின் வழி மகிந்தர் தமிழகத்தில் பல பௌத்தப் பள்ளிகளைக் கட்டியிருந்தார் என்பதினை அறியலாம். இதனால் தமிழகத்திற்குப் பௌத்த மதத்தினைப் பரப்புதற் பொருட்டு மகிந்தர் வந்தார் என்பது விளங்கும். தமிழகம் வந்த மகிந்தர், தமிழகத்திலிருந்து எட்டுக்கல் தொலைவு உள்ள இலங்கைக்கு, தமிழகத்திலிருந்து செல்லாமல், மீண்டும் பாடலிபுத்திரம் சென்று பின் வான் வழியில் சென்றார் என்பது ஏற்புடையதாகா. தமிழகத்திலிருந்தே இலங்கைக்குச் சென்றார் என்பதே பொருத்தமானதாகயிருக்கும்.

தமிழகம் போந்த மகிந்தர் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு எப்படிச் சென்றார் என்பதினை ஆராய வேண்டியுள்ளது. பொதுவில் அசோகப் பேரரசரும் மகிந்தனும் கட்டிய பௌத்தப் பள்ளிகளெல்லாம் புத்தர் வந்த இடங்களாகப் பௌத்தர்களால் சுட்டப்படுகின்றமையைக் காணவியலும். இவை போன்ற பள்ளிகள் உலகெங்கும் உள்ளனவாகும் (புத்தர் வடஇந்தியாவைத் தாண்டி எங்கும் செல்லவில்லை என்பதே வரலாற்றியல் அறிஞர்களின் துணிவு). அவ் வகையில் தமிழகத்தில் காஞ்சி, மதுரை, காவிரிப்பூம்பட்டினம் முதலாய இடங்களில் உள்ள பள்ளிகள் சுட்டப்படுகின்றமையை முன்னர் கண்டோம். இவ்விடங்களில் எல்லாம் மகிந்தன் கட்டிய பள்ளிகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதுபோலவே இலங்கையில் உள்ள பௌத்தத் தலங்களுள் இரண்டு சிறப்பு வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன. அவை, யாழ். குடாநாட்டில் உள்ள மணிபல்லவமும் (நயினாதீவு), அநுராதபுரத்திற்கு அருகிலுள்ள மிகிந்தலையுமாகும். இலங்கையில் புத்தர் வந்த தலமாக மணிபல்லவமே அமைகின்றது. ஆக ஈழத்தில் மகிந்தன் கால்வைத்த முதல் தலம் தமிழரின் மணிபல்லவமே. அங்கு தமது சமயப் பரவலாக்கத்தினை மேற்கொண்ட மகிந்தன், அங்கிருந்த தமிழர்களைப் பௌத்த வழிப்படுத்திவிட்டு, கரைநகர் வாயிலாக அநுராதபுரத்திற்கு அருகில் உள்ள ஒரு மடத்தில் தங்கி, ஒரு விகாரையை எழுப்பிச் சமயப் பரவலாக்கத்தினையும், சமயக் கல்வியையும் மேற்கொண்டார் எனலாம். ஆதலால், அவ்விடம் (மகிந்தன் வந்த தலைமையிடம்) மகிந்தலை என வழங்கலாயிற்று. இன்று மிகிந்தலை என அது வழங்கப்படுகிறது.

மகிந்தன் ஈழம் வந்தவேளை நாக நாடாகிய மணிபல்லவத்தில் வாழ்ந்த மக்கள் தமிழரேயாவர் என்பதினைச் சில சான்றுகளின் வழியுணரலாம். மணிபல்லவத்தில் நாகர்கள் வாழ்ந்தார்களென்றும், அவர்களின் அரியணைப் போட்டியைத் தடுத்து நல்வழிப்படுத்தவே புத்தர் அவ்விடம் போந்தார் எனவும் குறிப்பிடப்படுகின்றது. நாகர் என்போர் யாவரெனின் அவர்கள் தமிழர்களே. இதனை எமது அரவாடு எனும் கட்டுரையில் கண்டு



கொள்க. மேலும், மணிபல்லவத்துத் நாகர்கள் தமிழர்களே என்பதினை மணிமேகலையில் வரும் செய்திகளின் வழியும் அறியலாம்.

மணிமேகலைக் காப்பியத்தின் இருபத்து நான்காம் காதையாகிய ஆபுத்திரன்நாடு அடைந்த காதை எனும் பகுதியில் பின்வரும் நிகழ்வு கூறப்பட்டுள்ளது:

“பண்டொரு காலத்தில் சோழ அரசனாகிய நெடுமுடிக்கிள்ளி, புகார் நகரின் கடற்கரையில் உள்ள புன்னைமரச் சோலையில் பேரழகு வாய்ந்த மங்கையைக் கண்டு காதல் கொண்டு அவளோடு ஒரு மாதம் உறைந்தனன். பிறிதொரு நாள் அம்மங்கை அவனிடம் ஏதும் கூறாது ஒழிந்தாள். மன்னன், எங்கு மறைந்தாளென அவளைத் தேடி அலைந்தான். அச்சமயம் நிலத்தில் குளித்தல் முதலாய பல சித்துக்களைப் பெற்ற சாரணனொருவன் வந்தான். அரசன் அவனைப் பணிந்து தாம் தேடும் மங்கை குறித்து அறிவீரோ என வினவ, அந்தச் சாரணன் அவளை நான் கண்டிட்டிலேன், ஆயினும் அவள் வரலாற்றினை முன்பே அறிந்துளேன் எனக் கூறி. அவள் நாக நாட்டரசனாகிய வளைவணன் என்பானது தேவியான வாசமயிலை யென்பவள் வயிற்றிற் தோன்றியவள். பீலிவளை யென்னும் பெயரினள். அவள் பிறந்த வேளையில் நிமித்திகன் இவள் கதிரவன் குலத்தரசனைக் கூடிக் கருவுற்று வருவாள் என்று கூறினான். அவளே நீ கூறிய மடந்தை என்று அரசனுக்குக் கூறினான். மேலும், நீ கவலை கொள்ளாதே, அவள் வாராள். அவள் வயிற்றில் உதிக்கும் உனது மகனே வருவான் எனக் கூறினான்.”

மேற்கண்ட செய்திகளைப் பின்வரும் மணிமேகலையடிகளால் அறியலாம்:

*”உப்பளந் தழீஇ வுயர்மன னெடுங்கோட்டுப்*
*பொங்குதிரை யுலாவும் புன்னையங் கானல்*
*கிளர்மணி நெடுமுடிக் கிள்ளி முன்னா*
*இளவேனி லிறுப்ப விறும்பூது சான்ற*
*பூநாறு சோலை யாருமி லொருசிறைச்*
*தானே தமிய ளொருத்தி தோன்ற*
*இன்ன ளர்கொ லீங்கிவ ளென்று*
*மன்னவ னறியான் மயக்க மெய்தாக்*
*கண்ட கண்ணினுங் கேட்ட செவியினும்*
*உண்ட வாயினு முயிர்த்த மூக்கினும்*
*உற்றுண ருடம்பினும் வெற்றிச்சிலைக் காமன்*
*மயிலையுஞ் செயலையு மாவுங் குவளையும்*
*பயிலி தழ்க் கமலமும் பருவத் தலர்ந்த*
*மலர்வா யம்பின் வாசங் கமழப்*
*பலர்புறங் கண்டோன் பணிந்து தொழில் கேட்ப*
*ஒருமதி யெல்லை கழிப்பினு முரையாள்*
*பொருவலரு பூங்கொடி போயின வந்நாள்*
*யாங்கொளித் தனளவ் விளங்கொடி யென்றே*
*வேந்தரை யட்டோன் மெல்லியற் றேர்வுழி*
*நிலத்திற் குளித்து நெடுவிசும் பேறிச்*
*சலத்திற் றிரியுமோர் சாரணன் றோன்ற*
*மன்னவ னவனை வணங்கி முன்னின்று*
*என்னுயி ரணையா வீங்கொளித் தாளுளள்*
*அன்னா ளொருத்தியைக் கண்டிரோ வடிகள்*
*சொல்லுமி னென்று தொழவவ னுரைப்பான்*
*கண்டிலே னாயினுங் காரிகை தன்னைப்*
*பண்டறி வுடையேன் பார்த்திப கேளாய்*
*நாகநாடு நடுக்கின் றாள் பவன்*
*வாகை வேலோன் வளைவணன் றேவி*
*வாசமயிலை வயிற்றுட் டோன்றிய*
*பீலிவளை யென்போள் பிறந்த வந்நாள்*
*இரவிகுலத் தொருவ னிணைமுலை தோயக்*
*கருவொடு வருமெனக் கணியெடுத் துரைத்தனன்*
*ஆங்கப் புதல்வன் வரூஉ மல்லது*
*பூங்கொடி வாராள் புலம்ப லிதுகேள்*

*– மணிமேகலை – 24: 27–61*

மேற்கண்ட கதையில் பயிலும் நாகர்களின் பெயர்களெல்லாம் தமிழ்ப் பெயராகவே அமைகின்றன. அப்பெயர்கள் நெய்தல் திணைக்கு உரிய பெயர்களாம். நாக அரசன் வளைவணன் எனும் சொல் தூய தமிழ்ச் சொல்லாகவே அமைகின்றது.

*"வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல"*
*– திருமுருகாற்றுப்படை – 120*

*"பயிர்வளை யரவமொடு வயிரெடுத்தூதி"*
*– பெருங்கதை – 1/38: 4*

எனும் சான்றோர் செய்யுள் அடிகளில் வளை எனும் சொல் சங்கு எனும் பொருளில் ஆளப்பட்டுள்ளமையைக் காணலாம். மேலும், குற்றமற்ற சங்குடன் தலைமைத் தன்மையை ஒப்பிட்டமையை,

*"இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்*
*வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி"*
*– பெரும்பாண். 34–35*

எனும் அடிகளின் வழி அறியலாம். வண்ணன் எனும் சொல் புணர்ச்சியில் இடைக்குறையாகி வணன் என முடிவுறும். அவ்வகையில் இரவு (இரா) + வண்ணன் = இராவணன் (இராக்கால நிறத்தினையுடையவன்) என அமையும். அதுபோல் வளை + வண்ணன், வளைவணன் (சங்கின் நிறத்தையுடையவன்) என்பதாயிற்று.

நாகர் தலைவனான வளைவணனின் மனைவியின் பெயர் வாசமயிலை எனச் சுட்டப்பட்டுள்ளது. இப்பெயரும் தமிழ்ப் பெயரே. மயிலை எனும் சொல் இன்று அழகிய பெண்களைக் குறிக்கக் கொங்குநாட்டிலே வழங்குகின்றது. மயிலை எனும் சொல் மணம் பொருந்திய இருவாட்சி (மல்லிகையில் ஒருவகை) மலரின் பெயராகப் பண்டைக் காலத்தில் வழங்கியமையை,

"மயிலைக் கண்ணிப் பெருந்தோட் குறுமகள்"
– புறநானூறு – 34 / 2

எனும் அடிகளில் காணலாம். மயிற்பீலியின் வளைவுகளை ஒத்த சுழற்சியையுடைய சங்கினைப் போன்ற இள மடந்தையைப் பீலிவளை எனச் சுட்டியுள்ளமையைக் காணலாம். பீலியின் வளைந்த கண்ணினைச் சான்றுகாட்டியமையினை,

"பீலி யொன்பொறிக் கருவிளை யாட்டி"
– குறுந். 110/4

எனும் குறுந்தொகையடிகளால் அறியலாம். மேற்கண்டவற்றால் மணிபல்லவத்தில் வாழ்ந்த நாகர்கள் தமிழர்களே என்பதினை அறிந்தோம். அந் நாகர்கள் பௌத்தர்கள் என்பதினையும் மணிமேகலையின் வழி அறியலாம். பீலிவளை சோழ மன்னனின் குழந்தையைக் கையிலேந்தி, மணிபல்லவத்திலுள்ள புத்த பீடிகையை வலம் வந்து வணங்கி, பின் அக் குழந்தையைச் சோழனிடம் ஒப்படைக்க, கம்பலச் செட்டியிடம் கொடுத்தமையைப் பின்வரும் அடிகளின் வழி அறியலாம்.

*"நாக நன்னா டாள்வோன் றன்மகள்*
*பீலிவளை யென்பாள் பெண்டிரின் மிக்கோள்*
*பனிப்பகை வானவன் வழியிற் றோன்றிய*
*புனிற்றிளங் குழவியொடு பூங்கொடி பொருந்தியித்*
*தீவகம் வலஞ்செய்து தேவர்கோ னிட்ட*
*மாபெரும் பீடிகை வலங்கொண் டேத்துழிக்*
*கம்பளச் செட்டி கலம்வந் திறுப்ப*
*அங்கவன் பாற்சென் றவன்றிற மறிந்து*
*கொற்றவன் மகனிவன் கொள்கெனக் கொடுத்தலும்*
*பெற்ற வுவகையன் பெருமகிழ் வெய்திப்"*
*– மணிமேகலை – 25/179–188*

மேற்கண்டவற்றின் வழி பண்டு மணிபல்லவத்திலும் நாகநாட்டிலும் வாழ்ந்த தமிழர்கள் பௌத்த மதத்தினைப் பின்பற்றினமையை அறியலாம். அத்தோடு அதே நாகநாட்டுப் பீலிவளைக்குச் சோழன் வழியுதித்த அக் குழந்தை, கம்பலச் செட்டியின் கலம் கடலில் அழிய (மணிமேகலை 29/315), திரையினால் கரை சேர்ந்து சோழனிடம்

ஒப்படைக்கப்பட்டமையால், திரையன் எனப்பட்டான். இவனே பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பெரும்பாணாற்றுப்படையின் தலைவனாகப் பாடப்பெற்ற 'தொண்டைமானிளந்திரையன்'. இதனைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம்.

"முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்"

– பெரும்பாணாற்றுப்படை – 30–31

இவ்வடிகளுக்கு உரைகூறும் நச்சினார்க்கினியர் "நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று, நாககன்னியைப் புணர்ந்த காலத்து, அவள் யான்பெற்ற புதல்வனை என் செய்வேனென்ற பொழுது, தொண்டையை அடையாளமாகக் கட்டி கடலிலே விட, அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசவுரிமையை எய்வித்து நாட்டாட்சி கொடுப்பவென்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்கனம் வரவிடத் திரைதருதலின் திரைய னென்று பெயர் பெற்ற கதை கூறினார்" என்பனவாக விளக்குகிறார். இதற்கான மற்றொரு சான்று பெரும்பாணாற்றுப் படையின் இறுதி வெண்பாவிலும் காணக் கிடைக்கின்றது.

*"கங்குலு நண்பகலும் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம் – வெஞ்சினவேற்
கான் பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு"*

*– பெரும்பாணாற்றுப்படை – இறுதி வெண்பா*

மேலும் பீலிவளையின் மகனான இளந்திரையன் ஆண்ட தொண்டை நாட்டுப் பகுதி பண்டு மாவிலங்கை எனப்பட்டது. இவ் மாவிலங்கையை ஓவியர் எனும் நாக மரபினர் ஆண்டனர். அதே ஓவியர் மரபினர், ஈழத்து வடபாலினையும் ஆண்டதாக வி. கணகசபைப் பிள்ளை குறிப்பிடுவார். அந் நாக மரபினரே பௌத்தத்தைக் கைக்கொண்ட தமிழராவர் எனலாம்.

மேற்கண்டவற்றின் வழி அசோகர் காலத்தில் தமிழகம் போந்த பௌத்தம் பின் மணிபல்லவம் வழியாக ஈழம் பெயர்ந்து அங்குள்ள தமிழர்களிடம் பரவி, பிறகே சிங்கள மக்களிடமும் பரவிற்றெனலாம். இதனை மேலும் சில சான்றுகள் வழியிலும் அறியலாம்.

தொண்டை நாட்டில் முதன்முதலில் பௌத்தம் தலைப்பட்ட இடம் காஞ்சிபுரம். இதனால் இதனைப் பௌத்த காஞ்சி எனத் தொண்டை நாட்டினர் கொண்டாடினர். இதற்கான எச்சங்களை இன்றைய காஞ்சியிலும் காணவியலும். அறப்பனஞ்சேரி, அறவணஞ்சேரி, புத்தேரித்தெரு என்பனவான இடப்பெயர் வழக்குகள் இன்றும் அங்கு உண்டு. மேலும், காஞ்சியில் முதன்முதல் தோன்றிய விகாரை மூலசோம விகாரை எனப்பட்டது (மூலம் - முதல்). இது குறித்து மயிலை சீனி வேங்கடசாமியின் கூற்றுகளைக் காண்போம்.3

"கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்த புத்தகோச ஆசாரியார் பீடக நூல்களுக்கு உரைகள் எழுதியவர்.

இவர் தமது நண்பர்களான சுமதி, ஜோதிபாலர் என்னும் பௌத்த பிக்குகளுடன் காஞ்சிபுரத்தில் வசித்திருந்ததாகவும், அவர்களின் வேண்டுகோளின்படி இலங்கைக்குச் சென்றதாகவும் தமது மனோரதபூரணீ என்னும் உரையில் குறிப்பிடுகிறார். புத்தகோசர் காஞ்சியில் இருந்தபோது அவருக்கு அண்டாத்தகதா என்னும் நூல் கிடைத்தாகவும், அந்நூல் தாம் திரிபிடகங்களுக்கு உரை எழுதுவதற்குத் துணையாக இருந்தது என்றும், சமந்தபாசாதிகா என்னும் உரையில் இவர் கூறுகிறார்."

ஆசாரிய தர்மபாலரும், அபிதம்மாத்த சங்கிரதம் முதலிய நூல்களை இயற்றிய அநுருத்தரும் காஞ்சியில் பிறந்தவர்கள் என மயிலை சீனி வேங்கடசாமி கூறிச்செல்கின்றார். இவை போன்றதே காவிரிப்பூம்பட்டினத்திலும் மதுரையிலும் பல விகாரைகள் இருந்தன. இதனை மயிலையாரின் நூலில் விரிவாகக் காணலாம். தமிழகத்தில் உள்ள தலைநகரங்களின் பௌத்தப் பள்ளிகள் பெரும்புகழ் பெற்றதைப் போலவே, ஈழத்திலும் பல பள்ளிகள் பெரும்பேறு பெற்றன.

## பகுதி - 2

ஈழத்தின் வாயிலாக அமைந்த மணிபல்லவத்தில் புத்தர் முதன்முதலாக வந்தார் எனப் பௌத்த நூல்கள் கூறுகின்றன. புத்தர் வந்தார் என்பது மகிந்தர் முதலான தேரர்களின் வருகையைக் குறிப்பதாகும். தமிழ் நாகர்களின் அரசில் மணிபல்லவம் முதல்நிலை பௌத்த புனிதத் தலமாயிற்று. நாக அரசைக் கடந்து அநுராதபுரம் சென்ற மகிந்தன் அங்கு சமயப் பரப்புரை செய்ய எடுப்பித்த விகாரை பிற்காலத்தில் மகிந்தலை (மகிந்தனின் தலைமையிடம்) என அழைக்கப்படுவதாயிற்று. தமிழ் பௌத்தருக்கு மணிபல்லவம் தலை இடம் ஆயினமை போல் சிங்கள பௌத்தருக்கு மகிந்தலை தலையிடமாயிற்று. ஆனால், இலங்கைக்கு முதலில் புத்தர் வந்ததாகக் கூறப்படும் இடம் மணிபல்லவமே. நாகநாட்டு மக்களும் அநுராதபுர அரசு மக்களும் தத்தம் இடங்களைத் தலையிடமாகக் (முதல்) கொண்டு போற்றினர். இந்நிலையில் எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு நாக நாட்டில் அரசரும் மக்களும் பௌத்தத்தைத் துறந்து சைவ சமயத்தின் பால் சென்றமையால் பௌத்தம் அந்தச் சூழ்நிலையில் நாக நாட்டில் வீழத் தொடங்கியது. பௌத்தத் திருப்பதிகள் போற்றுவார் இன்மையால் தமிழகப் பௌத்தப் பள்ளிகள் அழிந்தமை போலவே ஈழத்திலும் பௌத்தம் பெரிதும் சிதைவுற்றன. ஆயினும் நாக நாட்டிற்குப் புறத்தே மகிந்தலையைச் சிங்களவர்கள் தங்களது முதல் புனிதத் தலமாகவும் மணிபல்லவத்தை இரண்டாவது புனிதத் தலமாகவும் குறிப்பிடத் தொடங்கினர். ஆனால், முதலில் பௌத்தம் வந்தது மணிபல்லவத்திற்கே என்பதனை அவர்களால் மறுக்க இயலவில்லை. ஆயினும் தமிழர் விட்டொழித்த தலத்தைத் தங்களுக்குடைய இரண்டாம் நிலைத் தலமாகவே வைக்க எண்ணினர். இதுவே மணிபல்லவம் தமிழ்ப் பௌத்தத்தலம் என்பதற்கு ஒரு சான்றாகும். ஏனெனில் அது சிங்களத் தலமாக இருப்பின் இலங்கையில் முதல் புனிதத் தலமாகவல்லவா இருந்திருக்க வேண்டும்? தமிழ்ப் பௌத்தத் தலமாக இருந்ததால் இரண்டாம் தலமாயிற்று.

காலனிய ஆட்சிச் சூழலில் இடித்த இத்தலங்களை எல்லாம் டச்சுக்காரர் ஆட்சியில் புதுப்பித்துக் கொண்டார்கள். ஆனால், தமிழரின் தாயகங்களில் இருந்து பௌத்தம் தங்களுக்கு வந்தது என்று சொல்வதைச் சிறுமையாகக் கருதிய சிங்களவர்கள் புத்தர் ஆகாய மார்க்கமாக வந்தார். மகிந்தர் பாடலிபுத்திரத்திலிருந்து வானமார்க்கமாக வந்தார் என்பனவாக எழுதிவிட்டனர் என்று மயிலை. சீனி. வேங்கடசாமி குறிப்பிடுவார்.

பௌத்தத் தமிழர்கள் எழுதிய தமிழ் நூல்களைச் சிங்களவர் படித்தார்கள் என்பதற்கும், அவற்றைச் சிங்களமயப்படுத்திக் கொண்டார்கள் என்பதற்கும் சான்றுகள் உண்டு. கி.பி. 11 ஆம் நூற்றாண்டிலே தோன்றிய தமிழ் இலக்கண நூல் 'வீரசோழியம்'. இந்நூலினைச் சோழநாட்டின் பொன்பற்றி எனும் ஊரினையாண்ட குறுநில மன்னனான புத்தமித்திரன் என்பவர் இயற்றினார். இவர் பௌத்த சமயத்தினைப் பின்பற்றிய தமிழர். இதனை:

*"மிக்கவன் போதியின் மேதக் கிருந்தவன் மெய்தவத்தால்*

*தொக்கவன் யார்க்குந் தொடரவொண் ணாதவன் தூயனெனத்*

*தக்கவன் பாதந்தலைமேற் புனைந்து தமிழுரைக்கப்*

*புக்கவன் பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்தமித்திரனே"*

*வீரசோழியப் பாயிரம்*

எனும் அடிகளால் அறியலாம். மேலும், இந்நூலினை இயற்றும்படி ஊக்குவித்தவன் சோழப் பேரரசனான வீரசோழன். இதனால் அச்சோழன் பெயரையே அந்நூலுக்குப் புத்தமித்திரர் சூட்டினார். இதனை:

*"தேமேவிய தொங்கற் றேர்வீர சோழன் றிருப்பெயரால் பூமே லுரைப்பன்"*

*வீரசோழிய பாயிரம்*

எனும் பாயிரவடிகளின் வழி அறியலாம். இத்தமிழ் இலக்கண நூலினை அப்படியே தழுவி கி.பி. 13 ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியின் முதல் இலக்கண நூலாகிய ‘சிதத்சங்கரா’வை வடிவமைத்துக் கொண்டார்கள் என்பதினை அறியலாம். இது குறித்து அறிஞர் பலர் ஆய்ந்துள்ளனர்.



அனலை தீவு ஐயனார் கோவில் தேர்த் திருவிழா
Image Source - globaltamilnews.net

மேலும் மணிமேகலையில் காணக்கிடைக்கும் அரிய பௌத்த மெய்யியல் கலைச்சொற்களின் வழி தமிழ் மரபில் பௌத்தம் வேரூன்றி நின்ற பாங்கினை உணரலாம். தமிழர்களில் ஈழநாட்டுத் தமிழர்களே இறுதியாகப் பௌத்தத்தைக் கைவிட்டவராவர். அதனால், தமிழகத் தமிழர்களிடம் காணப்படாத பல பௌத்தக் கூறுபாடுகள் இன்றளவும் அவர்களிடம் காணப்படுகின்றமையைக் காணலாம். அவற்றை மிகுத்துக் கூறின் விரியும். சிலவற்றை மாத்திரம் சுட்டிச் செல்வோம்.

உணவினை உண்ணும் முறைமையால் பல்வகை உணவுகளினையும் ஒன்றன்பின் ஒன்றான படிநிலை வரிசையில் (சான்றாக, முப்பழம், பணியாரம், பருப்பு, குழம்பு, மிளகுச்சாறு, பாயசம், தயிர் என்பனவாக) பரிமாறி உண்பதே பண்டைத் தமிழர் மரபு. ஆனால் பௌத்த மரபில் பரிமாறுதல் என்பது குறைவு. ஒரே முறையிலேயே உணவு வகைகள் அனைத்தும் உண்கலத்தில் வழங்கப்பட்டுவிடும். இதனை இன்றும் பர்மியர், தாய்லாந்தியர், கம்போடியர், சிங்களர் முதலாய மக்களிடம் காணலாம். இவை பௌத்த மடங்களில் இருந்து இம் மக்களிடம் பரப்பப்பட்ட பண்பாடு. இவ்வாறு உணவு வகைகளை ஒன்றாக வைத்து உண்ணும் பௌத்த மரபு இன்றும் ஈழத்தமிழரிடம் உண்டு.

கல்வியில் புகழில் உயர்ந்தவர் எக் குலத்தாராகிலும் எந் நாட்டினராயினும் அவர்களைத் தங்கள் சமூக அமைப்பில் உயர்நிலையில் வைத்துப் போற்றுவது பௌத்த மரபு. இப் பண்பும் ஈழத்தமிழர்களிடம் இன்றும் வழக்கில் உள்ள பண்பாடாகும். இவை போன்று பல்வகைப் பண்பாட்டுக் கூறுபாடுகளைக் கூறிச்செல்லாம்.

பௌத்தம் இலங்கையில் பரவுவதற்குச் சற்று முற்பட்ட காலத்திலேயே ஆசிவக மதம் ஈழம் முழுவதும் பரவிவிட்டது. இதற்கு ஈழமண்டலம் முழுவதும் காணப்படும் ஐயனார் வழிபாடே சான்று. பௌத்தம் மணிபல்லவத்தை மையமாகக் கொண்டமை போல், ஆசீவகம் இன்றைய அனலை தீவை மையமாகக் கொண்டிருந்தது. அனலை தீவே ஆசிவத்தின் தலைமைப் பீடமாக விளங்கியது. ஆசிவத்தின் முதன்மைக் கொள்கை அதன் அணுவியற் கொள்கையே. அதனடிப்படையில் எழுந்த அணுழை தீவே அனலை தீவாயிற்றெனலாம். பௌத்தம் ஈழத்தில் பெரும் அலையாக எழுந்தபோது ஆசிவகம் தம் இருப்பைத் தக்கவைக்கப் பெரிதும் போராடி வீழ்ந்ததெனலாம்.

ஈழத்தில் தமிழர்கள் பௌத்தத்தைவிட்டு சைவ நெறியினைக் கைக்கொள்ளத் தொடங்கிய வரலாற்றினை இனி ஆய்வோம். தமிழ்ச் சமூகத்தில் சங்ககாலத்திற்கு முன்பு தொடங்கி, இன்றளவும் சமய மாறுதல்களும், பொருந்துதல்களும், சமயத் தக்கவைப்புகளும்

தொடர் நிகழ்வுகளாகின்றன. ஆசீவகம், பௌத்தம், சமணம், வைதீகம், இசுலாம், கிறித்தவம் முதலாய பல சமயங்கள் தமிழர் மீதும் தமிழ்மொழியின் மீதும் சாலத் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. பண்டைத் தமிழ்ச் சமுதாய அமைவில் தமிழர்களின் மீது புறச் சமயங்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும், பொருந்துதல்கள் குறித்தும் சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, நீலகேசி, யசோதரகாவியம், சூளாமணி, மேருமந்திர புராணம், திருநூற்றந்தாதி, தேவாரம், பெரியபுராணம், திருவாசகம், சிவஞான சித்தியார் பரபக்கம், நீலகேசித் திரட்டுரை, சிவஞான சித்தியார் பரபக்கத்திற்குத் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் எழுதியவுரை முதலான நூல்களின் வழி அறியலாம். பண்டைத் தமிழரின் சமய மோதல்கள் குறித்தும், சமய மாறுதல்கள் குறித்தும் தெரிவிப்பனவாக இவை அமைகின்றன. மகேந்திரவர்மன் கூன்பாண்டியன் முதலாய மன்னர்களும், நாவுக்கரசர் முதலான துறவியரும் தங்களைச் சமய மாறுதலுக்கு உட்படுத்திக் கொண்டவர்களே. தமிழகத்தில் சமய மாறுதல்கள் மூன்றாம் நூற்றாண்டில் ஆசிவகம், பௌத்தம் முதலானவற்றிலிருந்து சமணத்தை நோக்கியதாகப் பெரிதும் இருந்தது. ஆனால், ஐந்தாம் நூற்றாண்டிற்கு பிறகு பக்தி இயக்க வளர்ச்சியால் மாறுதல்கள் வைதீகத்தினை நோக்கியதாக அமைந்தன. தொண்டை நாட்டிலே நாவுக்கரசர் முதலானோரும், பாண்டிய நாட்டில் ஞானசம்பந்தரும் சமணரை நீக்கி வைதீகத்தினை மேம்படுத்தினர். குலசேகர ஆழ்வார் போன்றோர் பௌத்த கோயில்களில் கொள்ளையிட்டும் வைணவத்தை மேம்படுத்தினர். ஆனால், ஈழத்தினைப் பொறுத்தவரை, கி.பி. 8 ஆம் நூற்றாண்டுவரை தமிழரிடம் பௌத்தநெறி மேலோங்கியே இருந்தது.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டளவில் ஈழத்திலும், தமிழகத்திலும் சமண, பௌத்த வைதீகத்திற் கெதிராகத் தங்களது தமிழ் மரபின் வழிபட்டதாகிய தென்புலத்தார் வணக்கம், தாய்த் தெய்வழிபாடு முதலியவற்றினை அடிப்படையாகக் கொண்ட தமிழிய வழிபாட்டுச் சடங்கியலைக் கொண்டதாகிய கட்டமைப்பினைப் பரவலாக்கும் ஒரு முயற்சியாக கண்ணகி வழிபாட்டுப் பரவலாக்கம் அமைந்தது எனக் குறிப்பிடலாம். உலக மன்னவன் என்று சிலப்பதிகாரத்தால் குறிப்பிடப்படும் செங்குட்டுவச் சேரனால் இப்பெருமுயற்சி செய்யப்பட்டு, பல நாடுகளைச் சேர்ந்த மன்னர்களும் அழைக்கப்பட்டு, ஒரு மாநாடு போல் கண்ணகி வழிபாட்டுப் பரவல் குறித்த நிகழ்வு நிகழ்த்தியமையை:

“உலக மன்னவ னின்றோன் முன்னர்
அருஞ்சிறை நீங்கிய வாரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும்
கடல்சூ ழிலங்கைக் கயவாகு வேந்தனும்”

சிலம்பு. 30: 156–160

எனும் மேற்கண்ட அடிகளில் வழி அறியலாம். இவ் வரிகளில் பயிலும் கயவாகு தமிழ் மன்னனே (அவன் சிங்கள மன்னன் அல்ல வென்பதினை விரிவஞ்சி பிரிதோர் இடத்தில் காண்போம்.); அவன் தமிழகம் முழுதும் ஏற்பட்ட கண்ணகி வழிபாட்டு மரபை ஈழத்திலும் பரவலாக்க முயற்சித்து வென்றவன். பல சமய நுழைவுகள் ஈழத் தமிழரிடம் ஏற்பட்ட போதும், பௌத்தப் பெரும் அலையில் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்கள் சிதையாமல் காத்தவன் இவனே. பௌத்தத்தின் உச்ச காலமாகிய கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் தென்புலத்தார் வணக்கத்தின் மரபுவழிப்பட்ட கண்ணகி வழிபாட்டைக் கையிலெடுத்துக் கண்ணகிக்குக் கோயில் எடுத்து ஆடித் திங்கள் பெருவிழா எடுத்துக் கொண்டாடியமையை,

“அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக்
கயவாகுவென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக்
கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து
வரந்தருமிவளென ஆடித்திங்க ளகவையின்
ஆங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப
மழைவீற்றிருந்து வளம்பல பெருக்கிப்

பிழையாவிளையுள் நாடாயிற்று."

எனும் சிலப்பதிகார உரைபெறு கட்டுரைவழி அறியலாம். ஈழத்தில் பௌத்தம் மிகச் செழித்தோங்கிய போது இக்கண்ணகி வழிபாட்டுத் தமிழ் மரபினை அதனால் அழிக்கமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. எட்டாம் நூற்றாண்டிற்குப் பிறகே தமிழர்கள் பௌத்தத்தைக் கைவிட்டுச் சைவ சமயத்தைக் கைக்கொள்ளத் தொடங்கினர். இவை குறித்த தரவுகளை இங்கு ஆய்வோம். இலங்கையில் சமய மாறுதல்கள் குறித்த செய்திகள் திருவாதவூரடிகள் எனும் மாணிக்கவாசகரின் வரலாற்றினைக் கூறும் நூல்களிலேயே காணக்கிடைக்கின்றன. இவற்றில் உ.வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப்பட்ட செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் (கி.பி. 13. நூற்.), பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணம் (கி.பி.17), கடவுள் மாமுனிவர் பாடிய திருவாதவூரடிகள் புராணம் (17 ஆம் நூற்றாண்டு), திருவுத்தரகோசமங்கை புராணம் (18 ஆம் நூற்றாண்டு), கல்லாடம் என்பன நமக்குக் கிடைக்கும் சான்றுகளாகின்றன. இவற்றில் ஈழத்தில் பௌத்தர்கள் சைவர்களாக மாறிய கதைகளின் அமைவைக் காண்போம்.

சிவனடியார் ஒருவர் தமிழக சிவதலங்களை வழிபட்டு வருகையில் பொன்னம்பலத்தில் உறையும் கூத்தனை வழிபட்டுவிட்டு ஈழநாட்டை அடைந்தார். இவர் செல்லுமிடந்தோறும் "பொன்னம்பலம்" எனக் கூறுதலினை வழமையாகக் கொண்டிருந்தார். இதனைப் பொறுக்காத ஈழ பௌத்தர்கள் தம் மன்னனிடம் முறையிட்டனர். ஈழ மன்னனும் அவ்வடியாரை அழைத்து வரப் பணித்தான். அரசன் முன்னிலையில் அழைக்கப்பெற்ற அவ்வடியார் பொன்னம்பலம் எனக்கூறி அமர்ந்தார். அச் சொல் கேட்ட மன்னன் பொன்னம்பலத்தின் விளக்கத்தைக் கேட்டான். தில்லைச் சிற்றம்பலத்தின் சிறப்பையும், ஒருமுறை பொன்னம்பலமெனில், ஐந்தெழுத்து மந்திரத்தை இருபத்தோராயிரத்து அறுநூறு முறை ஓதிய பயன் கிடைக்கும் என்பனவாகக் அவர் விளக்கம் கூறிமுடித்தார். அதுகேட்ட அரசவைப் புத்தகுரு வெகுண்டு திரிபீடகத்தைத் திருவருள் செய்த புத்ததேவர் அல்லாது வேறொரு தெய்வமும் உண்டோ, நான் தில்லையை அடைந்து சைவர்களை வாதில் வென்று பொன்னம்பலத்தைப் புத்தவிகாரமாக மாற்றுவேன் எனச் சூளுரைத்துச் சிற்றம்பலத்தை நோக்கித் தமது புத்தகுழு புடைசூழப் புறப்பட்டார். ஈழ மன்னனும் தனது ஊமை மகளை அழைத்துக் கொண்டு தில்லை நோக்கி ஏகினான். தில்லையை அடைந்த பௌத்தகுரு திருப்புலீச்சரத் திருக்கோயிலிலே தங்கினான். தில்லை மக்கள் புறச் சமயர்களைத் தில்லையை விட்டு அகலுமாறு கூறினர். ஆனால், புத்தகுரு உங்கள் சோழ மன்னனுக்குகெதிரில் உமது சைவம் பொய்ச் சமயமெனச்சாற்றி, புத்ததேவனே மெய்யான கடவுள் என்பதை மெய்ப்பித்தாலன்றி, இவ்விடத்தை விட்டகலேன் என்றனன். பௌத்தரை வாதில் வென்று அகற்றுதலே சிறந்ததென உணர்ந்த தில்லைவாழ் அந்தணர் சோழமன்னருக்கும், சிவனடியார்களுக்கும், அறிஞர்களுக்கும் ஓலை எழுதியனுப்பினர். அன்றைய இரவின் வைகறைப் பொழுதிலே நகரமக்கள் அனைவரின் கனவிலும் தோன்றிய சிவபெருமான் ஊரெல்லையில் தங்கியுள்ள வாதவூரன், தர்க்க சாஸ்திர முறைக்குப் பொருத்தமான வகையில், புத்தர்களை வாதில் வெல்வான் அழைப்பீராக வெனக்கூறி மறைந்தார்.

பொழுது புலர்ந்ததும் இச்செய்தியை மக்கள் வாதவூரருக்குத் தெரிவித்தனர். அதுகேட்டு எழுந்த வாதவூரார் பௌத்தர்கள் மண்டபத்தினை அடைந்து சிவனோடு இயையாத அவர்களைத் தான் காணல் தகாதென இடையில் திரையிட்டு அமர்ந்தார். சோழ மன்னனும் அங்குவந்து வாதவூரார் அருகில் அமர்ந்தான். ஈழத்தரசனும் சோழனுக்கு திறைப்பொருளை வழங்கி வணங்கினான். அவனையும் தன் அருகில் இருத்தினான் சோழ மன்னன். ஆய்வு நெறியில் வல்ல சான்றோர் பலரும் அவையில் கூடினர். சோழமன்னனும் அடியாரை நோக்கிச் சைவத்தை நீவிர் நிலை நிறுத்துவீராயின் பௌத்தர்களைப்

போக்குவது எமது கடன் எனக் கூறினான். பிறகு வாதவூரடிகள் பௌத்தர்களோடு வாதம் செய்து வருகையில் பௌத்தர்கள் சிவனை இகழ்ந்தனர். அதுகேட்டு ஆற்றாத வாதாவூரார், நாமகளை புத்தர்களின் நாவிலிருந்து விலகுமாறு கட்டளையிட்டார். புத்தர்கள் ஊமைகளாயினர். அதுகண்ட ஈழத்தரசன் வாதவூரரை வணங்கி அடிகளீர் பேசவல்ல பௌத்தர்களை ஊமையாக்கினீர், பிறவியூமையாகிய எமது மகளைப் பேச வைப்பீராயின் யான் உங்களுக்கு அடியேனாவேன் என்றனன். வாதவூரார் அம்மன்னனின் மகளை அழைத்து முன்பு புத்தகுரு தம்மிடம் கேட்ட வினாவிற்கெல்லாம் விடைகூறும்படி கூறினார். அவளும் அவ்வினாவிற் கெல்லாம் அளவைமுறை விலகாது விடை கூறினாள். வாதவூரார் அவ்வினா விடைகளைத் தொகுத்து மங்கையர் பாடி விளையாடிப் பயிலும் முறையில் திருச்சாழற் பாடல்களாக அமைத்தார்.

இந் நிகழ்வைக் கண்ட ஈழவேந்தன் வாதவூரார் அடிகளில் விழுந்து தொண்டனானான். பௌத்தர்களுக்கு ஊமை நீக்க வேண்டுமெனவும் இறைஞ்சினான். அடிகளது பார்வையால் பௌத்தர்கள் ஊமை நீங்கப் பெற்றனர். அப் பௌத்தர்கள் தங்களுக்கு வாதவூரர் திருநீறும், அக்கமாலையும், கல்லாடையும் அளிக்க வேண்டுமென வேண்டினர். வாதவூரரும் அவர்களுக்குத் திருநீறு வழங்கி அவர்களது துவராடையைச் சுட்டெரித்து அவர்கள் அனைவரையும் சைவராக்கினார் என இந் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இந்நிகழ்வு பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணத்திலும், திருவாதவூரர் புராணத்திலும், திருப்பெருந்துறைப் புராணத்திலும் கல்லாடத்திலும் சிற்சில வேறுபாடுகளுடன் சுருக்கியும் விரித்தும் கூறப்பட்டுள்ளது. ஆனால், பொதுவில் ஈழத்தில் பௌத்தத்தை வீழ்த்தி சைவ சமயத்தை உய்வித்தமையை விளக்குவனவாக இவை அமைகின்றன.

மேற்கண்டவற்றால் ஈழத்தில் திருவாதவூரார் எனும் மாணிக்கவாசகரால் பௌத்தம் வீழ்த்தப்பட்டுச் சைவ மார்க்கம் தொடங்கப்பட்ட



மாணிக்கவாசகர்

Image Source - ta.wikipedia.org

செய்தியினை அறிகின்றோம். ஆனால், இச் சமயமாற்றம் ஈழத் தமிழ்ப் பௌத்த மன்னனிடமும் தமிழ்ப் பௌத்த மக்களிடம் ஏற்பட்டதா, அல்லது சிங்கள பௌத்த மன்னனிடமும் மக்களிடமும் ஏற்பட்டதா? என்பதனை அறிதலும் ஐயமறத் தெளிதலும் இன்றியமையாததாகும். இதனைப் பின்வருமாறு தெளியலாம்.

1. இச்சமயமாற்றம் குறித்துக் கூறும் மேற்கண்ட நூல்கள் அனைத்திலுமே ஈழமன்னன் எனும் சொல் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை, சிங்களம் எனும் சொற்கள் பயன்படுத்தப்படவில்லை.

2. பௌத்த பிக்குவிற்கும் மாணிக்கவாசகருக்கும் நிகழ்ந்ததாகக் கூறப்படும் வாதங்களின் வினா விடைகள் தமிழ் மொழியிலேயே அமைவனவாகக் காட்டப்பட்டுள்ளன. வேறு மொழியில் அமைந்ததற்கான குறிப்புகள் எங்குமில்லை.

3. ஈழ மன்னனின் மகள் பௌத்தர்களின் வினாக்களுக்குத் தமிழிலேயே விடையளிப்பதாக அமைந்துள்ளமையால், அம்மன்னனும் அப்பெண்ணும் தமிழர் எனத் தெளிவாகலாம்.

4. பொன்னம்பலம் எனும் சொல்லுக்குப் பொருள் தேடுதலும் சித்தாந்த சைவத்திற்பாற் பட்டனவாகவே அமையும். இன்றும் பொன்னம்பலம் எனும் பெயரினை ஈழத்தில் மிகுத்து காணலாம். தமிழகத் தமிழரினும் ஈழத் தமிழரே தில்லை அம்பலத்தைத் தாய்வீடாகக் கருதிப் போற்றுகின்றமையையும் காணலாம். இதற்கான காரணமாக அவர்களினை பௌத்தத்திலிருந்து விடுத்து சைவ நெறிப்படுத்தத் தொடங்கிய தலம் அது என்பதினை மதிப்பிடலாம்.

5. இத்துடன் மற்றொரு காரணத்தினையும் எண்ண வேண்டும். சிங்களர் தேரவாத பௌத்தத்தினையும், தமிழர் மகாயான பௌத்தத்தினையும் கடைப்பிடித்தனர் என்பது தெளிவு. இதன்வழி ஆராயும்போது, தேரவாதத்தில் தருக்கம் இல்லை. புத்தர் தத்துவ விசாரணைகளையும் தருக்க விவாதங்களினையும் பெரிதும் மறுத்துப் புறந்தள்ளியவர். ஆனால், மகாயான பௌத்தர் தம் கொள்கைகளை நிலைநாட்டுதற்குத் தருக்கவாதத்தை (அளவை நூல் முறைமையை) ஏற்றுக் கொண்டனர். நாகார்சுனரின் 'உபய கௌசல்ய சூத்திரம்' என்பது பௌத்தத்தின் முதல் தர்க்க நூல். ஆனால், அவர்கள் பெரிதும் நையாயிக தருக்கத்தையே கைக்கொண்டனர். சௌந்தராத்திக யோகசரர்கள் அத்தருக்கத்தினை மேம்படுத்தி பௌத்த நெறிக்கு ஏற்றதாக்கினர். தமிழில் சீத்தலைச்சாத்தனார் மணிமேகலையில் அதனை நன்கு பயன்படுத்தியுள்ளார். இதன்வழி தில்லையில் நடந்த தருக்க வாதத்தில் சிங்கள பௌத்தர்கள் பங்கேற்கவில்லை எனவும், தமிழ்ப் பௌத்தர்களே பங்கேற்றுச் சமய மாறுதல்களை அடைந்தார்கள் என்பதினையும் அறியலாம்.

மாணிக்கவாசகரால் ஈழத் தமிழர்கள் பௌத்தத்தைவிட்டு சைவத்தினைக் கைக்கொள்ளத் தொடங்கிய காலம் எதுவென ஆராய்தல் இன்றியமையாததாகும். இவை குறித்து இனிக் காண்போம்.

தமிழ் நாட்டிலிருந்து சைவாசாரியார் ஒருவர் ஈழ நாட்டிற்குச் சென்று அங்குள்ள பௌத்த மன்னனைச் சைவ சமயத்திற்குத் திருப்பினார் என இராஜரத்நாகரி யென்னும் இலங்கைச் சரித நூல் கூறுகின்றதென்றும், அந்நூலிற் குறித்த காலம் கி.பி. 819 ஆம் ஆண்டினை ஒட்டியதென்றும் நெல்சன் என்பவர் தாம் எழுதிய மதுரைச் சரித்திரத்தில் (Madura Manuea) குறிப்பிட்டுள்ளதாகக் க. வெள்ளைவாரணர் குறிப்பிடுவார்.4 அத்துடன் இவர் மாணிக்கவாசகர் குறித்த கால ஆய்வில், மாணிக்கவாசகர் வாழ்ந்த காலம், கி.பி. 792 முதல் 835 வரை ஆட்சிபுரிந்த முதல் வரகுண பாண்டியனது காலமே என்பார். இதே கருத்தினை இவருக்கு முன்பும் டி.வி. சதாசிவ பண்டாரத்தார் கொண்டிருந்தார். ஆனால், தமிழ் வரலாறு எனும் நூலின் ஆசிரியரான தஞ்சை ஸ்ரீநிவாசப்பிள்ளையவர்கள், கி.பி. 862 முதல் 880 வரை ஆண்ட இரண்டாம் வரகுண பாண்டியன் காலத்தவரென்பார்.

மேற்கண்ட மாணிக்கவாசகர் காலம் குறித்த கருத்துகளைக் கொண்டு ஆய்வதன் வழி ஈழத்தில் தமிழர்கள் சமய மாற்றம் அடைந்த காலத்தினை அறுதியிட முடியும் எனலாம். திருவாதவூராரின் வரலாற்றினைக் கூறும் திருவாதவூரர் புராணம் முதலாய நூல்களில் சோழ மன்னனின் முன்பே தில்லையில் மாணிக்கவாசகருக்கும் ஈழத்துப் பௌத்தர்களுக்கும் வாதம் நிகழ்ந்து, ஈழத்து மன்னனும் பௌத்த பிக்குகளும் சைவராயினர் எனத் தெளிவுறக் கூறப்பட்டுள்ளது. இச்செய்தி கால வரையறைக்கு இன்றியமையாததாக அமைகின்றது. எனில் சங்ககாலத்திற்குப் பிறகு



**இராசராச பெரும்பள்ளி**

Image source - www.geevanathy.com

ஆட்சியைக் களப்பிரர்களிடம் பறிகொடுத்து வரலாற்றிலிருந்து மறைந்த சோழர்களைக் குறித்த செய்திகள், தமிழகத்தில் ஒன்றும் கிடைத்தில்லது. பிற்காலத்தில் சோழர்கள் குறித்த செய்தி விஜயாலயச் சோழன் தொடக்கமே கிடைக்கலாயிற்று. விஜயாலய சோழன் கி.பி. 850 ஆம் ஆண்டில் முத்தரையரையிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றியதன் வழியே தமிழக வரலாற்றில் சோழர்கள் மீண்டும் வெளிப்பட்டதாக க. நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடுவர். இதன்வழி கொண்டாய்ந்தால் ராஜரத்நாகரி நூலின் வழி நெல்சன் குறிப்பிடும் கி.பி. 819 என்பதற்குச் சற்று அரை நூற்றாண்டுகள் பிந்தியேனும் இச் சமயமாற்ற நிகழ்வு நிகழ்ந்திருக்க வேண்டும். கி.பி. 850 ஆம் ஆண்டில் விஜயாலயன் தஞ்சையைக் கைப்பற்றியவுடன் வெகு விரைவிலேயே சோழமண்டலம் இவன் ஆட்சியில் பல்லவர்களிடம் இருந்து பெறப்பட்டதென வரலாற்றாய்வாளர்கள் கருதுவர். அதன்படி நோக்கின் கி.பி. 870 ஆண்டுகளின் வாக்கில் இந்நிகழ்வுகள் நிகழ்ந்தவேளை தில்லையிலும் சோழர் ஆட்சியே நிகழ்ந்திருக்கும். இது க. வெள்ளைவாரனாரும், டி.வி. சதாசிவப் பண்டாரத்தாரும் குறிப்பிடும் முதலாம் வரகுணப் பாண்டியன் காலத்திலிருந்து (கி.பி. 792 – 835) பெரிதும் வேறுபட்டதல்ல எனலாம். மாணிக்கவாசகர் 42 ஆண்டுகள் வாழ்ந்ததாகப் பழம்பாடல் ஒன்று கூறும். அதன்படி அவர் முதலாம் வரகுணன் காலத்திற்குச் சற்று பிந்தி விஜயாலயனின் தொடக்க காலத்தில் வாழ்ந்திருக்கலாம். மேற்கண்ட சான்றுகளின் வழி ஈழத்தமிழ்ப் பௌத்தர்கள் கி.பி. 850 முதல் கி.பி. 870 வரையிலான கால கட்டத்தில் மாணிக்கவாசகரால் சைவத்திற்கு மாற்றப்பட்ட நிகழ்வு நிகழ்ந்திருக்கும் எனக் கொள்ளலாம்

(அன்றே கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் களப்பிரர்கள் தமிழகத்தில் நுழையும் முன்பு சோழராட்சி சோழநாட்டில் நிலவிய வேளை மாணிக்கவாசகர் வாழ்ந்திருக்கலாம். அக்கருத்தினையே மறைமலையடிகள், சி. அருணைவடிவேலு முதலியார் போன்ற அறிஞர்கள் கொண்டிருந்தனர். அதற்கான பல சான்றுகளும் உண்டு. அவற்றில் ஒன்று, கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் சமணத்திலும் பௌத்தமே தமிழகத்தில் கோலோச்சியது; அதனால்தான் மாணிக்கவாசகர் சமணத்தைப் பெரிதாகக் குறிப்பிடாமல் பௌத்தத்தையே சாடினார் என்பது. சங்ககாலத்தில் சோழநாட்டின் ஆதிக்கத்தில் ஈழமண்டலம் விளங்கிற்று. அதனால்தான் மேற்கண்ட திருச்சாழல் குறித்த கதையில் சோழ மன்னனுக்கு ஈழமன்னன் திறை வழங்கினான். ஆகவே கி.பி. மூன்றாம் நூற்றாண்டே அது என்பது ஒரு கருத்தாக அமைகிறது). எப்படியும் பௌத்தத்தின் வீழ்ச்சியை ஈழத்தில் தொடக்கி வைத்தவர் மாணிக்கவாசகரே என்பது திண்ணமாகிறது. இந் நிலையில் பிற்காலச் சோழப் பேரரசின் வளர்ச்சியும் செல்வாக்கும் ஈழத்தில் சைவத்தை நிலை நிறுத்துவதில் பெரிதும் வலிமை செலுத்தின. ஆயினும் படிப்படியாகவே பௌத்தம் தமிழர்களை விட்டகன்ற தெனலாம்.

தமிழகத்தில் நாகப்பட்டின பௌத்தப் பள்ளியை இராச இராசன் கட்டியமை, வீரசோழன் காலத்தில் பொன்பற்றி புத்தமித்திரர் வீரசோழியம் எழுதினமையும், ஈழத்தில் திருகோணமலையில் இராச இராசப் பெரும்பள்ளியை இராச இராசன் கட்டியமையும், தீவகத்தில் இராசேந்திரன் புத்தப்பள்ளி கட்டியமையையும் கொண்டு நோக்கும்போது, சோழப் பேரரசு காலத்தில் தமிழர்களிடம் நலிவுற்றிருந்த பௌத்தம் அருகி அருகி பிற்காலப் பாண்டியப் பேரரசின் தொடக்கத்தில் முற்றாக மறைந்ததெனலாம். சமண, பௌத்த, வைதீகம் என எச்சமய மாறுதல்கள் வந்தபோதும் தமிழத்திலும் ஈழத்திலும் அடிப்படையான மண்ணின் மைந்தர்களிடம் தமிழ்மரபு வழிபட்ட வழிபாடே விஞ்சி நின்றது. ஈழத்துத் தென்பாகமும், தமிழகத்துக் கொங்கு மண்டலமும் மேம்போக்கான அரசியல் மட்டத்திலான அயற்சமய தாக்கங்களைப் பெற்றதே ஒழிய, அடிநிலையில் தங்களது மரபுசார் சமய முறைமையினையே இன்றளவும் பின்பற்றி வருவன என்பது குறிப்பிடத்தக்கது.

இதன்வழி கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகத் தமிழகத்திலும், ஈழத்திலும் காணக் கிடைக்கும் பௌத்தச் சிற்பங்களும், தொல்லியல் சின்னங்களும் தமிழருக்கே உரிமையானவையாம் என்பதினைக் கருத்தில் கொண்டு, தமிழர்கள் தங்கள் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல் தொடர்பான அறிவினை வளர்த்துக் கொள்ளுதலும் இன்றியமையாதது. அத்துடன் அவற்றை பாதுகாப்பதற்கான திணைக்களங்களையும் தாங்களே ஏற்படுத்தி, தங்களுடைமைகள் பிறரிடம் களவு போகாமல் பாதுகாத்தல் வேண்டும். அன்றேல் பல வரலாற்றுத் திரிபுகள் ஏற்படுவதற்கு வழியமைக்கப்பட்டுவிடும்.

## அடிக்குறிப்புகள்

1. மயிலை.சீனி.வேங்கடசாமி; பௌத்தமும் தமிழும் - 2010: பக். 24.
2. K.A. நீலகண்ட சாஸ்திரி; தென்னிந்தியாவைப் பற்றிய அயல்நாட்டார் குறிப்புகள்.
3. மயிலை.சீனி.வேங்கடசாமி; பௌத்தமும் தமிழும். பக். 48.
4. க. வெள்ளைவாரணன்; பன்னிருதிருமுறை வரலாறு இரண்டாம் பாகம், பக். 68.

(தொடரும்)

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே 'வளரும் வடக்கு' எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.

ஜெகன் அருளையா



இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.

தமிழில் : த. சிவதாசன்

# யாழ். மூளாய் மருத்துவமனை:

# பிறப்பு – இறப்பு – மறுபிறப்பு

காரைநகர் தீவை யாழ்ப்பாணத்துடன் இணைக்கும் இணைப்புத் தெருவின் வடமேற்கு மூலையில் இருக்கிறது மூளாய் என்னும் ஒரு சிறு கிராமம். பிரபலமான கசூரினா கடற்கரை மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி அமைந்திருக்கும் வட்டுக்கோட்டை ஆகியவற்றை யாழ்ப்பாணத்துடன் இணைக்கும் முக்கிய கிராமமும் இதுவே. மூளாய் கூட்டுறவு மருத்துவமனை இல்லாவிட்டால் இக்கிராமம் இவ்வளவு பிரபலமாகியிருக்க முடியாது.

பிரித்தானிய மலாயாவிலிருந்து தாயகம் திரும்பும் தமிழரது சேமிப்பையும் ஓய்வூதியத்தையும் மூலதனமாகக் கொண்டு 1935 இல் ஆரம்பிக்கப்பட்டது இந்த மருத்துவமனை. தென்னாசியாவிற்கு முதன் முதலாக அறிமுகமான, கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கே சொந்தமான, இலாப நோக்கமற்ற முறையில் ஆரம்பிக்கப்பட்ட இம்மருத்துவமனை, அதன் அங்கத்தவர்களாலேயே நிர்வகிக்கப்பட்டது. இதன் வெற்றியைத் தொடர்ந்து இப்பிராந்தியத்தில் வேறுபல மருத்துவமனைகளும் ஆரம்பிக்கப்பட்டன என்பது வரலாறு. சுதந்திர இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ். சேனநாயக்கா 1939 இல் இங்கு வருகை தந்தபோது, “இன்று நான் (மூளாய்) மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன்.




**மூளாய் வைத்தியசாலை**

**Image Source - www.colombotelegraph.com**

பெருமைப்பட்டுக் கூறக்கூடிய வகையில் மிகவும் தனித்துவமான வகையில் நிறுவப்பட்டிருக்கும் இந்நிறுவனம் இலங்கைக்கே முதன்மையானது. கூட்டுறவு முறையில் சமூக முன்னேற்றத்தை முன்னெடுப்பதன் மூலம் முன்னுதாரணமாகத் திகழும் இந்நிறுவனம் என்னை மிகவும் ஈர்த்துள்ளது. அதன் எதிர்காலம் வெற்றிகரமாக அமைய வேண்டுமென நான் விரும்புகிறேன்" எனக்கூறியிருந்தார்.

## மூளாய் மருத்துவமனை

ஒரேயொரு மருத்துவருடனும் இரண்டு அப்போதிக்கரிகளுடனும் (மருந்தாளர்கள்) 1935 இல் இம்மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டது. மலாயாவிலிருந்து திரும்பிய இம்மூன்று 'பென்சனியர்களும்' தமது சேவைகளை இலவசமாகவே வழங்கினர். 1949 இல் 3 மருத்துவர்கள், 8 மருந்தாளர்களுட்பட 59 பணியாளர்களைக் கொண்டதாக இது பரிணமித்தது. 1970 இல் 5 மருத்துவர்களும் 10 மருந்தாளர்களும் 42 தாதிகளுமுட்பட 122 முழுநேரச் சம்பளம் பெறும் பணியாளர்களுடன் இம்மருத்துவமனை வளர்ச்சியுற்றிருந்தது. 2009 இல் போர் முடிவுக்கு வந்தபோது இங்கு 2 நிரந்தர மருத்துவர்களும் ஒரு மருந்தாளரும் 12 தாதிகளுமே பணி புரிந்தனர். அத்தோடு கண், தோல், பல், இருதய வியாதிகளுக்கான விசேட மருத்துவர்கள் யாழ். மருத்துவமனையில் கடமையை முடித்துக்கொண்டு மாலையில் இங்கு வந்து நோயாளிகளைப் பார்த்தார்கள். நிதி




Image Source - www.lankabusinessonline.com

நிலைமை ஒத்துழைக்குமானால் இவ்விசேட மருத்துவர்களில் சிலர் மூளாய் மருத்துவமனையில் நிரந்தரமாகவே கடமையில் ஈடுபட்டிருக்க முடியும். 45 பேருக்கு நிரந்தர ஊதியம் வழங்கும் ஒரு நிறுவனமாக இம் மருத்துவமனை உள்ளூர் பொருளாதாரத்துக்கு பங்களிப்பதாக உள்ளது. எளிமையான ஒரு சமூகத்திற்கு மிகவும் பயன் தரும் சேவைகளை வழங்கும் ஒரு ஒளிகாட்டியாக விளங்குவது பெருமைக்குரியது.

இலங்கையின் இனப்போரின் இன்னுமொரு பலியாக, 1995 இல் இம்மருத்துவமனை சிதைக்கப்பட்ட நிலையில் கைவிடப்பட்டது. இதன் சிதைவுக்கான காரணத்தை நான் வினவியபோது இம் மருத்துவமனை ஒருபோதும் இலக்கு வைத்துத் தாக்கப்படவில்லை எனக் கூறப்பட்டது. போராடும் ஒரு தரப்பினரின் இராணுவ நிலைகளுக்கு அருகாமையில் இருந்த காரணத்தால் மறு தரப்பின் குண்டுத் தாக்குதல்களுக்கு இரையாகி, இப் பேரிடரில் அது சிக்க நேரிட்டது. 1995 இல் போர் உக்கிரமடைந்த காலத்தில் இது கைவிடப்பட்டது. மூளாய் மருத்துவமனையின் முன்னாள் தலைவர் திரு ரெட்ணசிங்கம் இது பற்றிக் கூறுகையில் "1996 இல் எங்களில் சிலர் இம் மருத்துவமனையைப் பார்வையிட வந்தபோது குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி அது மிக மோசமாகச் சிதைக்கப்பட்டிருந்தது. அங்கிருந்த உபகரணங்களும், தளபாடங்களும் ஏறத்தாழ முற்றாகக் களவாடப்பட்டிருந்தன" என்றார். இப் பேரழிவையும் பொருட்படுத்தாது ஜூலை 1996 இல், இம் மருத்துவமனை, தின வெளிநோயாளர் சிகிச்சை நிலையமாக மீண்டும் பாவனைக்கு கொண்டுவரப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து தேவையானபோது மருத்துவ ஆலோசகர்கள் இங்கு வந்து போனார்கள்.

2002 – 2007 காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் ஒப்பந்தமான போர் நிறுத்த இடைவெளியைப் பாவித்து 2003 இல் மூளாய் மருத்துவமனையின் மீள்கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் இலங்கை மற்றும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா போன்ற நாடுகளிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து பெருந்தொகையான பணம் வந்து குவிந்தது. பிரித்தானிய, டச்சு, அமெரிக்க அரசுகளும் இணையாகப் பணத்தை வாரி வழங்கின. இலங்கை அரசும் தம் பங்கிற்கு பெருந்தொகையான பணத்தை வழங்கியது. இதன் பலனாக இருதய, கண், நீரழிவு, குழந்தை மற்றும் மகப்பேறுச் சிகிச்சைகள் இங்கு ஆரம்பமாகின. இதைத் தொடர்ந்து மருத்துவ ஆய்வுகூடம் (clinical laboratory), எக்ஸ்றே கூடம்,

அறுவைச்சிகிச்சை கூடம் மற்றும் அம்புலன்ஸ் சேவை ஆகியன ஆரம்பிக்கப்பட்டன. 2007 இல் போர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது முதல் 2009 இல் அது முடிவுக்குக் கொண்டுவரப்படும் வரை இம்மருத்துவமனையின் மீள் கட்டுமானம் கிடப்பில் போடப்பட்டது.

போர் முடிந்த கையோடு இலங்கையிலும் புலம்பெயர்ந்த தேசங்களிலுமிருந்து தனிப்பட்டவர்களும் அமைப்புகளும் இம் மருத்துவமனையின் மீளுருவாக்கத்திற்கென நிதியை வாரி வழங்க ஆரம்பித்தனர். இப்படியானவர்களில் ஒருவரும், பிரித்தானியாவில் கென்ற் என்னும் நகரில் பொதுவைத்தியராகக் கடமையாற்றிவந்தவருமான மருத்துவர் எஸ். ராஜசுந்தரம் அவர்கள் 2016 இல் மூளாய் மருத்துவமனைக்கு விஜயம் செய்து அதன் செயற்பாடுகள் பற்றி மீளாய்வொன்றைச் செய்தார். அவரது ஆய்வின்படி, மூளாய் மருத்துவமனை முழு அளவில் செயற்படுமேயாகில் சுமார் 180,000 மக்களுக்கு முதன்மை மருத்துவ சேவைகளை வழங்க முடியுமெனவும், இதன் மூலம் நோயாளிகள் 10 மைல்கள் பயணம் செய்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லத் தேவையில்லை; இதன் மூலம் மூளாய் மருத்துவமனையிலேயே சிறப்பான சேவைகளைப் பெறுவதுடன் யாழ். போதனா வைத்தியசாலையின் நெருக்கடி நிலையைத் தவிர்த்துக்கொள்ள முடியும். யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் இடநெருக்கடி காரணமாக, மூளாயிலிருந்து பெருந்தொகை பணச்செலவில் அங்கு செல்லும் நோயாளர்கள் தமது நோய்களுக்கு சிகிச்சைகளைப் பெறுவார்கள் என்ற உத்தரவாதமற்ற நிலையில் நோய்கள் முற்றி உயிராபத்து ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களுமுண்டு எனக் கூறுகிறார் மருத்துவர் ராஜசுந்தரம்.

“மூளாயிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான பயணம் அண்ணளவாக ரூ.2,000 ஆகிறது. அதே வேளை ஒருவரின் நாளாந்த வருமானம் ரூ.1,000. செப்பனிடப்படாத தெருக்கள் மூலம் யாழ்ப்பாணத்தை அடைய ஒருவருக்கு 60-90 நிமிடங்கள் வரை பிடிக்கும். குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் போன்ற சில நோயாளிகள், உதாரணமாக, முற்பிரசவ தயாரிப்புகள், கட்டுப்பாடற்ற நீரழிவு தொடர்பான கீற்றோஅசிடியோஸிஸ், மெலிற்ரஸ், CHD, CVA போன்ற நோய்கள், தலையில் ஏற்படும் காயங்கள், பாம்புக்கடி போன்ற அவசர சிகிச்சைகளுக்கான நிவாரணங்கள் உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமையால் வாழ்வுக்கும் சாவுக்குமான போராட்டத்தை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. நவீன அம்புலன்ஸ் வண்டிகள் இருக்குமானால் பயண நேரங்கள் குறைக்கப்பட்டு உரிய நேரத்தில் முதலுதவிச் சிகிச்சைகள் வழங்கப்பட்டு தேவையற்ற மரணங்களைத் தவிர்க்கக்கூடியதாக இருக்கும்” என மருத்துவர் ராஜசுந்தரம் மேலும் தெரிவித்தார்.

சிகிச்சை சேவைகளை வழங்குவதோடல்லாமல் 20 வயோதிபர்களுக்கான நீண்டகால பராமரிப்பு உட்பட முதியோர் பராமரிப்புச் சேவைகளையும் மூளாய் மருத்துவமனை வழங்குகிறது. மாதமொன்றுக்கு ரூ.50,000 (வெளிநாட்டுப் பணமாயின் ரூ. 55,000) கட்டணத்திற்கு தனியான கழிப்பறையுடன் கூடிய அறை, உணவு, மருத்துவப் பராமரிப்பு ஆகிய முழுமையான சேவைகளை உள்ளூர் முதியோருக்கு வழங்குகிறது இந்த மருத்துவமனை. மேலும் அதிகமாக முதியோரை உள்வாங்குவதற்காக தனியார் மற்றும் தர்ம ஸ்தாபனங்களின் உதவியுடன் இப்பராமரிப்பு நிலையம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. மூளாய் மருத்துவமனையை புனர்நிர்மாணம் செய்வதற்காக மூன்று கட்ட நடவடிக்கை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதலாம் கட்டமாக, சுமார் US$ 1,000,000 செலவில், தற்போதுள்ள பிரதான கட்டிடம் பெண் நோயியல் (Gynaecology), கருத்தரிப்பு ஆலோசனை, பராமரிப்பு (Antenatal), குழந்தைச் சிகிச்சைகள் (Paediatric clinics) ஆகியவற்றுக்காக மாற்றியமைக்கப்பட்டு ஜனவரி 19, 2018 இல்

செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக US$ 1,000,000 செலவில் அறுவைச்சிகிச்சை பிரிவு ஒன்றை நிர்மாணிக்கும் திட்டமுள்ளது. இக்கூடத்தில் அறுவைச்சிகிச்சை கூடங்கள் மற்றும் சிகிச்சைக்கு முன்னரும் பின்னரும் நோயாளிகளைப் பராமரிக்கும் அறைகள், தீவிர சிகிச்சைப் பிரிவு (Intensive Care Unit) ஆகியன அடங்கும். மூன்றாவது கட்டமாக பணியாளர் தங்குமிடம், வாகனத் தரிப்பிடம் மற்றும் மருத்துவமனை வளாகத்தின் நடைபாதைகள் ஆகியவை நிர்மாணிக்கப்படும்.

இம்மூன்று கட்ட மீள்கட்டுமானத்துக்கு அப்பாலும் இம்மருத்துவமனைக்கான அபிவிருத்திப் பணிகள் நிறைய இருக்கின்றன. ஆய்வுகூட மெருகூட்டல், புனர்வாழ்வு மற்றும் அந்திமகாலப் பராமரிப்பு சேவைகள் (palliative care), கருவூட்டல் சிகிச்சை (subfertility clinic) ஆகிய சேவைகளுக்கான தேவைகளும் உண்டு. இவையெல்லாவற்றையும் வழங்கவேண்டிய பொறுப்பு அரசாங்கத்தையே சேரும். எனினும் பணத் தட்டுப்பாடு, அரசியல் அழுத்தங்கள் என அது எதிர்நோக்கும் சவால்கள் இச்சேவைகளை வழங்க முடியாமல் செய்துவிடுகின்றன. சமூக ஆரோக்கியத்தில் தனது பணியை மேம்படுத்திக்கொள்வதற்கு இம்மருத்துவமனை, சூழவுள்ள கிராமங்களில் உப சிகிச்சை நிலையங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும். நோய்களின் ஆரம்பத்திலேயே சிகிச்சைகளை மேற்கொள்வதன் மூலம் அவை சமூகத்தில் பரம்பலடையாது பாதுகாத்துக் கொள்ளலாம்.

பழமையின் பெருமைகளை மீளுருவாக்கம் செய்வதில் மட்டும் மூளாய் மருத்துவமனை குறியாக இருக்கிறதென்பதில்லை. நவீன தொழில்நுட்பத்தையும் அது வரவேற்கக் காத்திருக்கின்றது. இதன் மூலம் அது வடக்கின் தொழில் நிறுவனங்களை ஆதரிக்கின்றது. யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட ஆரோக்யா லைஃப் (Arogya.life) என்னும் மென்பொருள் தயாரிப்பு நிறுவனம் தயாரித்த மருத்துவமனை நிர்வகிப்பு மென்பொருள் மூளாய் மருத்துவமனை நிர்வாகத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது. இந் நிர்வகிப்பு மென்பொருள் ஏற்கெனவே கொழும்பிலுள்ள முன்னணி மருத்துவமனைகளிலொன்றான ஹேமா மருத்துவமனையில் வெற்றிகரமாகப் பாவிக்கப்படுகின்றது. தலைநகரிலுள்ள பலம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுடன் போட்டி போடுமளவுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஆரோக்யா இருக்கிறது என்பது பெருமை தருவது.

பயன்படு முறையிற் செலவிடப்பட்டாலேயொழிய இலங்கையர் நாம் எமது பணத்தையும் நேரத்தையும் தேவையற்ற விடயங்களில் செலவிடத் தயங்குகிறோம். இக் கட்டுரையை எழுதும் எனக்கும் இது பொருந்தும். 2015 இல் நான் யாழ்ப்பாணம் வந்ததிலிருந்து மூளாய் மருத்துவமனை இயக்குநர் சபைத் தலைவர் திரு ஞானேஸ்வரனுடனான எனது நட்பு ஆரம்பித்தது. அவரை எனக்குத் தெரியாமல் இருந்தால் கூட பேரறிவுள்ள மருத்துவர் அமைப்புகள் உட்பட, இம்மருத்துவமனையின் மீளுருவாக்கத்திற்கென நன்கொடைகள வழங்கியவர்களின் பட்டியல் பிரமிக்க வைக்கிறது. அமைப்புகள் தவிர்த்து, பல தனியார்கள் சில ஆயிரங்களிலிருந்து மில்லியனுக்கும் மேலான ரூபாய்களை அள்ளிக் கொடுத்திருக்கிறார்கள். இம்மருத்துவமனையின் நிர்வாகத்தில் நம்பிக்கை கொண்டு வாரி வழங்கியவர்கள்:

### அரசாங்கங்கள் / அமைப்புகள்

1. யூ.எஸ்.எயிட் - US Aid (USA)
2. பிரித்தானியத் தூதரகம் - British High Commis sion (UK)
3. நெதெர்லாந்துத் தூதரகம் - Embassy of The Netherlands (Holland)
4. ஜீ.ஐ.செட் - GIZ (Germany)
5. யூ.என்.டி.பி. - UNDP (United Nations)
6. ஆசிய அபிவிருத்தி வங்கி - Asian Development



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டிடம்
Image Source - www.lankabusinessonline.com

*Bank (ADB)*

7. பொதுநலத் தொடரமைப்புகள்

8. ரட்ணம் அறக் கட்டளை - பிரித்தானியா *Ratnam Foundation (UK)*

9. *The Refugees Rehabilitation Organization Ltd*

10. அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (அமெரிக்கா) - *International Medical Health Organisation (USA)*

11. *NorthEast Emergency Reconstruction Programme*

12. தமிழர் மருத்துவ அமைப்பு (பிரித்தானியா) - *Medical Institute of Tamils (UK)*

13. அனைத்துலக மனித நேயம் அறக்கட்டளை - *Manitha Neyam Trust (International)*

14. அவுஸ்திரேலிய மருத்துவ அமைப்பு - *Austra lian Medical Aid Foundation (Australia)*

15. சிறீ கனகதுர்க்கை அம்மன் கோவில் (பிரித்தானியா) - *Sri Kanaga Thurkkai Amman Temple (UK)*

16. தமிழர் மருத்துவ அமைப்பு (கனடா) - *Medical Institute of Tamils (Canada)*

17. மஹாராஜா நிறுவனம் (இலங்கை) - *Mahara jah Organization's CSR (Sri Lanka)*

18. தமிழர் நிலைகொள் குழு (பிரித்தானியா) - *Standing Committee of Tamils (UK)*

19. ஹார்ஃபொர்ட்சயர் தமிழர் ஒன்றியம் (பிரித்தானியா) - *Tamil Union of Herts (UK)*

20. காரை நலன்புரிச் சங்கம் (பிரித்தானியா) - *Karai Welfare Society (UK)*

மூளாய் மருத்துவமனை அதிர்ச்சிகரமான பயணமொன்றை மேற்கொண்டு வந்திருக்கிறது. *1936* இல் அதன் பரோபகாரமான பிறப்பு முதல் இலங்கை இனப்போரின் அழிவுகளையும் தாங்கி இப்போது அது மறுபிறப்பெடுத்திருக்கிறது. வேலணையிலிருந்த தனது நெல் வயல்களைப் பார்வையிட எனது பாட்டி கொழும்புத்துறையிலிருந்து வருடமொரு தடவை மாட்டு வண்டிலில் குதூகலமாகப் பயணம் செய்வது பற்றி அப்போது 6 வயதாகவிருந்த



பராமரிப்பில் உள்ள முதியோர்
Image Source - www.lankabusinessonline.com



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வைத்தியசாலைக் கட்டிடம்
Source - www.lankabusinessonline.com

எனது தந்தையார் கூறுவதைக் கேட்டிருக்கிறேன். மூளாய் மருத்துவமனையும் இப்படித்தான் சில மைல்கள் தூரமுள்ள அயற் கிராமங்களிலுள்ள மக்களுக்கு வசதியாகவிருந்திருக்கும். இப்போது கார்கள், பஸ்கள், ஸ்கூட்டர்கள், முச்சக்கரவண்டிகள் என மிருதுவான தெருக்களில் பயணம் செய்வதனால் யாழ். குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் மூளாய் மருத்துவமனை பலன் தருகிறது. வடக்கின் சிறப்புக்கு நடுநாயகமாக விளங்கும் மூளாய் மருத்துவமனை நாட்டின் மிகவும் பின்தங்கிய பிரதேச மக்களுக்கு பிரதான சேவை வழங்குநராக மிளிர்கிறது. அது மட்டுமல்லாது ஆரோக்கியா லைஃப் நிறுவனங்களைப் போல உயர்தர தொழில்நுட்பங்களினதும் சேவைகளினதும் உற்பத்தித் தளமாக இருந்து மேலும் பல புதிய முதலீடுகள், தொழில் முயற்சிகளின் பிறப்பிடமாக மூளாய் வைத்தியசாலை இருக்குமென எதிர்பார்க்கலாம். இக்காரணங்களுக்காகவும் இதர காரணங்களுக்காகவும் மூளாய் மருத்துவமனை எமது ஆதரவுக்கும் வாழ்த்துக்கும் உரியதாகிறது. மூளாய் மருத்துவமனை தற்போது மருத்துவர் ஆர். சுரேந்திரகுமாரை சுகாதார அத்தியட்சகராகவும், திரு எம். ஞானேஸ்வரனைத் இயக்குநர் சபையின் யாழ்ப்பாணத் தலைவராகவும், மருத்துவர் எஸ். ராஜசுந்தரத்தை இயக்குனர் சபையின் பிரித்தானியத் தலைவராகவும் கொண்டு நிர்வகிக்கப்படுகிறது. இவர்களது தொடர்புகளைப் பின்வரும் தொடுப்பின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். *http://moolaihospital.com/contactus/*

இக்கட்டுரை 'லங்கா பிசினெஸ் ஒன்லைன்' தளத்தில் ஜனவரி 08, 2019 இல் பிரசுரமானது.

# அம்மாச்சி உணவகம் :

## தொழில் முனைவோருக்கான முன்னுதாரணம்



அம்மாச்சி உணவகம் - யாழ்ப்பாணம்

Image Source - jaffnasuthan.com

**2015** இல் நான் யாழ்ப்பாணத்திற்குக் குடிபெயர்ந்ததிலிருந்து அங்கு போர் விதவைகளால் நடாத்தப்படும் உணவகம் பற்றி பல வதந்திகளைக் கேள்விப்பட்டிருந்தேன். கொழும்பிலிருந்து வடக்கே வரும் நண்பர்கள் கிளிநொச்சிக்கு அருகே, A9 வீதியில் இது இருப்பதாகச் சொன்னார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து ஒன்றரை மணித்தியால வாகன ஓட்டத்தில் (சிலர் இதை ஒரு மணித்தியாலத்தில் கடந்துவிடுவார்கள்) கிளிநொச்சிக்கு அருகே இருக்கும் இவ்விடத்தைத் தரிசிக்க எனக்கு ஒரு வருடம் பிடித்தது. பின்னர் தான் தெரியவந்தது, எனது வீட்டிலிருந்து முச்சக்கர வண்டியில் 15 நிமிடங்கள் ஓடினால் அங்கும் ஒரு 'அம்மாச்சி' இருக்கிறது என்பது.

'அம்மாச்சி'யின் உணவு பிரமாதமானது. இறைச்சியும், பியரும் இல்லாமலே இங்கு வழங்கப்படும் சுத்த சைவ உணவு மிகவும் சுவையானது என்பதை நான் பரிந்துரைப்பேன். 50 ரூபாய் பெறுமதியான காளான், மரக்கறி சூப் முதல் பழரசத்துடன் கூடிய 200 ரூபாவுக்குள்ளேயே வயிற்றை நிரப்பும் உணவு வரை அற்புதமான உணவைப் பரிமாறுகிறது



அம்மாச்சி உணவகம் - யாழ்ப்பாணம்

Image Source - jaffnasuthan.com

'அம்மாச்சி'. ஆனால் அது மட்டுமல்ல எனது புகழுரைக்குக் காரணம். 'அம்மாச்சி', யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் எனப் பல கிளைகளைக் கொண்ட ஒரு பாரிய நிறுவனம் என்பதுவும் தான். அது மட்டுமல்ல 'ஹெல போஜன்' என்னும் பெயரில் இலங்கையின் பெரும்பான்மை இன மக்களின் சுவைகளையும் தாங்கி அது இலங்கை முழுவதும் வியாபித்திருக்கிறது.

'அம்மாச்சி' ஒரு சிறந்த வியாபார உத்தி. இலங்கை விவசாயத் திணைக்களத்தினால் இவ் உணவகத்திற்கான இடமும் தளபாடமும் வழங்கப்படுகிறது. ஒரு பண்டகசாலை அளவிலான மண்டபத்தில் பல சிறிய சமையற்கூடங்களும், சமையலுபகரணங்கள், மேசை, கதிரைகள், கழிப்பறைகள், கழுவல் தொட்டிகள் ஆகியனவும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சமையற்கூடம் காலை 7:00 மணி முதல் பி.ப. 1:00 மணி வரை ஒருவருக்கு வாடகைக்கு விடப்படும். பின்னர் பி.ப. 1:00 முதல் மாலை 7:00 மணி வரை இன்னொருவருக்கு வாடகைக்கு விடப்படும். பெண்களே (ஆண்களை என்னால் காண முடியவில்லை) இவற்றை வாடகைக்குப் பெற்று தமது உணவகங்களை நடத்துகிறார்கள். எரிவாயு முதற்கொண்டு சமையலுக்குத் தேவையான அனைத்து மூலப்பொருட்களையும் இப்பெண்களே கொண்டுவருகிறார்கள். விற்கப்படும் உணவிற்கான விலைகளையும் அவர்களே தீர்மானிக்கிறார்கள். இலாபமோ நட்டமோ எல்லாமும் அவர்களுடையதுதான்.

முதலீடோ அல்லது உதவிகளோ இல்லாதவர்களுக்கு 'அம்மாச்சி' தொழில் கற்கைக்கான ஒரு ஆரம்பம். குடும்பத் தலைவிகளுக்கோ அல்லது பாடசாலையை முடித்துக்கொண்டு வேலைகளைத் தேடுபவர்களுக்கோ அல்லது இன்னுமொரு இடத்தில் வேலை பார்த்துக் கசப்புற்றவர்களுக்கோ 'அம்மாச்சி' ஒரு ஆபத்தற்ற தொழிற் கற்கை ஊடகம் என்பதோடு எதிர்காலத்தில் அவர்கள் உயர்தர, பாதுகாப்பான தொழில்களை ஆரம்பிக்க இக்கற்கை உதவியாகவிருக்கும். காலையில் உரிய நேரத்தில் துயிலெழுந்து, வாடிக்கையாளர்களின்

**‘அம்மாச்சி’ ஒரு சிறந்த வியாபார உத்தி. இலங்கை விவசாயத் திணைக்களத்தினால் இவ் உணவகத்திற்கான இடமும் தளபாடமும் வழங்கப்படுகிறது. ஒரு பண்டகசாலை அளவிலான மண்டபத்தில் பல சிறிய சமையற்கூடங்களும், சமையலுபகரணங்கள், மேசை, கதிரைகள், கழிப்பறைகள், கழுவல் தொட்டிகள் ஆகியனவும் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன.**


காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும் உணவுகள்
Image Source - www.lankabusinessonline.com

தேவைகளை அறிந்து அதற்கேற்ப திட்டமிடல், கொள்வனவு, முறையான சமையல், தூய்மை, தரம் ஆகியவற்றைத் தீர்மானித்தல் ஆகிய ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுவதுடன் அவ்வப்போது நடைபெறும் உணவுப் பரிசோதனைகளை வெற்றிகொள்ளவும் ‘அம்மாச்சி’ உணவகம் கற்றுத் தருகிறது. இப்படியான உணவகமொன்றில் நான் பேசிக்கொண்டிருந்தபோது அம்மண்டபத்தில் காக்கிச் சீருடையில் இரு சுகாதார பரிசோதகர்கள் சில நிமிடங்களாக நடமாடிக்கொண்டிருந்ததைப் பற்றி அவ்வுணவகப் பெண் பேசிக்கொண்டிருந்தார்.

‘அம்மாச்சி’ பற்றி அறிவதற்காக நான் எனது மும்மொழி வல்லுனர், நண்பர் ஜுட் ஜோசெஃபுடன் யாழ்ப்பாணத்திலுள்ள ‘அம்மாச்சி’ உணவகத்திற்குச் சென்றிருந்தேன். தமிழோ சிங்களமோ தெரியாத எனக்கு மொழிபெயர்ப்பாளர் ஒருவர் அவசியமாகவிருந்தார். அது மட்டுமல்ல பொதுவாக மௌனம் காக்கும் எமது பெண்களைத் தனது இனிய சிரிப்பால் பேசவைக்கும் ஆற்றல் படைத்தவர் ஜுட். ஒரு மணிக்கு கை மாறும் கடையின் முந்தைய, பிந்திய உரிமையாளர்களை ஒருங்கே சந்திக்கும் வாய்ப்பை நாங்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தியிருந்தோம். இதனால் பல ‘அம்மாச்சி’ பெண்களுடன் உரையாடும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. “அம்மாச்சியில் சேர்வதற்கு முதல் நீங்கள் என்ன செய்துகொண்டிருந்தீர்கள்” என நான் அவர்களிடம் கேட்டேன். அவர்களில் இருவர் தமது வீடுகளில் சும்மா இருந்தனரெனவும், ஒருவர் குடும்ப மனைவியாகவும், இன்னுமொருவர் பாடசாலைக் கல்வியை முடித்திருந்ததாகவும், மற்றொருவர் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உதவும் அரசு சார்பற்ற நிறுவனத்தில் பணிபுரிந்ததாகவும், இன்னுமொருவர் பூ விற்றதாகவும், ஒருவர் மத்திய கிழக்கில் பணிப்பெண்ணாக வேலை பார்த்ததாகவும் கூறினார்கள். அவர்களில் சிலர் நான்கு குழந்தைகளுக்குத் தாய்மாராகவும் சிலர் குழந்தைகளே இல்லாதவர்களாகவும் இருந்தனர். இவர்களில் ஒருவர் திருமணம் புரியாதவராகவும், மற்றுமிருவர் கணவர்களால் கைவிடப்பட்டவர்களாகவும் இருந்தனர். சிலர் சாரதிகளாகவும், தச்சுத் தொழில் செய்தவராகவும், வீடுகளுக்கு வர்ணம் பூசுபவராகவும் பணியாற்றி அனுபவம் பெற்றிருந்தனர்.

இவர்கள் ‘அம்மாச்சி’யில் எப்படித் தொழில்களை ஆரம்பித்தார்கள்? ஒருவர் காளான் பயிரிடலில் ஆரம்பித்து தனது தொழிலைப் பணமாக்குவதற்காக ‘அம்மாச்சி’ யுடன் இணைந்தார். அவரது உணவகம் காளானை

மூலமாகக்கொண்ட இரசம் (soup), உணவுருண்டை (cutlets) போன்ற உணவுகளை விற்கிறது. இந்த நேர்காணலுக்கு முன்னதாக நான் 'அம்மாச்சி' க்கு பல தடவைகள் சென்று காளான் இரசத்தை அருந்தியிருக்கிறேன். 50 ரூபாய்க்கு முழுமையான காளான், மரக்கறி வகைகளுடன் பரிமாறப்பட்ட இரசம் மிகவும் அருஞ்சுவையோடிருந்தது. இக்காளான் உணவு வியாபாரம் வெற்றி பெற்றதையடுத்து அவர் மேலும் இரண்டு நண்பிகளை 'அம்மாச்சி' க்கு அழைத்து வந்தார். இவரது தாயாரும் இன்னுமொரு பெண்ணை 'அம்மாச்சி' க்கு அறிமுகப்படுத்தினார். இவர் விவசாயத் திணைக்களத்தில் தேனீ அபிவிருத்தியில் ஈடுபட்டு வருகிறார். இன்னுமொரு பெண் காலையில் யாழ். கோட்டைக்கு அருகே ஒரு சிறு உணவுச்சாலையை நடத்திவிட்டு பிற்பகலில் 'அம்மாச்சி'யில் உணவகத்தை நடத்துகிறார்.

விவசாயத் திணைக்களத்திலிருந்து இப்பெண்கள் சிறப்பான பயிற்சியைப் பெறுகிறார்கள். உணவுத் தயாரிப்புகளுக்கான மூலப் பொருட்களை எங்கு, எப்படித் தெரிவு செய்து வாங்குவது, எப்படிச் சமைப்பது, எப்படிச் சுகாதாரத் தரங்களைப் பேணுவது, செலவீனங்களை எப்படிக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது போன்ற ஒரு சிறுதொழிலுக்கான அத்தியாவசிய அம்சங்கள் இவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. பழரசக் கடையை நடத்தும் பெண்ணிற்கு பப்பாசி, விளாம்பழம், அன்னாசி, மாம்பழம், நீத்துப்பூசணி உட்பட்ட பலவிதமான பழங்களை வாங்குவது முதல் தயாரிப்பு வரை பயிற்சி வழங்கப்பட்டிருக்கிறது. ஒரு பெரிய குவளையில் வழங்கப்பட்ட (எனக்கு சிபார்சு செய்யப்பட்ட விளாம்பழ ரசமும், இதர இரசங்களும்) 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்படும் நன்னாரித் தேனீரையும் இவரது கடையில் பெற்றுக்கொள்ளலாம்.

வாரத்தில் செவ்வாய், வெள்ளி, சனி, ஞாயிறு





Image Source - www.lankabusinessonline.com

தினங்களில் 'அம்மாச்சி' களை கட்டுகிறது. "செவ்வாய்க்கிழமையில் அப்படி என்ன விசேஷம்?" எனக் கேட்டேன். இந்துக்களில் பெரும்பாலானோர் செவ்வாய்க்கிழமைகளில் மாமிசம் சாப்பிடுவதில்லை (இது நான் கற்றுக்கொண்ட ஒரு புது விடயம்) எனப் பதில் கிடைத்தது. "என்ன நேரம் அவர்கள் வேலைகளை ஆரம்பிக்கிறார்கள்?" என்று நான் கேட்டேன். ஒருவர் எதை விற்கிறார் என்பதில் இது தங்கியிருக்கிறது. பட்டாணிக் கடலை மற்றும் பருப்பு உணவுகளைச் சமைக்கும் பெண் அதிகாலை 3 மணிக்கு எழுகிறார். பழரசம் தயாரிப்பவருக்கு அதிக நேரம் தேவையில்லையாதலால் அவர் ஆறுதலாக எழுகிறார்.

'அம்மாச்சி' உணவகங்களை நடத்தும் பெண்கள் செலவுகள் போக நாளொன்றுக்கு 1,000 முதல் 2,000 ரூபாய்கள் வரை இலாபமீட்டுகிறார்கள்.

பழரச வியாபாரி மழைநாட்களில் இலாபமீட்டாவிட்டாலும், யாழ்ப்பாணம் வெய்யிலில் கொதிக்கும் நாட்களில் நிறைய இலாபம் சம்பாதிக்கிறார். நாள் முடிவில் எஞ்சும் உணவுகள் இலவசமாக வழங்கப்படுவதும் அல்லது குப்பைக்குள் வீசப்படுவதும் வழக்கம். வியாபாரம் நஷ்டத்தில் போகாமலிருப்பதற்காக உணவு தயாரிப்பு விடயத்தில் தரத்தையும், அளவையும் தீர்மானிக்கக் கற்றுக்கொள்வது அவசியம். இதனால் மீதியை வீசவேண்டிய நிலை ஏற்படாது தவிர்த்துக்கொள்ளலாம்.

"அம்மாச்சி வியாபாரத்தின் மூலம் நீங்கள் வேறு என்ன பலன்களைப் பெறுகிறீர்கள்?" எனக் கேட்டேன். பொதுவாக எல்லோருமே கூறியது "சமையற்கலை மட்டுமல்ல இதர வியாபார நுணுக்கங்களையும் நாங்கள் கற்றுக்கொள்ளும் அதே வேளை துணிவு, தன்னம்பிக்கை, எமது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள எம்மால் முடியுமென்ற நம்பிக்கை எனப் பல வழிகளிலும் நாங்கள் பலன் பெறுகிறோம்" என்பதே. அவர்களது மனோபலத்தையும் நம்பிக்கையையும் என்னால் உணர முடிந்தது. இலங்கையின் பல பகுதிகளிலும் நான் சந்தித்த வாய்மூடி மௌனிகளைப் போலல்லாது இவர்கள் எங்கள் கண்களை ஊடுருவித் தங்கள் கருத்துகளை ஆணித்தரமாக முன்வைத்தமை ஆச்சரியமாக இருந்தது. தங்களில் ஒருவர் இப்படி வெளிப்படையாகப் பேசியதை தாம் இப்போதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறோம் எனச் சில பெண்கள் நகைச்சுவையுடன் கூறி மகிழ்ந்தனர். முன்னர் மௌனம் காத்தவர் சிரிப்பை உதிர்த்தது மட்டுமல்லாது அதிகப் பிரசங்கியாகவும் மாறியிருந்தார். சிலர் மௌனமாக இருப்பது அவர்களிடம் பேசுவதற்கு எதுவுமில்லை என்பதன் வெளிப்பாடு அல்ல மாறாக அவர்களிடம் எவரும் கருத்துகளைக் கேட்காதபடியால் தான் அவர்கள் பேசுவதில்லை என்பதை இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இப்பெண்களிடையே தொடர்பாடலை விருத்தி செய்தமை எங்கள் வருகையின் முக்கிய வெற்றிகளில் ஒன்று என நானும் ஜூட்டும் நம்புகிறோம். உணவுக்கூடத்தின் தூய்மை, உணவுத் தரம், எரிவாயு வழங்கல் மற்றும் அத்தியாவசிய வழங்கல்களை உறுதிப்படுத்தல் தொடர்பான மேற்பார்வைத் திறன்களையும் இப்பெண்கள் இங்கு கற்றுக்கொள்கிறார்கள். சக உணவக உரிமையாளர் தெரிந்தோ தெரியாமலோ அசுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டாலோ அல்லது தூய்மையற்ற உணவுத் தயாரிப்பில் ஈடுபட்டாலோ, தமக்கும் அப்படி நேரலாம் என்பதையும் கருத்தில் கொள்ளாமல், அவரைக் கண்டிக்கிறார்கள் இப்பெண்கள்.

'அம்மாச்சியில்' இரண்டு அல்லது மூன்று வருட அனுபவத்தைப் பெற்ற பின்னர் இப்பெண்கள் தாம் கற்ற பலம், தன்னம்பிக்கை, ஒழுக்கம், செயற் திறன்கள் ஆகியவற்றைக் கொண்டு தமது கிராமங்களில் சொந்தமான உணவகங்களை ஆரம்பிக்கிறார்கள். இருப்பினும் 'அம்மாச்சியில்' காணப்படும் பாதுகாப்பு, சமூக உணர்வு காரணமாக சிலர் வேறு முயற்சிகளில் ஈடுபட அதிக அவசரம் காட்டுவதில்லை என்பதுமுண்மை. யாழ்ப்பாணம், வடக்கு, இலங்கையில் எங்கு பார்ப்பினும் இப்படியான குணாதிசயங்களைக் கொண்டவர்களைக் காண முடியும். ஆனால் இவை மட்டுமே போதாது. இதர சொத்துகளான சந்தை நுழைவு, வியாபாரத் தொடர்புகள், பணம் ஆகியவையும் அவசியமானவை. இவை இருப்பினும் வெற்றி உங்களை நெருங்கிவிட்டதென்பதில்லை. தோல்விகளுக்குப் பழகிக்கொள்ளும் போதும், தப்பிப் பிழைத்து அவற்றின் காரணங்களை அறிந்து தெளிந்து கொள்ளும்போதும் சிலவேளைகளில் உங்கள் இலக்கை அடையலாம். ஆனால் அதிஷ்டத்தின் பங்கையும் புறந்தள்ள வேண்டாம். நெப்போலியன் போனாபார்ட் கூறியது போல "நல்ல ஜெனெரல்களைவிட அதிஷ்டமான ஜெனெரல்களே எனக்குத் தேவையானவர்கள்". இந்த 'இதர சொத்துகள்' வடமாகாணத்தில் மிகவும் அரிது. உண்மையில் இச்சொத்துகள் எல்லாம் மேற்கு மாகாணத்தில் குவிக்கப்பட்டுள்ளதால் இலங்கையின் இதர மாகாணங்கள் பின்தள்ளப்பட்டுள்ளன.

2017/2018 இல் வெளியான, ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் சர்வதேச அபிவிருத்தி மையத்தின் 'இலங்கை வளர்ச்சிப் பகுப்பாய்வு'


அறிக்கையின் பிரகாரம் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகம் பெரும்பாலும் நுட்பமற்ற (Unsophisticated products) பொருட்களிலேயே பெரும்பாலும் மையம் கொண்டிருக்கிறது எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாது திறன் குறைந்த வேலைகளையே நாட்டின் பொருளாதாரம் உற்பத்தி செய்கிறது. இது நாட்டின் நாள்பட்ட பிணி. இதைத் தீர்க்க நாட்டின் பொது மற்றும் தனியார் துறைகள் மிகவும் தாமதமாக முயன்றுகொண்டு இருக்கையில் வடக்கின் மீதான கவனம் பின்தள்ளப்படுவது இயல்பே. இப்பட்டியலில் வடக்கு துரிதமாக முன்னேற வேண்டுமாகில் அது புலம்பெயர்ந்தோரின் ஊக்கமான முயற்சியினால் தான் கைகூடும். சிலர் இம்முயற்சிகளில் ஏற்கெனவே ஈடுபட்டு வருகிறார்கள். மிகவும் உயர் ரக தொழில் முயற்சிகளில் ஈடுபடும் எனக்குத் தெரிந்தவர்களில் சிலர்: 1). ஒக்ஸ்ஃபோர்ட், பிரித்தானியாவைச் சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணர் - இவர் கற்றாளைப் பண்ணையொன்றை ஆரம்பித்திருக்கிறார். தகுந்த முதலீடு கிடைக்கும் பட்சத்தில் பசுமை கொழிக்கும் இப்பண்ணையின் விளைச்சலைப் பதனிடும் ஆலையொன்றை நிறுவக் காத்திருக்கிறார் 2). ரொறோண்டோ, கனடாவிலிருந்து வந்திருக்கும் தளபாட உற்பத்தியாளர் - இவர் பனம் பானங்களிலிருந்து கள்ளு, சாராயம் ஆகியவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறார் 3). கலிஃபோர்ணியா, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கிலிருந்து வந்த தொழில்நுட்ப வல்லுனர் - இவர் யாழ்ப்பாணத்தில் வங்கியொன்றின் மேலுள்ள அறையில் இருந்துகொண்டு பல்கலைக்கழகத்திற்கே செல்லாதவர்களைக் கொண்டு வியாபாரிகளால் பாவிக்கப்படும் வசூல் இயந்திரங்களை (Point of Sale (POS)) உற்பத்தி செய்கிறார். இவ்வியந்திரங்கள் இலங்கையில் ஏற்கெனவே பாவனையிலுள்ளன. விரைவில் சர்வதேசச் சந்தைகளிலும் கிடைக்கும். 4). நியூயோர்க், அமெரிக்காவிலிருந்து ஒரு விவசாய - சூழலியலாளர். இவர் தெங்கு மட்டையிலிருந்து பொச்சுக்களை அகற்றி அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறார்). இவர்களை விட இன்னும் சிலர் வெவ்வேறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். இன்னும் சிலர், முயற்சிகளை மேற்கொள்ள தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். இனிவரும் மாதங்களில் அவர்களைப் பற்றி நான் எழுதவுள்ளேன். ஆனால் உடனடித் தாக்கத்தை ஏற்படுத்த வல்ல சிலரை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளேன். மேலும் பலர் எங்களுக்குத் தேவை.

'அம்மாச்சி' பெண்களுடன் பேசிய பின்னர் தான் அறிந்தேன், வடக்கில் பிரமிப்பைத் தரும் தொழில் முனைவர்கள் இருக்கிறார்கள் என்பதை. அவர்கள் மட்டும் என்பதில்லை. நான் 2015 இல் யாழ்ப்பாணம் வந்தபோது அங்கு சுவை தரும் உணவுச் சுருள்களையும், இனிப்புப் பண்டங்களையும் விற்கும் சிறு கொட்டகைக் கடைகள் இருந்தன. இப்போது அவை அவரவர் வீடுகளில் வசதியாக உருமாற்றப்பட்ட முறையான கடைகளாகப் பரிணமிக்கின்றன. பி.ப. 3:00 மணிக்குத் திறக்கப்படும் இக் கடைகள், பண்டங்கள் தீரும்வரை, 23 மணித்தியாலங்கள் திறந்திருக்கின்றன. இவை தயாரிக்கும் உணவுச் சுருள்கள் இலங்கையிலேயே அதி சுவை வாய்ந்தவை. விலையிலும் மிக மிக மலிவானவை. மிளகாய்த்தூள் கட்டிகளை வெளிப்பரப்பில் கொண்டிருக்கும் இச்சுருள்களைக் கடிக்கும் வேளையில் மறைந்த எனது தந்தை தனது சகோதரர்களோடு சிறுவர்களாக மிளகாயுடன் கூடிய பண்டங்களை வாய்களில் திணித்து கண்களில் நீர் தாரையாகி வழிய வலியுடன் சுவைத்து மகிழ்ந்த கதைகளைக் கேட்ட ஞாபகம் நினைவுக்கு வருகிறது. "நாங்கள் குளறிக்கொண்டே சாப்பிடுவோம்" என அவர் கூறுவார். சில பண்டங்கள் கண்ணீரை மட்டுமே வரவழைக்கும். 'அம்மாச்சி' போன்ற நுண் கடைகளை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய நகர்வுகள் மகிழ்வைத் தருவன. "அரசாங்கங்கள் எங்களுக்கு என்ன செய்தன?" என்று யாராவது கேட்டால் நான் தயங்காமல் சொல்வேன், இலவசக் கல்வியும் 'அம்மாச்சியுமே'.

★இக் கட்டுரை லங்கா பிசினெஸ் ஒன்லைன் நவம்பர் 26, 2018 பதிப்பில் பிரசுரமானது.

‘இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்’ எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.

என்.கே.எஸ்.திருச்செல்வம்



கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத்துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் ‘தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்’, ‘புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்’, ‘இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்’, ‘யார் இந்த இராவணன்’, ‘பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை’, ‘பண்டைய தமிழ் நூல்களில் சிவன்’, ‘கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்’, ‘தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?’ போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

# நாகசிவன், நாகவிய, நாகப்ப சவிய ஆகியவை பற்றிக் குறிப்பிடும்

# பண்டகிரிய கல்வெட்டு

அம்பாந்தோட்டை நகரிலிருந்து திஸமஹராமைக்கு செல்லும் வீதியில் 9 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள பள்ளேமலல சந்தியிலிருந்து வட மேற்கு நோக்கிச் செல்லும் வீதியில் உள்ள யஹன்கல மலைப் பகுதியிலிருந்து வடக்குப் பக்கமாக மேலும் 5 கி.மீ தூரத்தில் உள்ள பண்டகிரிய குளத்தின் அருகில் பண்டகிரிய மலைப்பகுதி அமைந்துள்ளது.

பொ.ஆ.மு. 2 ஆம் நூற்றாண்டில் இப்பகுதியை ஆட்சி செய்த காவந்தீசன் எனும் மன்னனால் பண்டகிரிய மலையில் பௌத்த ஆலயம் அமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அதேசமயம் தென்னிலங்கையில் மாகம எனும் இராச்சியத்தை அமைத்த மகாநாகன் காலத்தில் இம்மலையில் வழிபாட்டுத்தலங்கள் இருந்ததாகவும் கூறப்படுகிறது. இங்கு சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் புராதன ஆலய இடிபாடுகள் காணப்படுகின்றன. இம்மலையில் 5 கற்சுனைகளும் அமைந்துள்ளன.

பண்டகிரிய மலைப்பகுதியில் இயற்கையாக அமைந்த 10 கற்குகைகள் காணப்படுகின்றன. இம்மலையில் உள்ள பாறையில் மொத்தமாக 5 கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் பொ.ஆ. 3 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட 3 பிராமிக் கல்வெட்டுகளும், 6 ஆம் நூற்றாண்டிற்குரிய 2 கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இவற்றில் ஒரு கல்வெட்டில்



பண்டகிரிய மலையில் தூபிகள்





நாக விய, நாகப்ப சவிய, நாக சிவன் ஆகிய பெயர்கள் உள்ள
கல்வெட்டு பற்றிய பெயர்ப் பலகை



கல்வெட்டு பொறிக்கப்பட்ட பாறை



பண்டகிரிய கல்வெட்டு



பண்டகிரிய குளமும், மலையும்

நாகன், சிவன் ஆகிய பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டை ஆய்வாளரான எட்வேர்ட் முல்லர் முதன் முதலில் ஆராய்ந்தார். 1883 இல் முல்லர் இக்கல்வெட்டின் விபரங்களை தனது நூலில் குறிப்பிட்டிருந்தார். இது மிகவும் நீளமான ஓர் கல்வெட்டு எனவும், இங்கிருந்த ஒரு தூண் கல்வெட்டை கொழும்பு தொல் பொருட்காட்சிச் சாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் அவர் தனது நூலில் கூறியுள்ளார்.

இக் கல்வெட்டில் நாகவிய என்னுமிடத்தைச் சேர்ந்த அபக்கமெனு அப, மகாகம என்னுமிடத்தைச் சேர்ந்த நாகசிவன், நாகப்ப சவிய என்னுமிடத்தைச் சேர்ந்த கசபா மற்றும் சிலர் மலையிலிருந்த தூபிக்கு செல்ல மலையில் படிகள் அமைத்தது பற்றிக் கூறப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு கூறும் செய்தியின் மூலம் இப்பிரதேசத்தில் நாக வழிபாடு சிறப்புற்று விளங்கியுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. மேலும் இப்பகுதியில் நாக விய, நாகப்ப சவிய ஆகிய நாக வழிபாடு நிலவிய இடங்கள் பற்றியும் நாக, சிவ வழிபாடு மேற்கொண்ட நாகசிவன் என்பவன் பற்றியும் அறியக் கூடியதாக உள்ளது.[4]

**நாகர் கல்லில் உள்ள மடாலயத்திற்கு சிவன் வழங்கிய மானியங்கள் பற்றிக் குறிப்பிடும் உத்தகந்தர கல்வெட்டுகள்**

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடலை ஒட்டி கிரிந்த என்னுமிடம் அமைந்துள்ளது. இவ்வூரின் வடக்கில் 6 கி.மீ தொலைவில் உத்தகந்தர மலைப்பாறைகள் அமைந்துள்ளன. உத்தகந்தர மலையில் உள்ள குகைகளில் 2 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் பொ.ஆ.மு. 250 இல் பொறிக்கப்பட்டுள்ளன. இரண்டு கற்குகைகளிலும் கற்புருவங்கள் செதுக்கப்பட்டு அவற்றின் கீழே கல்வெட்டுகள்

பொறிக்கப்பட்டுள்ளன.

உத்தகந்தர மலைப்பகுதியில் ஓர் பாறைக் கல்வெட்டும் காணப்படுகிறது. இது பொ.ஆ. 2 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டுள்ளது. உத்தகந்தர ரஜமஹா விகாரையின் பின்பக்கம் உள்ள காட்டுப்பகுதியில் உள்ள ஓர் மலைப் பாறையில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. 5 அடி நீளம், 2 அடி அகலத்தில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக் கல்வெட்டில் சிவன், நாகர்கல்லு எனும் சொற்கள் காணப்படுகின்றன. கல்வெட்டின் வாசகங்கள் பின்வருமாறு,

**சித்தம். வஹபஹலஹ வாசிய அமெத பஹிஜயஹ புத்த சிவயம நாகரகலக மஹா விஹரஹி பிகுசகஹடஎக ச தக கஹவன தினே அட்ட நசிக பணதமி கஹவனஹி வெத க நிய அரிய வச க ரண ச வமேவ பரிசஹ.**

இவ் வாசகங்களின் பொருள்: வெற்றி, வஹபஹளவில் வசிக்கும் அமைச்சர் பஹிஜயவின் புத்திரனான அமைச்சர் சிவன், நாகர்கல்லில் உள்ள மடாலயத்தின் பிக்கு சமூகத்திற்கு நூறு கஹபணத்தை வழங்கினான். இந்தப் பணத்தின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகை, ஆலயத்தில் ஆரியவாச விழாவை நடத்தும் துறவிகளுக்கு பானங்கள் வழங்குவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். இந்தக் கல்வெட்டின் படி எடுக்கப்பட்ட படம் கிடைக்கவில்லை.

இக்கல்வெட்டின் மூலம் கிரிந்த பகுதியில் நாகர்கல் எனும் ஓர் ஊர் இருந்தமையும், இப்பகுதியை சிவன் எனும் அமைச்சர் பரிபாலித்து வந்தமையும் தெரிய வருகிறது. இங்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பு நாக வழிபாடு நிலவியமையால் இவ்விடத்திற்கு நாகர்கல் எனும் பெயர் உண்டாக்கியிருக்கலாம்.

### மகாநாகன் பற்றிக் கூறும் ரன்ன வாடிகல கல்வெட்டு

அம்பாந்தோட்டையில் இருந்து தங்காலைக்கு செல்லும் வீதியில் உள்ள ரன்ன சந்தியிலிருந்து தங்காலைப் பக்கமாக மேலும் 3 கி.மீ தூரத்தில் வாடிகல என்னுமிடம் இது அமைந்துள்ளது. இங்கு பாதையின் அருகில் உள்ள மகாநாக விகாரையில் உள்ள தூபியின் பின்பக்கம் உள்ள மலைப்பாறையில் 3 பிற்கால பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

இக்கல்வெட்டுகள் பற்றிய விபரங்களை ஆராய்ந்து அவை பற் றிய விபரங்களை கல்வெட்டு ஆய்வாளர் கலாநிதி எட்வேர்ட் முல்லர் 1883 இல் பதிவு செய்தார். இவற்றில் ஒரு கல்வெட்டில் மகாநாகன் எனும் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. பௌத்த சமயத்திற்கு மதம் மாறுவதற்கு முன்பு இந்து சமய வழிபாட்டில் ஈடுபட்ட மாகாநாகன் தென்னிலங்கையில் பல நாக வழிபாட்டுத் தலங்களை அமைத்தான் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடம் பண்டைய நாக வழிபாடு நிலவிய இடங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். நாகர் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் விபரம் பின்வருமாறு.

**சமயுடகமகே......தசகரிஹி செடுகுபரே கரிஹி கே கட மகாநாக தவிக பற அசடி ..... படலகே தஹி க ......... பற ரஹிரி பலகெதஹி கரிஹக மகாதிவி செட்ட அசதி ஹ தொ கரி.**

### பெருமகன் நாகன் பற்றிக் குறிப்பிடும் ஊருமுத்த கல்வெட்டு


மாத்தறை நகரின் வடக்கில் சுமார் 30 கி.மீ தூரத்தில் உள்ள ஊருமுத்த என்னுமிடத்தில் ஒரு பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட கற்குகை காணப்படுகின்றது. இது மாத்தறை மாவட்டத்தில் காணப்படும் ஒரே ஒரு பிராமிக் கல்வெட்டாகும்.
மாத்தறை நகரிலிருந்து வடக்கு நோக்கி முலடியான என்னுமிடத்திற்கு செல்லும் வீதியில், 25 கி.மீ தூரத்தில் உள்ள மாக்கந்துர சந்தியிலிருந்து வடமேற்குப் பக்கமாக மேலும் 5 கி.மீ சென்றதும் ஊருமுத்த சந்தியை அடையலாம். இங்கிருந்து மேலும் வடக்குப் பக்கமாக மலைப்பாறைகள் மிகுந்த பகுதியூடாக ஒரு கி.மீ வரை நடந்து சென்றால் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கும் கற்குகையைக் காணலாம்.



வாடிகல மகாநாக விகாரை



கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ள பாறை



ஊருமுத்த கற்குகை



ஊருமுத்த கற்குகையில் பண்டார தெய்வத்தின் கோயில்

கல்வெட்டு பொறிக்கப்பட்டிருக்கும் இக்கற்குகையில் பண்டார தெய்வத்தின் குகைக் கோயில் அமைந்துள்ளது. பண்டார என்பவர் இப் பகுதியை ஆட்சி செய்த சிற்றரசன் எனக் கூறப்படுகின்றது. இத் தெய்வத்தின் உருவச்சிலை குகையின் முன்பக்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பன்னிரு கைகளையுடைய முருகனின் உருவமும் இங்கு காணப்படுகின்றது. முருகன் மிகவும் வித்தியாசமாக காளையில் அமர்ந்திருக்கின்றார். இவற்றைத்தவிர ஓர் யக்ஷ தெய்வத்தின் உருவமும் இக் குகையில் காணப்படுகின்றது. பண்டார தெய்வத்தின் பின்பக்கம் யக்ஷ தெய்வத்தின் உருவம் காணப்படுகின்றது.

இங்கு பொறிக்கப்பட்டிருக்கும் பிராமிக் கல்வெட்டு இரண்டு வரிகளில் காணப்படுகின்றது. மேல் வரியில் மூன்று எழுத்துகளும், கீழ் வரியில் ஆறு எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. இதில் “பருமக நாக” என எழுதப்பட்டுள்ளது. இது பெருமகன் நாகன் எனப் பொருள்படும். கல்வெட்டில் உள்ள வாசகங்கள் பின்வருமாறு,

**ஹ.. லேனே..**

**பருமக நாக..**

இக்குகை இப்பகுதியை பரிபாலனம் செய்த, நாக வழிபாடு செய்த நாகன் எனும் பெயருடைய தலைவன் பயன்படுத்திய குகை என்பது கல்வெட்டின் மூலம் தெரியவருகிறது.

# யுவராஜன் நாகனின் கொள்ளுப் பேரன் இளவரசன் நாகன் பற்றிக் குறிப்பிடும்

# படர்கல் மலைக் கல்வெட்டு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் மலைகள் நிறைந்த ஓர் இடம் காணப்படுகிறது. இது படர்கல் மலைப் பகுதி எனப் பெயர் பெற்றுள்ளது. செங்கலடியில் இருந்து மகா ஓயாவுக்குச் செல்லும் வீதியில் உள்ள மாவடி ஓடை சந்தியில் இருந்து மேற்குப் பக்கத்தில் 23 கி.மீ தூரத்தில் அடர்ந்த காட்டின் மத்தியில் படர்கல் மலைப் பிரதேசம் அமைந்துள்ளது.

மாவடி ஓடை சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாக படர்கல் மலையை நோக்கிச் செல்லும் பாதையில் ஆனைவிழுந்தமடு, வேப்ப வெட்டுவான் ஆகிய கிராமங்கள் உள்ளன. இவற்றை அடுத்து குமுக்கட்டு ஆறு, முந்தெனி ஆறு, கல்வான் ஆறு ஆகியவை ஓடுகின்றன. இவ் ஆறுகளைக் கடந்தவுடன் ஒரு நாற்சந்தி உள்ளது. அங்கிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் பாதை ஈரளக்குளம், இலுக்குப் பொத்தானை ஆகிய கிராமங்களுக்குச் செல்கிறது. மேற்கு நோக்கிச் செல்லும் பாதையே படர்கல் மலைக்குச் செல்லும் பாதையாகும்.

இங்கிருந்து சற்று தூரம் சென்றதும் வயல் வெளிகளுக்கு அப்பால் மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்கு மலைத்தொடர்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள மலைகள்

அழகாகத் தெரிகிறது. இம்மலைத் தொடரில் பல மலைகள் காணப்படுகின்றன. கார் மலை, புறாக்குஞ்சு மலை, வெள்ளைக்கல் மலை, ஏரச்சல் ஆறு மலை, புளுட்டுமான் ஓடை மலை, கொட்டடி மலை, கெவர் மலை, அரக்கர் மூலை மலையுச்சி, படிவெட்டின மலை ஆகிய மலைகள் மிக அழகாகத் தெரிகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இயற்கை அழகுமிக்க இடங்களில் இப்பகுதி முக்கியமானது.

இவ்விடத்தில் பாதையின் இரண்டு பக்கங்களிலும் இளம் பச்சை மற்றும் மஞ்சள் நிறங்களில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை வயல்வெளிகள் பரந்து காணப்படுகின்றன. இங்கிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் போது இன்னுமோர் ஆறு குறுக்கிடுகிறது. அதுதான் லாவணை ஆறு. இவ்வாற்றைக் கடந்து சிறிது தூரம் சென்றதும் பாதையின் இடது பக்கம் ஒரு குளம் காணப்படுகிறது. இது நவுண்டலியாமடு குளம் என அழைக்கப்படுகிறது.

குளத்தைக் கடந்து செல்லும் போது மூன்று சிற்றாறுகள் பாதையின் குறுக்கே ஓடுகின்றன. முதலாவது சில்லுக்கொடி ஆறு. அடுத்தது புளுட்டுமான் ஓடை ஆறு. மூன்றாவது குடாவலைக்கண்டி ஆறு. இச் சிற்றாறுகளைக் கடந்தவுடன் ஒரு காடு காணப்படுகிறது. இடது பக்கம் வயல் வெளிகளும், வலது பக்கம் காடும், மலைப் பாறைகளும் காணப்படுகின்றன. இக்காட்டைக் கடந்து மேலும் மேற்கு நோக்கி சென்றதும் புளுட்டுமான் ஓடை மலையும் புளுட்டுமான் ஓடைக் குளமும் காணப்படுகின்றன.

செங்கலடி - மகாஓயா பிரதான வீதியில் உள்ள மாவடி ஓடை சந்தியில் இருந்து ஆரம்பிக்கும் 19 கி.மீ தூரமுள்ள மேற்குப் பக்கப் பாதை இக்குளத்துடன் முடிவடைகிறது. புளுட்டுமான் ஓடை மலையும், குளமும் இயற்கை அழகுடன் கண்களுக்கு அழகிய காட்சிகளாகத் தெரிகின்றன.

இக்குளத்தின் அருகில் குமாரர் எனும் முருகப் பெருமானின் சிறிய காட்டுக் கோயில் உள்ளது. இங்குள்ள மரத்தின் அருகில் ஒரு கொட்டில் அமைக்கப்பட்டு அதில் பழமைவாய்ந்த இரும்பு வேலாயுதங்கள் சிலவும், கத்திகள் சிலவும் வைக்கப்பட்டு அவற்றிற்குத் துணிகள் சுற்றப்பட்டுள்ளன. மரத்தின் அடிப்பகுதியில் பிள்ளையார் கற்கள் சிலவும் காணப்படுகின்றன. புளுட்டுமான் ஓடை குளத்திற்கும், இப்பகுதியில் உள்ள வயல் நிலங்களுக்கும் காவலாக இருக்கும் இக்குமாரர் கோயில் பண்டைய காலம் முதல் இப்பகுதியில் வாழ்ந்து வந்த வேடர் சமூகத்தவர்களாலும், விவசாயிகளாலும், இக்காட்டுப் பகுதிக்கு விறகு வெட்ட வருபவர்களாலும் வழிபடப்பட்டு வருகிறது.

குளத்தின் வலது கரையோரமாக ஒரு ஒற்றையடிப்பாதை மேற்குப் பக்கமாக காட்டுப்பகுதிக்கு செல்கிறது. இரண்டு பக்கங்களிலும் மலைகள் நிறைந்த இக்காட்டுப் பாதையில் சுமார் 4 கி.மீ தூரத்தில் பாதையை ஊடறுத்து காணப்படும் பாறை வழியாக ஒரு சிற்றோடை ஓடுகிறது. இப்பாதையில் பல இடங்களில் காட்டு யானைகளின் எச்சங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவ்விடத்தின் வலது பக்கம் காணப்படும் மலைகள் நிறைந்த காடுதான் படர்கல் மலைப் பகுதியாகும்.

இங்குதான் 2000 ஆண்டுகளுக்கு முன்பு நாகச் சிற்றரசர்கள், மற்றும் முனிவர்கள் பயன்படுத்திய குகைத்தளங்களும் அவர்கள் பொறித்த கல்வெட்டுகளும் உள்ளன. இக்கல்வெட்டுகளில் பல முக்கிய விடயங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

இங்கிருந்து காட்டுக்குள் சுமார் 300 மீற்றர் தூரத்தில் ஒரு சிறிய செங்கல் திடல் காணப்படுகிறது. இது ஓர் பழமை வாய்ந்த தூபியின் எச்சம் என யூகிக்கக் கூடியதாக உள்ளது. அத்திடலின் மத்தியில் சுமார் 6 அடி ஆழமான ஒரு குழி தோண்டப்பட்டிருந்தது. புதையல் திருடர்கள் தமது கைவரிசையை இங்கே காட்டியுள்ளனர். இவ்விடத்தில் கற்தூண்களின் உடைந்த துண்டுகள் சிலவும், ஒரு ஆசனக்கல்லும் காணப்படுகின்றன.

அப்பகுதியில் அகலமான செங்கட்டிகள் பல பரவிக் கிடக்கின்றன. ஒரு செங்கட்டியில் சிதைந்த எழுத்துகள் தெரிகின்றன. இன்னுமோர் செங்கட்டியில் திரிசூலம் போன்ற கோடு

காணப்படுகிறது. இதை வேறு கோணத்தில் பார்த்தால் 'ர, ஜ' எனும் இரண்டு பிராமி எழுத்துகள் பொறித்தது போலத் தெரிகிறது.

இங்கிருந்து முன்னோக்கி மேலும் 200 மீற்றர் தூரம் சென்றதும் கற்பாறைகள் நிறைந்த ஓர் இடம் காணப்படுகிது. இங்கு இயற்கையாக அமைந்திருந்த கற்பாறைகளில் கற்புருவங்கள் வெட்டப்பட்ட பல குகைகளைக் காணக் கூடியதாக இருந்தது. இங்கு மொத்தமாக மூன்று பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

முதலாவதாகக் காணப்பட்ட கற்குகை 10 அடி உயரமானது. இதில் மிக நேர்த்தியாக கற்புருவம் வெட்டப்பட்டு, அதன் கீழே பிராமி எழுத்துகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது. இது சுவாமி மகா தீசனின் மகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டாகும்.

2000 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் வாழ்ந்த முனிவர்கள் நாகத்தை தாம் வாழ்ந்த கற்குகைகளில் வைத்து வழிபட்டவர்களாவர். தந்தைக்குப் பின் மகன் தந்தையின் குகைகளைப் பயன்படுத்தி வந்த காலப்பகுதியில் பௌத்த சமயம் பரவியது. அப்போது அம்மதத்தின் மீது பற்றுக் கொண்டு, அதில் ஈர்க்கப்பட்டு பௌத்த மதத்தை ஏற்றுக் கொண்ட போது தாம் வாழ்ந்த கற்குகைகளை பிக்குகள் பயன்படுத்துவதற்காகப் பௌத்த சங்கத்திற்குத் தானமாகக் கொடுத்துள்ளனர்.

2000 வருடங்களுக்கு முன்பு கிழக்கு மாகாணத்தில் குகைகளில் வாழ்ந்த அல்லது அவற்றைப் பயன்படுத்திய முனிவர்கள் தமிழ் மொழி பேசியவர்களாகவே இருக்க வேண்டும். ஏனெனில் இக்காலப் பகுதியில் நாக வழிபாடுகளை மேற்கொண்டவர்கள் தமிழர்கள் என பேராசிரியர் பத்மநாதன் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2000 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் வாழ்ந்த முனிவர்கள் நாகத்தை தாம் வாழ்ந்த கற்குகைகளில் வைத்து வழிபட்டவர்களாவர். தந்தைக்குப் பின் மகன் தந்தையின் குகைகளைப் பயன்படுத்தி வந்த காலப்பகுதியில் பௌத்த சமயம் பரவியது. அப்போது அம்மதத்தின் மீது பற்றுக் கொண்டு, அதில் ஈர்க்கப்பட்டு பௌத்த மதத்தை ஏற்றுக் கொண்ட போது தாம் வாழ்ந்த கற்குகைகளை பிக்குகள் பயன்படுத்துவதற்காகப் பௌத்த சங்கத்திற்குத் தானமாகக் கொடுத்துள்ளனர்.

அந்த வகையில் இக்குகையைத் தானம் செய்த முனிவர் மகா தீசனின் மகன் பௌத்த தர்மத்தை ஏற்றுக் கொண்ட ஓர் தமிழ்ப் பௌத்தனாக இருக்க வேண்டும். இலங்கையில் 15 ஆம் நூற்றாண்டு வரை நிலைத்திருந்த தமிழ்ப் பௌத்தர்களின் முன்னோடிகளாக இவர்கள் இருந்துள்ளனர்.

இக்கல்வெட்டுப் பொறிக்கப்பட்ட பாறையின் பின்பக்கமும், வலது பக்கமும் கற்புருவம் வெட்டப்பட்ட மேலும் சில கற்குகைகள் காணப்படுகின்றன. இங்கிருந்து பாறை இடுக்குகள் வழியாக மேல் நோக்கிச் சென்றதும் இன்னுமோர் கற்குகையைக் காணலாம். இது சுமார் 30 அடி நீளமும், 20 அடி அகலமும் கொண்ட பெரிய குகையாகும்.

இக்குகையிலும் ஓர் பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வரியில் பொறிக்கப்பட்ட நீண்ட கல்வெட்டாகும். இதில் மொத்தமாக 48 எழுத்துகள் காணப்பட்டன. எழுத்துகள் அனைத்தும் தெளிவாக, வாசிக்கக்கூடிய வகையில் காணப்பட்டன.

இக்கல்வெட்டில் "யுவராஜா நாக புத அய அபய அண அபய புத அய திச அய திச புத திச அய நாகக தெசஹய லேனே மணம திச" என எழுதப்பட்டு எழுத்துகளின் முடிவில் சுவாஸ்திகா சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. இது "யுவராஜன் நாகனின் மகன் இளவரசன் அபயன், அவனின் மகனான இளவரசன் தீசன், அவனின் மகனான தீசன், இளவரசன் நாகனின் குகை" எனப் பொருள்படும். இக்கல்வெட்டின் மூலம் இப்பகுதியில் வாழ்ந்த யுவராஜன் நாகனின் மூன்று தலைமுறை இளவரசர்கள் பற்றியும், இவர்கள் நாக வழிபாடு செய்தமை பற்றியும் தெரிய வருகிறது.

இங்கிருந்து மேல் நோக்கிச் செல்லும் போது சற்று உயரமான ஒரு பெரிய பாறை காணப்படுகிறது. அதன் மேலே ஏறிச் சென்றபோது அதன் வலது



எழுத்து பொறிக்கப்பட்டுள்ள செங்கட்டி

பக்கம் ஒரு கற்குகையும், இடது பக்கம் ஒரு கற்குகையும் காணப்படுகின்றன. இரண்டு குகைகளிலும் கற்புருவம் வெட்டப்பட்டிருந்தது. இடது பக்கக் குகையில் மட்டும் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டிருந்தது.

படர்கல்மலைப் பகுதியில் காணப்படும் பிராமிக் கல்வெட்டுகள் மூலம் இரண்டு விடயங்களை அறியக் கூடியதாக உள்ளது. ஒன்று பண்டைய காலத்தில் இப்பகுதியில் நாக வழிபாடு செய்த நாக மன்னர்களும் அவர்களின் சந்ததியினரும் வாழ்ந்துள்ளனர். நாகர் என்போர் தமிழர்கள் தான் என பேராசிரியர் எஸ். பத்மநாதன் தனது ஆய்வுகள் மூலம் நிறுவியுள்ளார். இரண்டாவது இப்பகுதியில் நாக வழிபாடு செய்த நாக மன்னர்களும், அவர்களின் சந்ததியினரும் பௌத்த மதம் இலங்கையில் அறிமுகமான போது பௌத்த சமயத்தை ஏற்றுக் கொண்டு, தமிழ்ப் பௌத்தர்களாக மாறியுள்ளனர் என்பதே அவ்விடயங்களாகும்.

## உபராஜன் நாகன் பற்றிக் கூறும் குசலான மலைக் கல்வெட்டு

மட்டக்களப்பிலிருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் 14 கி.மீ தொலைவில் அமைந்துள்ள செங்கலடிச் சந்தியில் இருந்து மகா ஓயாவிற்குச் செல்லும் வீதியில் 13 கி.மீ தொலைவில் கரடியனாறு எனும் பழந்தமிழ் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராமத்தின் வடமேற்கில் 3 கி.மீ தூரத்தில் குசலான மலை அமைந்துள்ளது. இம்மலை உச்சியில் தான் மிகப் பண்டைய காலத்து வேல் கோயில் அமைந்திருந்தது.


குசலான் மலைத்தொடரில் நான்கு மலைக்குன்றுகள் காணப்படுகின்றன. இம்மலைத் தொடரின் பின்பக்கம் வேப்பவெட்டுவான் எனும் கிராமம் உள்ளது. வடகிழக்கு மற்றும் தென்மேற்காக நீண்டு காணப்படும் இம்மலைத் தொடரில் முதலாவதாக நாம் காண்பது முருகன் கோயில் அமைந்துள்ள மலைக் குன்றாகும்.



யுவராஜன் நாகன், இளவரசன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு



படர்கல் மலைக் குகைகளில் ஒன்று



உபராஜன் நாகன் பற்றிய குசலான மலைக் கல்வெட்டின் பிரதி

இதன் பின்பக்கம் உள்ள குன்றே இங்குள்ள நான்கு குன்றுகளில் உயரமானதாகும். உயரமான இக் குன்றுக்கு இடதுபக்கம் மூன்றாவது குன்று அமைந்துள்ளது. நான்காவது குன்று முருகன் கோயில் அமைந்துள்ள குன்றின் வலது பக்கம் காணப்படுகிறது.

மிகப்பண்டைய காலம் முதல் வேடர்கள் வாழ்ந்துவந்த பிந்தென்னைக் காட்டுப் பகுதியின் கிழக்குப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்குப்பகுதி விளங்கியது. இங்கு வேடர்கள் பெருமளவில் வசித்து வந்தனர். ஓமுனகல, ஹேனனேகல, நுவரகல, கொக்காகல போன்ற மலைத் தொடர்களிலும், இதன் கிழக்குப் பகுதியிலுள்ள மலைக் குன்றுகளிலும் வேடர்கள் வாழ்ந்து வந்தமைக்கான சான்றுகள் உள்ளன. இம்மலைக் குன்றுகளில் குசலான் மலையும், கரடியனாற்றுக் குளத்தை ஒட்டிய மலைக்குன்றுகளும் அடங்குகின்றன. குசலன், கரடியன் எனும் வேடர் தலைவர்கள் இம்மலைக் குன்றுகளில் உள்ள கற்குகைகளில் வசித்து வந்ததாகவும், இதன் காரணமாக இம்மலைகளும் குசலான் மலை, கரடியனாறு எனப் பெயர் பெற்றதாகவும் இப்பகுதியிலுள்ள மூத்தவர்கள் கூறுகின்றனர்.

கரடியனாறு குளம் பெரிதாக்கப்படுவதற்கு முன்னரே செங்கலடியிலிருந்து மகா ஓயாவிற்குச் செல்லும் காட்டுப்பாதை 1830 ஆம் ஆண்டளவில் திருத்தியமைக்கப்பட்டது. அக்காலப்பகுதியில் கரடியனாறுப் பகுதியில் தமிழ் மக்கள் விவசாயம் செய்வதில் ஈடுபட்டனர். கரடியனாறு குளத்தின் அருகிலும் குசலான் மலை அடிவாரத்திலும் நெற்களனிகள் உருவாகின. இக்காலப்பகுதியில் இங்கு விவசாயம் செய்து வந்த மக்கள் குசலான் மலை உச்சியில் வேல் வழிபாட்டினதும், நாக வழிபாட்டினதும் எச்சங்கள் இருப்பதைக் கண்டு தாமும் வேல் வழிபாடு, நாக வழிபாடு போன்றவற்றை மேற்கொண்டனர். தாம் அறுவடை செய்த நெல்லை நாக தம்பிரானுக்கும், முருகப்பெருமானுக்கும் படைத்து பூஜை செய்து வழிபட்டு வந்தனர்.

வேல் வழிபாட்டின் எச்சங்கள் காணப்பட்ட மலையின் சமதரைப் பகுதியில் இரும்பு வேலொன்றைப் பதித்து வணங்கி வந்தனர். வேலாயுதத்தின் பின்பக்கம் இருந்த கற்குகையில் நாக வழிபாட்டின் எச்சங்கள் காணப்பட்ட இடத்தில் நாகநாதருக்கு பூஜை செய்து வழிபட்டனர். மலையடிவாரத்தில் மலைக்குச் செல்லும் பாதை தொடங்கும் இடத்தில் இருந்த மரத்தின் கீழ் பிள்ளையார் கல் ஒன்றை ஸ்தாபித்து அதற்கு கொத்துப்பந்தல் அமைத்து பொங்கல் வைத்துப் பூஜை செய்து வந்தனர். 2000 வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் வாழ்ந்த நாகர்களாலும், வேடர்களாலும் வழிபடப்பட்டு வந்த நாக வழிபாடும், வேல் வழிபாடும் மீண்டும் குசலான் மலையில் ஆரம்பமானது.

குசலான் மலை சுமார் 250 அடி உயரமான தட்டையான அமைப்பையுடைய



குசலான மலையின் தோற்றம்



குசலான மலையில் காணப்படும் கற் தூண்கள்



குசலான மலையில் காணப்படும் நாகக்கல்

மலைக்குன்றாகும். சுமார் 200 அடி நீளமும், 100 அடி அகலமும் கொண்ட இம்மலையில் பத்துக்கும் மேற்பட்ட கற்குகைகள் காணப்படுகின்றன. இக்குகைகளில் ஆதித் தமிழர்களான நாகர் வாழ்ந்த எச்சங்கள் காணப்படுகின்றன.

இக்குகைகளில் இவர்களால் பொறிக்கப்பட்ட ஏழு பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் திசன், பெருமகன், தேவ கூத்தன், அபயன், நாகன், சுதசனன், கூத்தன், சுதினன், சமனன், கஹபதி போன்ற ஆதித் தமிழ்ப் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இங்கிருந்த குகைகளில் வாழ்ந்த ஆதித் தமிழர்கள் தமது குலதெய்வ வழிபாடு நிலவிய குகைகளையும், தாம் வாழ்ந்த குகைளையும் பௌத்த சங்கத்தாருக்கு தானம் அளித்த செய்தியை பிராமி எழுத்துகள் மூலம் கல்வெட்டாகப் பொறித்துள்ளனர்.

படர்கல் மலைப் பகுதியில் வாழ்ந்த உபராஜன் நாகன், அவனின் மகன் அபயன், அவனின் மகன் தீசன் ஆகியோர் பற்றிய ஒரு கல்வெட்டு குசலான் மலையிலும் காணப்படுகின்றது. இவர்கள் பயன்படுத்திய சுதர்ஷன எனும் கற்குகை சங்கத்தாருக்கு வழங்கப்பட்டமை பற்றி இக்கல்வெட்டு கூறுகிறது. படர்கல் மலையின் கிழக்கில் சுமார் 15 கி.மீ தூரத்தில் குசலான் மலை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குசலான் மலைப்பகுதியில் முனிவர்கள் இருந்தமை பற்றி இங்குள்ள நான்கு பிராமிக் கல்வெட்டுகள் கூறுகின்றன. சுவாமி பூசபூதியன், சுவாமி கூத்தன், சுவாமி தேவகூத்தன், சுவாமி சுத்தினன் ஆகிய நான்கு சுவாமிகள் அல்லது முனிவர்கள் நான்கு குகைகளைப் பயன்படுத்தியமை பற்றி கல்வெட்டுகள் கூறுகின்றன. இவர்கள் அனைவரும் தங்கள் குகைகளை பௌத்த சங்கத்திற்கு தானம் கொடுத்துள்ளனர்.

பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் கதிர்காமம், சந்தணகாமம் ஆகிய இராச்சியங்களை ஆட்சிசெய்த கதிர்காமச் சத்திரிய மன்னர்களில் ஒருவன் குசலான் மலைப்பகுதியை ஆட்சி செய்தமை பற்றிய குறிப்புகள் இங்குள்ள குகை ஒன்றில் கல்வெட்டாக பொறிக்கப்பட்டுள்ளது. மகாவம்சத்தில் புனித போதிமர நடுகை விழாவிற்கு இவர்களை தேவநம்பிய தீஸன் அனுராதபுரத்திற்கு அழைத்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்கள் பாண்டிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் கூறியுள்ளார். இப் பாண்டிய - சத்திரிய மன்னர்கள் நாக, முருக வழிபாடுகளை மேற்கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் இளையவனாகிய மகாநாகன் என்பவனின் குகை பற்றியே இங்கு பொறிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது. இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு,

**“உபராஜ நாக புதே ரஜ அபயே நம தச புதே கமனி திசே நம தென கரிதே சுதசன சகச”**

இதன் பொருள் ஆங்கிலத்தில் “*The son of Uparaja Naga [was] King Abaya by name. His son is Gamini Tissa by name. [The cave named] Sudassana founded by him, [is given]to the Sangha.*” என்பதாகும். இது தமிழில், உபராஜன் நாகனின் மகனான அபயன் எனும் பெயருடைய மன்னன். இவனது மகன் காமினிதீசன் எனும் பெயருடையவன். இவனால் உருவாக்கப்பட்ட சுதர்சன எனும் பெயருடைய குகை சங்கத்தாருக்கு வழங்கப்பட்டது எனப் பொருள்படுகிறது. இக்கல்வெட்டுகள் மூலம் குசலான் மலையில் வேடர்களுக்கு முன்பு பாண்டிய மன்னர்களின் ஆட்சி நிலவியமை பற்றியும், இவர்களால் நாக வழிபாடு பேணப்பட்டிருந்தமை பற்றியும் தெரியவருகிறது. இதற்குச் சான்றாக குசலான் மலையில் ஓர் நாகக்கல்லையும் காணக்கூடியதாக உள்ளது.

இங்குள்ள குன்றின் அடிவாரத்தில் ஓர் பெரிய கற்குகை அமைந்துள்ளது. சுமார் 20 அடி உயரமும், 25 அடி நீளமும் கொண்ட இக் குகையின் மேற்பகுதியிலுள்ள பாறை ஓர் நாகம் படமெடுத்துப் படுத்திருப்பதைப் போலக் காணப்படுகிறது. இப்பகுதியில் வாழும் மக்கள் இது நாக கன்னியின் வடிவம் எனப் போற்றி இவ்விடத்தில் நாககன்னிக்கு பூஜை செய்து வழிபாடு நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்குகையில் சுமார் 10 அடி உயரமான பிரமாண்டமான புற்றுக் காணப்படுகிறது.

குசலான் மலையில் பல புராதன தொல்பொருட் சின்னங்கள் காணப்படுகின்றன. மலையடிவாரத்திலிருக்கும் பிள்ளையார் கோயிலிலிருந்து மலை உச்சிக்கு ஏறும் பாதை தொடங்குகிறது. இவ்விடத்திலிருந்து ஏறுவதற்கு மலையில் இரும்புக் கம்பி கட்டப்பட்டுள்ளது. அதை அடுத்து மலை ஏறுவதற்கு கற்பாறையில் சுமார் 70 படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இவற்றை அடுத்து பாறையில் ஓர் வட்டமான குழி காணப்படுகிறது. இக் குழி உரல் எனக் கூறப்படுகிறது. அடுத்ததாக ஓர் நாகக்கல் காணப்படுகிறது. நாகக்கல் இருக்கும் இடத்திற்கு வலது பக்கம் சிறிது தூரத்தில் ஓர் தூர்ந்து போன நீர்ச்சுனை உள்ளது. இதில் சிறிதளவே நீர் காணப்படுகிறது. இதனை அடுத்து ஓர் சிறிய நீர்ச்சுனையில் நீர்தேங்கி நிற்கிறது.

இந்நீர்ச்சுனைகளின் வலதுபக்கத்தில் முருகன் கோயில் கட்டப்பட்டுள்ளது. கோயிலின் முன்பக்கம், சற்றுப் பள்ளத்தில், அழகிய, நீர் நிரம்பிய ஓர் நீர்ச்சுனை உள்ளது. உகந்தை மலையில் வள்ளி அம்மன் கோயிலின் முன்பக்கம் ஆழமான, அழகிய நீர்ச்சுனை உள்ளது போல இங்கும் அமைந்துள்ளது. கோயிலுக்கு பின் பக்கம் ஓர் கற்குகை காணப்படுகிறது. இக்கற்குகையின் மேல் பக்கம் நீர் வழிந்தோடுவதற்காக கற்பீலி செதுக்கப்பட்டுள்ளது. இக்குகையின் கீழே ஓர் பாம்பு புற்றும் அதன் அருகில் நாகநாதருக்கு ஓர் பரிவாரக் கோயிலும் காணப்படுகின்றன. இது தவிர நீர்ச்சுனையின் வலதுபக்கம் கீழே ஓர் கற்குகை உள்ளது.

தூர்ந்து போன நீர்ச்சுனையின் மேற்குப்பக்கம் சற்று உயரமான மலைக் குன்று அமைந்துள்ளது. இங்கு செல்வதற்கு மேலும் சில படிகள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குன்றின் வலதுபக்கம் உள்ள உயரமான மேட்டுப் பகுதியில் ஓர் புராதன கட்டிடம் அமைந்திருந்தமைக்குச் சான்றாக பண்டைய செங்கட்டிகள் பல நிறைந்து காணப்படுகின்றன. இதன் அருகில் பாறைமீது 'ஓம்' எனும் வடிவம் தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

படிகளின் இடதுபக்கம் மலை சமதரையாகக் காணப்படுகிறது. இங்கு 9 அங்குல ஆழத்தில் ஒரு அடி சதுரவடிவமுள்ள ஓர் குழி வெட்டப்பட்டு, அதனுள்ளே 8 அங்குல சதுர வடிவமுள்ள இன்னுமோர் குழி வெட்டப்பட்டுள்ளது. இது வைப்புத்திரவியங்கள் பாதுகாப்பாக மறைத்து வைக்கப்பட்டிருந்த குழியாகும். புதையல் திருடர்களால் இதிலிருந்த திரவியங்கள் எடுக்கப்பட்டுவிட்டதாக இப்பகுதி மக்கள் கூறுகின்றனர். இதனருகிலும் ஓர் பழமைவாய்ந்த கட்டிடம் இருந்ததற்கு அடையாளமாக செங்கட்டிகள் சிதறிக் காணப்படுகின்றன. இம்மலைக் குன்றின் பின்பக்கமே சில கற்குகைகளும் பிராமிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன.

உயரமான மலைக்குன்றின் இடது பக்கம் காணப்படும் மலைக் குன்றின் முன்பாக ஓர் சிறிய பாறைத்தொடர் வேறுபட்டுக் காணப்படுகிறது. இவற்றிற்கிடையில் ஓர் பள்ளமான சமதரை உள்ளது. இச் சமதரையில் ஓர் புராதன கட்டிடம் இருந்தமைக்குச் சான்றாக 5 அடி உயரமான பத்து கற்தூண்கள் காணப்படுகின்றன. கற்தூண்களுக்கு அருகில் ஓர் குகை உள்ளது. இம்மலைக் குன்றின் பின்பக்கம் மேலும் சில குகைகளும், அவற்றின் மேலே பிராமிக் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இங்குள்ள ஓர் குகையின் கீழே சில புராதன செங்கட்டிகள் ஆங்காங்கே பரவிக் கிடக்கின்றன.

இங்கு காணப்படும் கருங்கற் தூண்களுக்கு அருகில் மேலும் சில தூண்கள் இருந்தமைக்கான அடையாளங்கள் தென்படுகின்றன. தூண்களை நிறுத்தப் பயன்படும் குழிக்கல் ஒன்றும் இங்கு காணப்படுகிறது. அருகில் உள்ள தட்டையான பாறை மீது பிராமிக் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இதன் அருகிலும் ஓர் குகை உள்ளது. இம்மலைக் குன்றின் பின்பக்கம் இறங்குவதற்கு சுமார் 20 படிகள் வரை வெட்டப்பட்டுள்ளன. படிகளின் கீழே மேலும் ஓர் கற்குகை காணப்படுகிறது.

(தொடரும்)

இன்று இலங்கை எதிர்நோக்கியுள்ள வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கு பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகின்றன. இது தற்செயலாக வெடித்த ஒன்றோ தற்காலிகமான ஒன்றோ அல்ல. இதன் வரலாற்று வேர்கள் ஆழமானவை, நீண்டவை. இந்நிலைமைக்கு நிதிநிர்வாகத்தவறுகளை மாத்திரம் காரணம் காட்டமுடியாது. அதனை விடவும், 1948 முதல் இதுவரை இலங்கையை ஆட்சிசெய்த செய்த அனைத்து தலைவர்களும் நடத்திய இனவாத அரசியலுக்கு நாடு கொடுத்த விலையே இதுவாகும். இதனை விளக்குவதாகவே இலங்கையின் 'இனவாத அரசியல் – ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடர் அமைகிறது. இதன்படி, 1915 க்கு முன்னர் இருந்து இன்றுவரை சிறுபான்மைத் தேசியங்கள் மீது இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட இன வன்முறை தாக்குதல்களையும், அவற்றின் பின்னணியையும் வரலாற்று பொருள்முதல்வாத கண்ணோட்டத்தில் நேரடி அனுபவங்கள் ஊடாகவும், நூல்கள், செய்திகள் உள்ளிட்ட ஏனைய ஆதாரங்கள் வழியாகவும் இந்தத் தொடர் ஆராய்கின்றது. இரு பகுதிகளாக அமையவுள்ள இந்தத் தொடரின் முதல் பகுதி, இலங்கையின் இனவாத அரசியலின் தோற்றம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் இரண்டாம் பகுதி இலங்கையின் அரசியல் நெருக்கடியிலும் பொருளாதார நெருக்கடியிலும் இனவாத அரசியலின் பாத்திரம் பற்றியும் ஆராய்கிறது.


பி. ஏ. காதர்




பி. ஏ. காதர் அவர்கள் நுவரெலியா ராகலையைச் சேர்ந்த எழுத்தாளர். அத்துடன் ஆய்வாளராகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

பாவா அப்துல் காதர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் முக்கியமானவையாக 'சர்வதேச தேசிய இயக்கங்கள் வழங்கும் படிப்பினைகள்', 'சுயம் நிர்ணயம் உரிமை' மற்றும் 'மேதின வரலாறும் படிப்பினைகளும்' போன்ற நூல்கள் அமைகின்றன.


# பிரித்தானிய சாம்ராச்சியத்தின்

# நவீன நிர்வாக முறைமை




பிரித்தானியாவின் காலனித்துவத்தின் கீழிருந்த நாடுகள்

Image Source - www.britannica.com

மு முதலாளித்துவ யுகத்தில் ஐரோப்பியர்களின் எழுச்சிக்கும் தெற்குலகின் வீழ்ச்சிக்குமான காரணங்களை பின்வருமாறு சுருக்கலாம்:

1. விஞ்ஞானம், மனித குல, பொருளாதார, நாகரிக வளர்ச்சி என்பன ஒரு நாட்டுக்கோ ஒரு கண்டத்துக்கோ ஓர் இனத்துக்கோ சொந்தமானதல்ல. அவை மனித குலம் தோன்றிய காலம் முதல், ஆதிக்குடிகளாகவும், பின்னர் கோத்திரங்களாகவும், அரசுகளாகவும், தேசங்களாகவும் அது பரிணாமம் அடைந்து காலங்காலமாக, சிறுகச்சிறுக, ஒரு தலைமுறையிடமிருந்து அடுத்தடுத்த தலைமுறைக்கு கடத்தப்பட்டு படிப்படியாக வளர்க்கப்பட்ட திரட்சியேயாகும். இவ் வளர்ச்சியில் காலத்துக்கு காலம் ஒரு சில இனங்களும் நாடுகளும் முன்னிலை வகித்துள்ளன. சில தனிநபர்களும் (ஆட்சியாளர்கள் மாத்திரமல்ல, தத்துவவாதிகள், விஞ்ஞானிகள், மகா வீரர்கள், கலைஞர்கள், பொறியாளார், மாலுமிகள், நாடுகாண் பயணிகள் போன்ற அனைவரும்) முக்கிய பாத்திரம் வகித்துள்ளார். இவை அனைத்திற்கும் அடிப்பைடயாகத் திகழ்ந்ததும் - ஏனைய மிருகராசிகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்தியதும் உழைப்புதான்.

2. ஐரோப்பாவில் முதலாளித்துவ புரட்சி ஏற்படும்வரை - இன்றைய வளர்ச்சி நிலையோடு ஒப்பிடுகையில் பின்தங்கியதாக இருந்தபோதும் - ஆசியாவும் ஆபிரிக்காவுமே நீண்டகாலம் வளர்ச்சிப் பாதையில் முன்னிலை வகித்தன. அவற்றின் ஆரம்பகால நாகரீகத்தினதும் விஞ்ஞானத்தினதும் அனைத்து அறிவுச் செல்வங்களும் - வர்த்தக ரீதியில் ஐரோப்பாவோடு ஆசியாவையும் ஆபிரிக்காவையும் இணைத்த - மத்திய ஆசிய நூலகங்களில் சேமிக்கப்பட்டிருந்தன. இந் நிலத் தொடர்பாலும் மத்திய ஆசியாவின் நூலகங்களாலும் பயன்பெற்று தனக்கே உரிய புவியியல், சமூகப் பண்புகளோடு அவற்றை



காலனிய காலத்து பிரித்தானியப் படைவீரர்கள் போர் புரிவதை விளக்கும் ஓவியம்

Image Source - www.history.co.uk


வளர்த்தெடுத்து செம்மைப்படுத்திய கிரேக்க, ரோம சாம்ராச்சியங்கள் எழுச்சிபெற்றிருந்த காலம் தவிர ஏனைய நீண்ட காலம், ஆசியாவும் ஆபிரிக்காவுமே மனிதகுல வளர்ச்சிக்கு முன்னோடிகளாகத் திகழ்ந்தன. ஆயினும் இங்கிருந்த நாடுகளோ மக்கள் கூட்டங்களோ சமமான வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் முதலாளித்துவப் புரட்சி ஏற்பட்ட மேற்கு ஐரோப்பாவின் அனைத்து நாடுகளும் போட்டிபோட்டுக்கொண்டு வளர்ந்தன. அத்துடன் மேற்குலகில் ஏற்பட்ட முதலாளித்துவம் உலகெங்கும் சமூக மாற்றத்தை ஏற்படுத்தியது.

3. முதலாளித்துவ கைத்தொழில் புரட்சிக்கு முந்தைய வர்த்தக முதலாளித்துவக் காலகட்டத்தில் விஞ்ஞானத்திலும் போர்க் கலையிலும் போர் தொழில்நுட்பத்திலும் ஏனைய நாடுகளை விஞ்சிய மேற்கு ஐரோப்பிய நாடுகள், புதிதாக அறியப்பட்ட அமெரிக்கக் கண்டத்தையும், ஆசிய, ஆபிரிக்க நாடுகளையும் தமது காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து அந்நாடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களை தமது நாடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து பணக்கார நாடுகளாயின.

இறக்குமதி மூலமும் கொள்ளை இலாபம் சம்பாதித்தும், அவற்றின் மூல வளங்களை மலிவான விலையில் கொள்ளையடித்தும் கொழுத்தவைதான் இந்த மேற்கத்திய நாடுகள். இதைவிட மேற்கு நாடுகளின் வளர்ச்சிக்கு மற்றொரு முக்கிய காரணம் இருந்தது. அது அவர்களது முன்னேறிய நிர்வாக முறையாகும்.

சோழர்களின் நீண்டகால சாம்ராஜ்யமும், மகா அலெக்சாந்தரின் வேகமாக விரிந்த சாம்ராஜ்யமும், அது போன்றே முதலாளித்துவத்திற்கு முந்திய அனைத்து வல்லமை மிக்க சாம்ராஜ்யங்களும் வீழ்ந்ததற்குப் பிரதான காரணம், விரிவடைந்த சாம்ராஜ்யங்களைக் கட்டி ஆளக்கூடிய, கண்காணிக்கக்கூடிய, திறன்மிக்க நிர்வாக முறை ஒன்றினை அவை கொண்டிருக்காததும், அதற்குத் தேவையான தொலைத்தொடர்பு வசதிகளும் தொழில்நுட்பங்களும் வளர்ச்சியடையாததுதான். கைத்தொழில் புரட்சிக்கு மூலமாக அமைந்த விஞ்ஞானப்புரட்சி, நவீன நிர்வாக முறைக்கு தேவையான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. தொலைபேசி, வானொலி, நீராவிக் கப்பல், மோட்டார் வாகனம், புகையிரதம் போன்றவை கண்டுபிடிக்கப்பட்டமை, தபால் சேவை, போக்குவரத்துச்சேவை ஆகியவற்றின்

ஐரோப்பிய நாடுகளின் மேல்நிலைக்கு இவர்கள் சர்வதேச வர்த்தகத்தை தமது காட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமை மற்றொரு காரணமாகும். காலனித்துவ நாடுகளின் இயல்பான உற்பத்தி வளர்ச்சியைத் தடுத்து, அவர்களது உலக விற்பனைச் சந்தைக்குத் தேவையானவற்றை மாத்திரம் உற்பத்தி செய்யும் நாடுகளாக மாற்றி - ஏற்றுமதி மூலம் கொள்ளை இலாபம் சம்பாதித்தும், தமது விற்பனைச் சந்தையாக அவற்றை மாற்றி



காலனியவாதிகள் சுதேசிகளை அடிமைகளாக வைத்திருப்பதை விளக்கும் ஓவியம்

Image Source - www.britannica.com

திடீர் வளர்ச்சி போன்றவை இதற்கு வலுச்சேர்த்தன. அதுவே பிரித்தானியாவின் சூரியன் அஸ்தமிக்காத விரிந்த சாம்ராஜ்யம் சுமார் ஒன்றரை நூற்றாண்டு காலம் நிலைத்திருந்ததற்குக் காரணமானது.

பிரித்தானியாவின் நவீன நிர்வாக முறையை ஏற்படுத்தியவர்களும் நவீன கடற்கொள்ளையர்கள்தான் என்றால் சிலருக்கு அது ஆச்சரியமாக இருக்கும். ஆம், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் குறைந்த மனித வளத்தைப் பயன்படுத்தி, விரிவான வளங்களைக் கட்டுப்படுத்தும் நிர்வாக முறையின் முன்னோடி, கிழக்கிந்தியக் கம்பெனியாகும். உதாரணமாக, 1930 களில் இந்தியாவின் பிரிட்டிஷ் நிர்வாகத்தின் கீழ் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம் மற்றும் மியான்மர் ஆகியவற்றை உள்ளடக்கிய நிலப்பரப்பை வெறும் 2,000 அரசு ஊழியர்களே நிர்வகித்தனர்.

இதற்கு, பல வழிகளில் கிழக்கிந்தியக் கம்பெனியின் செயற்திறனே முன்மாதிரியாக அமைந்தது. அதன் உச்சத்தில், இந்நிறுவனம் உலகின் மிகப்பெரிய வர்த்தக நிறுவனமாக இருந்தது. சுமார் 260,000 படை வீரர்களை அது கொண்டிருந்தது. இது பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டிருந்த மொத்த இராணுவத்தை விட இரு மடங்கு பெரியதாகும். 1700 களின் நடுப்பகுதியிலும் 1800 இன் முற்பகுதியிலும் உலக வர்த்தகத்தில் பாதிக்கு அதிகமான பங்கை தனது கட்டுப்பாட்டின் கீழ் அது வைத்திருந்தது. ஆனால் 1600 தொடக்கம் 1874 இல் அது பிரித்தானிய அரசினால் கலைக்கப்பட்டு, அதன் நிர்வாகம் முடியின் கீழ் கொண்டுவரப்படும் வரையிலான 274 வருட வரலாற்றில், அது உச்சம் தொட்டபோது அதன் தலைமை அலுவலகத்தில் 35 நிரந்தரப் பணியாளர்கள் மாத்திரமே இருந்தனர். அதன் விரிந்த சாம்ராஜ்ய நிர்வாகத்தின் கீழ் இராணுவ வெற்றிகள் குவிக்கப்பட்டன; நாடுகள் அடிபணிந்தன; தெற்கு ஆசியாவின் பரந்த பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டன. அத்தனையும் மிகச் சிலரைக் கொண்டே நிர்வகிக்கப்பட்டது. இவ்வாறு அதன் நிர்வாகத்தின் கீழ் 1785 இல் பணிபுரிந்தோர் 159 பேர்; 1813 இல் 241 பேர் மாத்திரமே! இவர்களே பிரித்தானியச் சாம்ராச்சியத்தை விஸ்தரித்து மில்லியன் கணக்கான காலனிய மக்களை நிர்வகித்தனர்.

இவ்வாறுதான் சனத்தொகை குறைவான குட்டி நாடான பிரித்தானியா சூரியன் அஸ்தமிக்காத தனது விரிந்த சாம்ராஜ்யத்தை எண்ணிக்கையில் குறைவான தனது நிர்வாகிகளைக் கொண்டு நிர்வகிக்க முடிந்தது. இத்தகைய நிர்வாகத்துக்கு தனது மொழியில் தேர்ச்சிபெற்ற, தமது நிர்வாகத்துக்குக் கீழ்ப்படிந்து தமக்கு விசுவாசமாக சேவை செய்யக்கூடிய சுதேசிகளைக் கொண்ட நிர்வாகச் சேவை ஆளணி ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் இலங்கையில் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழி மூலக் கல்வியும் அதனால் உருவாக்கப்பட்ட காலனித்துவத்துக்குச் சேவை செய்யும் நிர்வாக ஆளணியும் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல், கலாசார வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தின. அம் மாற்றங்களையும் பெருந்தோட்டப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட புதிய பொருளாதாரம் ஏற்படுத்திய சமூக மாற்றங்களையும் இனிப் பார்க்கலாம்.

### உசாத்துணை


1. *Carey, W. H.* **(1882). 1882** – *The Good Old Days of Honourable John Company. Simla: Argus Press.*
2. *Fox, E. T.* **(2008).** *King of the Pirates: The Swashbuckling Life of Henry Every. London: Tempus Publishing.*
3. *Roos, Dave* **(23** *October* **2020).** *"How the East India Company Became the World's Most Powerful Monopoly History."*
4. *Lawson, Philip* **(1993).** *The East India Company: A History. London: Longman.*
5. *Wilbur, Marguerite Eyer* **(1945).** *The East India Company: And the British Empire in the Far East. Stanford, Cal.: Stanford University Press.*
6. *William Dalrymple* **(2015)** *The East India Company: The original corporate raiders, the Guardian* **04.03.2015.**
7. *Kerr, Robert* **(1813).** *A General History and Collection of Voyages and Travels. Vol. 8. W. Blackwood.*
8. *Wilbur, Marguerite Eyer* **(1945).** *The East India Company: And the British Empire in the Far East. Stanford University Press.*


(தொடரும்)

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக ‘பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை‘ எனும் தொடர் அமைகின்றது.


நாகமுத்து
பிரதீபராஜா





கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# வடக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புகளும் தணிப்பதற்கான தந்திரோபாயங்களும்

## அறிமுகம்

இயற்கை அனர்த்தப் பாதிப்புகளுக்கு இடம், காலம் என்பன ஒரு போதும் தடையாக இருப்பதில்லை. இவை எங்கும் எப்போதும் தோன்றலாம். அனர்த்த வாய்ப்புகள் குறைவானதென கருதப்பட்ட பல பகுதிகளில் அண்மைக் காலங்களில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம் (Wen et al., 2021). இவ் இயற்கை அனர்த்தங்களில் காலநிலை அனர்த்தங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றவையாக மாறியுள்ளன. உலகளாவிய ரீதியில் உள்ள காலநிலை மாற்றத்தின் விளைவாக காலநிலை அனர்த்தங்கள் அடிக்கடி தோன்றுகின்ற அதேவேளை, இவற்றினுடைய அழிவுகளும் அதிகமானவையாகக் காணப்படுகின்றன. பலரது கவனத்தையும் ஈர்த்துள்ள இவ் இயற்கை அனர்த்தங்களுக்கான வாய்ப்புகள் வடக்கு மாகாணத்திலும் அதிகமாகவே உள்ளன. வடக்கு மாகாணத்தில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய காலநிலை அனர்த்தங்களாக சூறாவளி, வெள்ளப்பெருக்கு, வரட்சி என்பனவற்றைக் குறிப்பிடலாம். இக் கட்டுரை வட மாகாணத்தின் வெள்ள அனர்த்தம் பற்றியே குறிப்பிடுகின்றது.

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது வேறான காலநிலைப் பண்புகளைக் கொண்ட வடமாகாணத்தின் காலநிலைப் பண்புகளை எதிர்வு கூறுவது அவ்வளவு சுலபமான விடயமன்று. எனினும் கடந்த 120 ஆண்டுகால காலநிலைத் தரவுகளின் பகுப்பாய்வு அடிப்படையில் சில விடயங்களை எதிர்வு கூற










முடியும். அந்த அடிப்படையில் மழை வீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு என்பவற்றினை ஓரளவுக்கு எதிர்வு கூற முடியும். ஆனால் அனைவரும் நினைப்பது போல், வானிலை மற்றும் கால நிலை நிகழ்வுகள் எதிர்வு கூறப்பட்டால், அதன்படி நிச்சயமாக நடைபெற வேண்டும் என்ற விதி இல்லை. ஏனெனில் உலகளாவிய ரீதியிலான காலநிலை மாற்றமும், எதிர்வு கூறப்படும் இடத்தின் வளிமண்டல இயல்புகளும், ஏனைய இடங்களின் வளிமண்டலக் குழப்பங்களும், கடல் - தரைப் பண்புகளில் ஏற்படுகின்ற மாற்றங்களும், இவ் எதிர்வு கூறலை மாற்றக்கூடிய வாய்ப்பு உண்டு. இந்த வகையில் இந்தக் கட்டுரை கடல் மற்றும் தரைப் பகுதி வெப்ப வேறுபாடுகள், மழை வீழ்ச்சிப் போக்கு, வங்காள விரிகுடாவின் அமுக்க வேறுபாட்டு நிலைமைகள் என்பனவற்றை கருத்திற் கொண்டும், ஏனைய பொருளாதார - சமூகக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டும் எதிர்வரும் 70 நாட்களுக்குள் (இக் கட்டுரை 2014 இல் எழுதப்பட்டது) வடமாகாணம் முழுவதும், அல்லது ஏதாவது ஒரு மாவட்டம், குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு, எதிர்கொள்ளவுள்ள வெள்ள அபாயத்தின் சாத்தியக் கூறுகளை விளக்குவதாக உள்ளது. அந்த வகையில் பின்வரும் விடயங்கள் வெள்ள அபாயத்திற்கான வாய்ப்புகளை அதிகரிக்கின்றன.

## கால ரீதியான வாய்ப்புகள்

வடக்கு மாகாணத்தின் கடந்த முப்பது ஆண்டுகால வரலாற்றில் வெள்ளப் பெருக்கின் பாதிப்புகள் அதிகமாக இருந்துள்ளன. மாகாணத்தின் புவியியல் அமைப்பும் இதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கான பிரதான மூலமாக மழையே காணப்படுகின்றது. இலங்கையின் ஏனைய பகுதிகள் போல நிரந்தரமான ஆறுகள், வடக்கு மாகாணத்தில் காணப்படவில்லை. எனவே வெள்ளப் பெருக்கிற்கான பிரதான காரணம் மழையே ஆகும். வடக்கு மாகாணத்திற்கு பின்வரும் மூன்று வழிகளில் மழை கிடைக்கின்றது:

1. **வடகீழ்ப் பருவக்காற்று**
2. **மேற்காவுகை**
3. **சூறாவளி, தாழமுக்கம்**

வடக்கு மாகாணத்தின் ஆண்டுச் சராசரி மழைவீழ்ச்சியாக 1240 மி.மீ மழைவீழ்ச்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இது கால ரீதியாகவோ அல்லது இட ரீதியாகவோ சமமானதாகக் காணப்படவில்லை. கால ரீதியாக வடக்கு மாகாணத்தில் ஒக்டோபர் 20 முதல் டிசம்பர் 10 வரையும், மார்ச் 20 முதல் ஏப்ரல் 20 வரையும் அதிக மழை கிடைக்கின்றது. இதனைவிட செப்ரெம்பரின் இறுதிப்பகுதி, யூலையின் நடுப்பகுதியிலும் மழை கிடைக்கின்றது. இதனைவிட அண்மைய 10 ஆண்டு காலத் தரவுகளின் அடிப்படையில், வடக்கு மாகாணத்தின் ஆண்டுச் சராசரி மழை வீழ்ச்சியான 1240 மி.மீ இன் பெரும்பகுதி, வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்கத்தினாலேயே கிடைக்கின்றது. அமுக்க வீழ்ச்சி, அதாவது சராசரி அமுக்கத்திலிருந்து எவ்வளவுக்கு குறைகின்றதோ, அதே அளவுக்கு வடக்கு மாகாணத்திற்கு கிடைக்கின்ற மழை வீழ்ச்சியிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இது சில சமயங்களில் புயலாகவோ, சூறாவளியாகவோ விருத்தியடைந்தால், அதுவும் வடக்கு மாகாணத்தின் மழை வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்துவதனைக் காணலாம். வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்க வேறுபாடுகளினால், வடக்கு மாகாணத்திற்கு, மொத்த மழை வீழ்ச்சியில் 90 சதவீதத்திற்கும் மேல் மழை கிடைக்கின்றது எனலாம்.

வடமாகாணம், இரண்டாவது இடைப் பருவக்காற்றுக் காலத்திலும் வடகீழ்ப் பருவக்காற்று காலத்திலும், வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற வளியமுக்க குறைவின் விளைவான தாழமுக்கத்தின் காரணமாக மழையைப் பெறுகின்றது. தாழமுக்கம் ஒன்று விருத்தியாவதற்கு தேவையான மிக முக்கியமான காரணிகளில் வெப்பநிலையும் ஒன்றாகும். ஒரு இடத்தின் வெப்பநிலையில் ஏற்படுகின்ற அதிகரிப்பின் விளைவாக, அவ்விடத்தில் வளியானது விரிவடைந்து, தாழமுக்கம் ஒன்று உருவாகின்றது. புவியைப் பொறுத்தவரை, மாறன் மண்டலம் வரைக்கும், உயரம் கூட, வெப்பம் குறைவடையும்; அமுக்கமும் குறைவடையும். உலகம் முழுவதிலும் கடல்மட்ட உயரமான 0.00 $m$ இல், வளியமுக்கமானது 101.3 $Pa$ ஆகவே காணப்படும். இதற்குரிய சராசரி வெப்பநிலையும் 15°C ஆகும். ஆனால் உயரத்தில் எவ்வித மாற்றமும் இல்லாது, வெப்பநிலையில் ஏற்படுகின்ற மாற்றம், சடுதியான வளியமுக்க மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது. கடந்த ஒக்டோபர் 10 ஆம் திகதியிலிருந்து வங்காள விரிகுடாவின் வளி வெப்பநிலை 27°C என்ற சராசரி அளவிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வெப்பநிலை, தாழமுக்கம் ஒன்று கடற்பகுதியில் உருவாகுவதற்கு தேவையான அளவு ஆகும். மேலும், வடகீழ்ப் பருவக்காற்று மூலம் கொண்டு வரப்படும் வெப்பநிலையும், புவி மற்றும் வளிமண்டலத்தினால் வெளியிடப்படும் நெட்டலை கதிர் வீச்சும், வளிமண்டலத்திற்குள் சுழற்சி முறையில் பரிமாற்றப்படும் மறைவெப்பமும், தாழமுக்க உருவாக்கத்தினை தூண்டுகின்றன. கடந்த பல தசாப்தங்களாக, வடக்கு மாகாணத்தின் மழை வீழ்ச்சியைத்

தீர்மானிப்பதில், வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. வங்காள விரிகுடாவில் உருவாகும் தாழமுக்கக் காலப் பகுதிகளிலேயே வடமாகாணம் வெள்ள அனர்த்தத்தை எதிர் கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அட்டவணை 11.1).

| இல. | வகை | காற்றின் வேகம் (கீ.மீ/ம) | அலை உயரம்(மீ) |
|---|---|---|---|
| 1 | தாழமுக்கம் | 31-49 | 1.25-2.5 |
| 2 | உயர் தாழமுக்கம் | 50-61 | 4-6 |
| 3 | புயல் | 62-87 | 6-9 |
| 4 | பெரும் புயல் | 88-117 | 9-14 |
| 5 | சூறாவளி | 118-167 சில சமயம் 221 வரை | 14< |
| 6 | கடுமையான சூறாவளி | 222 இனை விட அதிகம் | 14< |

அட்டவணை 11.1 தாழமுக்க வகைப்பாடுகள்

கடந்த 100 ஆண்டுகளின் சராசரிகளின் அடிப்படையில், இந்த இரண்டு பருவங்களின் போதும், வங்காள விரிகுடாவில் 6 – 9 வரையான தாழமுக்கங்கள் ஏற்படுவதுண்டு. எனினும் நவம்பர் 20 தொடக்கம், அடுத்த ஆண்டின் ஜனவரி 20 வரையான காலப்பகுதியில், இந்த 09 தாழமுக்கங்களில் ஆகக் குறைந்தது 5 தாழமுக்கங்கள் ஏற்படுவதுண்டு. இதனால் தான் வடமாகாணம் தன்னுடைய மொத்த மழைவீழ்ச்சியில் (1250 மி.மீ.) கிட்டத்தட்ட 750 மி.மீ. இனை இக் காலப்பகுதியில் பெற்றுக்கொள்கின்றது. இந்த 2014 ஆம் ஆண்டின் இரண்டாவது இடைப்பருவத்தில் 02 தாழமுக்கங்கள் வங்கக் கடலில் உருவாகியுள்ளன. அதன் மூலம் வடமாகாணம் 300 மி.மீ. கூடுதலான மழைவீழ்ச்சியைப் பெற்றுள்ளது. எனினும் அடுத்து வரும் 70 நாட்களுக்குள் ஆகக் குறைந்தது 03 தாழமுக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆகக் குறைந்தது 02 தாழமுக்கங்கள் ஏற்பட்டாலே, வடமாகாணம் சராசரியாக 350 மி.மீ. மழை வீழ்ச்சியைப் பெறும். ஏற்கனவே 90% மழை வீழ்ச்சியைப் பெற்ற வடமாகாணத்திற்கு, இந்த 350 மி.மீ. மழை வீழ்ச்சி வெள்ள அனர்த்தத்தினை உருவாக்கப் போதுமானதாகும்.

வடக்கு மாகாணத்தில் மழைக்கால நாட்கள் என்பது மிகக் குறைவாகும். இது 41 நாட்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனலாம். யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த மழை வீழ்ச்சியில் 85% இற்கும் அதிகமான பங்கு, 10 அல்லது 12 நாட்களுக்குள்ளேயே கிடைத்துவிடுகின்றது. குறுகிய நாட்களுக்குள் கிடைத்துவிடுகின்ற அதிகூடிய மழைவீழ்ச்சி காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. மண்ணின் ஊடுபுகவிடும் அளவுக்கு (infiltration capacity) அதிகமான மழைவீழ்ச்சியும், போதிய ஒழுங்கான வெள்ள வடிகால் முகாமைத்துவம் இல்லாத காரணத்தினாலும், கிடைக்கின்ற அதிகளவான மழை வீழ்ச்சி வெள்ளப் பெருக்கை ஏற்படுத்துகின்றது. வெள்ளப் பெருக்கினை ஏற்படுத்தக்கூடிய கன மழை வீழ்ச்சிக்குரிய காலமாக, பெரும்பாலும் நவம்பர் 12 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையான காலம் காணப்படுகின்றது. இதனைவிட, மார்ச் 18 தொடக்கம் மார்ச் 30 வரையான காலத்தையும் குறிப்பிடலாம்.

வடக்கு மாகாணத்தின் காலநிலை மாற்ற ஆய்வுகளின் அடிப்படையில், வடக்கு மாகாணத்தினுடைய மழை நாட்களின் எண்ணிக்கை, கணிசமான அளவு குறைந்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில், நிகழ்கின்ற காலநிலைக் காலத்தில் மழை நாட்களில் எண்ணிக்கை சராசரியாக 42 ஆகவே காணப்படுகின்றது. அதேவேளை, ஆண்டு மொத்த மழை வீழ்ச்சியின் அளவில், அவ்வளவு பெரிய வேறுபாடுகள் கண்டறியப்படவில்லை. எனவே ஆண்டு மொத்த

மழை வீழ்ச்சியின் அளவுகளில் எத்தகைய மாற்றமும் ஏற்படாது, மழை நாட்களின் எண்ணிக்கை குறைவடைகின்றமை, ஒரு நாளுக்கான செறிவை அதிகரித்து இருக்கின்றது. குறிப்பாக வடக்கு மாகாணத்தின் மொத்த மழை வீழச்சியில் 40% அளவு எட்டு நாட்களுக்குள்ளேயே கிடைத்து விடுகின்றது. சில சந்தர்ப்பங்களில் வங்காள விரிகுடாவில் ஏற்படுகின்ற தாழமுக்க வேறுபாடுகளின் காரணமாக, குறிப்பிட்ட சில நாட்களுக்குள் கிடைக்கின்ற கனமழை, வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் வெள்ள அனர்த்தத்தை ஏற்படுத்திவிடுகின்றது.


தொடர்ச்சியாக ஓரளவுக்கு மழை கிடைத்து, அதன் பின்னர் ஒரு நாளைக்கு 100 மில்லி மீற்றர் என்ற அளவில் மழை கிடைத்தால், அது ஒரு பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படக் காரணமாக அமைகின்றது. தொடர்ச்சியாக மழை கிடைப்பதன் காரணமாக, நிலம் நிரம்பு நிலையை அடைந்ததை அடுத்துக் கிடைக்கின்ற 50 மில்லி மீற்றருக்கு மேற்பட்ட மழை, வடக்கு மாகாணத்தின் தாழ்நிலப் பிரதேசங்களில், குறிப்பாக குருநகர் - நாவாந்துறை - பாசையூர் போன்ற பிரதேசங்களிலும், மன்னார் தீவினுடைய பல பகுதிகளிலும், வெள்ள அனர்த்தங்களை ஏற்படுத்துவது அறியப்பட்டுள்ளது. எனவே வடக்கு மாகாணத்தினுடைய வெள்ள அனர்த்தத்தைத் தூண்டுவதில், குறுகிய நாளில் கிடைக்கின்ற, அதாவது சில மணி நேரங்களில் கிடைக்கின்ற அதிக கனமழை பெரும் பங்காற்றுகின்றது எனலாம். ஆனால், இக் காலத்தில் மட்டுமே வடக்கு மாகாணத்தில் வெள்ளப் பெருக்கிற்கான வாய்ப்புள்ளது எனக் கருத முடியாது.

ஏனெனில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படுகின்ற காலங்களிலும், அதன் வீரியத்தைப் பொறுத்து, வெள்ளப் பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. மத்திய கோட்டிற்கு சூரியன் உச்சம் கொடுக்கும் காலப் பகுதிகளில் கிடைக்கும் நேரடியான கதிர்வீச்சின் மூலம் பெறப்படும் அதிக வெப்பம், வங்காள விரிகுடாவில் தாழமுக்கத்தினை ஏற்படுத்தலாம். இதனைவிட அயன இடை ஒருங்கல் வலயத்தின் நகர்ச்சி (Movement of the Intertropical Convergence Zone - ITCZ), அருவித்தாரை சுற்றோட்டம் (Jet stream), பருவக்காற்றின் உடைவு (break of the monsoon), பருவக்காற்றின் பின்வாங்குகை (Retreat of the monsoon) போன்ற காலத்திலும் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்பட்டு வடக்கு மாகாணத்திற்கு அதிக மழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. எனினும் வடக்கு மாகாணத்தின் கடந்த கால வரலாற்றில் (தரவுகளின் படி), நவம்பரின் 12 ஆம் திகதிக்குப் பின்னரும் (நவம்பர் 12 - 29), மார்ச்சின் பிற்பகுதியிலுமே அதிக மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்று, வெள்ளப் பெருக்கு ஏற்படும் நிலைமை காணப்படுகின்றது.


## இட ரீதியிலான காரணங்கள்

வடக்கு மாகாணத்தில் இயற்கை அனர்த்தங்களை தூண்டுவதில், தரை உயரம் கணிசமான அளவு செல்வாக்குச் செலுத்துகின்றது. வடக்கு மாகாணத்தினுடைய மொத்த நிலப்பரப்பில் 37% பகுதி கடலில் இருந்து 10 மீற்றருக்கு உட்பட்டதாகவே காணப்படுகின்றது.


ஒப்பீட்டளவில், தட்டையான நிலப்பரப்பை கொண்டதான வடக்கு மாகாணத்தின் தரை உயரத்தன்மை, கடுமையான மழை வீழ்ச்சியின் காரணமாக பல பிரதேசங்களின் வெள்ள அனர்த்தத்தைத் தூண்டுவதை அவதானிக்கலாம் (படம் 11.2, 11.3, மற்றும் 11.4). அந்த அடிப்படையில், மன்னார் மாவட்டமும், யாழ்ப்பாணக் குடா நாட்டின் நகரை அண்மித்த பகுதிகளும், ஏனைய பிரதேசங்களின் கடல் நீரேரிகளை அண்மித்த பகுதிகளும், தரை உயரம் குறைவான பிரதேசங்களாக உள்ளமையால், கன மழைக் காலங்களின் பொழுது வெள்ள அனர்த்தப் பாதிப்புகளை எதிர்கொள்கின்றன. பொதுவாக தாழ்நிலப் பிரதேசங்கள் ஆண்டு தோறும் வடகீழ்ப் பருவக் காற்றின் உச்சக் காலப் பகுதியில், வெள்ள அனர்த்தத்தை எதிர்கொள்வதனை அறிந்து கொள்ள முடியும்.





**படம் 11.2. 1992 முதல் 2002 வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் வெள்ள அனர்த்தங்களின் இட ரீதியிலான பரம்பல் பாங்கு**




**படம் 11.3. 2002 முதல் 2012 வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் வெள்ள அனர்த்தங்களின் இட ரீதியிலான பரம்பல் பாங்கு**




**படம் 11.4. 2012 முதல் 2022 வரையான காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தின் வெள்ள அனர்த்தங்களின் இட ரீதியிலான பரம்பல் பாங்கு**





**படம் 11.5. கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அனர்த்த வாய்ப்புள்ள இடங்கள்**

வடக்கு மாகாணத்தினுடைய கடல் நீரேரிகளை அண்மித்த பிரதேசங்களிலும், ஆற்று வடிநிலங்களை அண்மித்த பிரதேசங்களிலும், சமவெளிகளை அண்மித்த பிரதேசங்களிலும், மேலும் சில குறிப்பிட்ட தாழ்நிலப் பிரதேசங்களிலும் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அந்த அடிப்படையில், யாழ்ப்பாணத்தின் (படம் 11.7) நகரப் பகுதிகள், உப்பாறு கடல் நீரேரி, தொண்டமானாறு கடல் நீரேரி, யாழ்ப்பாணக் கடல் நீரேரியை அண்மித்த பிரதேசங்கள், கிளிநொச்சியில் (படம் 11.5) ஆனையிறவு கடல் நீரேரி, மண்டைக்கல்லாறு கழிமுகப் பகுதி, தேராவிலாறுக் கழிமுகப் பகுதி, இரணைமடுக் குளத்தின் கீழ்ப்பகுதி, முல்லைத்தீவு மாவட்டத்தில் (படம் 11.6) கொக்கிளாய் கடல் நீரேரி, நந்திக் கடல் நீரேரி, பேராறு வடிநிலப் பிரதேசம், கனகராயனாற்று மத்திய ஆற்று வடிநிலப் பிரதேசம் (ஆற்றங்கரைகளிலும்), பாலியாற்றங்கரைப் பகுதி, மன்னார் மாவட்டத்தில் (படம் 11.8) மன்னார் கடல் நீரேரியை அண்மித்த பகுதி, மன்னார் தீவின் கரையோரப் பகுதி, பாலியாற்றுக் கழிமுகப் பகுதி, அருவி ஆற்று கழிமுகப் பகுதி (குறிப்பாக அரிப்பு, குஞ்சுக்குளம் உட்பட்ட கீழ்ப் பிரதேசங்கள்) பறங்கியாற்றின் கழிமுகப் பகுதி, வவுனியா மாவட்டத்தில் பாவற்குளத்தின் நீரேந்துப் பிரதேசம், கனகராயன் ஆற்றின் உற்பத்திப் பிரதேசம், பாலியாற்றின் உற்பத்திப் பிரதேசம் போன்ற இடங்களில் அதிக அளவிலான வெள்ள அனர்த்தங்கள் நிகழ்வதைக் காணமுடிகின்றது.

இந்தப் பிரதேசங்களின் கடல் நீரேரிகளில் அல்லது ஆறுகளில், வெள்ள நீர்மட்டம் உயர்ந்து அதன் கரைகளை மேவி, அயலில் உள்ள குடியிருப்புகளுக்குள் புகுவதாலும், அதிக மழை கிடைக்கும் காலங்களில் வெள்ளம் ஏற்படுகிறது. அந்த அடிப்படையில் கடந்த கால வரலாறுகளின் அடிப்படையில், இந்த ஆற்று வடிநில - ஆற்றுப் படுக்கை - ஆற்று முகத்துவாரப் பகுதிகளிலும், கடல் நீரேரிகளை அண்மித்த பகுதிகளிலுமே மிகக் கூடுதலான அளவு வெள்ளம் உண்டாகிறது.

இட ரீதியான வாய்ப்புகளைப் பார்க்கும் போது, யாழ்ப்பாண மாவட்டத்தின் தீவுப்பகுதிகளில் ஏனைய மூன்று பகுதிகளுடன் ஒப்பிடும் போது குறைவான மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. இதனாலும், தீவுப்பகுதியின் புவியியல் காரணமாகவும் (அதாவது ஒவ்வொரு தீவும் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளதாலும், குடியிருப்புகள் நெருக்கமற்றுக் காணப்படுவதனாலும், கட்டுமான அமைப்புகள் குறைவாக உள்ளமையாலும்), தீவுப் பகுதியில் வெள்ளப் பெருக்கிற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றது. எனினும், கடல் மட்ட உயர்வு காரணமாக ஏற்படும் வெள்ளப் பெருக்கு (இதுவரை இல்லை) சில சமயம் பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்புள்ளது.





**படம் 11.6. முல்லைத்தீவு மாவட்டத்தில் வெள்ள அனர்த்த வாய்ப்புள்ள இடங்கள்**

அதிக மழையினால் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் வடமராட்சியும் பாதிக்கப்படும் வாய்ப்பு காணப்படுகின்றது. குறிப்பாக, வடமராட்சியின் கீழ்ப் பகுதிகள், அதாவது கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகள், அதிகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. தொண்டமனாறு கடனீரேரி

இப் பகுதியில் காணப்படுவதனால், மழைக் காலங்களில் நிரம்பும் மேலதிக நீர், குடியிருப்புகளுள் புகுந்து அதிக பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. கப்பூது, கரணவாய், அந்தணத்திடல், மண்டான், கரவெட்டி போன்ற பகுதிகள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. வடமராட்சியின் மத்திய பகுதி ஏனைய பகுதிகளை விட ஓரளவுக்கு உயரம் கூடியதாகக் காணப்பட்டாலும், இடையிடையே உள்ள தாழ்நிலங்களில், அதிக மழையின் போது நீர் தேங்கி நிற்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். தென்மராட்சியினைப் பொறுத்தவரை, உப்பாற்றின் மேற்குக் கரையில் மறவன்புலவு, கைதடி, நாவற்குழி, மட்டுவில், சரசாலை போன்ற பிரதேசங்கள் காணப்படுகின்றன. இதனால் உப்பாற்றில் நிரம்பும் வெள்ளம் அருகில் உள்ள வயற் பகுதிகளுக்குள் சென்று பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. தாழ் நிலமாக உள்ள மிருசுவிலுக்கும் உசனுக்கும் இடைப்பட்ட பகுதியிலும், சாவகச்சேரிக்கும் தச்சன் தோப்பிற்கும் இடைப்பட்ட பகுதியிலும், வெள்ளம் தேங்கி நின்று அருகிலிருக்கும் குடியிருப்புகளைப் பாதிக்கின்ற வாய்ப்புகள் காணப்படுவதாக பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை குறிப்பிடுகின்றார்.


வலிகாமம், பெரிய நிலத் திணிவைக் கொண்டுள்ளது. இங்கு மாரி காலத்தில் தோன்றுகின்ற பருவகாலச் சிற்றாறுகள் காலப்போக்கில் வெள்ளப் பெருக்குகள் தோன்றுவதற்கான வாய்ப்பை உண்டு பண்ணுகின்றன. குறிப்பாக வழுக்கையாற்றுக்கு அண்மையிலுள்ள பிரதேச செயலகங்களான சண்டிலிப்பாய், சங்கானை போன்றவற்றின் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளது. நந்தாவில் பகுதியும் ஏனைய பகுதிகளை விட உயரம் குறைந்ததாக உள்ளமையினால் இங்கும் வெள்ள அபாயம் உள்ளது. உப்பாறு, தொண்டமனாறு போன்றவற்றினை தனது இரண்டு பக்க எல்லைகளாகக் கொண்டிருக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவின் இடைக்காடு, இளவாலை, அச்சுவேலி, வாதரவத்தை, நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், கல்வியங்காடு, இருபாலை போன்ற தாழ் நிலங்களிலும், மழைக்காலத்தில் இவ்விரண்டு கடல் நீரேரிகளிலும் தேங்கும் மேலதிக நீர், குடியிருப்புகளுக்குள் புகுந்து வெள்ளப் பாதிப்பினை ஏற்படுத்தக்கூடும்.




**படம் 11.7. யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ள அனர்த்த வாய்ப்புள்ள இடங்கள்**

வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத்தில் மழைவீழ்ச்சி தொடர்ச்சியாக கிடைக்கின்றமை, வெள்ள அனர்த்த நிலைமைகளைத் தூண்டுகின்ற மிக முக்கியமான காரணியாகும். வடமாகாணத்தில் ஏற்கனவே கிடைத்துள்ள மழைவீழ்ச்சியின் விளைவாக, நிலமானது நிரம்பு நிலையில் உள்ளது (Saturated). எனவே, தொடர்ந்து வரும் காலப் பகுதியில் (வடகீழ்ப் பருவக்காற்றுக் காலத்தின் நடுப் பகுதியிலும் பிற்பகுதியிலும்) கிடைக்கின்ற மழை வீழ்ச்சியானது தரைக்கீழ் நீராகச் செல்லாது, மேற்பரப்பில் தேங்கி, வெள்ளத்தினை உருவாக்கக்

கூடிய சூழல் ஏற்படும். இந்த நிலையானது வடமாகாணத்தின் கல்லியல் (Geology) மற்றும் நில முகாமைத்துவ நடவடிக்கைகள் (Land Management Activities) என்பவற்றுடன் தொடர்புபட்டு இடத்துக்கிடம் வேறுபட்டாலும், நில அமைப்பின் அடிப்படையில் பெரும்பாலான உள்நாட்டுத் தாழ் நிலங்கள் (Inter lowlands) நீர் நிரம்பிய நிலையில் உள்ளமையினால், வெள்ளம் ஏற்பட வாய்ப்பு உண்டு.




**படம் 11.8. மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்த வாய்ப்புள்ள இடங்கள்**

இயற்கையான மற்றும் செயற்கையான வடிகால்கள் தடைப்பட்டமையும், தூர்ந்து போய் உள்ளமையும், துண்டாடப்பட்டமையும் வடக்கு மாகாணத்தில் வெள்ள நிலமை தூண்டப்பட முக்கிய காரணிகளாகும். வடக்கு மாகாணத்தில், மழை நீர் குளங்களுக்கு அல்லது நீர்த் தேக்கங்களுக்கு வழிந்து செல்லக்கூடிய வகையிலான பல்வேறு வகைப்பட்ட இயற்கையான மற்றும் செயற்கையான வடிநில அமைப்புகள் காணப்படுகின்றன. 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர், வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட புகையிரதப் பாதை நிர்மாணம், பெருந்தெருக்கள் நிர்மாணம், கட்டிட அமைப்புக்களின் நிர்மாணம் போன்ற பல்வேறு வகைப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக வடக்கு மாகாணத்தினுடைய இயற்கையான மற்றும் செயற்கையான வடிகால் அமைப்புகள் சிதைந்து போயுள்ளமையைக் காண முடிகின்றது. இதனால், கனமழை கிடைக்கின்ற காலப் பகுதிகளில், நீர் வடிந்து போக இடமில்லாததால், தாழ்நிலப் பிரதேசங்களில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுவதைக் காண முடிகின்றது. அகழ்வுச் செயற்பாடுகள் மற்றும் கட்டுமானச் செயற்பாடுகளின் காரணமாக, குளங்களுக்கு அல்லது நீர்த் தேக்கங்களுக்குச் செல்ல வேண்டிய நீர், குடியிருப்புப் பகுதிகளுக்குள் தேங்குவதை அவதானிக்க முடிகிறது.

## அபிவிருத்திக் காரணங்கள்

வடக்கு மாகாணத்தில் யுத்தத்தின் பின்னர் குறிப்பாக 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பூரணப்படுத்தப்பட்ட பல்வேறு வகையிலான வீதி சார்ந்த அபிவிருத்தித் திட்டங்களான 'கார்பெட்' தெருக்களின் நிர்மாணம், உள்ளூர் வீதி அமைப்புகள், புகையிரத வீதி நிர்மாணம் போன்ற நடவடிக்கைகளின் காரணமாக வடிகால் பாங்குகள் குழப்பமடைந்து பல பிரதேசங்களில் வெள்ள அனர்த்த நிலைமைகள் உருவாக்கப்பட்டு இருப்பதைக் காண முடிகின்றது. யாழ்ப்பாணக் குடா நாட்டினுடைய புகையிரதப் பாதைகள் மழைநீரைக் கடத்தும் அல்லது மடை மாற்றும் பொறிமுறைகளைக் கொண்டு அமைக்கப்படவில்லை. உதாரணமாக அரியாலையிலிருந்து கோண்டாவில் வரையான புகையிரதப் பாதையில், 4 இடங்களில் மட்டுமே புகையிரதப் பாதையின் ஒரு கரையில் இருந்து மறுகரைக்கு நீர் செல்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கனமழைக் காலத்தில் தேங்குகின்ற நீரை

கடத்துவதற்கு போதுமான அமைப்புகளாகவும் இவை காணப்படவில்லை. இன்னொரு வகையில் கூறுவதானால், குளக்கட்டு ஒன்றை அமைத்தது போன்ற நிலைமையிலேயே புகையிரதப் பாதை நிர்மாணம் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படுகின்றது. இதன் காரணமாக செறிவான மழை கிடைக்கின்ற காலப் பகுதிகளில் வெள்ளநீர் வடிகால் அமைப்புகளுடன் கலந்து கடலுக்குள் செல்ல முடியாத சூழ்நிலையில், அனர்த்தத்தை ஏற்படுத்துவதைக் காணமுடிகின்றது.

வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வுச் செயற்பாடுகளின் காரணமாகவும் வெள்ள அனர்த்தங்களுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக ஆற்றங்கரையோரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற மணல் அகழ்வின் காரணமாகவும், இயற்கையாக வெள்ள நீர் வடிந்து செல்வதற்கான பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற மண், கல் மற்றும் கிரவல் அகழ்வுகளும், வடக்கு மாகாணத்தில் வெள்ள அனர்த்தங்களை அதிகரித்துள்ளன. ஆற்றங்கரையோரங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அகழ்வுச் செயற்பாடுகளின் காரணமாக ஆற்றுச் சமவெளியினுடைய எல்லை விரிவாக்கப்பட்டு, அந்த ஆற்றினுடைய நீர் குடியிருப்புகளுக்குள் புகுந்து வெள்ளப் பாதிப்புகளை ஏற்படுத்துவதைக் காண முடிகின்றது. குறிப்பாக பாலியாறு, பறங்கியாறு, கனகராயன் ஆறு, பேராறு பகுதிகளில் இந்த நிலைமைகளை அவதானிக்க முடிகின்றது. இதன் காரணமாக பல்வேறு பிரதேசங்களில் வெள்ள அனர்த்தங்கள் ஏற்படுவதனைக் காண முடிகின்றது. அகழ்வுச் செயற்பாடுகளின் காரணமாக இயற்கையான வடிகால் அமைப்புகளின் தன்மை குழப்பம் அடைந்து குறிப்பிட்ட பிரதேசங்களில் வெள்ள அனர்த்தங்கள் நிகழ்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

2009 இன் பின்னர் பல்வேறு வகைப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இவற்றில் பெரும்பாலான நடவடிக்கைகள் புவியியல் நிலைமைகளை (மண், தரைத்தோற்றம் மற்றும் காலநிலை) கருத்திற் கொள்ளாமலே மேற்கொள்ளப்பட்டன. வடமாகாணத்தில் பருவ ரீதியாகக் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் மூலம் பெறப்படும் நீரானது குளங்களையோ அல்லது ஆறுகளையோ அல்லது கடலையோ சென்றடைவதற்கு இயற்கையான பல வடிகாலமைப்புத் தொகுதிகள் வடமாகாணத்தில் காணப்பட்டன. மழைவீழ்ச்சி மூலம் கிடைக்கும் நீரானது இவ் வடிகால்கள் மூலம் குளங்களை, ஆறுகளை, கடலைச் சென்றடைவதுண்டு. இதனால் வடமாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் வெள்ள அபாயம் தவிர்க்கப்பட்டு வந்தது. ஆனால் 2009 இற்குப் பின்னர் வடமாகாணத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள், மதில்கள், அமைக்கப்பட்ட போக்குவரத்துப் பாதைகள் (பெருந்தெரு மற்றும் புகையிரதப் பாதை) போன்றன இந்த இயற்கையான வடிகாலமைப்பினை பாதித்துள்ளன; அல்லது இயற்கையான வடிகால்களுக்கு தடையேற்படுத்தியுள்ளன. இதனால் மழை நீரானது தடுக்கப்பட்டு அப்பகுதியில் வெள்ள அனர்த்தங்கள் உருவாக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பல இடங்களில் கட்டுமானத் தேவைகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தரை உயரமாக்கல் செயற்பாட்டினாலும் வெள்ளநீர் வடிந்தோடக் கூடிய வாய்ப்புகள் குறைவடைந்துள்ளன.

## பாதிப்புகளை குறைக்கும் நடவடிக்கைகள்

இயற்கை அனர்த்தங்களைத் தடுக்க முடியாது. ஆனால், இயற்கை அனர்த்தப் பாதிப்புகளை உரிய நடவடிக்கைகளினூடாகக் குறைக்க முடியும். இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளை 03 பிரிவுகளாக வகைப்படுத்தலாம்:

1. வெள்ளப்பெருக்கு ஏற்பட முன்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.
2. வெள்ளபெருக்கின் போது கடைப்பிடிக்க வேண்டியவை.
3. வெள்ளப் பெருக்கின் பின்னர் செய்ய வேண்டியவை.

### 1. வெள்ளப் பெருக்கின் முன்னரான நடவடிக்கைகள்

வெள்ளப் பெருக்கின் முன்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

**வெள்ளத் தடுப்புச் சுவர்களை அமைத்தல்:** கடல் நீரேரிகள், பெரிய வெள்ள வாய்க்கால்களில் மழைக் காலங்களின் போது நிரம்புகின்ற மேலதிக நீர் குடியிருப்புகளுக்குச் சென்று பாதிப்பினை ஏற்படுத்தாத வண்ணம், தடுப்புச் சுவர்கள், அணைகள் என்பவற்றினை அமைத்தல் வேண்டும். இதன் மூலம், நீரேரிகளின் மேலதிக நீர், குடியிருப்புக்குள் சென்று பாதிப்பினை ஏற்படுத்துவதனைக் குறைக்கலாம்.

**வெள்ளப்பெருக்குக் காலங்களை அறிந்து கொள்ளல்:** வடக்கு மாகாணத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்குச் சாதகமான நிலைமைகளை அறிந்து கொள்ளல் வேண்டும். சூறாவளி, புயல், தாழமுக்கம் மற்றும் அதிக மழைக் காலங்களைப் பற்றி அறிந்து, அத்தகைய சந்தர்ப்பம் ஏற்படுவதன் மூலம் உருவாகும் ஆபத்துகள் பற்றி விழிப்புணர்வுடன் இருந்தல் அவசியமாகும்.

**வடிகால்களைச் சீராக்குதல்:** வட மாகாணத்தில் வெள்ளம் ஏற்படக் கூடிய காலங்களுக்கு முன்னதாக மாகாணத்தின் சிறிய, பெரிய வடிகால்களை துப்பரவு செய்து, வெள்ளம் வடிந்தோடும் வகையில் அவற்றைப் புனரமைப்பதுடன், தூர்ந்து போயுள்ள குளங்கள், குட்டைகளைத் தூர்வாரி அவற்றின் நீர்க் கொள்ளளவை அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

**தாவரங்களின் விதானங்களின் அளவைக் குறைத்தல்:** வெள்ளம் ஏற்படக்கூடிய காலங்களுக்கு முன்பதாக தாவரங்களின் (குறிப்பாகப் பெரிய மரங்கள்) விதானங்களின் அளவைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். ஏனெனில் வடக்கு மாகாணத்தின் புவியியல் அமைப்பின் பிரகாரம் வங்காள விரிகுடாவில் ஏற்படும் அமுக்கக் குறைவே (தாழமுக்கம், புயல், சூறாவளி) வெள்ளப் பெருக்கு ஏற்பட பிரதான காரணமாக இருப்பதனால், அக் காலத்தில் காற்றின் வேகம் மிக அதிகமாக இருக்கும். தாவரங்களின் விதானம் அதிகமாக இருக்கும் போது அவை காற்றின் வேகத்தால் முறிந்தோ, அல்லது வேருடன் சாய்ந்தோ விழுந்து ஆபத்தினை ஏற்படுத்தும். எனவே தாவரங்களின் விதானங்களை (Canopy) குறைத்து அவை வீழ்வதைத் தடுக்கலாம்.

**வெள்ள அபாயப் படம் (Flood hazard map) ஒன்றினை அமைத்தல்:** வடக்கு மாகாணத்தின் வெள்ள அபாயப் படம் ஒன்றினைத் தயாரித்து, வெள்ள நீர் தேங்கக்கூடிய பகுதிகளையும், நீர் தேங்காத பகுதிகளையும் அடையாளப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். இதன் மூலம் கொள்ள அனர்த்த காலங்களின் போது மக்களை அனர்த்தப் பகுதியிலிருந்து பாதுகாப்பான பகுதிக்கு நகர்த்த முடியும்.

**திட்டமிட்ட கட்டுமானப் பணிகள்:** வடக்கு மாகாணத்தில் போருக்கு பின்னரான புனரமைப்பு வேலைகள் தீவிரம் பெற்றுள்ளன. ஆனால் இவற்றில் பல, முறையான அனுமதியின்றியும், திட்டமிடப்படாமலும் அமைக்கப்படுகின்றன.
நீர் வடிந்தோடும் தாழ்வான நிலங்களில் கட்டடங்களும், மதில்களும் அமைக்கப்படுகின்றன. இத்தகைய தடைகள், குறித்த பகுதியில் வெள்ளம் தேங்குவதற்கு உதவுகின்றன. எனவே இத்தகைய கட்டுமானங்களை மேற்கொள்ளும் போது வெள்ளம் வடிந்தோடுவதற்கான மாற்று வழிகளை அமைத்தல் வேண்டும்.
உதாரணமாக வீட்டு மதில்களை அமைக்கும் போது, நீர் வடிந்தோடக் கூடிய பகுதியை அடையாளம் கண்டு, அங்கு நீர் வழிந்தோடக்கூடிய துளை இட்டு, மதில்களை அமைத்தல் வேண்டும்.

**குறுக்கு அணைகள் அமைத்தல்:** வடக்கு மாகாணத்தின் உப்பாறு, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், நாயாறு, மன்னார், தொண்டமனாறுக் கடல் நீரேரிகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும், நீர்

குடியிருப்புகளுக்குள் உட்புகும் பகுதிகளை அடையாளம் கண்டு அப்பகுதியில் குறுக்கு அணைகளை அமைத்தல் வேண்டும்.

***அனர்த்த காலங்களில் எடுத்துச் செல்ல வேண்டிய பை:*** எத்தகைய அனர்த்த காலங்களிலும் எழுத்துச் செல்ல வேண்டிய பை ஒன்றினைத் தயாராக வைத்திருத்தல் வேண்டும். இதனுள் முக்கியமான ஆவணங்களையும், மிகப் பெறுமதியான (நகை, பணம்) பொருட்களையும் வைத்திருத்தல் வேண்டும். அனர்த்தம் தொடர்பாக அறிவிக்கப்பட்ட பின்னர் காலதாமதம் இன்றி, இதனை எடுத்துச் செல்லும் வகையில் இது இருத்தல் சிறப்பானது.

***அனர்த்த மீட்புக் குழுக்களை உருவாக்கல்:*** ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு தோறும் அனர்த்த மீட்புக் குழுக்களை உருவாக்குதல் வேண்டும்.

இக் குழுவில் அர்ப்பணிப்பும், சேவை மனப்பான்மையும் கொண்ட இளைஞர்களை உள்ளீர்த்து, அவர்களுக்கு அனர்த்த காலத்தில் செயற்பட வேண்டிய முறைகள் பற்றி போதிய பயிற்சிகளை வழங்கி, அவர்களை அனர்த்த காலச் சேவைக்காக எப்போதும் தயாராக வைத்திருத்தல் வேண்டும். இதனைவிட ஒவ்வொரு பிரதேச செயலர், கிராம சேவகர் பிரிவுகளிலும் அனர்த்த மீட்புக்கு ஒருங்கிணைக்கக்கூடிய வகையில் குழு ஒன்றினை அமைத்துச் செயற்படல் வேண்டும்.

இதற்குப் பொறுப்பாக பிரதேச செயலகத்தின் நிறைவேற்று உத்தியோகத்தரில் ஒருவரினை நியமிக்கலாம். 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம், கிராம சேவகர் பிரிவு தோறும் இக் குழுவினை அமைக்க வேண்டும் என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கிராம சேவகர் பிரிவுகள் தோறும் அனர்த்த காலத்தின் போது மக்களைத் தங்க வைப்பதற்கான புகலிடங்களை அமைத்தல் வேண்டும். இதன் மூலம் எத்தகைய அனர்த்தக் காலத்திலும் மக்களைத் தக்கவைக்கலாம்.

***நவீன முன்னெச்சரிக்கை நிலையங்களை அமைத்தல்:*** யாழ்ப்பாண மாவட்டத்தின் முக்கியமான இடங்களில் அனர்த்த முன்னெச்சரிக்கைக் கோபுரங்களை அமைத்தல்.

**2. வெள்ள அனர்த்தத்தின் போது மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்**

1. அனர்த்தம் பற்றிய நிலவரங்களை உடனுக்குடன் அறிந்து, அதற்கேற்பச் செயற்படல் வேண்டும். இதற்காக வானொலி மற்றும் செய்தி ஊடகங்களினூடாகத் தகவல்களை அறிந்து கொள்ளல் வேண்டும்.
2. வெள்ளம் குறிப்பிட்ட உயரத்துக்கு வருவதற்கு முன்னர் நீர் உட்புகுந்தால் பாதிக்கப்படக்கூடிய பொருட்களை உயரமான இடத்துக்குக் கொண்டு செல்லல் வேண்டும்.
3. குழந்தைகளையும் முதியோர்களையும் பாதுகாப்பான இடத்துக்கு நகர்த்துதல் வேண்டும். வெள்ள நீர்மட்டம் அதிகரிப்பதற்கிடையில் மாற்று வலுவுள்ளோரையும், நோயாளிகள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோரினையும் வெள்ள ஆபத்திலிருந்து பாதுகாப்பான பகுதிக்கு நகர்த்துதல் வேண்டும்.
4. வெள்ள அனர்த்தத்தின் போது இயலுமான வரையில் மின்சார சாதனங்களின் பாவனைகளைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.
5. தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேசத்தில் உள்ள அனர்த்த மீட்புக் குழுக்களைத் தொடர்புகொண்டு உதவிகளைப் பெறலாம்.
6. வெள்ள அனர்த்தத்தின் போது வெள்ள அனர்த்தப் பகுதிகளிலிருந்து இயலுமான வரை விலகியிருத்தல் நன்மை பயக்கும். எனினும் வெள்ள அனர்த்தப் பகுதியில் இருந்து பாதுகாப்பான பகுதிக்கு நகர்வதற்கு, பாதுகாப்பான பாதைகளைத் தெரிந்து அதனூடாகவே நகருதல் வேண்டும்.

### 3. வெள்ள அனர்த்தத்தின் பின்னரான நடவடிக்கைகள்

பொதுவாக இயற்கை அனர்த்தத்தின் பின்னர், தொற்றுநோய்களினால் பலர் இறந்திருக்கின்றனர். இத்தகைய பாதிப்புகளில் இருந்து பாதுகாப்புப் பெற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுதல் பொருத்தமானதாக இருக்கும்:

1. உரிய அறிவிப்பு வரும் வரை பாதுகாப்பான இடங்களைவிட்டு, வீடுகளுக்குத் திரும்பக் கூடாது.

2. குடிநீர் தொடர்பில் அதிக கவனம் எடுத்தல் வேண்டும். சுத்தமான குடிநீரைப் பெறுவதுடன், குடிநீர் பெறும் இடத்தினையும் துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும்.

3. பாதுகாப்பானவை என்று தெரிந்த பின்னரே, உணவுப் பொருட்களை உட்கொள்ளல் வேண்டும்.

4. மலசலகூடம், மற்றும் வீட்டுச் சூழலை துப்புரவாகவும், கழிவுகள் சேராவண்ணமும் பேணுதல் வேண்டும்.

5. பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர், பொது மருத்துவ மாது போன்றோரின் ஆலோசனையுடன் தொற்றுநோய்த் தடுப்பு முறைகளைக் கையாளுதல் வேண்டும்.

6. பிரதேசத்தின் மின்சாரம், தொலைத் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக பொது மக்கள் ஒத்துழைப்பும், உதவிகளும் புரிந்து இயன்றளவு விரைவில் அவற்றை மேம்படுத்தி மீளமைத்தல் வேண்டும்.

7. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வுக்குத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

இயற்கை அனர்த்த முகாமைத்துவத்தில் குறைவாக்கல் வட்டமும் முக்கியமான ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. குறைவாக்கல் வட்டம் என்பது தயார்ப்படுத்தல் (Preparedness), பொறுப்பெடுத்தல் (Response), மீளமைத்தல் (Recovery), குறைத்தல் (Mitigation) என்னும் நான்கு விடயங்களை அடிப்படையாகக் கொண்டது.

குறைவாக்கல் வட்டத்தில் தயார்ப்படுத்தல் எத்தகைய அனர்த்தம் ஏற்படும் போதும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகத் தயார்ப்படுத்துவதைக் குறிக்கும். தயார்ப்படுத்தல் என்பது அனர்த்தம் ஒன்றின் போது மக்களை வெளியேற்றல், பாதுகாப்பான இடமொன்றில் தங்கவைத்தல், தேவையான வசதிகளை மேற்கொள்ளல், மீள் வாழ்க்கைக்குத் திரும்பும் வரை அவ் இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுதல் என்பவற்றைக் குறிக்கும். பொறுப்பெடுத்தல் (Response) என்பது அனர்த்தம் ஒன்றின் போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீட்பு, நிவாரண மற்றும் புனர்வாழ்வு - புனரமைப்பு முறைகளை மேற்கொள்வதற்கு ஒவ்வொரு தனிநபரும், அமைப்புக்களும் (அரசு, அரச சார்பற்ற) பொறுப்பெடுப்பதனைக் குறிக்கும். பொறுப்பெடுத்தல் மூலம் ஒவ்வொரு துறைசார்ந்த வேலைகளையும் ஒவ்வொரு அமைப்புகளும் பொறுப்பெடுக்கின்றன. இலங்கைப் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கையின்படி, இலங்கையில் தேசிய மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும், அனர்த்த காலங்களின் போது பொறுப்பெடுக்க வேண்டிய அமைப்புகள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் பின்வரும் அமைப்புகள் காணப்படுகின்றன:

1. தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்.

2. வடக்கு மாகாண சபை

3. மாவட்டச் செயலகங்கள்

4. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையங்கள்

5. பிரதேச செயலகம்

6. மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை

போன்ற உள்ளூராட்சி அமைப்புகள்

7. பொலிஸ்

8. ஆயுதப்படையினர்

8.1 தரைப்படையினர்

8.2 விமானப்படையினர்

8.3 கடற்படையினர்

9. சமூக நிறுவனங்கள்

10. வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம்

11. மின்சார சபை

12. ஸ்ரீலங்கா ரெலிக்கொம்

13. தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

14. பிராந்தியச் சுகாதாரச் சேவைகள் பணிமனை

15. சமூக சேவைகள் திணைக்களம்

மீளமைத்தல் என்பது அனர்த்தம் ஒன்றின் போது பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை மீளமைத்தலைக் குறிக்கும். இது கல்வி, சுகாதாரம், போக்குரத்து, தொடர்பாடல், வாழ்வாதாரம் போன்ற அனைத்துத் துறைகளையும் மீளமைப்பதனைக் குறிக்கும்.

மேற்கூறிய தயார்ப்படுத்தல், பொறுப்பெடுத்தல், மீளமைத்தல் என்பவற்றின் ஒழுங்குமுறையான நடவடிக்கைகளின் ஊடாக அனர்த்தத்தினைக் குறைக்க முடியும் என்பதனை குறைத்தல் (Mitigation) என்பது குறிக்கின்றது. இவை ஒரு வட்டவடிவில் தொழிற்படுகின்றன. மேற்கூறிய நடவடிக்கைகளின் போது அவை பற்றிய மதிப்பீடும் முக்கியமானதாகும். இடர் மதிப்பீட்டினை பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணித்துக் கொள்ளலாம்.

$Rh = h \times rh$

$Rh$ = அழிவை ஏற்படுத்தக்கூடிய இடர் (Hazard Specific Risk)

$h$ = இடர் நிகழும் சாத்தியப்பாடு (Probability)

$rh$ = இடரால் ஏற்படும் தாக்க மட்டம் (Level of Impact of Specific Hazard)

இத்தகைய அபாய மதிப்பீடு, மீளமைத்தல் என்பதனுள் அடங்கும். இதன் மூலம் புனர்வாழ்வு, புணர்நிர்மாணம் போன்றவற்றை இலகுவாக மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

வெள்ள அனர்த்தங்களின் போது மேற்படி குறைவாக்கல் வட்டமும், அபாய மதிப்பீடும் மிக முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. உலகின் பல நாடுகளில், அனர்த்த முகாமைத்துவத்தின் மேற்படி விடயங்களின் அவசியமும் முக்கியமும் வலியுறுத்தப்படுகின்றன.

வடக்கு மாகாணத்தின் அண்மைய 15 ஆண்டுகளை அதன் முன்னுள்ள 100 ஆண்டுகளுடன் ஒப்பிட்டால், கடந்த 15 ஆண்டுகளில் இயற்கை அனர்த்தங்கள் அதிகம் ஏற்பட்டுள்ளன. யுத்த அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ள நிலையில், இயற்கை அனர்த்தங்களின் அழிவுகளைக் குறைக்க நாம் முயலவேண்டும். இக் கட்டுரையின் முதல் பந்தியில் குறிப்பிட்டது போல, இயற்கை அனர்த்தங்களை நாம் தவிர்க்க முடியாது; ஆனால் அவற்றின் மூலம் ஏற்படும் அழிவுகளைக் குறைக்க முடியும்.

எனவே இதனை உணர்ந்து இயற்கை அனர்த்தம் ஒன்றை எதிர்கொள்வதற்கான வலுவுடன் இருக்க வேண்டியது தனிநபர்களினதும், சமூக, அரச அரச சார்பற்ற அமைப்புகளினதும் கடமையும், பொறுப்பும் ஆகும்.

இதனை உணர்ந்து நாம் அனைவரும் விழிப்புடன் செயற்பட்டு அனர்த்தம் ஒன்றின் அழிவுகளைக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். இல்லாவிட்டால், இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் அழிவுகள் மோசமானதாக இருக்கும்.

(தொடரும்)

இலங்கையைப் பொறுத்தமட்டில் குறிப்பாக வடமாகாணத்தில் குயர் மக்களுக்கான உரிமைக் குரல்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காணமுடிகிறது. 'வடபுல பண்பாட்டுத் தளத்தில் குயர் அரசியல்' என்ற இத் தொடரானது, வடபுல மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றியுள்ள பிற்போக்கான கருத்தியல்கள் பால்நிலைச் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக அமைதல், குயர் மக்கள் இந்தச் சமூகத்தின் மத்தியில் வன்முறைகளையும் பாரபட்சங்களையும் எதிர்கொள்வதில் கலாசாரம் – சமயம் அல்லது மதக் கட்டமைப்புகளின் பங்கு, வடபுலத்தில் குயர் அரசியல், குயர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய குயர் செயற்பாட்டாளர்களின் சமத்துவம் நோக்கிய முன்னெடுப்புகள், கல்வியியலாளர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட மையக்கருத்து வெளிப்பாட்டாளர்கள் குயர் அரசியல் அல்லது அது சார்ந்த விடயங்களில் பேணும் மௌனிப்பு என்பன பற்றிப் பேசவிழைகின்றது

அனுதர்சி கபிலன்



அனுதர்சி கபிலன் அவர்கள் தனது இளமாணிப் பட்டத்தைத் திருகோணமலை வளாகம், கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் இதழியலில் "டிப்ளோமா" பட்டத்தைக் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கைகள் துறையில் விரிவுரையாளராகப் பணிப்புரியும் அனுதர்சி முதுமாணிப் பட்டப்படிப்பைக் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தில் வெகுஜன ஊடகவியலில் தொடர்கின்றார்.

'இலங்கை அரசியல் அரசியல்வாதிகள்' என்ற தலைப்பில் 2015 இல் அவரால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நேர்காணல்கள் 2017 இல் நூல்வடிவில் வெளியிடப்பட்டது.

# குயர் மக்கள் தொடர்பான அசைவியக்கங்களும்

## சமூக ஊடகங்கள் மூலமான வலுப்படுத்தலும்

சமூகச் செயற்பாடுகள் பல்வேறு வழிகளிலும் வடிவங்களிலும் இடம்பெறுகின்றன. பால்நிலை ரீதியில் ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கான சமூகச் செயற்பாடுகள் அண்மைக் காலங்களில் அதிகம் இடம்பெறுவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கை மக்களிடையே 2010 ஆம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சமூக ஊடகங்கள் உள்ளடங்கலான இணையவழி ஊடகங்களின் பாவனையானது அதிகரித்தது எனலாம். இணையவழி ஊடகங்கள் குயர் மக்களுடைய செயற்பாடுகளுக்கு ஒரு திருப்புமுனையாக இருக்கின்றன. நாளாந்த வாழ்வில் ஏராளமான குயர் மக்கள் இணையவழி ஊடகங்களைப் பயன்படுத்துகின்றனர். அண்மைக்காலங்களில் உலகளாவிய ரீதியில் சமூக ஊடகங்கள் மூலமான குயர் மக்களுக்கான அசைவியக்கங்கள் வலுப்பெற ஆரம்பித்துள்ளன. இலங்கையின் வடபுலம் நாட்டின் ஏனைய பிரதேசங்களின் பண்பாட்டுச் சூழலுடன் ஒப்பிடும் போது மிகவும் வேறுபட்டதாகக் காணப்படுகிறது. இறுக்கமான பண்பாட்டுக் கட்டமைப்பைக் கொண்டிருந்தாலும் கூட, வடபுலத்தை வாழ்விடமாகக் கொண்ட ஒரு தொகுதி மக்கள் உலக மாற்றங்களுடன் உடன்பட்டு யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதிலும் தம்மை இற்றைப்படுத்திக் கொள்வதிலும் முன்நிற்கிறார்கள்.

இலங்கையின் வடபுலத்தில் இடம்பெறும் சமூக ஊடகங்கள் மூலமான அசைவியக்கங்களானவை மிகவும் வினைத்திறனுடன் செயலாற்றுவதை அவதானிக்கமுடிகிறது. இங்கு இன, மத, வர்க்க, சாதி, கல்வி என்ற வேறுபாடுகள்

கடந்து குயர் மக்களும் குயர் செயற்பாட்டாளர்களும் இணைந்து செயற்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இலங்கையில் குயர் உரிமைகளை வலியுறுத்தும் அமைப்புகள் மற்றும் நிறுவனங்கள் முதன் முதலில் கொழும்பில் தோற்றம் பெற்றாலும் கூட 2015 ஆம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் கொழும்பிற்கு வெளியேயும் தோற்றம் பெற ஆரம்பித்தன. இது யாழ்ப்பாணத்திலும் குயர் மக்கள் சார்ந்த நிறுவனங்கள் தோற்றம் பெறவும் பரிணாம வளர்ச்சி அடையவும் காரணமாகியது. பாலின நீதியைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நிறுவனங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

குயர் சமூகம் சார்ந்து சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களும் குயர் மக்களும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் அதேவேளையில், இலங்கையில் குயர் உரிமைகளை அதிக அளவில் உள்ளடக்குதல் மற்றும் அங்கீகரித்தல் ஆகியவற்றை நோக்கிய தெளிவான மாற்றமும் தேவையாகவுள்ளது. தனிமனித சுய விருப்பங்களை ஒடுக்கும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல், மீள்வருவார்ப்புக்களைக் கட்டுடைத்தல் போன்றவற்றில் இக் குயர் அமைப்புக்களின் தோற்றமும் அவற்றின் இணையவழிச் செயல்வாதமும் பெரும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளன. அது மட்டுமல்லாமல் அடையாள அரசியல், சுய மரியாதை, சமத்துவத்தை வலியுறுத்தல் எனப் பல பணிகளை இவ் அமைப்புகள் வலியுறுத்துகின்றன. அதேவேளை குயர் மக்கள் இணையப் பாவனையால் ஏராளமான சவால்களையும் எதிர்கொள்கின்றனர்.

## குயர் மக்கள் மத்தியில் சமூக ஊடகப்பாவனை

வடபுலத்தை நோக்கும் போது குயர் மக்கள் மத்தியில் சமூக ஊடகப்பாவனை அதிகரித்திருக்கிறது எனலாம். பெரும்பாலான குயர் மக்களும் குயர் நிறுவனங்களும் வேறுபட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதனை அவதானிக்கலாம். இவர்கள் முகப்புத்தகம், ருவிற்றர், வைபர், வாட்ஸ்ஆப், இன்ஸ்ரகிராம், யூரியூப், ரிக்ரொக் (*Facebook, Twitter, Instagram, Youtube, Viber, WhatsApp, Tiktok*) போன்ற சமூக ஊடகங்களை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

குயர் மக்கள் தங்களுடைய அடையாளங்களை வெளிப்படுத்தல், தொடர்பாடலை மேற்கொள்ளல், பொழுதுபோக்கு, தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தல் போன்ற பல்வேறு நோக்கங்களிற்காகச் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்ற அதேவேளை செயல்வாதத்திற்காகவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகின்றமையை அவதானிக்கலாம். இச் சமூக ஊடகங்கள் சாதகமான தாக்கங்களை மட்டுமல்லாது பாதகமான தாக்கங்களையும் ஏற்படுத்திவிடுகின்றன. பாதகமான சமூக ஊடகத் தாக்கங்களால் குயர் மக்கள் உடல் மற்றும் உள ரீதியான சவால்களை எதிர்கொள்கின்றனர். இணையவழி ஊடகங்களில் குயர் செயற்பாட்டாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

## வடபுலத்தில் உள்ள குயர் மக்களுக்கான அமைப்புகள்


யாழ்ப்பாணத்தில் குயர் மக்களுக்கான உரிமைகளைப் பேசும் நான்கு நிறுவனங்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணச் சங்கம் (*Jaffna Sangam*), யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பு (*Jaffna Transgender Network*), விளிம்பின் குரல் (*Voice of Edge*) மற்றும் சமத்துவத்திற்கான குரல் (*Voice for Equality*) போன்ற நிறுவனங்கள் இயங்கி வந்திருக்கின்றன. அதிலும் யாழ்ப்பாணச் சங்கம் (*Jaffna Sangam*) மற்றும் யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பு (*Jaffna Transgender Network*) ஆகிய இரு அமைப்புகளும் தமது பணிகளை அண்மைக் காலங்களிலும் முன்னெடுத்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

### 1. யாழ்ப்பாணச் சங்கம் (Jaffna Sangam)

வடபுலத்தில் தோற்றம் பெற்ற முதலாவது தமிழ் பேசும் குயர் மக்களுக்கான அமைப்பாக

யாழ்ப்பாணச் சங்கம் விளங்குகின்றது. இது 2017 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 17 ஆம் திகதி தோற்றம் பெற்றது. தேன்மொழி மாக்கிரட், கஸ்ரோ பொன்னுத்துரை, வரதாஸ் தியாகராஜா மற்றும் ஏஞ்சல் குயின்ரஸ் போன்றோர் இந் நிறுவனத்தின் நிறுவுனர்களாகத் திகழ்ந்தனர். யாழ்ப்பாணச் சங்கம் கடந்த காலங்களில் சமூக ஊடகங்கள் மூலமான ஏராளமான செயற்றிட்டங்களை முனைப்புடன் முன்னெடுத்து வந்துள்ளது.

## 2. யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பு (Jaffna Transgender Network)




யாழுப்பாணச் சங்கத்தின் முகநூல் பக்கம்
Image Source - web.facebook.com/p/Jaffna-Sangam

ஏஞ்சல் குயின்ரஸ், யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பின் நிறுவுனராகத் திகழ்கின்றார். ஏஞ்சல் யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாகக் குயர் மக்களுடைய உரிமைகளுக்காகச் செயற்பட்டு வருகிறார். இவ் அமைப்பு திருநர் வலையமைப்புத் தொடர்ச்சியாகப் பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது; அதன் ஆரம்ப காலங்களில் இருந்து இற்றை வரை சமூக ஊடகங்கள் மூலமான செயற்பாடுகளிலும் செயல்வாதங்களிலும் முனைப்புடன் ஈடுபட்டுவருவதனை அவதானிக்க முடிகின்றது. சுயமரியாதை நடை, சுயமரியாதை மாத நிகழ்வுகள், யாழ்ப்பாணக் குயர் விழா போன்றவற்றை இந்நிறுவனம் சிறப்புற முன்னெடுத்து வருகின்றது. இந் நிறுவனத்தின் நிலைத்திருப்பைக் காலந்தான் தீர்மானிக்க வேண்டும்.

## 3. சமத்துவத்திற்கான குரல் (Voice for Equality)

சமத்துவத்திற்கான குரல் நிறுவனம் பெப்ரவரி 4 ஆம் திகதி 2022 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந் நிறுவனம் குயர் மக்களுடைய உரிமைகளை வலியுறுத்தும் நோக்கிலேயே தோற்றம் பெற்றது. இந் நிறுவனம் குறுகிய காலத்தில் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களை குயர் மக்களுக்காக முன்னெடுத்திருந்தது. அதுமட்டுமல்லாமல் இந்நிறுவனம் தமது தொடர்பாடலை அதிகமாக சமூக ஊடகங்கள் மூலமாக மேற்கொண்டிருந்தமையை அவதானிக்க முடியும்.

## 4. விளிம்பின் குரல் (Voice of Edge)

விளிம்பின் குரல் அமைப்பானது 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதி அன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பானது பெரும்பாலும் திருநர்களை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும். விளிம்பு நிலையில் இருக்கக்கூடிய அனைத்து மக்களையும், மாற்றுத்திறனாளிகள் மற்றும் குயர் சமூக மக்கள் போன்றோரையும் உள்வாங்கிக் கொண்டு செயற்படக்கூடிய ஒரு அமைப்பாக உருவாக்கப்பட்டது. ஆனால் குறுகிய காலப்பகுதியிலேயே இவ் அமைப்பு மௌனித்திருப்பதையே அவதானிக்க முடிகிறது. கடந்த காலங்களில் தாம் பெரும்பாலும் எழுதுவதற்கும் பேசுவதற்கும் வாய்ப்பு இருக்கக்கூடிய சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதாக விளிம்பின் குரல் நிறுவனத்தினர் தெரிவித்திருந்தனர். இவர்கள் முகநூல் மற்றும் யூரியூப் (Youtube) தளங்களை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். அதுமட்டுமல்லாமல் இன்ஸ்டாகிராம் மற்றும் ட்விட்டர் ஆகிய சமூக வலைத்தளங்களையும் பயன்படுத்துகின்றனர். சமத்துவத்திற்கான குரல் மற்றும் விளிம்பின் குரல் ஆகிய நிறுவனங்கள்

தமது ஆரம்ப காலங்களில் சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய வழியிலான சமூகச் செயற்பாடுகளில் முனைப்புடன் ஈடுபட்டிருந்தாலும், 2024 ஆம் ஆண்டின் அரை ஆண்டுகாலப் பகுதியில் அவற்றின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது, செயலற்ற நிலையிலேயே இருப்பதனை அவதானிக்க முடிகிறது.

## குயர் மக்களும் குயர் செயற்பாட்டாளர்களும்

மாறிக்கொண்டேயிருக்கும் சமூகத்தில் போராட்ட வடிவங்களும் மாறிக்கொண்டேயிருக்கும். பிற சமூகங்களைப் போலவே குயர் மக்களுடைய செயல்வாதத்திலும் சமூக ஊடகங்களின் வகிபங்கானது அளப்பரியதாகும். குயர் மக்களின் இருத்தல் எப்போதும் சமூகத்தால் மறுதலிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய சூழலில் கூட சமூக ஊடகங்கள் குயர் மக்களுக்கான வெளியைத் திறந்துவிட்டிருக்கிறது எனலாம்.

சமூகச் செயற்பாட்டாளரான திசா திருச்செல்வம் 2013 ஆம் ஆண்டிலிந்து குயர் உரிமை சார்ந்து செயற்பட்டு வருகிறார். இவர் சமூக ஊடகங்கள் மூலமான செயல்வாதம் குறித்துக் குறிப்பிடுகையில், சமூக ஊடகங்கள் குயர் சமூகம் சார்ந்த நிகழ்வுகள், செயற்பாடுகள், மற்றும் போராட்டங்கள் தொடர்பான தகவல்களைப் பல்வேறு தரப்பினர்களிடமும் கொண்டு சேர்ப்பதற்கு உதவுவதாகக் குறிப்பிட்டார். திசா மேலும் குறிப்பிடுகையில் குயர் மக்கள் மற்றும் குயர் செயற்பாட்டாளர்களுக்கிடையில் வலையமைப்பொன்றை ஏற்படுத்தவும் சமூக ஊடகங்கள் உதவுகின்றன எனவும் குறிப்பிட்டார்.

குயர் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்குப் பொருத்தமான தளம் சமூக ஊடகங்கள் எனக் குயர் செயற்பாட்டாளரும் விலங்கு மருத்துவருமான கஸ்ரோ பொன்னுத்துரை குறிப்பிடுகிறார். இவர் 2014 ஆம் ஆண்டிலிருந்து பால்நிலைச் சமத்துவம் மற்றும் குயர் உரிமைகள் தொடர்பில் செயற்பட்டு வருகிறார். அதுமட்டுமல்லாமல் யாழ்ப்பாணச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பு என்பவற்றின் மூலமும் தனது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்.

“தனிப்பட்ட ரீதியில் நோக்கும் போது சமூக ஊடகங்கள் என்னை வலுப்படுத்துவதிலும் எனது குயர் செயல்வாதத்திலும் மிக முக்கிய பங்காற்றியிருக்கின்றன. அதேவேளை சமூக ஊடகங்கள் மூலம் வெறுப்பு பேச்சு உள்ளிட்ட ஏராளமான இணையவழி வன்முறைகளுக்கும் முகம்கொடுக்க நேர்ந்தது. நான் ஏனைய சமூக ஊடகங்களை விட முகப்புத்தகம் மற்றும் யூரியூப் இனை அதிகம் பயன்படுத்துகிறேன். இது இலகுவில் விடயங்களைப் பகிரவும், குயர் உரிமைகள் மற்றும் விழிப்புணர்வை மக்களிடம் சேர்ப்பதற்கும் உதவுகின்றன” என்கிறார் ஏஞ்சல் குயின்ரஸ். யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பின் நிறுவுனர்களில் ஒருவரான இவர் யாழ்ப்பாணத்தில் குயர் உரிமைகளுக்காகச் செயற்பட்டு வருகிறார்.


“ஆரோக்கியமான பதிவுகள், ஆரோக்கியமற்ற கருத்துகள் என்பன உள்ளடக்கங்களாக அமைகின்ற போதும் குயர் மக்கள் தம் சமூகம் சார்ந்த கருத்துகளுக்கு எதிர்வினை ஆற்றும் வாய்ப்பை சமூக வலைத்தள ஊடகங்கள் வழங்கியுள்ளன” என்கிறார் ஈழநிலா. அவர் மேலும் குறிப்பிடுகையில் குயர் மக்கள் தமக்கு இருக்கும் அங்கீகரிக்கப்படாத திறமைகளை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பைச் சமூக ஊடகங்கள் வழங்குகின்றன. உதாரணமாக, நடிப்புத் திறமை, எழுதுகிற திறமை போன்றவற்றை டிக் ரொக் (TikTok), முகநூல் மற்றும் இன்ஸ்ரகிராம் போன்ற சமூக ஊடகங்களில் பதிவிட்டுத் தமக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல், தம்மைப் பிரபலப்படுத்திக் கொள்ளுதல் போன்றவற்றைக் காணக்கூடியதாக இருக்கின்றது. விளிம்பின் குரல் அமைப்பின் நிறுவுனரான ஈழநிலா, எழுத்தாளராகவும் விளங்குகின்றார்.

இலங்கையில் குயர் மக்களுக்கான சமூக ஊடகங்கள் மூலமான சமூகச் செயற்பாடுகள்

இலங்கையில் குயர் செயற்பாட்டாளர்களும் குயர் சமூகத்தினரும் குயர் மக்களுடைய தேவைகள், மற்றும் உரிமைகள் தொடர்பில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர். எதிர்ப்பால் ஈர்ப்பை மட்டுமே சாதாரணம் எனக் கருதும் சமூகத்தில் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதேவேளை, அண்மைக்காலங்களில் குயர் மக்களுக்கான சமூகச் செயற்பாடுகள் மற்றும் செயல்வாதங்களை முன்னெடுப்பதில் சமூக ஊடகங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

சுயமரியாதை மாத நிகழ்வுகள் மற்றும் யாழ்ப்பாணக் குயர் விழா போன்ற நிகழ்வுகளை குயர் சமூகத்தின் மத்தியிலும் ஏனையவர்கள் மத்தியிலும் கொண்டு சேர்ப்பதில் சமூக ஊடகங்கள் பாரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. யாழ்ப்பாணக் குயர் விழா நிகழ்வுகளின் நிகழ்ச்சி நிரல் மற்றும் விளம்பரப்படுத்தல்களை மேற்கொள்வதற்காகத் தனியான முகநூல் பக்கத்தைப் பயன்படுத்துகின்றனர். யாழ்ப்பாணக் குயர் விழா நிகழ்வுகளின் முழுமையான தகவல்களை அந்த முகநூல் பக்கம் கொண்டிருக்கிறது.

## சமூக ஊடகங்கள் மூலமான குயர் செயற்பாடுகளும் சாதகமான தாக்கங்களும்




யாழ்ப்பாணத் திருநர் வலையமைப்பின் இன்ஸ்டகிராம் பக்கம்
Image Source - www.instagram.com

வடபுலத்தில் குயர் மக்களும் செயற்பாட்டாளர்களும் சமூக ஊடகங்கள் மூலமாக குறிப்பிடத்தக்க அளவில் குயர் மக்களை வலுப்படுத்தியிருக்கிறார்கள் எனலாம். ஏனெனில் சமூக ஊடகங்கள் பல்வேறுபட்ட வாய்ப்புகளை வழங்குவனவாக இருக்கின்றன. அந்தவகையில் குயர் மக்களைப் பிரதிநிதிப்படுத்துவதில் சமூக ஊடகங்களுக்குப் பெரும்பங்குள்ளது. யாதார்த்த வாழ்க்கையில் தம்மை வெளிப்படுத்துவதிலும் பார்க்க குயர் மக்கள் வேறுபட்ட சமூக ஊடகத் தளங்களிலேயே தம்மை அதிகம் வெளிப்படுத்துகிறார்கள். அதுமட்டுமல்லாமல் குயர் மக்களின் உரிமைப் போராட்டங்கள், செயல்வாதங்கள், நிகழ்வுகள், கூட்டங்கள், போராட்டங்கள் மற்றும் ஏனைய முக்கிய நிகழ்வுகள் தொடர்பில் தகவல்களை வழங்குவதற்கும் விளம்பரப்படுத்துவதற்கும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

குயர் மக்கள் தங்களுடைய சுயதொழில்களை விளம்பரப்படுத்துவதற்கும் வணிக நடவடிக்கைகளைப் பிரபலப்படுத்துவதற்கும் வேறுபட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்துகிறார்கள். வணிக வலையமைப்பை புவியியல் எல்லைகளுக்கு அப்பாலும் விரிவுபடுத்தி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சமூக ஊடகங்களுக்குப் பெரும்பங்குண்டு.

சமூக ஊடகங்கள், சமூகச் செயற்பாடுகள் மற்றும் செயல்வாதங்களை உலகளாவிய ரீதியல் கொண்டு சேர்ப்பதற்கும் மற்றும் பரந்த வலையமைப்பை உருவாக்கவும் பெரும்பங்காற்றுகின்றன. இன்று குயர் மக்கள் பல்வேறு நோக்கங்களுக்காகச் சர்வதேச பயணங்களை மேற்கொள்வதற்கு இணையவழித் தொடர்புகள் வழிகோலுகின்றன. ஆய்வு மாநாடுகள், இளைஞர் மாநாடுகள், வேறுபட்ட




யாழில் இடம்பெற்ற சுயமரியாதை நடை

Image Source - www.tamilguardian.com

நிகழ்வுகள், கல்வி, சுற்றுலா மற்றும் வணிக நோக்கங்களுக்காகச் சர்வதேச நாடுகளுக்குப் பயணித்தல், அது தொடர்பான தகவல்களை வழங்குவதன் மூலமும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொடுத்தல் போன்றவற்றில் இணையவழி ஊடகங்கள் வாய்ப்பை ஏற்படுத்துகின்றன.

மேலும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தவண்ணம் இருக்கும் குயர் சமூகம் சார்ந்தவர்கள் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளவும் சமூக ஊடகங்கள் உதவுகின்றன. குயர் மக்களுடைய நல்வாழ்க்கைக்கும் உணர்வு ரீதியான ஆதரவு வழங்குவதற்கும் சமூக ஊடகங்கள் துணைநிற்கின்றன எனலாம். இவ்வாறான ஆதரவுகள் மூலம் குயர் மக்கள் தமது பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு இயலுமான சூழ்நிலை ஏற்படுத்தப்படுகின்றன. குயர் சமூகம் சார்ந்த வெறுப்பு பேச்சுக்கள் மற்றும் பதிவுகளுக்கு, உடனேயே பின்னூட்டம் இடக்கூடியதாக சமூக ஊடகங்கள் காணப்படுகின்றமையைப் பெரும்பாலான குயர் மக்கள் நல்வாய்ப்பாகக் கருதுகின்றனர்.

### சமூக ஊடகங்கள் மூலமான குயர் செயற்பாடுகளும் பாதகமான தாக்கங்களும்

சமூக ஊடகங்கள், பலருக்கு வாய்ப்பாக இருக்கக்கூடிய அதி உச்ச சுதந்திரம், தனிநபர்களுடைய பால்நிலை, வாழ்கை முறை மற்றும் சுதந்திரம் போன்றவற்றைக் கேள்விக்குள்ளாக்குவதாகவும் அமைந்துள்ளன. திருநர் வெறுப்பு, தன்பால் ஈர்ப்பு வெறுப்பு அல்லது ஒட்டுமொத்தமாக குயர் வெறுப்பை உமிழ்வதற்கான இடமாகவும் சமூக ஊடகங்கள் விளங்குகின்றன. இலங்கையில் குயர்



யாழில் இடம்பெற்ற திருநர் விழிப்புணர்வு வார நிகழ்வு
Image Source - www.instagram.com/jaffnatgn

வெறுப்பானது பண்பாடு, சமயம், சட்டம், தந்தையாதிக்கக் கருத்தியல் என்பவற்றின் அடிப்படையிலே கட்டமைக்கப்படுகிறது. இதற்கான முக்கிய காரணமாக பாலியல்பு மற்றும் பால்நிலை சார்ந்த கல்வியறிவும் புரிதலும் இல்லாமை காணப்படுகின்றது. இவை மட்டுமல்லாது வேறுபட்ட இணைய வழி வன்முறைகளையும் குயர் மக்கள் எதிர்கொள்கிறார்கள்.

குயர் மக்களையும் செயற்பாட்டாளர்களையும் இணையவழியில் பின்தொடர்தல், இணையவழியில் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தல் போன்றனவும் சமூக ஊடகங்கள் மூலம் இடம்பெறுகின்றன. குயர் மக்கள் சமூக ஊடகங்களில் மோசமாகச் சித்திரிக்கப்படும் போது அது அவர்களை உளவியல் ரீதியாகவும் பாதிக்கின்றது. மன அழுத்தம் மற்றும் மன அதிர்வு போன்றவற்றுக்கு இட்டுச் செல்லும் சூழ்நிலைகளைக் குயர் மக்கள் எதிர்கொள்கின்றனர். குறிப்பாக ஏராளமான உளவியல் ரீதியான பாதிப்புகளை சமூக ஊடகங்களால் எதிர்கொள்கிறார்கள். மோசமான வார்த்தைப் பிரயோகங்கள், போலிச் செய்திகள், வெறுப்புப் பேச்சு, குயர் மக்களைக் கேலிசெய்யக்கூடிய வார்த்தைகளைப் பயன்படுத்தல் எனக் குயர் வெறுப்பின் பல்வேறு வடிவங்களை இலங்கையின் வடபுலத்தில் உள்ள சமூக ஊடகப் பாவனையாளர்களின் பதிவுகளில் அவதானிக்கலாம். மீள்வருவார்ப்புக்களை உருவாக்குதல் சமூக ஊடகங்களில் குயர் மக்கள் எதிர்கொள்ளும் வன்முறைகளில் குறிப்பிடத்தக்கதாகும். திருநர்கள் மற்றும் தன்பாலீர்ப்பாளர்கள் பற்றிய ஏராளமான மீள்வருவார்ப்புக்களை இச்சமூகம் கொண்டிருக்கின்றது. பெரும்பாலான குயர் மக்கள் மற்றும் குயர் செயற்பாட்டாளர்கள், சமூக ஊடகங்களில் முகப்புத்தகத்திலேயே அதிகம் வன்முறைகளை எதிர்கொள்வதாகவும், பெரும்பாலானோர் முகப்புத்தகத்தைத் தவிர்ப்பதாகவும் குறிப்பிடுகின்றனர்.

“குயர் மக்களின் அந்தரங்கங்களைப் பற்றி மற்றவர்கள் அவதூறு பரப்பும் ஒரு சூழ்நிலை சமூக ஊடகங்களில் உருவாகியுள்ளது. இதற்கு எதிர்வினை ஆற்ற முயலும் திருநர்களையும் மற்ற குயர் மக்களையும் அவர்கள் சமூகம் சார்ந்து கேலி, கிண்டலுக்கு உள்ளாக்கி நகைப்புக்கு உள்ளாக்குவது என்பது மன உளைச்சலையும் அந்த சமூகம் பற்றிய கீழ்த்தரமான எண்ணத்தையும் மக்களிடையே விதைக்க வழி வகுக்கின்றது. இது மிகமோசமான நிலையாகக் காணப்படுகின்றது” என்கிறார் ஈழநிலா.

எது எவ்வாறாக இருந்தாலும் சமூக ஊடகங்கள் மூலமான குயர் செயல்வாதம் குறிப்பிடத்தக்க அளவில் வெற்றியளிக்கிறது எனலாம். வாழ்க்கையை மேம்படுத்தல், சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொள்ளல், வேலை வாய்ப்பைப் பெறல், சுயதொழில்களை மேம்படுத்தல், வலையமைப்பை உருவாக்குதல், கல்வி வாய்ப்புகள் போன்ற வாய்ப்புகளை சமூக ஊடகங்கள் மூலமாக குயர் மக்களால் அடைய இயலுமாக இருக்கின்றது. அதேவேளை ஏராளமான சவால்களையும் சமூக ஊடகங்கள் மூலம் குயர் மக்கள் எதிர்கொள்கிறார்கள். சவால்களுக்கு மத்தியிலும் கூட இலங்கையின் வடபுலத்தில் குயர் நிறுவனங்கள், குயர் உரிமைக்கான அமைப்புகள் ஆகியன இணைந்து குயர் மக்களுக்கான செயல்வாதங்களை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகின்றன.


(தொடரும்)

# விராஜ் மெண்டிஸ்;

## ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தில் தவிர்க்க முடியா ஆளுமை

அருட்தந்தை எழில்






விராஜ் மெண்டிஸ்
Image Source - imsvintagephotos.com

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஆய்வாளரான அருட்தந்தை எழில் அவர்கள், தன்னுடைய முதுகலைமாணிப் பட்டப்படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் நிறைவு செய்துள்ளார்.

இவர், தமிழின விடுதலை சார்ந்த அநுபவங்களை உள்ளடக்கிய 'உள்மை' என்ற கவிதைத் தொகுப்பை 2006 ஆம் ஆண்டிலும், 2009 இற்குப் பின்னரான தமிழ்த் தேசிய வெளி, தமிழ்த் தேசிய அரசியற் கருத்தியல் சார்ந்த பத்திகளின் தொகுப்பை 'பின்முள்ளிவாய்க்கால்' என்ற பெயரில் 2023 ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளார்.

ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கென பல்வேறு பரிமாணங்கள் உண்டு. அந்தப் பரிமாணங்களின் பாதைகள் சமாந்தரமாகப் பயணித்தாலும் அதன் தொடக்கமும், இலக்கும் ஒன்றாகவே இருக்கின்றன. விராஜினுடைய ஈழத்தமிழர் தேசிய விடுதலைக்கான பங்களிப்பு அரசியல் செயற்பாட்டுத் தளத்திலே காத்திரமானதாக அமைந்திருந்தது. தமிழினப் படுகொலை, அரசியல் வரலாற்று நிகழ்முறைக்கூடான பரிமாணத்தில் கட்டமைக்கப்பட்டு முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்டு, தொடர்ந்தும் தமிழர் தாயகத்தில் கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் விராஜினுடைய பங்களிப்பு முன்னெப்போதும் இல்லாதவாறு அவசியமானதாகவும் சுதந்திரமானதாகவும் அமைந்திருந்தது. விராஜினுடைய பங்களிப்பை ஒரு சில தளங்களில் தொட்டுச் செல்வது ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்க உதவி செய்யும். முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் பின் விடுதலைப்

> விராஜ் ஒரு சிங்களவராக இருந்து, சிங்கள மக்கள் மத்தியிலும் ஈழத்தமிழர் போராட்டத்திற்கான ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பியிருந்தார். அந்த ஆதரவுத்தளம் தொடர்ந்து இயங்குநிலையில் இருப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அவரே முன்னெடுத்து நடத்தியிருந்தார்.

பிரளயத்தையும் (Paradigm) அதன் விடுதலை முகவராண்மைத் தன்மையையும் (Agency) தமிழர் தாயகத்திலிருந்து அகற்றி ஐக்கிய நாடு நோக்கி மையப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஐ.நாவுடன் சேர்ந்து அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றையும் விடுதலைத் தருநர்களாக அறிமுகப்படுத்திய செயற்பாடு நடைபெற்றது. ஏகாதிபத்தியப் பேரரசு கட்டமைத்த மீயுயர் (Meta Narrative) அரசியல் சொல்லாடலை கட்டவிழ்த்த அரசியல் செயற்பாட்டுத் தளத்தை 2009 இன் பின் பொது வெளி அரசியலுக்குத் திறந்த விராஜ், விடுதலைப் புலிகளைத் தடை செய்ததும், 2002 பேச்சு வார்த்தையில் புலிகளை ஓரம் கட்டியதுமே முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கான காரணமென்பதை தர்க்க ரீதியாக விளக்கியதோடு, ஐக்கிய இராச்சிய, அமெரிக்க உடந்தைத் தன்மையையும் வெளிக்கொணர்ந்தார்.

ஈழத்தமிழினப் படுகொலையில் அமெரிக்க, ஐக்கிய இராச்சிய அரசுகளுக்கான உடந்தைத் தன்மை வெளிப்படுத்தப்பட்டமை அவர் ஒழுங்கமைத்த மூன்று மக்கள் தீர்ப்பாயங்களுக்கூடாக நடந்தேறியது. இறுதியாக அவர் சார்ந்த இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கும் காணொளியும் அதனது விவரணமும், எவ்வாறு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க அழுத்தத்தினால், பேச்சு வார்த்தையைக் கைவிட்டதென்றும், அதுவே இறுதியில் சிறிலங்கா அரசிற்கு இராணுவ ரீதியில் ஆயுத விடுதலைப் போராட்டத்தை சிதைப்பதற்குரிய பச்சைக் கொடியைக் காட்டியதென்பதையும் விளக்குகின்றது. இதற்காக இடதுசாரித் தீவிர அரசியலையும், புவிசார் அரசியல் திறனாய்வையும், ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்புக்கெதிரான சொல்லாடலையும் கொள்கைத் திறனாய்வுக் கற்கை நெறியாக அவர் கையிலெடுத்தார். இவையே ஈழத்தமிழர் விடுதலைப் போராட்ட விடுதலைப் பிரளயத்தின் முகவராண்மைத் தன்மையை தக்க வைக்க முடியுமென நம்பினார். அதுவே ஈழத்தமிழர் விடுதலைப்




Image Source - alchetron.com

போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டு சென்றது. ஐக்கிய இராச்சியம் ஆசியாவின் புவிசார் அரசியல் நலன் சார்ந்து அதன் பேரரசைத் தக்க வைப்பதற்காக கட்டமைத்த ஒற்றையாட்சி முறைமையே, வரலாற்று நிகழ்முறையாக மாற்றப்பட்டு முள்ளிவாய்க்கால் வரைக்கும் பயணித்தது என்பதில் ஆழமான திட நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த வகையில், ஈழத் தமிழினப் படுகொலையில் பிரித்தானிய காலனித்துவத்தின் பங்கு காத்திரமானது எனப் பேசிவந்தார்.

2009 இற்குப் பின்னர் ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் செயற்பாட்டுத் தளம் ஐ.நாவின் மைய குழாமை நோக்கியே திருப்பப்பட்டிருந்தது என்பது எல்லோரும் அறிந்தது. ஆனால் விராஜ் அதன் திசையை மாற்றி ஈழத்தமிழர் விடுதலைக்கான அரசியல் செயற்பாட்டுத் தளத்தை இலத்தீன் அமெரிக்க நாடுகளை மையப்படுத்தி, அதற்கான



Image Source - www.amazon.com

முன்னெடுப்புகளை செய்திருந்தார். தமிழினப் படுகொலை நினைவு நாளான மே 18 பல்வேறு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்றும் நினைவு கூறப்பட்டு வருகின்றது என்பது அதற்கான ஆதாரமாகும். நினைவுகூறலை அரசியல் செயற்பாட்டுத் தளமாக இயங்கு நிலைக்கு உட்படுத்துதலை ஒரு உத்தியாக கையாண்டார். மக்கள் தீர்ப்பாயத்தில், பெரும்பாலான தீர்ப்பாய நடுவர்கள் இலத்தீன் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்பதோடு மட்டுமல்லாமல், இலத்தீன் அமெரிக்க நாடுகளில் நில மீட்பு விடுதலைக்காக போராடும் பல்வேறு பூர்விகக் குழுக்களும் அதில் ஒருங்கிணைந்திருந்தமை, இன்னொரு உதாரணமாகும்.

ஜேர்மனியில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'நாதன் தம்பி வழக்கு', 2009 இன் பின்னரான சர்வதேச ஈழத்தமிழர் விடுதலை சார் அரசியல் தளத்தில் மிக முக்கியமானது. இவ் வழக்கில், விராஜினுடைய வாதமாக அமைவது நாதன் தம்பி, ஆனந்தராஜ் இருவருமே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டினார்கள்.

ஏனென்றால் விடுதலைப் புலிகள் தான் தாயகத்தில் தமிழினப் படுகொலையை தடுப்பதற்குரிய படைபலத்தைக் கொண்டிருந்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்ததன் மூலம் தமிழ் மக்களுக்குரிய பாதுகாப்புக் கவசம் இல்லாதொழிக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதப் பட்டியலில் சேர்த்ததன் மூலம் புலத்தில் அவர்களது செயற்பாடு முடக்கப்பட்டது மட்டுமல்லாது விடுதலைப் புலிகள் அமைப்பிற்காகப் பணம் சேர்ப்பது குற்றமாக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட




Image Source - alchetron.com

காரணங்கள் முள்ளிவாய்க்காலில் தமிழினப்படுகொலை உச்சந் தொடுவதற்குரிய பாதையை இலகுவாக சிறிலங்கா அரசிற்கு ஏற்படுத்திக் கொடுத்தது. இவ்வாறே விராஜ் தமிழினப் படுகொலை உடந்தைத் தன்மைக்குரிய ஆதாரங்களை கட்டமைத்தார். இதனது இறுதித் தீர்ப்பு வெளிவர முதல் விராஜ் மென்டிஸ் இயற்கை எய்தியது அபத்தமானது தான்.

விராஜ் ஒரு சிங்களவராக இருந்து, சிங்கள மக்கள் மத்தியிலும் ஈழத்தமிழர் போராட்டத்திற்கான ஆதரவுத் தளத்தைக் கட்டியெழுப்பியிருந்தார். அந்த ஆதரவுத்தளம் தொடர்ந்து இயங்குநிலையில் இருப்பதற்கான வேலைத்திட்டங்களையும் அவரே முன்னெடுத்து நடத்தியிருந்தார். அவற்றினுடைய பங்களிப்புப் பற்றி பொது வெளியில் நிறைய ஆதாரங்கள் உள்ளன. அரசியல் தஞ்சம் கோரி ஜேர்மனி நாட்டுக்குள் உள்நுழைபவர்களுக்கு அவருடைய ஆதரவுக்கரம் எப்போதுமே இருந்திருந்தது என்பதை அச் சேவையின் பயனாளிகள் நன்கு அறிவர். அதையே விராஜ் நியாயப் பிரச்சாரத்திற்கான தளமாகப் பயன்படுத்தினார் என்பதை மறுப்பதிற்கில்லை.

விராஜ் 17 வயதில் பிரித்தானிய இராச்சியத்திற்கு பொறியியல் மாணவனாக அனுமதி பெற்று வந்ததன் பின்னரே அவரது அரசியல் செயற்பாட்டுத் தளத்தில் மாற்றம் ஏற்படுகின்றது. இலண்டன் நகரம் விராஜிற்கு இன்னொரு யதார்த்தத்தை திறந்து விடுகிறது. அந்த நிறவெறி அல்லது மற்றமையை ஏற்றுக் கொள்ள மறுக்கின்ற யதார்த்தம் தான் அவரை அரசியல் மயப்படுத்துகின்றது. அவர் இடதுசாரிச் சிந்தனைக் குழுக்களுடன் இணைந்து தனது அரசியல் செயற்பாட்டுப் பயணத்தை ஆரம்பிக்கின்றார். நிறவெறிக்கெதிரான, ஏகாதிபத்திய பேரரசுக் கட்டமைப்பிற்கெதிரான போராட்டங்களை இலண்டனில் ஒழுங்குபடுத்துவதிலே மிக வினைத்திறனோடு செயற்படுகின்றார். அத்தோடு பிரித்தானிய இராணுவம் அயர்லாந்தை விட்டு வெளியேற வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்னெடுத்து நியாயப் பிரச்சாரங்களை தான் முன்னெடுத்ததாகவும் அந்தக் காலப் பகுதியிலே தான் ஈழத்தமிழ் விடுதலைப்

*போராட்டத்திற்கான ஆதரவுத் தளத்தை பிரித்தானியாவில் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஏனையவர்களுடன் சேர்ந்து ஆரம்பித்ததாகவும் குறிப்பிடுகின்றார்.*

*அவருடைய அரசியல் செயற்பாட்டுத்தளம் அவரது கல்வியை விடவும் முன்னுரிமை பெறுகின்றது. அவரது நுழைவு அனுமதி (வீசா) காலாவதியாகியிருந்தாலும் தொடக்கத்தில் அதைப் பொருட்படுத்தாமல் விட்ட குடிவரவுத்துறை, அவர் சார்ந்த அமைப்பு ஏறக்குறைய ஒரு கட்டத்தில் பதினைந்து நாடு கடத்தல் சம்பவங்களைத் தடுத்ததாகக் குறிப்பிட்டு, இறுதியாக பதினொரு வருடங்கள் கழித்து, 1989 இல், விராஜிற்கு ஐக்கிய இராச்சியத்தில் தங்கி இருப்பதற்கான அனுமதி மறுக்கப்படுகின்றது. அவர் எந்நேரமும் நாடு கடத்தப்படலாம் எனும் நிலை உருவாகியது.*

*நாடு கடத்தலை தடுப்பதற்கான சட்ட முயற்சிகள் தோல்வியைத் தழுவிய போது ஆலயத்தில் அரசியல் தஞ்சம் கோருகின்றார். ஆலயத்தின் மிகச்சிறிய திருப்பண்ட அறையில் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றார். ஆலய திருப்பண்ட அறை நியாயப் பிரச்சாரத்திற்கும், சமூகத்தை கூட்டாக அணி திரட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டதை புதிய பிரச்சார உத்தியாக ஜனத் தனது கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அந்த இடத்து மக்களே, அவருக்கான பாதுகாப்பு ஒழுங்குகளையும் பிரச்சார ஒழுங்குகளையும் முன்னெடுத்து பிரித்தானிய குடிவரவுத் துறையிடமிருந்தும், காவல்துறையிடமிருந்தும் காப்பாற்றியிருந்தார்கள். பிரித்தானிய காவல்துறை, பாதுகாப்பு வலயங்களை உடைத்தெறிந்து, 1989 தை 18 அதிகாலையில் அவரைக் கைது செய்து நாடு கடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றது. விராஜ் கைது செய்யப்பட்ட வேளை தன்னை அவர் சூடாக்கியுடன் சங்கிலி மூலம் பிணைத்திருந்தார். அதை உடைத்து பிரித்தானிய காவல்துறை அவரைக் கைது செய்தது. அதே தருணத்தில் அரசியல் தஞ்சம் கோருவதற்கான விண்ணப்பத்தையும் குடிவரவுத் திணைக்களத்திடம் சமர்ப்பித்திருந்தார். 1989 இல் பிரித்தானிய அரசு அவரை சிறிலங்காவிற்கு நாடு கடத்தியிருந்தது.*

2009 இற்குப் பின்னர் ஈழத் தமிழர்களின் விடுதலைக்கான அரசியல் செயற்பாட்டுத் தளம் ஐ.நாவின் மைய குழாமை நோக்கியே திருப்பப்பட்டிருந்தது என்பது எல்லோரும் அறிந்தது. ஆனால் விராஜ் அதன் திசையை மாற்றி ஈழத்தமிழர் விடுதலைக்கான அரசியல் செயற்பாட்டுத் தளத்தை இலத்தீன் அமெரிக்க நாடுகளை மையப்படுத்தி, அதற்கான முன்னெடுப்புகளை செய்திருந்தார். தமிழினப் படுகொலை நினைவு நாளான மே 18 பல்வேறு இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இன்றும் நினைவு கூறப்பட்டு வருகின்றது என்பது அதற்கான ஆதாரமாகும்.

*சிறிலாங்காவிலிருந்து மீண்டும் அரசியல் தஞ்சம் கோரி, ஜேர்மனியிலிருந்த தனது ஈழத்தமிழ் விடுதலைக்கு வலுச்சேர்க்கும் செயற்பாடுகளையும் ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தார்.*

*2010 இல் அவரைப் பாதுகாத்த ஆலயக் குரு இறந்த போது அவருடைய இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள பிரித்தானிய குடிவரவுத்துறை அவருக்கு அனுமதியை மறுத்திருந்தது. முப்பது வருடங்களுக்கு மேலாக ஜேர்மனியில் தங்கியிருந்து சர்வதேச அரசியல் செயற்பாட்டுத் தளத்தில் அவர் ஆற்றிய பங்களிப்பு மிகவும் காத்திரமானது. விராஜ் விட்டுச் செல்லும் செயற்திட்டங்களை முன்னெடுப்பதே நாம் அவருக்கு செலுத்துகின்ற அஞ்சலியாகும்.*

2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் 'கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்' எனும் பெயரில் அமைகிறது.


● வை. ஜெயமுருகன்




சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.

# ஈழத்தில் கூட்டுறவுச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் புலம்பெயர்ந்தோரின் பங்களிப்பு

கூட்டுறவு, ஒரு பலமான சமூக - பொருளாதார அடித்தளத்தையும் சமூக மூலதனத்தையும் சம அளவில் உள்வாங்கி, பல மட்டங்களில் (கிராம, பிரதேச, மாவட்ட மற்றும் மாகாணச் சம்மேளனங்களாக) கிளைவிட்டுத் தழைக்கும் ஒரு அமைப்பு ஆகும். இலங்கையில், மிகவும் குறிப்பாக, வடக்கு - கிழக்கு மற்றும் மலையக நிர்வாக நிலப்பரப்பில் கூட்டுறவின் அசைவியக்கம் ஒரு தேங்கு நிலைக்குச் சென்றுள்ளது. அண்மையில் கூட, இது பற்றிய கரிசனை பாராளுமன்றத்தில் எதிரொலித்தது. தற்போதைய கூட்டுறவின் நிலை, இலங்கையின் சமூக - பொருளாதார நெருக்கடியை ஒத்த தன்மையில் காணப்படுகிறது. இந்நிலையிலிருந்து மீள வேண்டுமானால் கூட்டுறவின் வகிபங்கு தொடர்பான ஒரு மதிப்பீடு அவசியம். அதில் முதலாவதாக

ஆராய வேண்டிய பாகம்; ஒன்றிணைவு மூலோபாயம். இரண்டாவது; கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டுப் பங்காண்மையும் ஒத்தாசையும்.

கூட்டுறவு அமைப்புகள் சுய உதவி, சுய பொறுப்பு, ஜனநாயகம், சமத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை. தங்கள் நிறுவனர்களின் பாரம்பரியத்தில், கூட்டுறவு உறுப்பினர்கள் நேர்மை, வெளிப்படைத்தன்மை, சமூகப் பொறுப்பு மற்றும் பிறரைக் கவனித்துக்கொள்வது போன்ற நெறிமுறை மதிப்புகளை முழுமையாக நம்பி நடைபோடும் போது, கூட்டுறவின் சுய அடையாளம் மிளிர ஆரம்பிக்கும். கூட்டுறவு என்பது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்டதாகும். சமூக, இன, பால், அரசியல் மற்றும் மதப் பாகுபாடு இல்லாமல், தங்கள் சேவைகளைப் பயன்படுத்தக்கூடிய அனைத்து நபர்களுக்கும் திறந்திருக்கும் வீடுகள் தான் கூட்டுறவு அமைப்புகள்.

நுண் அரசியல் என்பது கட்சி அரசியலுக்கு உடன்படாதது. எல்லோருக்கும் நன்மை தரும் ஒரு அசைவியக்கத்தில் நடைபோடும் ஒரு சமூக அரசியல் வழி. கூட்டுறவின் அரசியலும் 'நுண் அரசியல் வடிவம்' கொண்டது. தன் சமூகத்திற்கான அக்கறை என்பது கூட்டுறவின் நுண் அரசியல் செல்நெறியாகும். கூட்டுறவுகள் தங்கள் உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மூலம் தங்கள் சமூகங்களின் நிலையான வளர்ச்சிக்காக வேலை செய்ய வேண்டும். தங்கள் உறுப்பினர்களுக்கு மிகவும் திறம்பட சேவை செய்வதற்குரிய வாய்ப்புகளை வழங்க வேண்டும். உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கூட்டுறவு அமைப்புகள் பல வாய்ப்புகளை பெற முடியும்; தம் இயக்கத்தை வலுப்படுத்த முடியும்.

"அனைவருக்கும் சிறந்த எதிர்காலத்தை உருவாக்குதல்" என்ற கருப்பொருளுடன் உலகெங்கிலும் உள்ள கூட்டுறவுகள் சர்வதேசக் கூட்டுறவு தினத்தைக் (July - 6, 2024) கொண்டாடின. நிலையான வளர்ச்சி இலக்குகளை (SDG) செயற்படுத்துவதற்கான முயற்சிகளைத் துரிதப்படுத்தி, கூட்டுறவு நிறுவனங்களின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கான தற்போதைய மற்றும் கடந்தகாலப் பங்களிப்புகளை வெளிப்படுத்துவதற்கு பல தீர்வுகளைத் தேடி ஓடவேண்டியுள்ளது. குறிப்பாக, வடக்கு - கிழக்கு மற்றும் மலையகக் கூட்டுறவு அமைப்புகளுக்குரிய மிகவும் பயனுள்ள ஒரு தீர்வு என்பது ஒன்றிணைந்து இயங்குவதுதான். பல அமைப்புகளுடன் ஒரு உடன்பாட்டில் பொது நன்மை கருதி ஒன்றிணைந்து பயன் காண்பது என்பது மிக முக்கியமானதாகும். ஒன்றிணைந்து இயங்குவதற்கு உலகளாவிய கூட்டுறவு அமைப்புகளின் அனுபவங்கள் முக்கியமானவை.

## 'சனச' கூட்டமைப்பு

இலங்கையின் மிகப்பெரிய கூட்டுறவு நிறுவனமான 'சனச' ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களால் வளர்க்கப்படுகிறது. 1906 இல் காலனித்துவ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிக்கனம் மற்றும் கடன் கூட்டுறவு மாதிரியின் மறுசீரமைப்புடன் 1978 இல் 'சனச' தனது பயணத்தைத் தொடங்கியது. அன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பயணம், தொடர்ச்சியான புதுமை மற்றும் வளர்ச்சியால் நிரம்பியுள்ளது. இலங்கையில் பல்வேறு ஆட்சிகளின் கீழ் உள்ளடங்கிய அபிவிருத்தியில் 'சனச'விற்கு அதிக அனுபவம் உள்ளது. எனவே, உலகத்துடன் பகிர்ந்து கொள்ள அதனிடம் பல வெற்றிக் கதைகள் உள்ளன.

சனச, 40 பிரதேச மட்ட இரண்டாம் நிலைக் கூட்டுறவுச் சங்கங்களுடனும், 8000 பதிவு செய்யப்பட்ட சிக்கன மற்றும் கடன் கூட்டுறவுச் சங்கங்களுடனும் இணைந்த 1 மில்லியன் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இது கூட்டமைப்பு இயக்கத்திற்கு தலைமை, மற்றும் வழிகாட்டுதலை வழங்குகிறது; இயக்கத்தின் சார்பாக ஒழுங்குமுறை அமைப்புகளோடு



ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத் திறப்பு விழாவின் போது
Image Source - web.facebook.com/jinasena(pvt)ltd

முயலும் செல்நெறியை உடையது.

வடக்கு - கிழக்கு கூட்டுறவு அமைப்புகளின் 'சனச' அனுபவமானது கசப்பானதாக இருந்ததாக அறியப்படுகிறது. கூட்டுறவாளர்களின் கருத்துப்படி 'சனச' வடக்கு - கிழக்கு மாகாணங்களின் யுத்த நிலைமையைக் காட்டி பெரும் நிதியைத் திரட்டியது. ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பாதிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகளுக்கு, திட்ட அறிக்கையின் படி கிடைக்கவேண்டிய நிதி சென்றடையவில்லை எனக் கூறப்படுகிறது. இவை போன்ற காரணங்களால் வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பாதிக்கப்பட்ட கூட்டுறவு அமைப்புகள், மாகாண மட்டத்தில் திரண்டு, சர்வதேசக் கூட்டுறவின் நியாயமான உதவியைப் பெறுவதும், அமைப்புகளின் வலுவான வளர்ச்சியை உறுதிப்படுத்துவதும் அவசியம். இதன் ஆரம்ப முனைவாக, தற்போதைய காலச்சூழ்நிலை கருதி, தமிழ் பேசும் தேசங்களின் கூட்டுறவுச் சம்மேளனங்களின் சம்மேளனம் ஒன்றை உருவாக்குவதும், அதன் மீது ஒன்றிணைவிற்கான திட்டங்களை முன்னெடுப்பதும் முக்கியமானது. இவை ஒன்றிணைவுக்கான முன்நிபந்தனைகள் ஆகும். 'சனச' நிறுவனத்திடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் நிறைய உண்டு. ஆனால், அவர்களின் செல்நெறிகள் வடக்கு - கிழக்கு மற்றும் மலையக கூட்டுறவு அமைப்புகளுக்குரிய தேவைகளைப் பூர்த்தி செய்யுமா என்பது சந்தேகம்.

சர்வதேச கூட்டுறவுச் சமூகத்துடன் செயற்படுகிறது. மேலும் இது, விவேகமான ஒழுங்குமுறை/ மேலாண்மை அமைப்புகளை அறிமுகப்படுத்துகிறது; இதன் இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் வளர்ச்சிக்கு மதிப்புச் சேர்க்க புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பதில் தலைமை வகிக்கிறது. சனச சம்மேளனம் இலங்கையின் பலமான அரச - அரச சார்பற்ற நிறுவனங்களில் ஒன்றாகவும், உலகின் மிகச் சிறந்த நுண்கடன் மாதிரிகளில் ஒன்றை இயக்கும் நிறுவனமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

SANASA பெடெரேஷன் (Federation of Thrift and Credit Co - Operative Societies in Sri Lanka) ஆனது அனைவரையும் உள்ளடக்கிய, நிலையான அபிவிருத்திக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் ஒரு அமைப்பு எனக் கூறப்படுகிறது. ஆனால், சனச இன்டர்நேஷனல் என்பது, சனச இயக்கத்தின் ஸ்தாபகத் தலைவரான Dr P.A. கிரிவந்தெனியவினால் உருவாக்கப்பட்ட ஒரு தனியார் வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாகும். சனச இன்டர்நேஷனல் 2007 ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டம் 'எண்.7' இன் கீழ், 2015 இல் இணைக்கப்பட்டது. இது, கூட்டுறவின் கொள்கையில் இருந்து ஒரு 'நியூ லிபரல்' பாதையில் இணையாத வழி செல்ல

## புலம்பெயர்ந்தோரும் கூட்டுறவுச் செயற்பாடுகளும்

நிகழ்காலப் போக்கின்படி, வடக்கு - கிழக்கு மற்றும் மலையகக் கூட்டுறவு அமைப்புகளுக்குரிய மிகச் சிறந்த தெரிவு

புலம்பெயர் அமைப்புகளின் கூட்டு ஒன்றிணைவை மையமிட்ட அணுகுமுறையே. ஏனெனில் புலம்பெயர் அமைப்புகளின் தொப்புள்கொடி உறவு என்பது முக்கியமான ஒரு சமூக மூலதனமாகும். அவை நிலையான சுய பொருளாதாரத்தை நோக்கிய பயணத்தை உள்ளார்ந்த ஆர்வமாகக் கொண்டிருக்கின்றன. தற்போதைய தமிழர் சனத்தொகைக்கு இணையாக புலம்பெயர் சமூகம் உலகம் எங்கும் பரவியுள்ளது. புலம்பெயர் சமூகத்துக்கும் தேவைகள் உண்டு. ஆகவே பரஸ்பர நலன்களின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்க வாய்ப்புகள் உண்டு.

**புலம்பெயர்ந்தோருக்கும் தாயகத்திற்கும் இடையிலான மனித இணைப்புகள் என்பது இடப்பெயர்வுகளின் விளைவாக உள்ளது. இன்று மிகவும் பலம்மிக்க சமூக, பொருளாதார கலாசார, மனிதப் பிணைப்புகளின் ஒரு வளரும் சக்தி புலம்பெயர்ந்தோர் சமூகங்கள் தான். உலகில் இலங்கைத் தமிழர்களின் புலம் பெயர்ந்தோர் சமூகம் மிகப் பரந்த அளவில் உள்ளது.**


புலம்பெயர்ந்தோருக்கும் தாயகத்திற்கும் இடையிலான மனித இணைப்புகள் என்பது இடப்பெயர்வுகளின் விளைவாக உள்ளது. இன்று மிகவும் பலம்மிக்க சமூக, பொருளாதார கலாசார, மனிதப் பிணைப்புகளின் ஒரு வளரும் சக்தி புலம்பெயர்ந்தோர் சமூகங்கள் தான். உலகில் இலங்கைத் தமிழர்களின் புலம் பெயர்ந்தோர் சமூகம் மிகப் பரந்த அளவில் உள்ளது. அது தாயகத்தின் சமூக, பொருளாதார, கலாசார வளர்ச்சிக்கு பக்க பலமாகவும் இருந்து வருகின்றது. புலம்பெயர் மூன்றாம் சந்ததியினருக்கும் தாயகத்திற்குமான உறவு மங்கி வருகிறது என ஒரு விமர்சனம் உண்டு. உண்மையில், புலம் பெயர் சமூகத்தின் தற்போதைய மூன்றாம் சந்ததிதான் ஒரு வினைத்திறன் மிக்க நீண்ட காலச் சிந்தனை கொண்டு பலமான கட்டமைப்புகளை அமைக்கவிருக்கிறது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவடைந்த பின்னர், புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தமிழர் உரிமைக்காகவும் சர்வதேச அங்கீகாரத்திற்காகவும் தங்களை அர்ப்பணிப்பதிலும் முழு அளவுக் கரிசனையுடன் தமது பங்களிப்பை நல்கியிருந்தன. தமிழர்களின் அரசியல் உரிமைக்காக மட்டுமல்ல, ஈழத்தில் தமிழர்களின் வளமான உள்ளூர்ப் பொருளாதார வளர்ச்சிக்கும் அவர்கள் தமது பங்களிப்பைச் செய்து வருகின்றனர். அதற்கும் மேலாக ஒரு நிலையான அபிவிருத்தியின் பாதையில் முன்னேற, சர்வதேச அளவில் நிறுவனக் கட்டமைப்புகளை கட்டமைத்தும் வருகிறார்கள். புலம்பெயர் சமூகம் நீண்ட கால அபிவிருத்தி பற்றிக் கரிசனை கொண்டுள்ளது. புலம்பெயர் சமூகத்தின் மூன்றாம் தலைமுறை, ஒரு கைவிடாத ஒரு நிரந்தரப் பிணைப்பின் அடையாளமாக மாறிவருகிறது. இது ஈழத்தில் தமிழர்களின் வளமான வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒரு நம்பிக்கை தரும் ஆறுதல்.

தமிழர் தாயகம் மற்றும் புலம்பெயர் தமிழர்களின் பொருளாதார ஒருங்கிணைப்பு கட்டமைக்கப்பட வேண்டும் எனும் நோக்கத்திற்கு திறம்படப் பங்களிப்பதற்காக, உலகளாவிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் வல்லுநர்கள் இணைந்து செயற்படுவதற்கான முனைப்புகள் தெளிவாகத் தென்படுகின்றன. நிறுவனங்கள் புதுமைகள் மற்றும் மாற்றங்களை ஆதரிப்பதற்கு, மூலதனத்தை உருவாக்குதல், அறிவு, திறன்கள் மற்றும் அனுபவத்தை ஒருங்கிணைத்தல்; கூட்டுறவுச் சமூக நிறுவனங்கள் எதிர்காலக் கல்வி, திறன், வளங்களை அடிப்படையாகக் கொண்ட சகவாழ்வு மற்றும் அமைதிக் கலாசாரத்தை செயற்படுத்துதல்; தொழில்முனைவோர், கண்டுபிடிப்பாளர்கள், முதலீட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் ஆகியோர் ஒருவரை ஒருவர் கண்டறிந்து, ஒத்துழைத்து, மாறுபட்ட அளவில் நிலையான



ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்
Image Source - web.facebook.com/jinasena(pvt)ltd



ஸ்கந்தபுரம் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்திற்கான இயந்திரங்கள்
Image Source - web.facebook.com/jinasena(pvt)ltd

முயற்சிகளை உருவாக்குதல் என்பன புலம்பெயர் சமூகத்தின் நீண்டகால நோக்கு நிலைகளாக உள்ளன.

புலம்பெயர்ந்தோர் சமூகத்தின் புத்தாக்கமிக்க கூட்டுறவு அபிவிருத்தி மீதான முன்னெடுப்புகள் மற்றும் கூட்டிணைவின் பெறுமதியான விளைவுகள் பற்றி நோக்கும் போது, முதன்மைப் புலம்பெயர் கூட்டுறவு அமைப்பாக கண்முன் தெரிவது, மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான நெதர்லாந்தின் கூட்டுறவுச் சங்கம் (*The Cooperative Society of The Netherlands for Humanitarian Activities* (*CSNHA*) ஆகும். இது டிசம்பர் 2012 இல் உருவாக்கப்பட்ட ஒரு இலாப நோக்கற்ற கூட்டுறவு அமைப்பாகும். சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்டுறவுக் கொள்கைகளின்படி சங்கத்தின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவ் அமைப்பின் நிர்வாகச் செயற்குழுவின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் ஆகும். போர்களால் பாதிக்கப்பட்டவர்கள் அந்தந்த நாடுகளில் வளமான, பாதுகாப்பான வாழ்வை முன்னெடுக்கச் செய்தல் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலையான வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கை உறுதி செய்தல் என்பன நெதர்லாண்ட்ஸ் மையமாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத் தமிழ் பேசும் புலம்பெயர் அமைப்பின் நோக்கங்களாகும்.

இக் கூட்டுறவுச் சங்கத்தின் நன்கு திட்டமிட்ட நடவடிக்கைகள் வடக்கு - கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசங்களில் கூட்டுறவு அபிவிருத்தியின் உறுதியான நடவடிக்கைகளுக்கு உதவின. சிக்கனக் கூட்டுறவு மாவட்ட மற்றும் மாகாண முகாமையாளர்களுக்கான இந்தியப் பயிற்சி, 2015 இல் இதன் ஆரம்ப முயற்சியாக அமைந்தது. மேலும் இவ் அமைப்பு, வட மாகாண சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்துக்கான விவசாயத் திட்டங்களுக்கான நிதியை (44 *Millions in Sri Lankan Rupees*) ஒரு சுழற்சிக் கடனாகப் பகிர்ந்து, இன்றும் இயங்கி வருகிறது. இதன் மூலம் முல்லைத்தீவில் இயங்கும் பாற் பண்ணை,

முல்லைத்தீவு - சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் உதவியுடன் நடைபோடுகிறது. கிழக்கு மாகாணத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில், சிறு விவசாயிகளின் விவசாயத்தை ஊக்குவித்தல் திட்டத்திற்காக அம்பாறை - சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்திற்கென 26,009 யூரோவை ஆரம்ப நிதியாக வழங்கி, சமாஜத்தின் இயங்கு நிலைக்கு இவ் அமைப்பு உரமூட்டியது.

Image Source - impactdirect.eu

## கிளிநொச்சி மாவட்டத்தின் ஸ்கந்தபுரம் நீர்ப்பாசனத் திட்டத்தில் சூரிய சக்தியில் இயங்கும் நீர் உந்தி

'கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் - சூரிய சக்தி ஏற்று நீர்ப்பாசன நிலையம் மற்றும் பயிர்ச் செய்கைக்கான வசதிகள் திட்டம்' இவை அனைத்திற்கும் மேலான ஒரு திட்டமிட்ட முயற்சி எனலாம். இது, கூட்டுறவின் பெறுமதியான விளைவுகளை உண்டாக்கும் புத்தாக்கம் மிக்க அபிவிருத்தி முன்னெடுப்பாக அமைகிறது. இத் திட்டம் மூலம் நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலங்கள் மீட்டும் உயிர் கொண்டுள்ளன.
இன்று பலர் இந்த மண்ணின் செழிப்பைக் காண வருகிறார்கள். வல்லிபுரம் சந்திரநாதன் அவர்களே இத் திட்டத்தின் மூலவர். சூரிய சக்திப் பொறிமுறைகள் பற்றிய அனுபவமும் திறமையும் கொண்ட ரஞ்சிதபாலன் அவர்கள் இத் திட்டத்தின் பொறியாளராகச் செயற்பட்டு வருகிறார்.

வட மாகாண சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தின் அங்கமான ஸ்கந்தபுரம் சிக்கனச் கூட்டுறவுச் சங்கம், ஒரு தொடர்ச்சியான தேவைக்காகப் போராடியது. அவர்கள் நீண்ட காலமாகக் கைவிடப்பட்ட 360 ஏக்கர் பயிர் நிலங்களின் சோகக்கதையை பலருக்கும் கூறினார்கள்; தங்களுக்கு அருகில் ஓடும் வாய்க்கால் வழி ஓடும் நீர் தங்கள் வாழ்க்கைக்கு வளம் தரவில்லை என்றார்கள். யாரும் செவிமடுக்கவில்லை. ஆனால், நெதர்லாந்தில் இருந்த திரு. சந்திரநாதன் அவர்கள் காது கொடுத்தார். அதன் விளைவாகவே இத் திட்டம் உருக்கொண்டது.

நெதர்லாந்தில் உள்ள தொண்டு நிறுவனங்களில் வைல்ட் கான்செென் (Wilde Ganzen) ஒரு முக்கியமான நிறுவனம். இது, ஒவ்வொரு ஆண்டும், உலகெங்கிலும் உள்ள நாடுகளின் மக்கள் மூலமாக நூற்றுக்கணக்கான சிறிய திட்டங்களை முன்னெடுக்க நிதியளிக்கும் அமைப்பாகும். இத் திட்டங்கள் தனியார் மேம்பாட்டு முயற்சிகளால் ஆதரிக்கப்படுகின்றன. இவை டச்சு மற்றும் பெல்ஜிய அடித்தளங்களைக் கொண்டவை. உலகெங்கிலும் உள்ள உள்ளூர் மேம்பாட்டு நிறுவனங்களுடன் நெருங்கிய உறவுகளைப் பேணும் ஒரு அமைப்பாகவும் இது செயற்படுகின்றது. சந்திரநாதன் அவர்கள் கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் சூரிய சக்தி ஏற்று நீர்ப்பாசன நிலையம் அமைப்பதற்கான 60% இற்கும் மேலான நிதியை இந் நிறுவனத்திடமிருந்து பெற வழிசமைத்தார். 40% நிதியை சக புலம்பெயர்ந்தோர் வழங்க முன்வந்தனர். கிளிநொச்சி மக்கள் அமைப்பு நிதியைத் திரட்டியது. குவியம் சர்வதேச இணைப்பாளர் Dr. அகிலன் பலரின் உதவிக்கு வழி சமைத்தார். எல்லோரும் சேர்ந்து வடம் பிடிக்க, ஸ்கந்தபுரம் சூரிய சக்தி ஏற்று நீர்ப்பாசன நிலையம் விவசாயிகளின் நீண்ட காலக் கனவை நிறைவேற்றியது.

## முடிவுரை

கூட்டுறவு அமைப்புகள் பெரும்பாலும் இறந்துகொண்டிருக்கின்றன. அவற்றின் எதிர்காலமானது, தற்போதைய உறங்கும் நிலையிலிருந்து விழிப்பு நிலைக்கு மாறுவதில் தங்கியுள்ளது. கூட்டுறவு அமைப்புகள் பல வளமான கூட்டுறவுச் சொத்துகளை உள்வாங்கியுள்ளன. ஆனால், உற்பத்தித்திறன்

என்பது பூச்சியம். வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மட்டும் 3458 கூட்டுறவு உற்பத்தி மையங்கள் மூடப்பட்டுள்ளன. பல பெறுமதியான உற்பத்திச் சொத்துகள் பயனற்றுச் சீரழிந்து வருகின்றன. போரின் பின் பல முதலீடுகள், கூட்டுறவு அமைப்புகளை தேடிப்போயின; கொத்துக்கொத்தாக உற்பத்தி மையங்கள், எதுவித திட்டங்கள் இல்லாமல், முடுக்கிவிடப்பட்டன. நாளடைவில் எல்லாம் அழிந்து போயின. பல கூட்டுறவுச் சொத்துகள் தனிநபரின் வளர்ச்சிக்காகக் களவாடப்பட்டு வருகின்றன. போரில் நசுங்கிய மக்களின் வளமான வாழ்வுக்கு உதவக் கொடுக்கப்பட்ட அனைத்து கூட்டுறவு உதவிகளும் பெரும்பாலும் பாதிக்கப்பட்டவர்களின் தேவையை சென்றடையத் தவறிவிட்டன. வறியவர்களுக்கு உணவூட்டும் ஒரு நீடித்த கூட்டுறவு அணுகுமுறை தோல்வியின் விளிம்பில் நீடிக்கிறது. இத்தோல்வி உண்மையில் உள்ளூர் பொருளாதாரத்தின் வலுவான ஆதாரத்தைச் சிதைக்கும். சமூக - பொருளாதாரச் சிதைவுக்கு தன் கதவுகளை அகலத் திறந்துவிடும்.

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் தன் வகிபாகம் பற்றி அறியவேண்டிய நேரம் வந்துள்ளது. இன்றைய கூட்டுறவின் வீழ்ச்சிக்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் பதில் கூற வேண்டிய கட்டாயத்திலுள்ளது. கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், பெரும் வரி செலுத்துவோரின் எதிர்பார்ப்பிற்குச் செயலாற்றும் வகையில் வினைத்திறமையான ஒரு அபிவிருத்தி நிறுவனமாக மாறும் ஒரு மாறு கால நிலை பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது. உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேசக் கட்டமைப்புகள் மூலம் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம், தம் பலத்தை வலுப்படுத்துவதே கூட்டுறவின் தற்போதைய நெருக்கடிக்கான தீர்வு. புலம்பெயர் சமூகம் அதற்கான ஒரு ஆதார சக்தி. தற்போதைய கூட்டுறவு அமைப்புகள், மீண்டும் தங்கள் சொந்தக் காலில் நிற்க ஒரு திறந்த சிந்தனையை நோக்கிப் பயணிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

## உசாத்துணை


1. *The Cooperative Society of the Netherlands For Humanitarian Activities, More details on the lift Irrigation in Sreekandapuram, Kilinochchi - https://csnha.com/*

2. *The Role of Cooperatives in Neoliberal Sri Lanka , A Case Study, Vidya Samarasinghe and Dhammika Jayawardena University of Sri Jayewardenepura.*

3. *The impact of cooperatives on the economic and social empowerment of women in rural areas of Sri Lanka. K. Darshani Piyumali V.P.S.S. Balasooriya.*

4. *National Cooperative Council, https://slncc.lk/contactus/*

5. *SANASA, the largest cooperative enterprise in Sri Lanka, https://sanasainternational.lk/*

6. *K Paramothayan, The Cooperative Movement in Jaffna District of Sri Lanka, **1911 1970**,*

7. *Rebuilding a Cooperative Movement in northern Sri Lanka, https://coopseurope.coop/development/projects/rebuildingcooperativemovementnorthernsrilanka.html*

8. *The Greatest Power behind the Cooperative Societies is Women's Power - Governor,https://np.gov.lk/thegreatestpowerbehindthecooperativesocietiesiswomenspowergovernor/*

9. *Cooperating for Peace: Livelihood security through cooperatives in postconflict recovery, ://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://dnb.info/**1195625448/34***

10. *The Rise, Biggest and Most Impactful Global Network of Tamil Entrepreneurs and Professionals, https://www.tamilrise.org/home*


11. *Tamil Diaspora Alliance (T.D.A), https://tamildiasporaalliance.org/aboutus/,*

12. *The Tamil diaspora: solidarities and realities, Nirmala Rajasingam, https://www.opendemocracy.net/en/thetamildiasporasolidaritiesandrealities/*


(தொடரும்)

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.

**அமரசிங்கம் கேதீஸ்வரன்**



பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012ஆம் ஆண்டு 'திட்டமிடல் மூல தத்துவங்கள்' என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.

# வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நன்னீர் வளமும் நீர் சார்ந்த பொருளாதார வாய்ப்புகளும்



அருவி ஆற்றுப் பகுதி – மன்னார்

Image Source - www.koormai.com

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியின் நிர்ணயக் காரணிகளில் ஒன்றாக விளங்கும் நன்னீர் மூலங்கள் இவ்விரு மாகாணங்களையும் விவசாயம் சார் பொருளாதாரம் நிலவும் பிராந்தியங்களாக உருமாற்றக் காரணமாகியுள்ளன. மழைக் காலத்தில் அதிகம் பெறும் நீரைச் சேமித்து வைப்பதன் மூலம், இவ்விரு மாகாணங்களின் 60 சதவீதமான மக்கள் விவசாயம் சார் தொழில் முனைவுகளை தமது நிரந்தர ஆதாரமாகக் கொண்டு இயங்கி வருகின்றனர். இதனால் இவ்விரு மாகாணங்களின் எழுச்சிமிக்க பொருளாதாரத் தொழில் மூலங்களை உருவாக்குவதில் நீர்ப்பாசனத்துறை காத்திரமிக்க பங்களிப்பை வழங்கி வருகின்றது எனலாம்.

கிழக்கு மாகாணத்தில் 28 பாரிய குளங்களும், 45 நடுத்தரக் குளங்களும், 1613 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும் காணப்படுவதுடன், வடக்கு மாகாணத்தில் 13 பாரிய நீர்ப்பாசனக் குளங்களும், 45 மத்தியதரக் குளங்களும், 1740 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், 1605 சிறிய குட்டைகளும் காணப்படுகின்றன. இவை கிழக்கு மாகாணத்தில் 356,131 ஏக்கர் நிலத்திற்கு நீர் வழங்கும் மூலங்களாகவும், வடக்கு மாகாணத்தில் 269,140 ஏக்கர் நிலத்திற்கு நீர் வழங்கும் மூலங்களாகவும் காணப்படுகின்றன. இந்த வகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விவசாயப் பொருளாதாரத்தில் பிரதான பங்கு குளங்களால் சேகரிக்கப்படும் நீரினால் மட்டுமே இடம்பெறுகிறது. நீரின் சேகரிக்கப்பட்ட அளவு மட்டுமே நீர்ப் பொருளாதாரத்தை நிர்ணயம் செய்வதில்லை. நீர்ப் பொருளாதாரத்தில் நீரின் பெறுகையளவு (Water Serving) எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததோ, அதேயளவு முக்கியத்துவம் நீரின் பயன்பாட்டுக்கும் காணப்படுகிறது. நீரைப் பெறுவது எவ்வளவு தூரம் அதிகரிக்கப்படுகிறதோ, அதன் சேமிப்பு எவ்வளவு தூரம் அதிகரிக்கப்படுகிறதோ, அதே அளவு அதனைப் பயன்படுத்துவதும் உச்சத்திறன் கொண்டதாக அமையவேண்டும். இது இரண்டிலுமே பல்வேறு குறைபாடுகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றன.

## வடக்கு - கிழக்கின் நீர் மூலங்களும், நீர் பெறுகையும்

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நீர் பெறுகையானது, வடகீழ்ப் பருவகால மழையினால் பெறப்படும் நீரை குளங்களுக்கு எடுத்துவரும் ஆறுகளின் மூலம் இடம்பெறுகிறது. வடக்கு மாகாணத்தில் நீர் வரவை உறுதி செய்யும் ஆறுகளாக மா ஓயா, சூரியனாறு, சவராறு, பழட்டியாறு, முனிடலாறு, கோடலிக்கல்லாறு, பேராறு, பாலியாறு, மருதப்பிளியாறு, தேராவிலாறு, பிரமந்தனாறு, நெத்தலியாறு, கனகராயனாறு, களவலிப்பாறு, அக்கரயானாறு, மண்டக்கல்லாறு, பல்லவராயன்கட்டாறு, சிப்பியாறு, பறங்கியாறு, நாயாறு, அருவியாறு, கல்லாறு, மோதரகமாறு ஆகிய 24 ஆறுகள் காணப்படுகின்றன. இதில் 164 கிலோமீற்றர் நீளமானதும், 3246 சதுர கிலோமீற்றர் நீரேந்துப் பிரதேசத்தைக் கொண்டதுமான அருவியாறும், 134 கிலோமீற்றர் நீளமானதும், 1024 சதுர கிலோமீற்றர் நீரேந்துப் பிரதேசத்தைக் கொண்டதுமான மா ஓயாவும், 86 கிலோமீற்றர் நீளமானதும், 906 சதுர கிலோமீற்றர் நீரேந்துப் பிரதேசத்தைக் கொண்டதுமான கனகராயனாறு ஆகிய 3 பிரதான ஆறுகளே வட மாகாணத்தின் பிரதான நீர்மூலங்களாக உள்ளன.

கிழக்கு மாகாணத்தில் 35 ஆறுகள் காணப்படுகின்றன. மாவட்ட ரீதியாக ஆறுகளை நோக்கும் போது, திருகோணமலையில் மகாவலி ஆறு - கந்தளாய் பாலம் போட்டாறு - பானோயா - பன்குளமாறு - குஞ்சிக்கும்பனாறு - புலக்கட்டியாறு - யானோயா ஆகிய 8 ஆறுகளும், மட்டக்களப்பு மாவட்டத்தில் அன்றேல் ஓயா - தும்பங்கேணியாறு - மணற்பிட்டியாறு - பதாதியாறு - வெற்றியாறு - மகலவெட்டுவானாறு - முந்தானையாறு - மீயாங்கல்லாறு - மதுறுஓயா - புளியம்போட்டாறு - கிருமிச்சியோடை - பொடுகடஆறு - மண்டலாறு - மகறாச்சியாறு ஆகிய 15 ஆறுகளும், அம்பாறை மாவட்டத்தில் கல்ஓயா - நாமலோயா - அம்பலன ஓயா - பல்லனோயா - ஒக்காலோயா - கலுக்கலோயா - முன்டினியாறு - வெலிஓயா - இட ஓயா



கந்தளாய்க் குளம்
Image Source - tamilleader.lk

- கரண்டோயா ஆகிய 11 ஆறுகளும் காணப்படுகின்றன.

திருமலையில் 13,117 ஏக்கர் அடி நிலப்பரப்பிலும், மட்டக்களப்பில் 4,851 ஏக்கர் அடி நிலப்பரப்பிலும், அம்பாறையில் 2,498 ஏக்கர் அடி நிலப்பரப்பிலும் நீரேந்துப் பிரதேசங்கள் காணப்படுவதுடன், மழைக்காலங்களில் திருமலையில் 31,073 கன அடி நீரும், மட்டக்களப்பில் 3,644 கன அடி நீரும், அம்பாறையில் 1,208 கன அடி நீரும் ஒரு போகம் ஒன்றின் போது சேகரிக்கப்பட்டு வருகிறது. இந்த வகையில் மகாவலி தவிர்ந்த ஏனைய வடக்கு - கிழக்கு ஆறுகளில், செப்டெம்பர் தொடக்கம் ஜனவரி வரையுமான பெரும் போகத்தில், வடகீழ்ப் பருவப்பெயர்ச்சி காற்றின் மூலம், பெருமளவான நீர் பெறப்படுகிற ஏனைய பருவ மாறுதல்கள் மூலம், சிறியளவு ஒடுக்கல் மழையும் பெறப்பட்டு வருகிறது.

இந்த ஆறுகளின் மூலம் பெறப்படும் நீரில் 30 சதவீத நீரையே சேகரித்து வைத்துக்கொள்ளக் கூடிய இயலளவு காணப்படுவதால் மிகுதி நீர் கடலுக்குச் செல்கிறது. பருவகால மழை மூலம் கிடைக்கப்பெறும் நீரைச் சேகரித்தல், பல புதிய குளங்களை அமைத்தல், அணைக்கட்டுகளை உயர்த்துதல், நீர் வரத்தை உயர்த்தும் வகையில் ஆறுகளைச் சுத்தப்படுத்துதல், ஆற்றோரங்களைப் பாதுகாத்து நீர் வரத்தை உறுதிசெய்தல், நீரேந்து பிரதேசக் காடுகளைப் பராமரித்தல், தவறான முறையில் ஆறுகளை மறிப்பதை நிறுத்துதல், ஆறுகளில் சேரும் வண்டல் மண்ணைச் சரியான அளவில் அகற்றுதல் போன்ற செயற்பாடுகளை முன்னெடுப்பதன் மூலம், வடக்கு - கிழக்கின் பொருளாதார வாய்ப்புகளை அதிகரிக்க முடியும். ஆறுகளை மையமாகக் கொண்ட குளங்களை முகாமை செய்து, நீரைச் சேமிப்பதிலும் பாதுகாப்பதிலும் நீர்ப்பாசனத்திணைக்களத்தின் மத்திய, மகாணப் பிரிவுகளும், கமநல சேவைத் திணைக்களமும் ஈடுபட்டுள்ளன.

வடமாகாணத்தில் தேசிய நீர்பாசனத் திணைக்களத்தினால் மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளம் - அகத்தி முறிப்புக் குளம் - வியாடிக் குளம் ஆகியவையும், வவுனியா மாவட்டத்திலுள்ள பாவற்குளம் - முகத்தான் குளம் - ஈருபெரியாறுக்குளம் - மருதமடுக்குளம் - இராசேந்நதிரக் குளம் - கல்லாறுக் குளம் ஆகியனவும் நிர்வகிக்கப்படுவதுடன், மீதமுள்ள அனைத்து நடுத்தர, சிறிய குளங்களும் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. இதேபோல் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையிலுள்ள கந்தளாய்க் குளம் - வெண்டார்சன் குளம் - மொறவேவா - அல்லை விஸ்தரிப்புத் திட்டம் - வநெல - ஐறைந்ஜனவேவா - மகாதில்வேவா - யான் ஓயா அணைக்கட்டு ஆகியனவும், மட்டக்களப்பில் உன்னிச்சைக்குளம் - றுகாம்குளம் - வாகனேரிக்குளம் - நவக்கிளிக்குளம் ஆகியனவும், அம்பாறை மாவட்டத்தில் சேனநாயக்க சமுத்திரம் - நாமல் ஓயா - பல்லன ஓயா - இகால் ஓயா - அம்பலன் ஓயா - பன்னலகம் - றம்புக்கன் ஓயா - றொட்டை - கலுக்கல் ஓயா ஆகிய குளங்களும் மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் முகாமை செய்யப்படுகிறது.

இந்த நீர் முகாமைத்துவ ஏற்பாடுகளில், வட மாகாணத்தில் விசேடமாக உப்புநீர்



தண்ணிமுறிப்புக் குளத்தின் அணைக்கட்டு

Image Source - tamil.adaderana.lk

அணைக்கட்டுகளும், நீரேரி அபிவிருத்தித் திட்டங்களும் மேலதிகமாகக் காணப்படுகின்றன. வறண்ட பிரதேசத்தின் நீர் மூலங்கள் என்ற வகையில், வடமராட்சி நீரேரி, உப்பாறு நீரேரி ஆகிய இரண்டும் கடல் நீரேரிகளை மறித்து நன்நீரை முகாமைத்துவப்படுத்தக் கூடிய வாய்ப்புள்ளதாக அமைந்திருக்கின்றது. வடிகாற் திட்டம் என்றவகையில் வழுக்கியாறு வடிகால் திட்டமும் யாழ்ப்பாணத்தில் காணப்படுகிறது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகளவிலான நீரேந்துப் பிரதேசங்களும், நீர் வரும் ஆறுகளும் காணப்படும் போதும், பருவகாலங்களில் பெறப்படும் மழையின் போது மட்டுமே நீர் வரத்து உண்டாகுவதனால், நீரைச் சேமித்து வைத்துப் பயன்படுத்தும் பொறிமுறையே பிரதானமாக அமைந்திருக்கின்றது. இந்த வகையில் நீர் வளத்தை முறையாகச் சேமித்துப் பயன்படுத்துவது தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் காணப்படுகின்றன.

1. நீர்ப்பாசன வரத்தை உறுதிசெய்யும் ஆறுகளின் முகாமைத்துவம்.
2. நீரேந்துப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் காடழிப்பு முற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள்.
3. நீர்ச் சேமிப்புக் குளங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் அதிக முதலீடும், முதலீட்டு வாய்ப்பின்மைகளும்.
4. நீர் வழங்கலுக்கெனப் பாவிக்கப்படும் பரவல் நீர்ப்பாசனத்திற்கு ஏற்ற குளங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படாமை.
5. நீர்ச் சேமிப்பை அதிகரிப்புச் செய்வதற்காகத் தேவைப்படும் புதிய வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகளின் பலவீனங்கள்.

## நீர்ப்பாசன வரத்தை உறுதிசெய்யும் ஆறுகளின் முகாமைத்துவம்

பருவகால மழையைப் பெற்று, ஆண்டு முழுவதும் நீரைச் சேமிக்கும் குளங்களிலிருந்து முழுமையான பயனைப் பெறுவதற்கு, குளங்களின் நீர் வரத்தை உறுதி செய்யும் ஆறுகளினைச் சுத்தப்படுத்தி வைத்திருத்தல், இயற்கையின் சார்புக்கேற்ப அவற்றை இயங்க வைத்தல் ஆகிய செயற்பாடுகள் நடைமுறையில் குழப்பத்துக்கு உள்ளாகியுள்ளன. நீண்ட காலமாக ஆறுகள் சுத்தப்படுத்தப்படாமையால் குளங்களுக்கான நீர் வரத்து குறைவடைந்ததுடன், பொருத்தமற்ற பகுதிகளில் வெள்ளப் பெருக்கும் ஏற்படுகின்றது. நீர் வரத்துக் குறைவதனால், பல குளங்கள் அவற்றின் இயலளவு மட்டத்திற்கும் அதிகமாக நீரைப் பெறமுடியாது உள்ளன. புதிதாகத் திட்டமிடப்படும் குளங்களும் கூட, நீர் வரத்துக் குறைந்து பராமரிப்பின்றிக் காணப்படுகின்றன.

## நீரேந்துப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் காடழிப்பு முற்றும் சட்டவிரோத நடவடிக்கைகள்

நீரைப் பெறும் அளவானது, நீரேந்துப் பரப்பில் காணப்படும் காடுகளின் அளவினாலும் கால நிலைக்குச் சார்பான தன்மையினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற உள்நாட்டு மோதல் காரணமாக நீரேந்துப் பரப்பின் காடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. யுத்தத் தேவைகளுக்காக வகைதொகையின்றி வெட்டப்பட்ட மரங்களும், காடுகளின் அழிப்பும் நீரேந்துப் பரப்பிலுள்ள மழைக்காடுகளை சிதைவுக்குள்ளாக்கியுள்ளன. நீண்ட கால மரங்களும் சட்டவிரோத மரக் கடத்தல்காரர்களினால் அழிக்கப்படுவதனால், மழைக்காடுகளின் பசுமைப் போர்வைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இது பருவ காலங்களின் மழைபெறும் அளவைக் குறைத்துள்ளது. இதனால் குறித்த பிரதேசங்கள் எல்நினோ - வால்நினோ தாக்கங்களினால் அதிக மழைப்பொழிவு, அதிக வறட்சி என்றவாறான பாதிப்புகளுக்கும் உட்பட்டு வருகின்றன. அதிக மழை, தொடர்ந்து ஒரு சில மணித்தியாலங்களில் கிடைக்கும்போது, நீரைச் சேமித்து வைப்பதற்காகச் செய்யப்பட்ட அனைத்து ஏற்பாடுகளுமே பாதிப்படைகின்றன.

## நீர்ச் சேமிப்புக் குளங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவைப்படும் அதிக முதலீடும், முதலீட்டு வாய்ப்பின்மைகளும்

வடக்கு கிழக்கில் காணப்படும் பெருமளவான குளங்களில் நீர்ச் சேமிப்பை உயர்த்தும் இயலளவு மேம்பாட்டை செய்வதற்கான விரிவான வாய்ப்புகள் காணப்படுகின்றன. குறிப்பாக குளங்களின் அணைக்கட்டுகளை உயர்த்துவதன் மூலம் நீர்க் கொள்ளளவை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன ஏற்று நீர்ப்பாசன வசதிகளை அதிகரிப்பதன் மூலம் பெருமளவான மேட்டு நிலங்களுக்கு நீர் வசதியை வழங்கக்கூடிய வாய்ப்புகளும் காணப்படுகின்றன. ஆனால் நீர்க் கட்டுகளை உயர்த்துதல், மடைகளை விரிவாக்கல், நீர் விநியோக வழிகளில் புனரமைப்பைச் செய்தல், நீர்ப்பாசனப் பொறிமுறை மாற்றம் மூலம் ஏற்று நீர்ப்பாசனத்தை ஏற்படுத்தல் போன்ற பல பாரிய திட்டங்களுக்கு அதிகளவு மூலதனம் தேவைப்படுகின்றது. இந்த மூலதனத்தைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள தடைகள் காரணமாக, நீர்ப்பாசனப் பொருளாதாரம் பலவீனமடைந்து வருகிறது.

## நீர் வழங்கலுக்கெனப் பாவிக்கப்படும் பரவல் நீர்ப்பாசனத்திற்கு ஏற்ற குளங்களின் உட்கட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படாமை

வட கிழக்கு மாகாணங்களின் நீர் வழங்கல் முறைமையாகவுள்ள பரவல் நீர்ப்பாசன முறைமையில் (*Gravity Irrigation*), வெள்ளம் பள்ளம் நோக்கும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில், எல்லாக் குளங்களுமே கட்டளைப் பிரதேசம் (*Command Area*) எனப்படும் பகுதிகளுக்கு மட்டுமே நீரை வழங்குவதனால், அந்தப் பகுதிகளில் காணி உடமையுள்ளவர்கள் மட்டுமே நீர்ப்பாசன விவசாயிகளாக வர முடிகிறது. அதிக



கட்டுக்கரைக் குளத்தின் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாய நிலம்

Image Source - globaltamilnews.net

பணமுள்ளவர்கள் ஏக்கர் கணக்கான காணிகளில் விவசாயம் செய்வதனால், நீரின் கிடைப்பனவுக்கேற்ப சமூக நன்மையும் வாழ்வாதார வளர்ச்சியும் பரவல் செய்யப்படுவதில்லை. காணியுடமையுள்ள நிலச்சுவாந்தர்கள் மேலும் மேலும் வசதியடைந்து செல்கின்றனர். பெருந்தொகையான வறிய மக்கள் இந்த வளங்களுடன் எவ்வித தொடர்புபடுத்தலும் இன்றிக் காணப்படுகின்றனர். ஒதுக்கீட்டுக் கொள்கை ஒன்றின் மூலம், செய்கை நிலமற்ற விவசாயிகளுக்கும் ஒரு குறிப்பிட்ட வீத நீர்ப்பங்கை வருடாந்தம் வழங்க வேண்டும். அல்லது ஏற்று நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை முன்மொழிந்து கொள்வதன் மூலம் நீரின் உரிமையை அதிக விவசாயிகளுக்குப் பரவலாக்கலாம். பரவல் நீர்ப்பாசன அபிவிருத்திக் கட்டமைப்புகளுக்கு அதிக முதலீடு தேவைப்படும் நிலையில், உடனடி அபிவிருத்தியை உருவாக்கி கொள்வதில் பல சிரமங்கள் காணப்படுகின்றன. அதே போல், யுத்தத்தினால் சேதமடைந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்புகளில், பிரதான குளத்தின் அணைக்கட்டுகளும், வாய்க்கால்களும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. ஆனால் விநியோக வாய்க்கால்களும், வயலுக்குச் செல்லும் பாதைகளும் இன்னமும் புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால் குளங்களில் சேகரிக்கப்படும் நீரின் மெய்ப் பயன்பாடு குறைவாகக் காணப்படுவதுடன், உத்தம பயன்பாட்டுக்கு பதிலாக, நீர் இழப்பும் வீணடிப்பும் இடம்பெறுவதனை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

### நீர்ச் சேமிப்பை அதிகரிப்புச் செய்வதற்காகத் தேவைப்படும் புதிய வாய்ப்புகள் பற்றிய ஆய்வுகளின் பலவீனங்கள்

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் நீர்ப்பாசன அபிவிருத்தியில் இதுவரை செய்யப்பட்டுள்ள ஆய்வுகள், நீர் வீணடிப்பு - நீர்ப் பயன்பாட்டுக் குறைபாடுகள் பற்றியும், நீரின் கொள்திறனை அதிகரிக்கும் வாய்ப்புகள் பற்றியும் பேசுகின்ற போதும், இவை நவீனமயப்படுத்தப்படாத ஆய்வுகளாகவே காணப்படுகின்றன. குறிப்பாக வட மாகாணத்தின் குடி நீர்த் தேவை குறித்தும், நிலத்தடி நீரின் அபிவிருத்தி குறித்தும் முன்மொழியப்பட்ட கலாநிதி ஆறுமுகத்தின் ஆனையிறவு கடல் நீரேரி அபிவிருத்தி முன்மொழிவு, குடாநாட்டுக்கு குடி நீரைக் கொண்டு செல்லும் அருவி ஆறுத் திட்டம், பூநகரிக் குளப் புனரமைப்பு, வன்னேரித் தேவன் குள இணைப்பு, வடமராட்சி நீர்த் திட்டம் போன்றனவெல்லாம் பெருமளவு நிதியுடன் சாத்திய வள ஆய்வாகச் செய்யப்பட்டு, பின்னர் கிடப்புக்குச் சென்றுள்ளன. மீளவும் அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கும் போது, சாத்திய வள ஆய்வுக்காக மீண்டும் நிதி விடுவிப்புச் செய்ய வேண்டியிருக்கும்.

(தொடரும்)

# வடமாகாணத்தின் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான சவால்களும் அவற்றை எதிர்கொள்வதற்கான பொருத்தமான கல்வி முறைகளும்

ஆனந்தமயில்
நித்திலவர்ணன்



கலாநிதி ஆ. நித்திலவர்ணன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல்துறையின் தலைவர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வருகிறார். கல்விசார் ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் நூல்களை தொடர்ச்சியாக எழுதி வெளியிட்டு வருகிறார். ஜப்பான் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் நடைபெற்ற சர்வதேச ஆய்வரங்குகளில் கலந்து கொண்டு தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். இவரது 'பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி' என்ற நூலுக்கு, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சிறந்த நூலுக்கான பரிசு கிடைத்தது. கல்விசார் ஆளணியினரான கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள், ஆசிரிய கல்வியியலாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான வலுவூட்டல் செயலமர்வுகளில் வளவாளராகப் பணியாற்றி வருகிறார். அத்துடன் கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றிவருகிறார்.




Image Source - www.globalgiving.org

## அறிமுகம்

தற்கால உலகளாவிய அபிவிருத்திப் போக்கானது பேண்தகைமையுடையதாக இல்லை என்பதை சூழல், பொருளாதாரம் மற்றும் சமூகக் குறிகாட்டிகள் எடுத்தியம்புவதாக ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுகின்றது. மேலும், வளங்கள் வரையறுக்கப்பட்டவையாக இருப்பதுடன், அதிகரித்த சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் இருப்பதால், பேண்தகு அபிவிருத்தியே இதற்கு ஒரே தீர்வாகும் எனவும் ஐ.நா வலியுறுத்துகின்றது. தமக்கான பேண்தகு அபிவிருத்திக்கான பயணத்தில் ஒவ்வோரு நாடும், பல்வேறு சவால்களினை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இச்சவால்களில் பல, எல்லா நாடுகளுக்கும் பொதுவானவையாகவும், வேறுசில குறிப்பிட்ட நாடுகளுக்கு மட்டும் தனித்துவமானவையாகவும் காணப்படுகின்றன.

உலகளாவிய ரீதியில் மக்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக அதிகரித்த வறுமை, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்புகள், சக்தி வளங்களின் வினைத்திறனற்ற பாவனை, நீர்ப் பாதுகாப்பின்மை, அதிகரித்த சூழல் மாசடைதல், மனித உரிமை துஸ்பிரயோகம், சுய போக்குவரத்தின் மிதமிஞ்சிய பாவனை, சுற்றாடல் தரம் குன்றல், உலகமயமாக்கல் போன்றவை காணப்படுகின்றன.





Image Source - www.dkit.ie

### ‘நிலைபேண்தகு அபிவிருத்தி’ அல்லது ‘நிலைத்து நீடித்திருக்கும் அபிவிருத்தி’

ஆரம்பகாலங்களில் ‘அபிவிருத்தி’ என்று பேசப்பட்டுவந்த எண்ணக்கருத்தானது, பிற்காலத்தில் ‘நிலைபேண்தகு அபிவிருத்தி (Sustainable Development)’ என்ற மேம்பட்ட பதத்தினால் அழைக்கப்படுகின்றது. இது அனைத்து நாடுகளிலும் பயன்படுத்தப்பட்டு வரும் தனித்துவமான எண்ணக்கருவாகும். இதனை வரைவிலக்கணப்படுத்துவது கடினமானதாகும். ஏனெனில் இது தொடர்ச்சியாக விருத்தியடைந்து (Evolving) செல்லும் ஒரு எண்ணக்கருவாகக் காணப்படுகின்றது.

“எதிர்காலச் சந்ததியினருக்கு பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் மக்களின் இன்றைய தேவையினை பூர்த்திசெய்வது மற்றும் வறுமையினை குறைப்பதற்குமான ஓர் நடவடிக்கை” என பேண்தகு அபிவிருத்தயை பிரெண்லாண்ட் ஆணைக்குழு முதன்முதலாக 1987 ஆம் ஆண்டு வரைவிலக்கணப்படுத்தியுள்ளது. இது பொருளாதாரம், சமூகம், மற்றும் சூழல் என்கின்ற மூன்று தளத்திலே கட்டியெழுப்பப்படுகின்றது. கலாசாரம் மற்றும் தனிமனிதன் என்பனவும் இதன் கூறுகளாக தற்காலத்தில் கருதப்படுகின்றன.

பேண்தகு அபிவிருத்தியானது சுற்றாடல் வரையறைக்குள் வாழ்தல், உறுதியானதும் ஆரோக்கியமானதுமான சமூகத்தை உறுதிப்படுத்தல், பேண்தகு பொருளாதாரத்தை அடைதல், நல்ல ஆளுகையை உறுதிப்படுத்தல் மற்றும் விஞ்ஞான அறிவை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தல் என்ற ஐந்து வழிகாட்டல் தத்துவங்களினால் இயக்கப்படுகின்றது.

### இலங்கையின் வடமாகாணம் எதிர்கொள்ளும் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான சவால்கள்

இலங்கையில் நடைபெற்ற முப்பது வருடகால உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் முழுநாடும் அபிவிருத்திப் பாதையில் பயணிக்கின்றபோதும், அதிகளவிலான பாதிப்புகளுக்கு உட்பட்ட வடக்கு மாகாணம், அதன் நிலைபேண்தகு அபிவிருத்தியில், பல்வேறு பொருளாதாரம்சார், சூழல்சார், சமூகம்சார் மற்றும் கலாசாரம்சார் சவால்களை எதிர்நோக்கி வருகின்றது.

### பொருளாதாரம்சார் சவால்கள்

உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கையின் வடக்கு மாகாணத்தில் எற்கனவே காணப்பட்ட, மக்களின் பொருளாதார மூலங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. உயிரிழப்புகள், உடமை இழப்புகள் மற்றும் அங்கவீனங்கள் காரணமாக குடும்பங்களின் வருமானம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குடும்பத் தலைவர்கள்

காணாமற்போனமை அல்லது நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களால், வடக்கில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.

யுத்தத்திற்குப் பின்னர் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற போதும், மக்களின் வாழ்க்கைத் தரம் பெருமளவில் மேம்படவில்லை. மாகாணத்தின் வறுமை, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து செல்கின்ற போதும், இன்னும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. நகரம், கிராமங்களிடையில் வறுமையின் பரம்பல் இன்றும் சமனற்றுக் காணப்படுகின்றது.

யுத்தத்திற்கு முன்னர் வடக்கில் இயங்கிவந்த பாரிய மற்றும் நடுத்தரத் தொழிற்சாலைகள் மீள இயங்க ஆரம்பிக்கவில்லை. விவசாயத்திற்கேற்ற வளமான மண்ணைக் கொண்ட பிரதேசங்களில் மக்கள் விவசாயம் செய்ய இன்னும் அனுமதிக்கப்படவில்லை.

தற்காலத்தில் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்குத் தேவையான தொழிலாளர்கள், தென்னிலங்கையில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் கொண்டுவரப்படுகின்றார்கள். உள்ளூரில் உள்ள தொழிலாளர்களைப் பயிற்றுவித்து தொழில் வழங்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். நடுத்தரத் தொழிலாளர்களை பயிற்றுவிக்கும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

கொழும்பைத் தளமாகக் கொண்டு இயங்கும் பெரிய நிறுவனங்கள் வடக்கு - கிழக்கில் கிளைகளைத் திறந்து தமது வியாபார நடவடிக்கைகளை முன்னெடுப்பதால், உள்ளூர் மக்களின் வர்த்தக நிறுவனங்கள் அவற்றுடன் போட்டி போட்டுச் செயற்பட முடியாது நட்டமடைகின்றன. இதனால் உள்ளூர் வர்த்தகர்கள் பலர் விரக்திடைந்துள்ளனர்.

அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள், உலகளாவிய நிதி நெருக்கடியால் (*Global Financial Crisis*) பாதிக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. அதேபோல தற்காலத்தில் வடக்கு, கிழக்கில் கிராமம் - நகரம், படித்தவர் - படிக்காதவர் என்ற வேறுபாடின்றி மக்கள் பல்வேறுவிதமாக நிதி நெருக்கடிக்கு (*Financial Crisis among the Local People*) ஆளாகி வருகின்றனர்.

முன்னைய காலத்தில் ‘சீட்டுப்போடுதல்’ மூலமாக சிறுகச் சிறுகச் சேமித்து, எமது மக்கள் தமது பொருளாதாரத்தை மேம்படுத்தினர். ஆனால் தற்காலத்தில் சீட்டுப்போட்ட பலரும் ஏமாந்து நடுத்தெருவுக்கு வந்துவிட்டனர். சொந்தக்காரர் மற்றும் நெருங்கிய நண்பர்களாலேயே ஏமாற்றப்படுகின்றனர். இவை தொடர்பான பல முறைப்பாடுகள் பொலிஸ் நிலையங்களுக்கு கிடைத்துள்ளன. இணக்க சபைகளிலும், நீதிமன்றங்களிலும் இவை தொடர்பான பலவழக்குகள் நடைபெற்று வருகின்றன. ‘காசோலை மோசடிகள்’ தொடர்பான செய்திகள் அடிக்கடி பத்திரிகைகளில் வெளிவருகின்றன. ‘வட்டிக்குப் பணம் கொடுத்தல்’ எமது சமூகத்தில் ஒரு பாவச் செயலாகப் பார்க்கப்படுகின்றது. பலர் இன்றும் அதனைச் செய்து வருகின்றனர். பணம் பெற்றவர்களால் ஏமாற்றப்பட்டும் வருகின்றனர். இவை தொடர்பாக எமது மக்கள் விழிப்பூட்டப்பட வேண்டும். அரசியல்வாதிகள், சமூக நலனில் அக்கறை கொண்டவர்கள் கிராமங்களில் மற்றும் நகரங்களில் இறங்கி இதற்காகப் பணியாற்ற வேண்டும்.

தற்காலத்தில் எமது பிரதேசங்களில், கட்டுப்பாடுகள் மற்றும் வரையறையின்றி அதிகரித்துச் செல்லும் வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளிடம் அதிகரித்த வட்டிக்கு கடன்களைப் பெற்ற மக்கள், மீளவும் அவற்றைச் செலுத்த முடியாது, விரக்தியடைந்து மன நோயாளிகளாக மாறி வருகின்றனர். வாடகைகக் குத்தகைக்கு (*Leasing*) வாகனங்களைக் கொள்வனவு செய்தவர்கள், மாதா மாதம் தவணைக் கட்டணங்களைச் செலுத்த முடியாது உள்ளனர். மீளவும், அக் கம்பனிகளால் அவ் வாகனங்கள் கையகப்படுத்தப்படுகின்ற நிலையே அதிகமாகக் காணப்படுகின்றது.

நீண்டகாலமாக பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வடக்கு - கிழக்கில் இயங்கி வந்ததனால், அவற்றிடமிருந்தும் புலம்பெயர் ஈழத் தமிழ் உறவுகளிடமிருந்தும் உதவிகளைப் பெற்று வந்த மக்கள், எதையும் இலவசமாகப் பெறும் மனநிலைக்கு மாற்றமடைந்ததனால், தாம் சுயமாக உழைத்து வாழ்வதில் சோம்பலடையும் நிலைக்கு பழக்கப்பட்டு வருவதும் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான தடையாகவுள்ளது. இது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடம், குறிப்பாக இளைஞர்களிடம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

### காலநிலை மாற்றமும் பொருளாதாரப் பாதிப்புகளும்

தற்காலத்தில், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. இதனால் விவசாயம், கால்நடை வளர்ப்பு, வனத்துறை, மீன்பிடித்துறை, சுகாதாரம், கரையோரச்சூழல், உயிர்ப் பல்வகைமை மற்றும் மனித வாழிடங்கள் போன்றன கடுமையான பாதிப்புக்கு உள்ளாகின்றன. இத் துறைகளைச் சார்ந்த மக்களின் பொருளாதாரமும் கடுமையான பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.

கணிசமான எண்ணிக்கையான இலங்கையர்கள் இன்னமும் விவசாயம், கால்நடை உற்பத்தி, உள்நாட்டு மீன்பிடி போன்ற மழைவீழ்ச்சியை நம்பிய வருமான மூலங்களில் தங்கியிருக்கின்றார்கள். எதிர்காலத்தில், கடுமையான காற்றின் அதிகரிப்பு, வறட்சி மற்றும் மழைவீழ்ச்சி முறைகளில் ஏற்படும் மாற்றம் ஆகியவை அவர்களது உணவுப் பாதுகாப்பு, வாழ்வாதாரம் ஆகியவற்றில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப்படுகின்றது.

விவசாய நிலங்கள் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறும் அவல நிலையும் காணப்படுகின்றது. எதிர்காலத்தில், நாட்டின் பரந்துபட்ட கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடிக்கு கணிசமான பாதிப்பு ஏற்படுவதுடன் கடுமையான அலைகள், நீர்மட்டம் உயர்தல் ஆகியவற்றால் கரையோர உயிர்த்தொகுதியும் பாதிக்கப்படக்கூடிய ஆபத்துள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக இலங்கையின் கரையோர மற்றும் விவசாய மூல வளங்களில் ஏற்படும் சேதம் இந்த நூற்றாண்டின் இறுதியளவில் நாட்டின் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசியாவுக்கான காலநிலை மற்றும் பொருளாதாரம் குறித்த பிந்திய அறிக்கை எச்சரித்துள்ளது.

### காலநிலை மாற்றத்தின் சமகால அனுபவங்கள்

அண்மைக்கால பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் தினம், தினம் நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி பற்றியே பேசுகின்றன. அவை வெளியிடும் புகைப்படங்களும், காட்டூன் சித்திரங்களும் வறட்சி நிலத்தின் வெடிப்புகளையும், தண்ணீருக்காய் காத்திருக்கும் மக்களையும், நீருக்காய் அலையும் ஐந்தறிவு ஜீவன்களையும் காட்டுகின்றன. வீடுகளின் கிணற்றில் தண்ணீர் இல்லை. குளங்களில், ஆறுகளில் தண்ணீர் இல்லை. குடிநீருக்காக மக்கள் அலைகிறார்கள். கால்நடைகள் குடிக்கத் தண்ணீரில்லாமல் இறக்கின்றன. இதற்கான முன்னேற்பாடுகளை நாம் மேற்கொண்டோமா? மழைக் காலத்தில் மிதமிஞ்சிய மழை நீரைச் சேமித்தோமா? ஊர்க் குளங்களையும், கோயிற் கேணிகளையும் தூர்வாரினோமா? சில இடங்களில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் இவ்வாறான நல்ல செயற்பாடுகளினை (Good Practices), நாம் எதிர்காலத்தில் அனைத்துப் பிரதேசங்களிலும் முன்னெடுக்க வேண்டும்.

மழைக் காலத்தில் கடலைச் சென்றடையும் நல்ல தண்ணீரை, வீடுகளில், பாடசாலைகளில், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது



Image Source - www.reuters.com

இடங்களில் சேமிப்பதற்கான முயற்சிகளை இனியாவது முன்னெடுக்க வேண்டும். பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் கோட்பாட்டு ரீதியில் கற்றதை, நடைமுறையில் பிரயோகிக்க வேண்டும். இது தொடர்பாக பொது மக்களுக்கு விழிப்பூட்ட வேண்டும். கிராமத்து, நகரத்து இளைஞர்கள் இதில் கூடிய பங்காற்ற முடியும். எமது நிலத்தில், நன்நீரை நீண்ட காலத்துக்கு நிலைநிறுத்தும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகள், நீர்வளங்களின் பங்கீட்டில் அரசியல் செய்ய முனையக் கூடாது. பொது நோக்கில் அனைத்து மக்களும் பயனடையும் வகையிலான செயற்றிட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

### வடமாகாணத்தில் 'பேண்தகு விவசாயம்'

பேண்தகு விவசாயம் (*Sustainable Agriculture*) தொடர்பாக எமது விவசாயிகள் அறிவூட்டப்பட வேண்டும். இலங்கையில் விவசாய நடவடிக்கைகளில் இரசாயன வளமாக்கிகள் மற்றும் இரசாயன கிருமி நாசினிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதனால், குறுகிய காலத்தில் அதிக விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்ற போதும், இவ் உணவுகளை உண்ணும் மக்கள் அதிகளவில் சிறுநீரக நோய் மற்றும் புற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

இலங்கையில் இரசாயன வளமாக்கிகளின் பாவனை உயர்ந்த அளவிலுள்ள மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப்பாண மாவட்டம் காணப்படுகின்றது. இதன் விளைவாக நிலத்தடி நீர் அதிகளவில் மாசடைகின்றது. மக்கள் அதிகளவில் புற்றுநோய்த் தாக்கத்திற்கு உட்பட்டு வருகின்றனர்.

வெள்ளப் பாதிப்பை எதிர்த்து நிற்கக் கூடிய பயிரினங்களை தெற்காசியாவில் அறிமுகப்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்துடன் கரையோர வலய முகாமைத்துவம் சிறப்பான முறையில் மேம்படுத்தப்பட வேண்டும். நோய்க் கண்காணிப்பு, தரைநீர்ப் பாதுகாப்பு, நீர்ச் சுற்றுவட்டப் பயன்பாடு என்பனவற்றில் அதிகளவுக்கு கவனம் செலுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது.

சேதன விவசாயம், நீரைச் சிக்கனமாக பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாய முறைகள், மண் பரிசோதனைகள், பயிர்ச் சிகிச்சை முறைகள், அறுவடைக்கு பின்னரான தொழில்நுட்பம் என்பன தொடர்பான அறிவும் செயன்முறை விளக்கமும் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். பொது மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சந்தைகளில், மருந்தடிக்காத புதிய பழங்கள் மற்றும் காய்கறிகளையே விற்பனை செய்யும் மனப்பாங்கை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் விருத்தி செய்ய வேண்டும். எமது தேசிய மற்றும் சமூக உணர்வுகளை இவற்றின் மூலமும் நாம் வெளிக்காட்ட முடியும்.

### வடக்கு மாகாணத்தில் 'பேண்தகு மீன்பிடி' (Sustainable Fisheries)

எமது பிராந்தியத்தின் முக்கிய பொருளாதார மூலங்களில் ஒன்றாக விளங்குவது மீன் பிடியாகும். ஆனால் தற்காலத்தில் அதிக பிரச்சினைகளை எமது பிரதேச மீனவர்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள். தமிழ்நாடு மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் அத்து மீறி எமது பிராந்தியக் கடற்பரப்பில் மீன் பிடித்தல், சட்டவிரோத மீன்பிடி முறைகளை கையாளல், ஆழ்கடல் மீன் பிடிக்கான தொழில்நுட்பங்களும் சாதனங்களுமின்மை, கடற் பரப்பில் மீன் வளங்கள் குறைவடைந்து செல்லல், மயிலிட்டி போன்ற மீன்பிடித் துறைமுகங்கள் மீனவர்கள் பாவனைக்காக விடுவிக்கப்படாமை மற்றும் கடுமையான காலநிலை மாற்றத்தால் உள்ளூர் மீன்பிடி நீர் நிலைகள் வற்றிப் போனமை போன்ற பிரச்சினைகளை மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள். நிலைத்து நீடித்திருக்கக் கூடிய மீன்பிடி தொடர்பாக தற்போதே நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். இல்லையெனில் எமது முக்கியமான பொருளாதார மூலங்களில் ஒன்றான மீன்பிடியை, எதிர்காலத்தில் முற்றாகக் கைவிட வேண்டிய சூழல் ஏற்படலாம். தமிழ்நாடு மற்றும் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறி எமது பிராந்தியக் கடற்பரப்பில் மீன்பிடித்தலை முற்றாகத் தடை செய்ய வேண்டும். நாமும் எமது பக்கமுள்ள குறைபாடுகளைக் களைய வேண்டும். சட்டவிரோத மீன்பிடி முறைகளான சிறகுவலை பயன்படுத்தல், மடி வலைகளைப் பயன்படுத்தல், தங்கூசி வலைகளைப் பயன்படுத்தல், குழை போட்டு கணவாய் பிடித்தல் மற்றும் டைனமற்றுக்களை பயன்படுத்தி மீன்பிடித்தல் போன்றவற்றைக் கைவிட வேண்டும்.

தினமும் மீன்பிடித் துறைமுகங்களில் மற்றும் கடற்கரை நீரில் கொட்டப்பட்டுக் கிடக்கும் பயன்பாடற்ற கடலுணவுக் கழிவுகளில் இருக்கும் கடல்வாழ் உயிரினங்களின் குஞ்சுகளைப் பார்க்கும் போது, நெஞ்சு பதைபதைக்கின்றது. எவ்வளவு கடல் உயிரின வளம், ஒவ்வொரு மீனவராலும் வீணாக்கப்படுகின்றது. இவற்றைத் தடுப்பது தொடர்பாக மீனவர்கள் விழிப்பூட்டப்பட வேண்டும். தமிழ்நாட்டில் அமுலிலுள்ளதைப் போன்று, மீன்கள் இனப்பெருக்கம் செய்யும் காலங்களில் மீன்பிடிப்பதைக் கைவிடவேண்டும். பேண்தகு மீன்பிடி தொடர்பாக மீனவர்களுக்கு விழிப்பூட்டப்பட வேண்டும். பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் இதில் கூடிய பங்காற்ற முடியும்.

### பிராந்தியத்தின் சூழல்சார் சவால்கள்

எமது பிராந்தியம் பல்வேறுபட்ட சூழல்சார் சவால்களை, தற்காலத்தில் எதிர்நோக்கி வருகின்றது. தரை, வளி, நிலத்தடி நீர், நன்னீர் நீர் நிலைகள் மற்றும் கடற் கரைகள் என்பன வேகமாக மாசடைந்து வருகின்றன. முற்காலத்தில் ஒவ்வொரு வீட்டுக் காணியும் பெரிதாக இருந்ததனால், எமது வீடுகளில் சேரும் திண்மக் கழிவுகளை எமது காணியின் ஓர் மூலையில் எரித்தோ அல்லது புதைத்தோ, சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படா வண்ணம் அவற்றைச் சிறப்பாக கழிவு முகாமைத்துவம் செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் தற்காலத்தில் கிராமப் புறங்களில் கூட திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்ய

முடியாதுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களின் வாகனங்கள் கிரமப்படி குப்பைகளை அகற்றாது விடின் எமது தெருக்கள் துர்நாற்றமெடுக்கும் நிலையே இன்று காணப்படுகின்றது. பெரும்பாலான உள்ளூராட்சி மன்றங்கள், தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கும் கழிவுகளை முறையாக முகாமை செய்வதில்லை. பிரதேச எல்லையில் கொண்டுபோய்க் கொட்டி தீவைத்து விடுகிறார்கள்; அல்லது புதைத்து விடுகிறார்கள்.

திண்மக் கழிவுகளை முகாமை செய்வதற்கான தொழில்நுட்பங்களோ, அது தொடர்பான பயிற்சி பெற்ற ஆளணியினரோ எம்மிடம் இல்லை. திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பாக, பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் விழிப்பூட்டப்பட வேண்டும். ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களும் தமக்கான திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையங்களை அமைத்து, தமது எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கும் கழிவுகளை முறையாக முகாமை செய்ய வேண்டும். இதன் மூலம் பிரதேச இளைஞர்கள் மற்றும் யுவதிகள் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புகளும் ஏற்படும்.

மேலும் பல சூழல்சார் பிரச்சினைகளை நாம் சம காலத்தில் எதிர்நோக்கி வருகின்றோம். சட்டவிரோதமான முறையில் காட்டு மரங்கள் வெட்டப்படுகின்றன. கடலரிப்பு மற்றும் மண்ணரிப்பைத் தடுப்பதற்காக வடமராட்சி கிழக்கில் நாட்டப்பட்ட சவுக்கு மரங்கள் விறகுக்காக அழிக்கப்படுகின்றன. கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் சட்டவிரோதமான முறையில் காட்டு விலங்குகள் வேட்டையாடப்படுகின்றன. இயற்கை வளங்களான, மணல் மண் மற்றும் கருங்கற்கள் களவாடப்படுகின்றன. இவை தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதும், ஊடகங்கள் விழிப்புணர்வூட்டிய போதும், அரசியல்வாதிகள் - அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் இவ் முறையற்ற செயல்கள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவற்றைச் செய்பவர்களின் மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்பட்டாலன்றி இவற்றை நிறுத்த முடியாது. பொது மக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் இவை தொடர்பான சமுதாயக் கல்வி மூலம் மாற்றங்களைக் காண நாம் முயற்சிக்க வேண்டும்.

இலங்கையில் மனிதர்களிடையிலான முரண்பாட்டுக்கு அடுத்ததாக, பெரிய பிரச்சினையாக இருப்பது, மனிதனுக்கும் யானைகளுக்குமுள்ள முரண்பாடாகும் (Human - Elephant Conflict). காட்டு யானைகளின் தாக்குதலில் பல மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சொத்துடைமைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. பயிர்கள் சேதமாக்கப்பட்டிருக்கின்றன. யானைகள் பயணிக்கும் பாதைகளை இடைமறித்து மக்கள் தமது வீடுகளையும், வீதிகளையும் மற்றும் உட்கட்டுமானங்களையும் அமைத்ததாலேயே இந் நிலை ஏற்பட்டதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அண்மைக் காலத்தில் பெரும் எண்ணிக்கையிலான பொது மக்கள் விசர் நாய்க்கடி மற்றும் குளவிக் கடிக்கு ஆளாகி வருகின்றனர். வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயம் என்றாலே, குளவிப் பாதிப்புதான் ஞாபகத்திற்கு வருகின்றது. சிகிரியாவில் அடிக்கடி உல்லாசப் பயணிகள் குளவிக் கடிக்கு உள்ளாகும் செய்திகளை நாம் பத்திரிகைகளில் படிக்கின்றோம். மலைநாட்டிலும் குளவிகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த ஆபத்தை தடுப்பதற்கான வழிமுறைகளை நாம் இன்னும் கண்டறியவில்லை. இப்படியான பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய கல்வியே இன்று எமக்குத் தேவையாகவுள்ளது.

## பிராந்தியத்தின் சமூகம்சார் சவால்கள்

யுத்தத்திற்கு பின்னரான காலப் பகுதியில், வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பல்வேறு சமூகம்சார் சவால்களை எதிர்கொண்டு வருகின்றன. தற்காலத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு எமது பிரதேசங்களில்

சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. எமது இளைஞர்கள் மத்தியில், மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது. இலங்கையில் புகையிலைப் பாவனையைக் குறைத்தல் என்ற பொதுநலனை அடிப்படையாகக் கொண்டு, கடந்த வருடங்களில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச் செய்கையை மேற்கொள்வது தொடர்பாக, யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதாரப் பணிமனையால் விவசாயிகள் விழிப்பூட்டப்பட்டனர். இது போன்ற நன்முயற்சிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டும். அண்மைக்காலத்தில், இந்தியாவின் கேரள மாநிலத்தில் பூரண மதுவிலக்கு நடைமுறைக்கு வந்துள்ளது. அதனைப் பின்பற்றி எமது வடக்கு மற்றும் கிழக்கு மாகாண நிர்வாகங்களும் செயற்படலாம். 'தமது வர்த்தக நிலையங்களில் புகைத்தல் பொருட்கள் விற்பதில்லை' என்று முன்மாதிரியாகச் செயற்படும் வர்த்தகர்களைப் பின்பற்றி ஏனைய வர்த்தகர்களும் செயற்பட வேண்டும்.

தற்காலத்தில் எமது சமூகத்தில் கொலை, கொள்ளை மற்றும் குழு மோதல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. தென்னிந்திய சினிமா மற்றும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் இவற்றை ஊக்குவிக்கின்றன. இக் குற்றச்செயல்களின் பின்னால் மறைமுகமான அரசியல் நிகழ்ச்சி நிரலொன்று உள்ளதாகவும் மக்கள் பேசிக்கொள்கிறார்கள். அது உண்மையாயின் அதன் தோற்றுவாய் கண்டறியப்பட்டு உடனடியாகக் களையப்பட வேண்டும். மக்கள் நலம்சார்ந்த அரசியல்வாதிகள் இதில் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள் மற்றும் இள வயதுத் திருமணங்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளிவருகின்றன. பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொது மக்கள் மத்தியிலும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்துச் செல்கின்றன. முகநூல் போன்ற சமூக வலைத்தளங்களின் தவறான பாவனை காரணமாக அவை சார்ந்த குற்றங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன. இணையம் சார்ந்த குற்றங்களைத் தடுக்க முறையான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

> நாம் எதிர்கொள்ளும் சமூகம்சார் சவால்களை தீர்ப்பதற்கான முயற்சிகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் செயற்படும் வகையில் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், நல் விழுமியங்கள் போதிக்கப்பட வேண்டும்.

யுத்தத்தினால் விதவையாக்கப்பட்ட பெண்களிற்கான மறுவாழ்வு, மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் ஒதுக்கப்படாது, சமூகத்தோடு இணைக்கப்பட்டு வாழ்தல் என்பன சமூகத்தில் ஏற்படும் புரட்சிகரமான மாற்றங்கள் மூலமே சாத்தியப்படக் கூடியதாகும். இது தொடர்பாக அனைவரது மனங்களிலும், சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். எமது சமூக மட்டங்களிடையில் புரையோடிக் காணப்படும் சமூக வேறுபாடுகள் களையப்பட வேண்டும். இதற்கு நாம் கற்கும் கல்வி பயன்பட வேண்டும்.

நாம் எதிர்கொள்ளும் சமூகம்சார் சவால்களை தீர்ப்பதற்கான முயற்சிகள் உடனடியாக முன்னெடுக்கப்பட வேண்டும். மாணவர்கள் செயற்படும் வகையில் பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில், நல் விழுமியங்கள் போதிக்கப்பட வேண்டும். ஆசிரியர்கள் இனியும் செயற்படாது, வாளாவிருக்கக் கூடாது. இளைஞர்கள் மற்றும் யுவதிகளை நல்வழிப்படுத்துவதில், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இணைந்து காத்திரமாகப் பணியாற்ற முடியும். வழிபாட்டுத் தலங்கள், பொது நிறுவனங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள் தமது தார்மீகக் கடமையில் இருந்து ஒரு போதும் தவறிவிடக் கூடாது.

### நிலைபேண்தகு அபிவிருத்திக்கும், கல்விக்கும் இடையிலான தொடர்பு

சவால்களை எதிர்கொண்டு பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கான முக்கியமான வழிமுறையாக கல்வி மற்றும் முறையான பயிற்சி என்பன விளங்குகின்றன. கல்வியானது சந்தேகத்திற்கு இடமின்றி, நெடுங்காலம் நீடித்திருக்கத்தக்க சமூக, பொருளாதார மாற்றத்துக்கான முக்கியமான கருவியாகவுள்ளது. தனியே தொழில்நுட்பத் தீர்வுகளாலோ, அரசியற் சீராக்கங்களாலோ அல்லது நிதிசார் கருவிகளாலோ பேண்தகு அபிவிருத்தியை அடைந்துவிட முடியாது. மாறாக, எமது சிந்தனை மற்றும் செயற்பாட்டுப் பாதையை மாற்றியமைக்க வேண்டியுள்ளது. கல்வி, பயிற்சி மற்றும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு என்பவற்றால் சமூகத்தை பேண்தகுநிலை நோக்கி நகர்த்த முடியும் என உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

### தற்போதுள்ள இலங்கையின் கல்வி நடவடிக்கைகளும் அவற்றின் பயன்படு தன்மையும்

இலங்கையில் அறுபது வருடங்களுக்கு மேலாக, ஆரம்பக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி வரையில் அரசினால் கல்வி இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது. எழுத்தறிவு வீதம் ஏனைய தெற்காசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது உயர்ந்த அளவில் காணப்படுகின்றது. இருந்த போதிலும் எமது நாட்டின் கல்வியின் பயன்படு தன்மை தொடர்பான விமர்சனங்கள் அனைத்து மட்டங்களில் எழுந்த வண்ணம் உள்ளன.

‘பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் போதிக்கப்படுகின்ற திறன்களுக்கும் தொழிற்தலங்களின் தேவைகளுக்கும் இடையில் பொருத்தப்பாடின்மை காணப்படுகின்றது’ என்பதே கல்வியைப் பற்றிய பொதுவான விமர்சனமாகவுள்ளது. இலங்கையின் கல்வி பற்றி தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னை நாள் பணிப்பாளர் நாயகம் உபாலி சேதர அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

“எமது நாட்டில் தற்போது காணப்படும் முறையான கல்வி மற்றும் பயிற்சி என்பன உற்பத்தித் திறன், தேசிய போட்டித் திறன் மற்றும் நல்லாட்சி என்பவற்றை மேம்படுத்தி வரவில்லை. மேலும், மிக உயர்ந்த கல்வித் தகைமைகளைப் பெற்றிருந்த நபர்களை ஏனைய நாடுகளில் வாழ்ந்து வரும் அவர்களது சகாக்களுடன் ஒப்பிடும் பொழுது தேசிய பொருளாதாரத்துக்கும் சமூக அபிவிருத்திக்கும் கணிசமான அளவிலான பங்களிப்பை அவர்கள் வழங்கி வந்திருக்கவில்லை” எனக் குறிப்பிடுகின்றார்.

### நிலைபேண்தகு அபிவிருத்திக் கல்வி (Education For Sustainable Development - ESD)

நிலைபேண்தகு அபிவிருத்திக்கு தடையாக உள்ள பிரச்சினைகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் இணைத்தல் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி எனப்படும். நிலைபேண்தகு அபிவிருத்தியின் தத்துவங்களையும், எண்ணங்களையும் அடிப்படையாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை எனவும் இது அழைக்கப்படுகின்றது.

‘நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி’ 1950 ஆம் ஆண்டில் இயற்கை பற்றிய கல்வி (Nature Education) எனவும், 1980 ஆம் ஆண்டில் சூழல்சார் கல்வி (Environmental Education) எனவும் அழைக்கப்பட்டது. சூழல்சார் கல்வியின் மிகப் பிந்திய பரிணாமமாகவே இது தற்போது கருதப்படுகின்றது. ‘நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி’ என்ற பதமானது 2000 ஆம் ஆண்டளவில் உருவாக்கம் பெற்ற எண்ணக்கருவாக காணப்படுகின்றது.

நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வியானது, நிலைபேண்தகு எதிர்காலத்துக்கு தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் விழுமியங்களைப் பெற்றுக்கொள்ள உதவுகின்றது. மேலும் இது ஒவ்வோர் நாட்டுடனும், சமூகத்துடனும் தொடர்புடையதாகவும், அவர்களின் கலாசாரத்துக்கு பொருத்தமானதாகவும் இருப்பதுடன் சுதேச அறிவையும், சுதேச



Image Source - groundviews.org

மொழிகளையும் கல்வியில் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றது. மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான ஓர் பொறிமுறையாகவும் இது கருதப்படுகின்றது. ஐக்கிய நாடுகள் நிறுவனம் 2005 - 2014 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியை நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்விக்குரிய பத்தாண்டாக (Decade of Education for Sustainable Development - DESD) பிரகடனப்படுத்தியிருந்தது. பெரும்பாலான உலக நாடுகள் முறைசார் கல்வியில், இதற்கான கொள்கை, கலைத்திட்ட விருத்தி, உத்திகள், மற்றும் ஆசிரியர் பயிற்சி மற்றும் கையேடுகளின் விருத்தி என்பனவற்றில் ஈடுபட்டு வருகின்றன.

நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்ப்புகளினை, முறைசார் கல்வியின் ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்வி தொடக்கம் உயர்கல்வி வரையிலான கலைத்திட்டத்தில் பொருத்தமாக உள்ளடக்குவதுடன், முறைசாரக் கல்வி மற்றும் சமுதாய மேம்பாட்டிலும் பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இலங்கையில் 2012 டிசம்பரில் தான் சமாதானம் மற்றும் பேண்தகு அபிவிருத்தி கல்விக்கான கொள்கையொன்று யுனஸ்கோவின் உதவியுடன் உருவாக்கப்பட்டது. இதிலிருந்து நாம் எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்பதை உணர முடியும்.

இலங்கையின் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக கல்வியில், நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்ப்புகள் ஆங்காங்கே உள்ள போதும், உலகளாவிய ரீதியில் அபிவருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில், இதன் அமுலாக்கத்தில் நாம் பின்தங்கியே உள்ளோம். நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வியினை இலங்கையில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமுலாக்குவது தொடர்பாக தீவிரமாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டியுள்ளது.

### பேண்தகுஅபிவிருத்திக்கான கல்வியின் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வியின் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகளாக அனுபவம்சார் கற்றல் (Experiential learning),

விசாரணையை அடிப்படையாகக் கொண்ட கற்றல் (*Inquiry based learning*), கூட்டாகக் கற்றல் (*Collaborative learning*), செயற்றிட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கற்றல் (*Project - based learning*), தகவற் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பொருத்தமாக ஒன்றிணைத்தல் (*Integration of ICT*), வகுப்பறைக்கு வெளியிலான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுதல் (*Learning outside the classroom*), மற்றும் சமூகம்சார் பிரச்சினைகளைத் தீர்த்தல் (*Communi ty problem solving*) என்பன இனங்காணப்பட்டுள்ளன.

## பாடசாலைகளில் முன்னெடுக்க வேண்டிய பேண்தகு அபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகள்

பெரும்பாலான பாடசாலைகள், பாடசாலைச் சூழலை அழகுபடுத்தலை மாத்திரம் நோக்காகக் கொண்டு செயற்படுகின்றன. ஆனால் இது மட்டும் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்விக்கு உதவப் போவதில்லை. மாறாக மாணவர்களை பயனுள்ள செயற்றிட்டங்களில் ஈடுபடுத்தல், பாடசாலைக் கட்டடங்களை சூரியப் படல்களுடன் கூடிய பசுமைமிக்க கட்டடங்களாக்குதல், மீழ்சுழற்சி செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், நீர்ப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றல், பாடசாலையைச் சூழ மரங்களை நாட்டுதல், பாடசாலையில் காய்கறித் தோட்டத்தையும் மூலிகைத் தோட்டத்தையும் அமைத்தல், கலைத் திட்டத்தின் எல்லா விடயங்களிலும் பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்ப்புகளிருப்பதை உறுதிப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள், நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகளாக உலகளாவிய ரீதியில் இனங் காணப்பட்டுள்ளன.

நிலைபேண்தகு பாடசாலை (*Sustainable School*) ஒன்றில் பாடசாலைக் கொள்கைகள், பாடசாலை நாட்காட்டி, மாணவர் கழகங்கள், அறிவுப் பரவலாக்கம் மற்றும் விழுமியப் பரவலாக்கம், ஜனநாயகச் செயற்பாடுகள், பாடசாலை மைதானம், கற்றல் - கற்பித்தல் முறைகள், வளங்களின் பயன்பாடு, குழுச் செயற்றிட்டங்கள், செயல்நிலை ஆய்வுச் செயற்றிட்டங்கள், சமூகத்திற்கான அறிவுப் பகிர்வு மற்றும் பல்துறைகளுக்கிடையிலான கற்றல் செயற்பாடுகள் ஆகிய விடயங்களில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்ப்புகள் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பின்வரும் விளக்கப்படம் இதனை விளக்குகின்றது:

## பிராந்தியத்தில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி அமுலாக்கத்துக்கான சவால்கள்

பிராந்தியத்தில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி அமுலாக்கத்தில் பல்வேறு சவால்கள் காணப்படுகின்றன. நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி அமுலாக்கம் தொடர்பான முறையான கொள்கைகள் மற்றும் தூர நேக்குகள் எங்களிடம் போதியளவில் காணப்படவில்லை. கல்விசார் ஆளணியினர் மற்றும் பொதுமக்களிடம் நிலை பேண்தகு அபிவிருத்திக்கான கல்வி தொடர்பான போதிய விழிப்புணர்வு இன்னும் ஏற்படவில்லை. கலைத் திட்டத்தில், நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி வாய்ப்புகளை பொருத்தமாக உட்புகுத்துவதில் சிரமப்பாடுகள் உள்ளன. சமூகத்துடன் ஒருங்கிணைந்து நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பல இடர்பாடுகள் காணப்படுகின்றன. ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு இது தொடர்பான பயிற்சி வழங்குவதில் இடர்பாடுகளை எதிர்கொள்ளல் போன்ற சவால்கள் காணப்படுகின்றன.

## வடக்கு மாகாணத்தில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வியை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள்

கல்விசார் ஆளணியினர் மற்றும் பொது மக்களிடம் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி தொடர்பான போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். கலைத் திட்டத்தில் பொருத்தமான இடத்தில், பொருத்தமான கட்டமைப்பில் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி விடயதானங்களை உட்புகுத்த வேண்டும். எமது சுதேச மற்றும் பாரம்பரிய அறிவையும்,

தொழில்நுட்பங்களையும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பயன்படுத்துவதை ஊக்குவிக்க வேண்டும். பொறுப்புகளைப் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். மனித ஆற்றலைக் கட்டியெழுப்ப வேண்டும். நிதி மற்றும் தொழில்நுட்ப வளங்களை விருத்திசெய்ய வேண்டும்.




Image Source - stgeorges.edu.pe

## முடிவுரை

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாடும் தமது நாட்டின் நிலைபேண்தகு அபிவிருத்திக்கு பொருத்தமான கல்வி முறையை, கலைத்திட்டத்தை, கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை வடிவமைத்துக் கொண்டிருக்கும், செயற்படுத்தி வரும் நிலையில், நாம் எமது நாட்டின் கல்வி பற்றி, குறிப்பாக எமது வடக்கு மாகாணத்தின் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான சவால்கள் பற்றியும், அவற்றினை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு தற்போதுள்ள கல்விச் செயற்பாடுகளின் இயலுமை மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சிந்தித்துப் பார்ப்பது பொருத்தமானதாகும்.

வடமாகாணத்தின் நிலைபேண்தகு அபிவிருத்திக்கான சவால்களை தீர்ப்பதற்கான வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். வடமாகாணத்திலுள்ள பாடசாலைகள், யாழ்பாணப் பல்கலைக்கழகம் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள், கரிசனையுடன் கருமமாற்ற வேண்டும். பொருத்தமான முறையில் சமுதாயக் கல்வி வழங்கப்பட வேண்டும். பொதுமக்கள் அறிவூட்டப்பட வேண்டும். புதிதாகச் சிந்திப்போம்; எமக்கான கல்வியைக் கண்டறிவோம்; நடைமுறை மற்றும் எதிர்காலச் சவால்களைத் தகர்த்தெறிவோம்.

## உசாத்துணைகள்


1. *UNESCO World Conference on Education for Sustainable Development, Learning Today for a Sustainable Future, **1012** November **2014**, AichiNa goya, Japan, Available at http://unesdoc.unesco.org/images/**0021/002173/217373**E.pdf, Retrieved on **03032014**.*
2. *UNESCO(**2014**), Green Schools Asia, http://www.unescogreenschools.org/pages/about_esd*
3. *UNESCO(**2013**), http://www.unescogreenschools.org/pages/about_esd*
4. *UNESCO (**2012**), From Green Economies to Green societies.*
5. *McKeown,R.(**2002**) Education for Sustainable Development Toolkit, Energy, Environment and Resources Center University of Tennessee,USA, http://www.esdtoolkit.org*
6. *Sedera,M(**2010**), Knowledge economy and general education, Economic Review, People Bank.*
7. *John Woollard, http://www.pgce.soton.ac.uk/IT/Curriculum/ICTAC/ESD*
8. *UNESCO(**2010**), Teaching and Learning for a Sustainable Future, A multimedia teacher education programme, http://www.unesco.org/education/tlsf/*

காலநடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையைப் பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதனை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.

**சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன்**




கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.

# கால்நடை வளர்ப்பின் மேம்பாட்டுக்கு சமூக ஊடகங்களைப் பயன்படுத்துதல்

இன்றைய நாட்களில் சமூக ஊடகங்களின் வகிபாகம் மிக முக்கியமானது. சகல துறைகளிலும் அதன் செல்வாக்கை தவிர்க்க முடியாதுள்ளது. நல்லதோ கெட்டதோ சமூக ஊடகம் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது. கால்நடை வளர்ப்புச் செயன்முறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இன்றைய நவீன கால்நடை வளர்பில் கணிசமான விடயங்களை சமூக ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்த முடிகிறது. இனிவருங் காலங்களின் அதன் பங்களிப்பு இன்னுமின்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இந்தக் கட்டுரை கால்நடை வளர்ப்பு விரிவாக்கத்தில் சமூக ஊடகத்தின் பங்களிப்பை ஆராய்கிறது. எவ்வாறெல்லாம் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி கால்நடை வளர்ப்பை மேம்படுத்தலாம் என தெரிவிக்கப் போகிறேன்.

இலங்கை போன்ற நாடுகளில் உள்ள கால்நடைகளின் உற்பத்தி திறன் (Productivity) கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அமைந்திருக்கவில்லை. பெரும்பாலான கால்நடை வளர்ப்பாளர்கள் மேம்படுத்தப்பட்ட முகாமைத்துவ முறைகளைக் கையாள்வது கிடையாது என்பதால் அவர்களின் வளர்ப்பு முறைகளில் மாற்றம் செய்வது அவசியமாகிறது. இதற்காக கடுமையான விரிவாக்கற் (Vigorous extension) செயன்முறை தேவைப்படுகிறது.

முன்பெல்லாம் ஒரு முக்கியமான விரிவாக்கல் (Extension) செயன்முறையை செய்யும் போது அங்கு நேரடியாக வரும் பயனாளர்களுக்கு மட்டுமே தகவல் போய்ச் சேர்ந்திருக்கும். உதாரணமாக, கறவை மாடு வளர்ப்பில் முக்கியமான உணவாக இருக்கும் ஊறுகாய்ப் புல்லைத் தயாரிப்பதை நேரடியாக பண்ணையாளர்களுக்குச் செய்து காட்டும்




Dept of Animal Husbandry and Dairying Ministry of FAHD முகநூல் பக்கம்
Image Source - web.facebook.com/DeptofAHD

போது, அங்கு வருகை தந்திருக்கும் குறித்த எண்ணிக்கையான பண்ணையாளர்கள் மாத்திரமே அதனை அறிந்து கொள்வார்கள். எனினும் இன்றைய சமூக ஊடகச் செயன்முறையுடன் அமைந்த விரிவாக்கல் முறைகள் காரணமாக மிகத் தொலைவில் வாழும் நபர்களும் பயன்பெற முடிகிறது. சமூக ஊடகப் பரப்பில் பல்வேறு வகையான பண்ணையாளர்களின் அனுபவங்கள், வெற்றிக்கதைகள், தோல்விக் கதைகள், கால்நடை வைத்தியர்களின் ஆலோசனைகள் எனப் பல முக்கியமான கால்நடை வளர்ப்பின் நுட்பங்கள் காணொளி வடிவில், எழுத்து வடிவில் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றைப் பயன்படுத்தி பலர் தமது பண்ணை வளர்ப்பை மேம்படுத்தியும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீன சமூக ஊடகங்களாக *Facebook, Whatsapp, Youtube, Instagram, Tiktok, linkedin, Telegram, X (Twitter)* போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஒரு நாட்டுக்கு என்று மட்டும் வரையறுக்கப்படாது, சர்வதேச ரீதியாகவும் இணைந்துகொள்ள வழிசமைக்கின்றன. நான் தமிழ்நாட்டிலுள்ள பல கால்நடை வைத்தியர்களின் *whatsapp, Telegram, Facebook* குழுமங்களில் இணைந்திருப்பதால் அங்குள்ள கால்நடை வைத்தியர்களின் தகவல்கள், பிரச்சினைகள், வாய்ப்புகள் மற்றும் நவீன நுட்பங்கள் பற்றி அறிய முடிகிறது. பல பன்னாட்டுக் கால்நடை மருத்துவ மற்றும் ஏனைய கால்நடை தொடர்பான *Facebook, Telegram, Youtube* குழுக்களை *subscribe* செய்து இணைந்ததன் காரணமாக அந்தந்தப் பகுதிகளின் பல முன்னேற்றகரமான விடயங்களை அறிந்து கொள்ள முடிகிறது. இதே போல் பல பண்ணையாளர்களும் பல குழுக்களில் இணைந்து பயனடைகிறார்கள்.

கால்நடை வளர்ப்பை மேம்படுத்தக் கூடிய சமூக ஊடகங்களும் செயற்பாடுகளும்

### 1. Facebook

கால்நடை வளர்ப்புத் தொடர்பான விடயங்களைத் தரத்தக்க குழுக்கள் (*Groups*), பக்கங்கள் (*Pages*) போன்றவற்றை உருவாக்கி பண்ணையாளர்கள், கால்நடை வைத்தியர்கள், கால்நடைத் தொழில்நுட்பவியலாளர்களை இணைக்கலாம். நான் எனது *Facebook* தளத்தில் அன்றாடம் எனது தொழில் வாழ்க்கையில் சந்திக்கும் சவால்களை, புதிய விடயங்களைப் பதிவிடுகிறேன் என்பதை அறியத் தருகிறேன். எனக்குத் தெரிந்து உலகளாவிய ரீதியில் பல கால்நடை வைத்தியர்கள், பண்ணைகள், அமைப்புகள், கால்நடை வளர்ப்புத் தொடர்பான தொழிற்சாலைகள், கடைகள், அரச அமைப்புகள் போன்றன இந்த மாதிரி பக்கங்களையும் குழுக்களையும் கொண்டுள்ளன. பார்வையாளர்கள் அந்தக் குழுக்களில் இணைவதன் மூலம் தகவல்களைத் தொடர்ச்சியாகப் பெறமுடியும் (இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள *DAPH extension*, இந்தியக் கால்நடைத் துறையின் *Dept*


*of Animal Husbandry and Dairying Ministry of FAHD* போன்றன முக்கிய *Facebook* பக்கங்கள்). தொடர்ச்சியான தகவல் பதிவுகள் மூலம் பயனாளர்களை தொடர்ச்சியாகப் பேணமுடியும். மேலும் *Facebook live* மூலம் பல நேரடியான தகவல்களை வழங்கமுடியும் என்பதுடன் பண்ணையாளர்களின் கேள்விகள் மற்றும் கருத்துகளுக்கு (*Comments*) அமைய பதிவுகள் (*Posts*) கருத்துகளை (*Comments*) திட்டமிடலாம். அதிகளவில் பதிவுகளைப் (*Posts*) பகிர்வதன் (*share*) மூலம் பல பயனாளர்களையும் அடையமுடியும். கட்டணம் செலுத்தி விளம்பரம் செய்வதன் (*Post Boost*) மூலம் மேலும் பயனாளர்களை அடைய முடியும்.

## 2. Whatsapp

மிகப் பிரபலமான சமூக ஊடகம். குழுக்களை உருவாக்கி கால்நடை வளர்ப்புத் தொடர்பான தகவல்களைப் பரிமாற முடிகிறது. இது தகவல் பெறுநர்களும் பதிவிடத்தக்க செயலியாகும். கால்நடைகளின் நோய், பண்ணை மேலாண்மை தொடர்பான பல ஆலோசனைகள், காணொளி மூலம் பண்ணையாளர்களால் பெறப்படுகின்றன. நான் இலங்கை மற்றும் இந்தியாவின் கால்நடை வைத்தியர்கள் மற்றும் வளர்ப்பாளர்களின் குழுக்களில் இருந்து பல தகவல்களைப் பெறுவதோடு எனது பண்ணையாளர் குழுக்களின் மூலம் பல தகவல்களை வழங்குகிறேன். உலகளாவிய ரீதியில் பண்ணை விலங்குகள், பொருட்களை விற்பதில் பல *Whatsapp* குழுக்கள் உதவி புரிகின்றன. நுகர்வோர் பலர் இதன் மூலம் பயனடைகின்றனர்.


## 3. Youtube

தகவல்களை காணொளி வடிவில் வழங்கும் முக்கிய ஊடகமாகும். கால்நடை வைத்தியர்கள், பண்ணையாளர்கள் தங்கள் பதிவுகளை காணொளிகளாக வெளியிடுகின்றனர். வெற்றிக்கதைகள், மருத்துவ ஆலோசனைகள், *Webinars* போன்றவற்றை வெளியிட்டு பாரியளவு பயனாளரை அடையமுடிகிறது. பயனாளரின் எண்ணிக்கைக்கு அமைய வருமானத்தையும் பெறமுடிகிறது. இது அண்மைக்காலத்தின் மிகச் சக்திமிக்க ஊடகம். இதன் மூலம் இலகுவாக பண்ணையாளர்கள் கவரப்படுகின்றனர். இங்கும் *Youtube* நேரலை மூலம் பயனாளரை நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும். அண்மைக்காலத்தில் *Youtube Podcast* பிரபலமடைந்து வருகிறது. பொருத்தமான




DAPH extension முகநூல் பக்கம்

Image Source - web.facebook.com/DAPH-extension




**கால்நடை வளர்ப்புத் தொடர்பான youtube காணொலிகள் சில**

Image Source - www.youtube.com/results?search_query=cattle+farming

கால்நடை வளர்ப்பு வல்லுநர்களின் *podcasts* இனைக் கேட்டு பயனுள்ள தகவல்களைப் பெறலாம்.

### 4. Instagram

தரம்மிக்க கால்நடை வளர்ப்பின் விடயங்களடங்கிய தெளிவான புகைப்படங்களைப் பதிவிடுவதன் மூலம் இளம் சந்ததியைக் கவர முடிகிறது. *Instagram* இல் அதிகம் இளைஞர்களே உள்ளனர்.

### 5. Tiktok

சிறிய காணொளிகளை பதிவிட முடியும். மிக விரைவாக பலரைச் சென்றடைவதால் இது சிறந்த விரிவாக்கல் செயலியாக அமைகிறது. இதுவும் இளைஞர்களைக் கவரக் கூடியது. சீனச் செயலி என்பதால் இந்தியாவில் தடையிலுள்ளது.

### 6. Telegram

கால்நடை வளர்ப்புத் தொடர்பான காணொளிகளை அதிக தரவு (*Memory*) உள்ள புத்தகங்களையும் காணொளிகளையும் இலகுவாகப் பகிரமுடியும். நான் பல கிடைத்தற்கரிய கால்நடை மருத்துவப் புத்தகங்களை *pdf* வடிவில் இந்த தளம் மூலமே பெற்றுள்ளேன்.

### 7. zoom செயலி / Google meet

அண்மைக்காலத்தில் கருத்தரங்குகள் பல *zoom*, *Google meet* போன்றவற்றின் மூலம் நிகழ்த்தப்படுகின்றன. *Powerpoint Presentation* களை பகிர்வதன் மூலம் இவற்றின் செயற்திறன் மேம்படுத்தப்படுகிறது. பார்வையாளர்கள் நேரடியாகக் கேள்விகளைக் கேட்டு பதில்களைப் பெற முடிகிறது. இங்கு பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளை *Youtube* போன்ற ஏனைய தளங்களில் பதிவிடவும் முடியும்.

### 8. இணையத்தளங்கள் மற்றும் Blog Pages

எழுத்து வடிவான பல தகவல்களை இணையத்தளம் மற்றும் *Blog Pages* மூலம் வழங்க முடியும். சிறிய பதிவுகள் முதல் பெரிய




கட்டுரைகள் வரை இவற்றிலுள்ளது. இந்தக் கட்டுரையும் ஒரு இணையத்தள கட்டுரையே. எனது பல பதிவுகளை என் தனிப்பட்ட *Blog* மூலமும் பதிவிடுகிறேன்.

**சமூக ஊடகங்கள் மூலம் கால்நடை வளர்ப்புச் செயற்பாட்டை திட்டமிடலும் செயற்படுத்தலும்**

யாருக்கு இந்த விரிவாக்கல் செயற்பாட்டைச் செய்யப் போகிறோம் என்பது மிக முக்கியமானது. பண்ணையாளர்கள், கால்நடை வைத்தியர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் எனப் பலர் பயனாளர்களாக அமைவார்கள். அவர்களுக்கு பொருத்தமாக தளங்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் (*Facebook, Whatsapp, Youtube, Zoom, Instagram*).

கால்நடை நோய்கள், உணவூட்டல் முறைகள், இனப்பெருக்க நுட்பங்கள், சந்தை முறைகள், வெற்றிக் கதைகள், தோல்விக் கதைகளை

பொருத்தமான முறைகளின் மூலம் பயனாளர்களுக்கு முறையாகத் தயாரித்து வழங்க வேண்டும். பொருத்தமான காணொளிகள், புகைப்படங்கள், தகவல் படங்கள் (Infographic), கட்டுரைகள், பதிவுகளை கவனமாகத் திட்டமிட்டு வழங்க வேண்டும். முன் தயாரிப்பு மிக அவசியம். வழங்கப்படும் தகவல்கள் இலகுவாக, சகலரும் புரிந்து கொள்ளத்தக்கதாக அமைய வேண்டும். கடினமான பதிவுகள் கவனிக்கப்படாமல் போகலாம். அண்மைக் காலத்தில் குறுகிய பதிவுகளே விரும்பப்படுகின்றன. இதனால் செறிவான தகவல் முறை அவசியம்.

தொடச்சியான பதிவுகள் (Continuous Posts) அவசியம். இல்லாது போனால் பயனாளர்கள் வேறு பக்கம் போய்விடுவார்கள். பண்ணையாளர்களின் கேள்விகளுக்கு சரியான பதில்களை வழங்கும் போது அவர்கள் மேலும் மேலும் ஈடுபாட்டுடன் செயற்படுவார்கள். சரியான தகவல்களே வழங்கப்பட வேண்டும். பதிவுகளின் நம்பகத்தன்மை கெட்டால் பிறகு யாரும் பதிவுகளைப் பார்க்க மாட்டார்கள். புதிய, அண்மைய தகவல்களாக அமைவது சிறப்பு. இதற்காக நவீன சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகளைப் பயன்படுத்தலாம்.

பண்ணையாளர்களின் பதிவுகள் உள்ளூர் மொழியில் இடம்பெறும் போது புரிந்து கொள்ளும் தன்மை அதிகரிக்கும். எனினும் கால்நடை வைத்தியர்களுக்காக நடாத்தப்படும் செயற்பாடுகள் ஆங்கிலத்திலும் இருக்கலாம். பதிவுகளில், பயனாளர்களின் வருகை மற்றும் ஈடுபாட்டை தொடர்ச்சியாக அவதானிக்க வேண்டும். வருகை மற்றும் ஈடுபாடு குறைவான பதிவுகளை மாற்றம் செய்வதோடு, அதிக ஈடுபாடான தகவல்களுடைய பதிவுகளை இடலாம். பயனாளர்களின் பிரதிபலிப்புகள் பதிவாளரின் தரத்தை மேம்படுத்தும். தவறுகளைத் திருத்த வழி ஏற்படுத்தும்.

## இணைய வழியான நிகழ்நிலைச் செயற்பாடுகள்

அண்மைக் காலத்தில் பல நிறுவனங்களும் அமைப்புகளும் இணையவழி மூலமான நிகழ்நிலைச் செயலிகள் மற்றும் சமூக ஊடகங்களைக் கொண்டு பல அமர்வுகளை நடாத்துகின்றன. பல்கலைக்கழகங்களும் பாடசாலைகளும் பல விரிவுரைகளை இந்த முறையிலேயே அதிகம் செய்கின்றன. நான் அமெரிக்கா - புளொரிடா பல்கலைக்கழகத்தால் நிகழ்த்தப்பட்ட zoom மற்றும் சமூக ஊடக இணைவிலான நவீன கால்நடை வளர்ப்புத் தொடர்பான சிறு கற்கைநெறியை, இலங்கையிலிருந்தபடியே செய்திருந்தேன்.

எனது பதவியுயர்வுக்குத் தேவையான பல பாடநெறிகளையும் கருத்தரங்குகளையும் நிகழ்நிலைச் செயலிகள் மூலம் செய்திருக்கிறேன். பல உள்ளூர்ப் பயிற்சி நெறிகளும் தற்போது இணைய வழியில் இடம்பெறுகின்றன.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் சிறு கைத்தொழில் பிரிவு மூலம், நாடளாவிய ரீதியில், பண்ணையாளருக்கு ஆடு வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புத் தொடர்பான நிகழ்நிலைக் கருத்தமர்வுகளை நடாத்தியிருக்கிறேன். கொவிட் நிலைமையின் பின், நிகழ்நிலைக் கருத்தமர்வுகள் அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக, நவீன சமூக ஊடகங்கள் மற்றும் இணைய ஊடகங்களின் மூலம் கால்நடை வளர்ப்பு விரிவாக்கல் சேவைகளை பண்ணையாளர்கள், கால்நடை வைத்தியர்கள் மற்றும் ஏனைய விரிவாக்கல் அதிகாரிகள் பயன்படுத்தி முன்னேற்றமடைய முடியும்; கால்நடை உற்பத்திகளை அதிகரிப்பதோடு உற்பத்தித் திறனையும் மேம்படுத்த முடியும்.

நவீன மாற்றங்களைச் சரிவர அவதானிக்காத துறைகள் பாதிப்படைவது திண்ணம். கால்நடை வளர்ப்பும் அதற்கு விதிவிலக்கு கிடையாது.

(தொடரும்)

# வணிகம் – தொழில்நுட்பம் – நிதி ;

## முப்பது வருட அனுபவத்திலிருந்து முப்பது பாடங்கள்

கணபதிப்பிள்ளை ரூபன்



திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில்நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.

கந்தரூபன் (ரூபன்) கணபதிப்பிள்ளை அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.




Image Source - www.desiblitz.com

**"இடுக்கண் வருங்கால் நகுக அதனை**
**அடுத்தூர்வது அஃதொப்ப தில்"**

**திருக்குறள் (621)**

**மு. கருணாநிதி விளக்கம் :** *சோதனைகளை எதிர்த்து வெல்லக் கூடியது, அந்தச் சோதனைகளைக் கண்டு கலங்காமல் மகிழ்வுடன் இருக்கும் மனம்தான்.*

இ

*னது உயர் படிப்பை ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழகத்தில் முடித்துவிட்டு, முப்பது வருடங்களுக்கு முன் (1994 ஆம் ஆண்டு) ஐக்கிய அமெரிக்காவில் எனது தொழில் வாழ்க்கையை தொடங்கினேன். இந்த முப்பது வருடங்களில் மூன்று உலகளாவிய நிறுவனங்களிலும் இரண்டு ஆரம்பத் தொழில்நுட்ப நிறுவனங்களில் ஓர் ஆரம்பப் பங்காளராகவும் வேலை செய்து பல வெற்றிகளை அடைந்திருக்கிறேன். அந்த பயணத்தின் போது நான் பெற்ற அனுபவங்களை மூன்று வகையான தலைப்புகளுக்குக் கீழே கூறலாமென்று இருக்கிறேன்.*

## வணிகம் (Business):

1. ***சந்தைப் பொருத்தம் (Market Fit):*** *பொருள் உற்பத்தியை அதன் சந்தைப் பொருத்தத்துடன் தொடங்குவது மிக முக்கியமானது. பலருக்கு பல அனுபவங்கள், சிந்தனைகள், திறமைகள் இருக்கலாம். ஆனால் ஓர் நிறுவனம் தொடங்குவதற்கு மிக முக்கியமானது உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தைப்படுத்துவதும் முதலீட்டாளர்களுக்கு இலாபம் பெற்றுக் கொடுப்பதும் ஆகும்.*

2. ***நல்ல போட்டியாளர் (Competition is good):*** *சிறப்பாகச் சிந்திக்கக் கூடிய போட்டியாளர் நம்மையும் அவருக்கு இணையாகச் சிந்திக்கத் தூண்டுவார். அவருடன் போட்டி போடுவதன் மூலம் எம்மாலும் அவருக்கு இணையாகச் சந்தையைக் கைப்பற்ற முடியும். இதன் மூலம் சந்தை விழிப்புணர்வு அதிகரிக்கும்.*

3. ***வாடிக்கையாளருடன் நேரடித் தொடர்பு (Direct Customer Interaction):*** *வாடிக்கையாளர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்வதன் மூலம் நாம் செய்யும் பொருளைப் பற்றிய வாடிக்கையாளர்களின் அபிப்பிராயத்தை அறியலாம். குறித்த பொருள் பற்றிய வாடிக்கையாளர்களின் கருத்துகள் அப் பொருளின் முக்கியத்துவத்தை அதிகரிக்கும்.*

4. ***வாடிக்கையாளர்களின் வாடிக்கையாளர்களை அறிவது:*** *இதை அறிவதன் மூலம் நாம் உருவாக்கும் பொருட்களை எவ்வாறு சந்தைப்படுத்துவது என்பதையும் பொருளின் மதிப்பையும் அறிய முடியும். இது உற்பத்தி செய்யும் பொருட்களின் விலையைத் தீர்மானிக்க உதவியாக இருக்கும்.*

5. ***பொருளின்/சந்தையின் தன்மை:*** *ஓர் நிறுவனம் உருவாக்கும் பொருளை இன்னொரு நிறுவனத்திற்கோ (B2B) அல்லது நேரடியாகப் பாவனையாளர்களுக்கோ (B2C) விற்க முடியும். எனது இரு நிறுவனங்களும் 'B2B' நிறுவனங்கள். பிற நிறுவனங்கள் மூலமாக எமது பொருட்களை விற்பதன் மூலம் எமது வியாபாரத்தை விரிக்க முடிந்தது.*

6. ***நிதி வழிகளை அறிதல் (Understanding Finan cials):*** *நிதி வழிகளையும் அதன் விளைவுகளையும் அறிந்து கொள்ளுவது வியாபாரத்தில் மிக முக்கியமானது.*

7. ***பழைய சந்தை – புதிய அணுகுமுறை (Old Market – New Approach):*** *புதிய அணுகுமுறை மூலம் ஓர் பழைய பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலம் உற்பத்திகளை இலகுவாகச் சந்தைக்குக் கொண்டுவர முடியும்.*

8. ***பலவகையான வாடிக்கையாளர் (Diverse Customers):*** *ஒரே வகையான வாடிக்கையாளரை மனத்தில் கொண்டு நிறுவனங்களைத் தொடங்குவது மிக ஆபத்தானது. அந்த ஒரே வகையான வாடிக்கையாளர்கள் மனதை மாற்றிக்கொண்டால் நிறுவனத்திற்கு*

வாடிக்கையாளர் இல்லாமல் போய்விடும். பல வகையான வாடிக்கையாளர்களை மனதில் கொண்டு பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் நிறுவனத்தின் திசையை மாற்றமுடியும்.

9. **அவதானமான பங்குடமை (*Careful partnership*):** சக நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்வதன் மூலம் வியாபாரத்தை விரிபுபடுத்த முடியும். ஆனால் சிறப்பாக இயங்காத நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்வதைத் தவிர்க்க வேண்டும்.

10. **ஆக்கபூர்வமான செலவு:** வருமானம் வரும்வரை செலவுகளைக் குறைப்பது முக்கியம். விற்பனையாளர்களுடன் உரையாடுவதன் மூலம் செலவுகளைக் குறைக்கவோ, தள்ளிப்போடவோ முடியும். அதன் மூலம் இயங்கும் காலத்தை அதிகரிக்க முடியும்.

## தொழில்நுட்பம் (Technology):

1. **வலுவான அடித்தளம் (*Strong Foundation*):** செய்யும் செயலில் வெற்றி அடைவதற்கு அதன் அடித்தளத்தைப் பலமாக வைத்திருப்பது அவசியம். பாடசாலைக் கல்வி மூலமும், சின்ன வயதில் பெறும் அனுபவங்கள் முலமும், சிறந்த நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமும் அதனை அடையலாம்.

2. **எளிமை (*KISS – Keep It Simple Stupid*):** கடினமான தேவைகளுக்கும் சிக்கலான பிரச்சனைகளுக்கும் எளிமையான அணுகுமுறைகளே பொருத்தமானது.

3. **ஆரம்பத்திலிருந்தே விரிவாக்கும் திட்டத்தைப் பின்பற்றுதல்:** அதிகமாக உற்பத்தி செய்து அதிகமாக விற்பனை செய்வதிலேயே நிறுவனத்தின் வெற்றி தங்கியுள்ளது. ஆரம்பத்திலிருந்தே அதை மனதில் கொண்டு திட்டங்கள் போட்டு, முடிவுகளை எடுக்க வேண்டும்.

4. **தனித்துவம்:** ஏனையவர்கள் செய்வது போலன்றி வித்தியாசமாகவும், மதிப்புகளை அதிகரிக்கக்கூடிய முறையிலும் தொழில்நுட்பத்தை உருவாக்குவதன் மூலம் வாடிக்கையாளர்களையும் புதிய சந்தைகளையும் கண்டடைய முடியும்.

5. **பொருத்தமான உற்பத்தி :** இறுதிப் பாவனையாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பது மட்டுமன்றி அவர்களது கட்டுமானத்துக்குள் பொருந்தக்கூடியதாக பொருளை உற்பத்தி செய்வதன் மூலம் ஒருங்கிணைப்பு வேகத்தை அதிகரிக்க முடியும்.

6. **முழுமையான அணுகுமுறை (*Holistic Approach*):** முழுமையான அணுகுமுறை மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதன் மூலம் அதன் விளைவுகளை அதிகரிக்க முடியும். முழுமையான தீர்வு மூலம் வாடிக்கையாளர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன், முன்பு கூறப்படாத அவர்களது பிரச்சினைகளையும் அறிய முடியும். அதன்மூலம் எமது வியாபாரத்தை அதிகரிக்கலாம்.

7. **குழு அமைப்பு (*Team Composition*):** முதலில் உருவாக்கும் அணியினர் புதுத் தொழில் நிறுவனங்களை அமைப்பதில் மிக முக்கியமானவர்களாவர். வேறுபட்ட அனுபவங்கள், கல்வி, வாழ்க்கைப் பின்னணி கொண்டவர்களை ஒரு அணியில் இணைத்தால், அவர்கள் பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமாகத் தீர்வு காண உதவுவார்கள்.

8. **தவறுகளைத் தவிர்த்தல் :** பின்னடைவுகளிலிருந்து பாடங்கள் கற்றுக் கொள்ளுங்கள். பெரிய தவறுகளைத் தவிருங்கள். ஆரம்ப நிறுவனங்களில் நேரமும் பண வளமும் குறைவாக இருப்பதால், தவறுகளைக் குறைப்பதன் மூலம் எமது வெற்றிக்கான சாத்தியங்களைக் கூட்டலாம்.

9. **மூல காரணங்களை அறிதல் (*Identify the root cause*):** சிக்கலான பொருட்களை உருவாக்கும் போது அதில் பிழை ஏற்படும் சந்தர்ப்பம் அதிகமாக இருக்கும். அதை மூடி மறைக்காமல், அந்த பிழைக்கான மூல காரணங்களை அறிந்து, சரி செய்வதன் மூலம், சரி செய்வதற்கான நேரத்தையும் குறைத்து அதனைச் சிறப்பாகத் திருத்தவும் முடியும்.

**10. பக்கவாட்டுச் சிந்தனை (Lateral Thinking):** ஓர் பிரச்சினையைத் தீர்க்க, அதே போன்ற இன்னொரு பிரச்சினையைச் சமாந்திரமாக வைத்து, அப் பிரச்சனையைத் தீர்த்த வழியையே பயன்படுத்தி, புதிய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்.

## நிதி (Finance):

1. **நீண்ட கால முதலீடு :** நிதிச் சந்தையில் அதன் வட்டி வீதமும், பங்குகளின் விலைகளும் ஏறி இறங்கி வரும். ஆனால் நீண்ட கால இயக்கத்தில் அவை அதிகரித்துச் செல்லும். இதை அறிந்து முறையாக முதலீடு செய்வதால் நீண்ட காலத்தில் சிறப்பாக இலாபம் சம்பாதிக்க முடியும்.

2. **முன்கூட்டியே முதலீடு செய்யத் தொடங்குதல் (Start Investing Early):** தொழில் தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே சிறிய பணத்தையாவது முதலீடு செய்வதால் நீண்ட காலத்தில் அதன் வருமானம் பல மடங்காக அதிகரிக்கச் சந்தர்ப்பம் ஏற்படும்.

3. **நிறுவனப் பங்களிப்பு (Company Contribution):** ஐக்கிய அமெரிக்காவில் 410 (k) என்றும், இலங்கையில் ETF/EPF என்றும் தொழிலாளர் வைப்புத் திட்டத்திற்கு நிறுவனங்கள் சிறிது பணத்தைப் பங்களிப்பார்கள். இதனால் தொழிலாளர்கள் பிற்காலத்தில் ஓய்வு பெறும்போது நல்ல சேமிப்புக் கிடைக்கும். இதனை முன்கூட்டியே பங்களிப்பதன் மூலம் எமது சேகரிப்பை பெரிதாக்க முடியும்.

4. **வரிக்கு முந்தைய முதலீடு (Pre – tax investing on IRA):** சில நாடுகளில், அரசாங்க வரிக்கு முன்னரே, சம்பளத்தில் ஒரு பகுதியை முதலீடு செய்வர். இம் முதலீடானது, ஓய்வு பெறும் காலத்தில், உங்களது சேமிப்பை அதிகரிக்க உதவும்.

5. **வீடு, காணிகளில் முதலீடு செய்தல் (Real estate Appreciates):** வீடு, காணிகளின் விலை நீண்ட காலத்தில் எப்போதும் அதிகரித்துக் கொண்டே போகும். அதில் முதலீடு செய்வதன் மூலம் எமது வளத்தை அதிகரிக்க முடியும்.

6. **கூட்டு வருமானம் (Compound Returns) :** முன்கூட்டியே பல்வேறு முதலீடுகளைச் செய்வதன் மூலம் சேமிக்கும் பணத்தின் அளவை பல மடங்கு அதிகரிக்கலாம். அது கூட்டு வருமானமாக இருக்கும்.

7. **நிதிச் சொல்லியல்களை அறிதல் (Financial Terminologies):** ஓர் நிறுவனத்தை ஆரம்பிப்பதென்றாலும் அல்லது பெரிய நிறுவனங்களில் வேலை செய்வதென்றாலும், அத்தகைய நிறுவனங்கள் பயன்படுத்தும் நிதிச் சொல்லியல்களை அறிந்து இருப்பதன் மூலம் சுலபமாக ஏனையோருடன் உரையாட முடியும்.

8. **நீண்ட காலச் சிந்தனை (Think Long Term):** பணத்தை குறைந்த காலத்தில் உழைப்பது அல்லது சேர்ப்பது என்பதற்கான சாத்தியம் குறைவு. அதனால் நீண்ட கால நோக்கில் சிந்திப்பதன் மூலம் உறுதியான நடைமுறைகளை அனுசரிக்க முடியும். அதன் மூலம் குறைந்த காலத்தில் வரும் ஏற்ற இறக்கங்களைத் தவிர்க்க முடியும்.

9. **பல்வகைப்படுத்தல் (Diversify):** இருக்கும் வருமானத்தையும் முதலீடுகளையும் பல்வகைப்படுத்துவதன் மூலம் பொருளாதார ஏற்றம் இறக்கம் ஏற்படும் போது, நாம் அதைச் சமப்படுத்த முடியும்.

10. **நிலையான முதலீட்டு மேலாண்மை (Passive Investment Management):** பங்குச் சந்தையிலோ வேறு இடங்களிலோ முதலீடுகளை நாளாந்தம் மாற்றாமல் அதை ஓர் நிலையான உத்தியுடன் நிரிவாகிப்பதன் மூலம் அதனால் வரும் ஏற்ற இறக்கங்களைத் தவிர்க்கலாம்.

இங்கு அனுபவம் என்பதையும் தாண்டி ஒருவருக்கொருவர் உதவுவதும் அவசியமானது. மற்றவர்களின் பிரச்சினைகளுக்காகவும் கொஞ்சம் நேரம் செலவழியுங்கள். கேள்விகளைக் கேளுங்கள். தேவையற்ற விமர்சனங்களைத் தவிருங்கள். கடினமான காலங்களில் அமைதியோடு செயலாற்றுங்கள். நீங்கள் ஏனையவர்களுக்கு எப்படிப் பதிலளித்தீர்கள் என்பதை மக்கள் நினைவில் வைத்துக் கொள்கிறார்கள் என்பதை மனதில் இருத்துங்கள். இவை நான் கடந்த மூன்று தசாப்த கால பணிக் காலத்திலும், ஐந்து தசாப்த கால வாழ்க்கையிலும் கற்றவை. அவை உங்களுக்கும் உதவியாக இருக்கும் என்று நம்பி இங்கு பகிர்கிறேன்.

(தொடரும்)

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. ‘இந்திய வம்சாவளித் தமிழர்கள்’ எனும் பெயரோடு ஆரம்பித்த இரு நூற்றாண்டுப் பயணம் ‘மலையகத் தமிழர்’ எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. இதனை நினைவுபடுத்துவதாகவும் மீட்டல் செய்வதாகவும் ‘மலையகம் 200’ நிகழ்வுகள் உலகு தழுவியதாக நடைபெற்றன. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அதற்கேற்ப, விம்பம் அமைப்பு எழுநாவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது. இப் போட்டியில் வெற்றி பெற்ற வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகள் ‘மலையகம் 200’ எனும் தலைப்பில் தொடராக எழுநாவில் வெளியாகின்றன.

யோகராசா மோகதாசன்

‘மலையகம் 200’ நிகழ்வுகளை முன்னிட்டு, விம்பம் அமைப்பினரால் எழுநாவின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யோகராசா மோகதாசன் அவர்களால் எழுதப்பட்ட ‘மலையகம் : கடந்து வந்த பாதையும் காலூன்றி நிற்கும் நிலமும்’ எனும் இக் கட்டுரை ஆறுதல் பரிசைப் பெற்றது.



# மலையகம் : கடந்து வந்த பாதையும் காலூன்றி நிற்கும் நிலமும்

## வரலாறு

மலையகம் என்பதன் பொதுவான அர்த்தம் பரந்துபட்டது. மலையகத் தமிழ் சனத்தொகையின் அளவு இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 5.6 வீதமாக அமைந்துள்ளது. இவர்கள் இலங்கையின் சில மாவட்டங்களில் செறிவாகவும் பல மாவட்டங்களில் பரவலாகவும் வாழ்ந்து வருகின்றனர். மலையக அதிகார சபைச் சட்டமானது (2018, இல. 32), பெருந்தோட்டப் பிராந்தியம் எனப்படும் பகுதியை, இலங்கையின் மத்திய - ஊவா - சப்ரகமுவ - மேல் - தென் - வடமேல் ஆகிய மாகாணங்களை ஊடறுக்கும், பொருளாதாரப் பயிர்ச்செய்கையாக தேயிலை - இறப்பர் - கோப்பி முதலான பயிர்களை நிறுவன ரீதியாக முன்னெடுக்கும் பகுதியாக அடையாளம் செய்கின்றது.

இந்தப் பெருந்தோட்ட பிராந்தியத்தில் வாழும் தோட்டத் தொழில் செய்கின்ற, தோட்டத் தொழில் செய்யாத அனைவரையும் சேர்த்ததாக, பெருந்தோட்டச் சமூகம் ஒரு அடையாளப்படுத்தலைத் தருகிறது. ஒட்டுமொத்த பதினைந்து இலட்சம் மலையகத்



Image Source - cafebistro.lk

தமிழர்களில் சுமார் பத்து இலட்சம் அளவினர், அதாவது பெரும்பாங்கான மூன்றில் இரண்டு பங்கினர், இந்தப் பெருந்தோட்டச் சமூகம் மற்றும் பொருளாதார வலயங்களுக்குள் அடங்கி விடுகின்றனர். இவர்கள் இங்கே லயன் எனும் குடியிருப்பு முறைமைக்குள் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்களாகவும், கல்வி - சுகாதாரம் - போக்குவரத்து - தபால் - தொலைத் தொடர்பு முதலான சமூக உட்கட்டமைப்பு விடயங்களில் பெருந்தோட்டக் கம்பனிகளின் ஊடாகவும், அரசினால் பகுதி அளவிலும் நிர்வகிக்கப்படுகின்ற ஒரு சமூகமாகவும் உள்ளனர்.

1815 ஆம் ஆண்டு வரை இலங்கை கரையோரப் பிராந்தியத்தில் மாத்திரமே ஆட்சியுரிமை கொண்டிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம், மலையக மன்னனாக விளங்கிய ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கனைத் தோற்கடித்து கண்டியைக் கைப்பற்றியதுடன் 'சிலோன்' என்று அழைக்கப்பட்ட இலங்கை ஒட்டு மொத்தமாக ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டது. அவர்கள் இலங்கையையும் தமது மற்றுமொரு குடியேற்ற நாடாக மாற்றினர். இலங்கை மீது படையெடுக்கவும் அரசைக் கொண்டு நடத்தவும், பிரித்தானிய அரசிற்கு பெருந்தொகையான செலவேற்பட்டிருந்தது.

இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்த வர்த்தகப் பொருட்களான கறுவா, யானைத்தந்தம், ஏனைய வாசனைத் திரவியங்கள், இரத்தினக்கல் மூலம் போதியளவு அந்நியச் செலாவணியை அவர்களால் உழைக்க முடியவில்லை. 1823 ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் கம்பளை என்ற தோட்டத்தில் 150 ஏக்கர் கோப்பி தோட்டமொன்றை 'ஹென்றி பேர்ட்' மற்றும் அவரது சகோதரர் 'ஜோர்ஜ் பேர்ட்' ஆகியோர் இணைந்து அப்போது இலங்கையின் ஆளுநராகக் கடமையாற்றிய 'எட்வர்ட் பாண்ஸ்' அவர்களின் உதவியுடன் ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து சுமார் பத்து வருட காலத்திலேயே ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலும், அதன் பின் இலட்சக்கணக்கான ஏக்கர்களிலும் கோப்பிச் செய்கை மலைநாட்டுப் பிரதேசத்தில் பெருக ஆரம்பித்தது. இத்தகைய தோட்டங்களில் வேலை செய்ய பெருந்தொகையான கூலியாட்கள் தேவைப்பட்டனர். உள்நாட்டு மக்கள் இதனை விரும்பாத காரணத்தினால், அருகில் உள்ள தமிழ் நாட்டிலிருந்து கூலியாட்களை கூட்டி வருவதென்று முடிவடுக்கப்பட்டது. கண்டியிலே வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன என்று பொய்ப்பிரச்சாரம் செய்யப்பட்டது.

தலைமன்னாரிலிருந்து கண்டிக்கு வரும் 181 மைல் பாதை இலகுவாக நடந்து வரக் கூடிய பாதை அல்ல. அடர்ந்த காட்டிலும் மலைகளிலும் ஏறியும் பள்ளங்களில் இறங்கியும் நடக்கும் பாதையில் பாதி உயிர் போய்விடும். எஞ்சியிருப்போர் மிருகங்களினால் தாக்குதலுக்கு உள்ளாவார்கள். கொலரா, மலேரியா போன்ற நோய்களும், வேறு வகைக் காய்ச்சல்களும் உயிரைக்காவு கொள்ளும். மேலும் கடும் மழை, வெயில், குளிர், இரத்தம் குடிக்கும் அட்டைகள் என அவர்கள் சந்தித்த இன்னல்கள் அதிகம். இப்படி அவர்கள் கண்டியை அடையும்போது பாதிப்பேர் இறந்திருப்பார்கள். இதனை அறிந்து வைத்திருந்த கங்காணிகளும் தரகர்களும், தேவைப்பட்டது 150 பேர்களாயின் 300 பேரை அழைத்துப் போவார்கள். மிகுதி 150 பேரை செல்லும் வழியில் பலி கொடுப்பார்கள். இவர்கள் எங்கு சென்றபோதும் மரணமும் பத்தடி தள்ளிப் பின்னாலேயே சென்றது.

தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து அவர்கள் செய்த வேலைக்குக் கூலியாக சொற்ப பணத்தினையே கொடுத்தார்கள். இந்தச் சொற்ப பணத்திற்காக, மலையக மக்கள் ஏன் இத்தனை தூரம் கால்நடையாக வந்து, பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் துன்ப துயரங்களைச் சகித்துக்கொண்டு தம் உழைப்பை விற்றனர் என்பதற்கு ஆய்வாளர்கள் பல காரணங்களைக் குறிப்பிட்டுள்ளனர். அவற்றுள் முக்கியமானது, தமிழ் நாட்டில் ஏற்பட்ட வரட்சியும், பஞ்சமும், பட்டினியும்; அதனால் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக மாண்டொழிந்து போனமை. அடுத்து, சாதிக் கொடுமை - அடக்குமுறை - தீண்டாமை என்பன தலைவிரித்தாடி மக்களைக் கொடுமைப்படுத்தியமை. இவற்றில் இருந்து தப்புவதற்கும், தாம் அடகு வைத்த நிலபுலன்களை மீட்கவும் பலரும் கண்டிச் சீமைக்கு வந்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த புகழ்பெற்ற அமெரிக்கரான ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் "கூலிகள் டின்னில் அடைக்கப்பட்ட புழுக்களைப் போல் கொண்டுவரப்பட்டனர்." என்று ஒருமுறை குறிப்பிட்டார். டொனோவன் மொல்ட்ரிச் என்பவரின் 'பிட்டர் பெர்ரி பொண்டேஜ்' என்ற ஆய்வு நூலில், "கோப்பிக்



Image Source - lankapura.com

காலமான மேற்படி 70 ஆண்டுகளில் இயற்கை மரணத்துக்கு அப்பால், பிரதானமாக கொலாரா நோயாலும் மற்றும் வேறு நோய்களாலும் பசி, பட்டினி, தாங்க முடியாத குளிர் காரணமாகவும் சுமார் இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் பேர் தம்முயிரை இழந்தனர்" எனப் பதிவிடப்பட்டுள்ளது. இறுக்கமான நடவடிக்கைகள் மூலம் இவர்கள் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள் இருப்பதைப் போலவே வாழ்ந்தனர். இத்தகைய காவல், கட்டுக்கோப்புக் காரணமாக இவர்கள் ஏனைய சமூகங்களிடமிருந்து தனிமைப்பட்டிருந்தனர்.

1870 களை அடுத்த தசாப்தத்தில் கோப்பிப் பயிர்ச்செய்கையில் பங்கசு நோய் பரவி, பயிர்ச் செய்கையை முற்றாகத் தாக்கி, கோப்பிப் பயிர் படிப்படியாக அற்றுப் போனது. கோப்பி படிப்படியாக அழிந்துபோகும் என்பதை அறிந்த மாத்திரத்தில் தேயிலைப் பயிர்செய்கை அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் கோப்பிப் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்களில், சுமார் 30 இலட்சம் பேர் கூலிகளாக தமிழ் நாட்டுப் பிரதேங்களில் இருந்து வந்து வேலை செய்து விட்டு திரும்பிப் போயிள்ளனரென 'சிலோன் ஒப்சேவர்' பத்திரிகைளின் ஆசிரியர் ஜோன் பெர்குசன் தனது பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். தேயிலைக் காலமும் மலையக மக்களுக்கு கோப்பிக் காலத்தைப் போலவே அமைந்தது. கோப்பிப் பயிர்ச்செய்கைக்குப் பதிலாக தேயிலை என்பது பதிலீடு செய்யப்பட்டதே அன்றி மக்களின் வாழ்க்கை அம்சங்களில் எந்தவித முன்னேற்றகரமான மாற்றங்களையும் அது கொண்டுவரவில்லை.

இவர்கள் மேலும் துன்பப்படுத்திய அம்சங்களாக

தோட்டங்களில் காணப்பட்ட மோசமான சுகாதார நிலைமை, காலை ஐந்து மணி முதல் மாலை வரையிலான நீண்ட நேர வேலை, கல்வி மற்றும் ஏனைய எந்த வாழ்க்கை வசதிகளும் செய்து கொடுக்கப்படாமை போன்றன காணப்பட்டன. அடுத்து வந்த தசாப்தத்தில் இலங்கையில் ஒரு பலமான தொழிற்சங்க இயக்கம் உருவானது. இதன் முன்னோடியான கோ. நடேசய்யர், தொழிலாளர்கள் அடிமைப்படுத்தப்பட்டு பல்வேறு அடக்கு முறைகளுக்கு உட்படுத்தப்படுவதை அவதானித்தார். முதற் தடவையாக வேலை நேரத்தை ஒழுங்குபடுத்துவதில் ஈடுபட்டார். மற்றும் பல்வேறு சட்டதிட்டங்களில் தொழிலாளர் நலன் கருதி மாற்றங்களை உருவாக்கினார். பல போராட்டங்கள் மூலம், அவர் தொடக்கி வைத்த வரலாறு, ஓரளவு உரிமைகளை அனுபவிக்கக்கூடிய மலையக மக்களது வாழ்க்கைக்கு வித்திட்டது எனலாம்.

> மலையக மக்களின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகளை முறையாக ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் முறையாகப் பேணப்படவில்லை. மலையக சமூகத்தவர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு உயர் பதவிகளில் இருப்பவர்களும், இலங்கை அரசியல் அமைப்பில் மலையக மக்களின் நிலை தொடர்பாக பொதுக் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதில் கவனம் கொள்ளாதவர்களாகவே உள்ளதை அவதானிக்கலாம்.

### இன்றைய நிலை

இன்றுவரை மலையக மக்களுக்கான விவசாய மற்றும் தொழில் முயற்சிகளுக்கான காணிகள் வழங்கப்படவில்லை. பெருந்தோட்டக் காணிகளை பெருந்தோட்டங்களுக்கு வெளியில் உள்ளவர்களுக்கு வழங்குவதற்கான கொள்கையே ஆட்சியாளர்களால் முன் வைக்கப்பட்டது. நாட்டில் பிரஜைகளுக்காக குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு புதிய கிராமங்கள் அமைக்கப்படும் போது, பிரஜைகளின் குடும்ப நலன், பொருளாதாரச் சுபீட்சம்



Image Source - www.bbc.co.uk



Image Source - www.thenationalnews.com

என்பனவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனால் மலையக மக்களுக்கு குடியிருப்புக்கான காணி வழங்கப்படும் போது மாத்திரம், தேயிலைச் செடிகளுக்கும் இறப்பர் மரங்களுக்கும் அம் மக்களை விட அதிக மதிப்பு வழங்கப்பட்டு, அவை காப்பற்றப்படுவதற்காக மக்கள் தொடர்ந்தும் லயங்களிலேயே வாழ்வது உறுதி செய்யப்படுகிறது. அல்லது மனிதர்கள் வாழ பொருத்தமற்ற காணிகளில் குடியேற்றப்படுதல் இடம்பெற்று வருகிறது. காணி ஒன்றை தனது சொந்த வருமானத்தில் கொள்வனவு செய்ய முடியாத நிலையிலேயே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

மலையகத்தில் வீடுகள் அமைந்துள்ள காணிக்கு சட்டரீதியான உரித்துக் கொண்டவர்கள் வெறும் 10.2 சதவீதத்தினர் மாத்திரமே. எனினும் மலையகத்தில் 1981 ஆம் ஆண்டு 217,193 கட்டிடங்கள் (ஒரு லயன் வீடு ஒரு கட்டிடமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.) இருந்த நிலையில், 2012 ஆண்டில் இது 225,099 ஆக அதிகரித்துள்ளது. அதாவது வெறும் 7906 கட்டிடங்களே புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. அது வெறும் 9.64 சதவீத அதிகரிப்பாகும்.

மனிதர்களின் காலடிச் சுவடுகள் படாத காடுகளை அழித்து, பெருந்தோட்டங்களை உருவாக்கி, இந்நாட்டின் நவீன பொருளாதாரத்திற்கு தமது உழைப்பை வழங்கிய மக்களுக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும், ஒரு குடும்பத்துக்கு 20 பேர்ச்சஸ் காணியை சட்டரீதியான உரித்துடன் வழங்கி, இதர உரிய வசதிகளுடனான குடியேற்றங்களை அமைத்து, கிராமங்களை உருவாக்கும்படி அரசாங்கத்தைக் கோருவதற்கு மலையகத் தலைமகளுக்கு ஏன் இத்தனை தயக்கம்? காடுகளை அழித்து மனிதர்கள் வாழக்கூடிய பல ஆயிரம் ஹெக்டயர்

*காணிகளை உருவாக்கிய மலையக மக்களுக்கு வீட்டுரிமைக்காகவும், தொழில் உரிமைக்காகவும் காணி உரிமையை பாரபட்சமின்றி வழங்க அரசாங்கத்தை கோருவதற்கு மலையகத் தலைமைகளுக்கு எது தடையாக உள்ளது? 200 வருடங்கள் கடந்தும் இந்தப் பாரபட்சங்கள் ஓரங்கட்டல்கள் தொடர வேண்டுமா?*

*மாத்தளை - ரத்வத்த தோட்டம், இரத்தினபுரி - காவத்தை, வெள்ளந்துரை தோட்டம் என தொழிலாளர்களின் குடியிருப்புகளை உடைத்துச் சேதமாக்கி, அழித்து ஒழிக்கும் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. இவர்களுக்கு காணி உரிமை கிடைக்கும் வரை இப்படியான சம்பவங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தேசிய நிகழ்வுகள், ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதில் காணி உரிமையையும் பேசு பொருளாக மாற்றவேண்டும். மலையக மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்படும் அதேவேளை, சொந்த மண்ணில் முகவரியின்றி வாழும் அம்மக்களுக்கு நிரந்தர முகவரியை வழங்கி காணி உரிமமும் வழங்கப்படுவது அவர்களுக்கான கௌரவத்தைக் கொடுக்கும்.*

*தொழிற்சங்க அரசியலோடு கட்டுப்பட்டிருந்த மலையக அரசியல் அதிலிருந்து விடுபட்டு தேசிய இன அரசியல் என்றதொரு களத்திற்கு வந்திருக்கிறது. அதிகாரப் பரவலாக்கம், நில உடைமை போன்ற கருத்துகளோடு இளைஞர்கள் மத்தியில் எமது மலையகம் என்ற கோசங்கள் வலுப்பெறத் தொடங்கியுள்ளன. மலையக மக்கள் இலங்கைத் தீவில் வசிக்கத் தொடங்கி 200 வருடங்களாயும் காணியற்ற, வீடற்ற சமூகமாகவுள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து ஆயிரக் கணக்கானவர்கள் மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, மொறிசியஸ், பிஜித் தீவுகள் போன்றவற்றுக்கும் இடம்பெயர்ந்திருந்தனர். அவர்கள் அந்நாட்டுப் பிரஜைகளாக உள்வாங்கப்பட்டு உரிமைகளைப் பெற்று வளர்ச்சியடைந்த நிலையில் உள்ளனர். ஆனால் இலங்கையில் மட்டும் இந் நிலமை தலைகீழாகவுள்ளது. வெறுமனே வீடுகளை நிர்மாணிப்பதிலோ அல்லது வேறு பல கட்டிடங்களை நிர்மாணிப்பதிலோ பயன் கிடையாது. அவற்றினூடாக மட்டுமே நமக்கான அடைவு மட்டத்தை எட்டிவிட முடியாது. இது ஒரு நிரந்தரமான வேலைத் திட்டமாக அமைய வேண்டியது அவசியம். அதற்கான ஒரு சூழலை உருவாக்க வேண்டியது முதற்கட்ட கட்டாயப் பணியாகும்.*

*மலையகப் பண்பாட்டுத் தளத்தில் சமூக அசைவுகளை மேற்கொள்ளும் புத்திஜீவிகள் மலையக மக்களின் இருப்பு, வாழ்வியல் பண்பாட்டு அடையாளங்களை ஒழுங்குபடுத்தி பாதுகாத்து அதனை அடுத்த தலைமுறைக்குக் கையளித்து முற்போக்கான சமூகமாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் கல்வியினைப் பயன்படுத்த வேண்டும். மலையக மக்களின் சமூக, பொருளாதார அரசியல் நிலைமைகளை முறையாக ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் முறையாகப் பேணப்படவில்லை. மலையக சமூகத்தவர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு உயர் பதவிகளில் இருப்பவர்களும், இலங்கை அரசியல் அமைப்பில் மலையக மக்களின் நிலை தொடர்பாக பொதுக் கலந்துரையாடல்களை ஏற்படுத்துவதில் கவனம் கொள்ளாதவர்களாகவே உள்ளதை அவதானிக்கலாம். மலையகப் பல்கலைக்கழகம் தேவைப்படுவதற்கான அவசியமான கள நிலைமைகள் உள்ளன. அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்பதை உணர வேண்டும். வர்க்க ரீதியான அடையாளத்தை எடுக்க வேண்டும்.*

*ஏனைய சமூகத்திற்கு கிடைக்கின்ற சலுகைகள் தமக்கும் கிடைக்க வேண்டும் என்றே இந்தச் சமூகம் எதிர்பார்க்கின்றது. சராசரியாக ஒரு*

வாரத்திற்கு ஏழு மில்லியன் தேயிலையை இலங்கை ஏற்றுமதி செய்கிறது. இது அதனைப் பறிப்பவர்களின் கைகளில் இருந்தே தொடங்குகிறது. ஆனால், தேனீர் பற்றிப் பேசும் போது யாருக்கும் அவர்களின் வாழ்க்கைப் போராட்டம் ஞாபகம் வருவதில்லை. மலையகம் 200 இல் மலையக மக்களை கௌரவிப்பதை விட, அவர்களின் தியாகத்துக்கான வெகுமதியாக அவர்களுக்கு காணி உரிமம் வழங்குவது குறித்து யோசிக்க வேண்டும். மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர் கதையாகிவரும் நிலையில் இவற்றுக்கான தீர்வுகளை உரியவாறு பெற்றுக்கொடுப்பதற்கு மலையக அரசியல் கட்சிகளிடையே பொது இணக்கப்பாடு, ஐக்கியம் என்பன அவசியமாகும். நாம் எமக்குள் முரண்பட்டுக்கொண்டிருப்பது, முழு மலையகச் சமூகத்தையே பாதிப்புக்குள்ளாக்கும்.

மலையகச் சமூகத்தை ஏனைய சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த 200 ஆண்டுகளில் நாம் பெரிதாக எதனையும் சாதித்துவிடவில்லை. எமது சமூகத்துக்கு வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, நாம் பல தசாப்தங்களை வீணடித்து விட்டோம் என்பதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அந்தக் காலம் இறந்தகாலம்; அதைப் பற்றிக் கனவு காண்பதில் பயன் இல்லை. வருங்காலத்தை ஆக்க முயல்வதே கடமையாகும். சமுதாய நோய் இன்னது என்று இப்போதாவது எண்ணிப் பார்க்க வேண்டும்.

1830 முதல் இலங்கையில் குடியேறிய மலையகத் தமிழர்கள் தமது சமூகத்தை மேம்படுத்திக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், கொள்கைகள், கருத்தாக்கங்கள் யாவை என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். 200 ஆண்டுகளாகப் பெருந்தோட்ட வட்டத்துக்குள், குறைந்த எழுத்தறிவு - வாழ்க்கைத் தரம் - கல்வி நிலையோடு வாழ்ந்து வரும் மக்களால் புதிய

மலையகத்தில் வீடுகள் அமைந்துள்ள காணிக்கு சட்டரீதியான உரித்துக் கொண்டவர்கள் வெறும் 10.2 சதவீதத்தினர் மாத்திரமே. எனினும் மலையகத்தில் 1981 ஆம் ஆண்டு 217,193 கட்டிடங்கள் (ஒரு லயன் வீடு ஒரு கட்டிடமாகக் கணக்கிடப்பட்டுள்ளது.) இருந்த நிலையில், 2012 ஆண்டில் இது 225,099 ஆக அதிகரித்துள்ளது. அதாவது வெறும் 7906 கட்டிடங்களே புதிதாகக் கட்டப்பட்டுள்ளன. அது வெறும் 9.64 சதவீத அதிகரிப்பாகும்.

இருபத்தியோராம் நூற்றாண்டின் அறிவுசார் சவால்களையும் தேவைகளையும் எதிர்கொள்ள முடியாதுள்ளது. எனவே, மலையகம் 200 நிகழ்வை நடத்துவது என்பது மலையகத்தின் கடந்தகால வளர்ச்சியை மறுபரிசீலனை செய்வதுடன் எதிர்கால வளர்ச்சிக்கு திட்டமிடுவதாகவும் இருக்க வேண்டும்.

இந் நீண்ட காலத்தில் பாரிய மாற்றங்கள் நடந்திருக்க வேண்டும். ஆனால் மலையகத்தை பொறுத்தவரை சொற்பமான மாற்றங்களே இடம்பெற்றுள்ளன. கற்றோர் சமூகமொன்று அங்கு ஒரு சமூக சக்தியாக எழுச்சியடைந்திருக்கின்றது. இது, கீழ்மட்ட நடுத்தர வர்க்கம் ஒன்று உருவாகுவதைச் சாத்தியப்படுத்தியுள்ளது. இதனை ஒரு நல்வாய்ப்பாகக் கருதிக் கொண்டு, சமூக வளர்ச்சிக்கு மட்டுமின்றி பொருளாதார வளர்ச்சிக்காகவும் நாம் உழைக்க வேண்டும். இது நம் இளைஞர்களின் கையிலேயே தங்கியுள்ளது.




யாழ்ப்பாணத்தின் குடிநீர்ப் பிரச்சினையை பேசுபொருளாகக் கொண்டு எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட **'யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு வந்துவிட்ட தங்கத்திரவம்'** என்னும் தலைப்பிலான ஆவணப்படம் வியாழக்கிழமை 29.08.2024 அன்று முற்பகல் 10 மணிக்கு, முல்லைத்தீவு திறன்விருத்தி நிலையத்தில் திரையிடப்பட்டது.

உள்ளூர் நீர் மூலங்களின் முக்கியத்துவம், அவற்றிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல், அவற்றைப் பாதுகாப்பதில் அரசாங்கத்திற்கும் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள கடப்பாடு என்பவற்றை ஆவணப்படத்தினூடாக சமூகத்தின் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில் இந்தத் திரையிடல் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









SpotOn Money



SEND MONEY to SRI LANKA

FIRST TRANSFER FEE FREE*

Immediate Payment to Any Account

*Partnership* with

CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply


வணக்கம் London
www.vanakkamlondon.com
உலகம்
அரசியல்
தமிழ்நாடு
சினிமா
CINEMA
IN LOVE memory
விளையாட்டு
துயர் பகிர்வு
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்
vanakkamlondon.com
/vanakkam.london
/vanakkamlondon
/Vanakkam_London
/TheVanakkamLondon


Protection For You
& Your Family
Our services
Life Insurance «
Critical Illness Protection «
Mortgage Protection «
Travel/Super Visa Insurance «
Dental & Medical Benefits «
Disability Benefits «
Long Term Care «
Employee Benefits «
RESP, RRSP & TFSA «
Are You Getting Million Dollar Advice?
Life100
INSURANCE & INVESTMENTS INC.
416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6
Sritharan Thurairajah CLU, CHS
Simple Solution in a Critical Situation


Nimal Vinayagamoothy, CPA, CGA
Chartered Professional Accountant
nimal@nlraccounting.com
T: 416 - 494 - 4777
C: 416 - 888 - 1128
F: 416 - 613 - 2739
300-5200 Finch Avenue East
Toronto, ON M1S 4Z4
CPA
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
## ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.
அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619

Helping you harness the power around you
**NEW DAWN** ENERGY SOLUTIONS

## SOLAR POWER சூரிய சக்தி

SAFE ☼ CLEAN ☼ FREE ☼ பாதுகாப்பானது ☼ இலவசமானது ☼ சுத்தமானது

**AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME**

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

**info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377**

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating | BBB | ACCREDITED BUSINESS

500




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

## RE/MAX ELITE

021 224 2855 | 0777 44 1113

இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

**BUY-SELL-RENT HOME AND LANDS**

WWW.REMAXELITE.LK

# abc DRIVING SCHOOL

We offer a variety of courses for new and experienced drivers. We offer our students quality driver education and training at affordable rates. Our extremely knowledgeable driving instructors fluent in 7 languages with their many years of professional experience make learning especially easy.

## CAR DRIVING LESSONS

- Class 5 Driving License
- Refresher Lessons
- Knowledge Test Preparation

ENROLL NOW!

ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Ogilvy

528 avenue Ogilvy
Montréal QC
H3N 1M8

(514) 278-1824

abc.conduire@gmail.com

ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Jean-Talon

4294 rue Jean-Talon O
Montréal, QC
H4P 2T6

(514) 866-4777

abc.driving4295@gmail.com

# SS CAKES

# Say "I Do" to Sweet Perfection!

Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.

+94 76 347 0055

We do delivery around the world




# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

codelantic

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

ExentAI

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

itaffix

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

ontomatrix

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

EmbryoZ

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

BurgeonFirst

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

FINACCDIRECT

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

LegalLiaise

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

callOcare

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

LeadHRM

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

NurtureLeap

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**


உங்கள் வீட்டிற்கு தேவையான அனைத்து வகையான
மரக்கறி மற்றும் பலசரக்கு
பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றிட இன்றே நாடுங்கள்
MEGAA STORE
மெகா ஸ்டோர்ஸ்
- Fresh Meat
- Asian Groceries
- Fruits & Vegetable
- Frozen Foods
- Off Licence
OPENING HOURS
EVERYDAY
7AM - 11PM
020 8336 0061 | 074 9414 7547
Email: hellomegaastore@gmail.com
MEGAA STORE LTD - 99 Burlington Road, New Malden, KT3 4LR.

# மக்கள் பணியில் மானுடம்

ஐக்கிய இராச்சியத்தில் எம்மால் அண்மையில் நிறுவப்பட்ட ஒரு தொண்டு நிறுவனமே மானுடம் ஆகும்.

இலங்கையின் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலுள்ள தமிழ் சமூகங்களுக்கு உதவுவதில் எமது நிறுவனம் கவனம் செலுத்தி வருகிறது.

**எமது முக்கிய நடவடிக்கைகள்**

- வறுமை ஒழிப்பு
- கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு
- சமூக மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு
- கலை, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை பாதுகாத்தல்

எமது சமீபத்திய திட்டங்களில் ஒன்று, எழுத்தாளர் வாசகர் ஆகிய இருவருக்கும் பயன்படும் வகையில், இலங்கைத் தமிழ் புத்தகங்களை குறைந்த செலவில் வெளியிடுவதை ஆதரிப்பதாகும்.

கீழ்வரும் இரண்டு புத்தகங்களின் வெளியீட்டிற்கு ஆதரவு கொடுத்துளோம்.

**“யுகமுடிவும் பின்னரும்” - நிலாந்தன்**

இறுதிப் போருக்குப் பிந்தைய எழுத்துகளின் தொகுப்பு
இந்நூல் கவிதைகள், பாடல்கள் பிற வடிவங்களை உள்ளடக்கி
பரிசோதனை முயற்சியாக அமைந்துள்ளது.

**“நினைவுகளே எங்கள் கேடயம்” (Memory is Our Shield) - திரு. செல்வராஜா**

1974 ஜனவரி 10 ஆம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது சர்வதேச தமிழாராய்ச்சிக் கருத்தரங்கைச் சுற்றிய நிகழ்வுகளை ஆவணமாக்கியுள்ளார். இந்த சம்பவம் நடந்து ஐந்து தசாப்தங்களுக்குப் பின் இந்நூல் வெளியிடப்பட்டாலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வை ஆவணப்படுத்தியதில் முதன்மை பெறுகிறது.

**புத்தக வாசிப்பினைப் பரவலாக்கும் செயற்பாடு - கொழும்பு ஆனி 2024**
**மட்டக்களப்பு மதகு அமைப்பினருடன் இணைந்து செயற்பட்டோம்.**

மானுடம் நிறுவனம்
maanudam foundation
www.maanudam.org


Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY